
www.padippakam.com

# மாவீரன் மலேயா கணபதி

இரா. உதயபாசுகர்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மாவீரன் மலேயா கணபதி

இரா. உதயபாசுகர்

இந்நூலின் முழு உரிமைகள்
கடமைகள், பொறுப்புகள்,
நூலாசிரியருக்கே அமையும்
நீதிமன்ற எல்லை இந்தியா.

இரா. உதயபாஸ்கர்
நூலாசிரியர்

அலைகட்டல் பதிப்பகம்
எண். 3, அறிஞர் அண்ணா தெரு,
மகாகவி கம்பர் நகர்,
மாதவரம் பால்பண்ணை,
சென்னை - 600 051.

படிப்பகம்

www.padippakam.com

மாவீரன் மலேயா கணபதி

முதல் பதிப்பு : டிசம்பர் 1998
உரிமைப்பதிவு : இரா. உதயபாசுகர்
**Email : udaybaskar@hotmail.com**

விலை ரூ: 60/-

**MAVEERAN MALAYA GANAPATHY**
by **R. Udayabaskar**
White Creamwove Paper
11pt. Letters

முகப்பு ஓவியம் ; கு. புகழேந்தி

வெளியீடு :

**அலைகடல் பதிப்பகம்**
எண். 3, அறிஞர் அண்ணா தெரு,
மகாகவி கம்பர் நகர்
மாதவரம் பால்பண்ணை
சென்னை - 600 051.

---

அச்சு : ஆதவ் கிராபிக்,
62/1 பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14, தொலைபேசி : 823 5022

படிப்பகம்

www.padippakam.com

## படைப்பளிப்பு

உலக விடுதலைக்காகப் போராடி
உயிர் நீத்த பாட்டாளி வர்க்கத்
தியாகிகளுக்குப் படைக்கப்படுவதே
இச்சிறு நூல்

## இந்நூலைப் படைப்பதன் நோக்கம்

ஒரு வீரனாக : தளபதியாக : தலைவனாக :
இறுதியில் இளம் வயதில் தியாகியாகப் பரிமாணம்
பெற்ற வரலாறு படைத்த பெருந்தலைவன்
தீரர் கணபதியின் வர்க்கப் போராட்ட வரலாற்றைப்
படைப்பதன் நோக்கம் - அதன் பயனாகப் புதிய
வரலாற்று மாவீரர்கள் உருவாக வேண்டும் என்பதே ஆகும்.
அவ்வுறுதியான அடிப்படையில் உருவானதே இச்சிறுநூல்

நூலாசிரியர் மற்றும்
வெளியீட்டுக் குழுவினர்

## நூல் வெளியீட்டுக் குழுவினர்

தோழர் இன்குலாப் - பொறுப்பாளர்
சென்னை - 600 014

தோழர் தி.மோகன் - தலைவர்
சென்னை - 603 102

தோழர் வழக்கறிஞர் இரா.உதயபாசுகர் - நூலாசிரியர்
சென்னை - 600 051

படிப்பகம்

www.padippakam.com

தொலைபேசி : 451009
454040

# திராவிட முன்னேற்றக் கழகம்

தலைவர் :
**மு. கருணாநிதி**

"அண்ணா அறிவாலயம்"
268-269, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

14.11.1995

கடல் கடந்து போய் வாழ்வுக்காகப் போராடிய தமிழர்கள் அதிகம். அவர்களில், வாழ்க்கைப் போராட்டத்துடன் கொள்கைக் காகத் தம் இன்னுயிரையே பணயம் வைத்தோர் பலர்.

மலேசியா நாட்டை வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுவிக்கவும் தொழிலாளர்தம் உரிமைகளைக் காத்திடவும் தியாக வேள்வியில் தீக்கிரையான தீரர்களை நினைவுபடுத்துகிற பணியில் தோழர்கள் வெளியிடுகிற இந்நூலில், தீரர் கணபதி மற்றும் சில தோழர்களின் போர்க்கள வாழ்வினைத் தொகுத்து வரலாற்றுச் செப்பேடாகப் படைத்துள்ளனர்.

1949-இல் அந்தத் தியாக மறவனைப்பற்றி நான் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஆற்றிய உரை **கயிற்றில் தொங்கிய கணபதி** என்ற பெயரில் சிறுநூலாக வெளிவந்துள்ளது.

கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது? காரணம், கடல் கடந்து வாழும் தமிழர் விட்ட கண்ணீர். ஏன் இரத்தமே கண்ணீராகி, கடலைச் சிவப்பாக்குகிறது என்று கடல்கடந்து வாழும் தமிழர்களின் அவலநிலை பற்றி உரையாற்றும்போது இப்படி நான் குறிப்பிடுவது உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



இந்நூற்குழுவின் தலைவர் தி.மோகன், சிறப்பாசிரியர் வழக்கறிஞர் இரா. உதயபாசுகர் மற்றும் இம்முயற்சியில் பங்கேற்றுள்ள அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

மலேசியத் தமிழர் வரலாற்றில் வீரத்தழும்புகளேற்றுப் புகழ் படைத்த தம்பிக்கோட்டை கணபதி, வீரசேனன், ஆர்.பாலன் போன்றோர் தமிழர் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டவர்கள்.

தஞ்சை மண்ணில் பிறந்த பெரிய கணபதி, கணபதியின் சகோதரர் சற்குணம், கீழக்காடு சுப்பிரமணியன், இராமலிங்கம், இராமச்சந்திரன், கமலப்பன், ஓமலக்காடு சற்குணம், ஆரோக்கியசாமி, நாடு கடத்தப்பட்ட ஆறுமுக (தேவர்) போன்றோர் இச்சரிதைப் பட்டியலில் இடம் பெற்றவர்கள்.

சிலர் நேதாஜியின் ஐ.என்.ஏ. இராணுவப் படையில் பங்கேற்றவர்கள்.

மக்கள் உரிமைப் போர், விடுதலை உணர்வு, தமிழ் மொழிப் பற்று ஆகிய பெருமை மிக்க உரிமைக்காகப் போராடி வாழ்நாட்களை முடித்துக் கொண்டவர்கள்.

அரசின் கொடுமைகளை எதிர்த்தல், தமிழர் சீர்திருத்தச்சங்கம், விளையாட்டரங்கம், இந்திய இளைஞர் சங்கம் ஆகிய அமைப்புக்களை ஏற்படுத்தி பணிபுரிதல் ஆகியவை அவர்கள் மேற்கொண்டவை.

இவர்களோடு குருதேவன், மதுக்கூர் முத்தையா, வாட்டாகுடி இரணியன், அண்டமி இராசகோபால், மணல்மேல்குடி வீரசேனன், செட்டிநாடு வீரசிம்மன், புரட்சிப் பித்தன், மயில் ராவணன், முத்தையா, அருப்புக்கோட்டை இரணியன் ஜீவானந்தன், அத்திப்பட்டு வீரசோழன் ஆகிய இலட்சியக் காளையர் இடம் பெறுகின்றனர்.

தமிழர்தம் வழிகாட்டிகளாக, தொழிலாளர்களின் துணைவர்களாக, களம் கண்டோரின் தளபதியாக வீரநடை போட்டு வரலாறாகியவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழரிடையே பல்வேறு பணிக்களங்கள் அமைத்துப் போராடி, வேள்வியில் விறகான தோழர்களுக்குக் கலசமெனத் திகழ்ந்தவன் தியாக மறவன் கணபதி.

காலந்தோறும் தமிழர்கள் தம் இன உணர்வுகளை மங்காமல் பாதுகாத்துக் கொள்ள இவ்வீரர்களின் வரலாறு தெரிவிக்கப்பட வேண்டும் என்ற அரிய முயற்சியில் இந்நூல் வெளிவருகிறது.

பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மு.கருணாநிதி)
தலைவர்-திமுக

படிப்பகம்

www.padippakam.com



பழ. நெடுமாறன்
தலைவர்,
தமிழர் தேசிய இயக்கம்.

17/1 நரசிம்மபுரம்,
மயிலை,
சென்னை - 600 004

## அணிந்துரை

வீரம், தியாகம், தொண்டு ஆகிய மூன்றும் நிறைந்து கலந்த வடிவம் தான் மலேயா கணபதி ஆவார். அவருடைய வாழ்க்கை பல முழுமையான பரிமாணங்களைக் கொண்ட அற்புதமான வாழ்க்கையாகும்.

இளம் வயதில் தமிழகத்திலிருந்து வயிற்றுப்பிழைப்புக்காக மலாயா சென்று வாழ்வதற்காகப் போராடிய கணபதி மலேயா வாழ் தமிழர்களின் நிலையைக் கண்டு மனம் கொதித்து அவர்களின் துயர் துடைக்கத் தொண்டாற்றி இறுதியில் மலாயா வாழ் அனைத்து இன தொழிலாளர்களின் தலைவராகப் பரிணமித்த வரலாறு மெய் சிலிர்க்க வைக்கும் வரலாறு ஆகும்.

1920ம் ஆண்டு மலாயா சென்ற கணபதி 1946ம் ஆண்டு தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்பட்டார். அந்த 26 ஆண்டுகளில் அவர் ஆற்றிய தொண்டு மலேயா வாழ் தமிழர்களின் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது.

பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலனாக விளங்கிய கணபதி காலனி ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து அடிமைப்பட்ட மக்களை மீட்கப் போராடிய விடுதலைவீரனாகவும் திகழ்ந்தார். சர்வதேசக் கண்ணோட்டம் கொண்ட மார்க்சியவாதியாக அவர் திகழ்ந்தாலும் தான் யார் என்பதையும் தனது இனம் எது என்பதையும் அவர் ஒருபோதும் மறந்துவிடவில்லை. தமிழ்த் தேசியவாதியாக, தமிழறிஞராக, தமிழ் ஆய்வாளராக, தமிழ்த் தொண்டராகவும் அவர் திகழ்ந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



கணபதியின் வருகைக்கு முன்னால் மலேயா வாழ் தமிழர்களின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது. மலேயாவில் தமிழர்களை 'ஓரங் கிளேங்' என்றுதான் பிற இனத்தவர்கள் அழைப்பார்கள். மலாய் மொழியில் இச்சொல்லுக்கு, திருடன், கொலைகாரன், தாழ்ந்த இனத்தவன் என்று பொருள் ஆகும். இந்த இழிவை மாற்றி அமைத்தார் கணபதி. தமிழ் மக்களை 'ஓரங்தமிழ்' என்றுதான் அழைக்கவேண்டும் என்று அவர் போராடினார். இதன் விளைவாக இழிவான இந்தப் பெயர் அகற்றப்பட்டது.

தமிழ் மக்களின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடு அணுகவேண்டும் என்பதை எடுத்துரைக்க தமிழ்ச் சீர்திருத்தச் சங்கத்தை அமைத்தார். தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பேணுவதற்குத் தமிழ் வளர்ச்சிக் குழு ஒன்று அமைத்துத் தொண்டாற்றினார். அதுமட்டுமல்ல, 1938ம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது மலேயா வாழ் தமிழர்களின் சார்பில் மூன்று தொண்டர்களை அனுப்பி அவர்களும் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைத் தண்டனை பெற்று மீண்டும் மலேயா திரும்பினார்கள். இச்செய்தி தனது தாயகத்து மக்கள் தமது மொழியைப் பாதுகாக்க நடத்திய போராட்டத்திலிருந்து அவர் விலகி நிற்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

லெனின், மார்க்ஸ், பகத்சிங் போன்றோரின் பெயரால் மன்றங்கள் அமைத்துத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு அரசியலறிவு ஊட்டிய கணபதி, தமிழ்த் தலைவர்களையும் மறந்துவிடவில்லை. பாரதி கலை மன்றம், பாரதிதாசன் மன்றம், திரு.வி.க.மன்றம், சிங்காரவேலர் மன்றம், பெரியார் இரவுப் பாடசாலை, மறைமலை அடிகள் தமிழ்மன்றம், நீலாம்பிகை மன்றம்,

படிப்பகம்

www.padippakam.com



தாமரைக்கண்ணி மன்றம் போன்ற பெயர்களில் தமிழ் வளர்ச்சி மன்றங்களை அமைத்துச் செயலாற்றிய விதம் தமிழ் மொழியின் மீதும் தமிழ் இனத் தலைவர்கள் மீதும் அவர் கொண்டிருந்த அளவிலாத பற்றை எடுத்துக்காட்டுகிறது. இந்தியா விடுதலை பெற்றால்தான் அன்னியநாடுகளில் வாழும் இந்தியர்களும் தமிழ் மக்களும் ஏற்றம் பெற முடியும் என்பதை அவர் தெளிவாக உணர்ந்து இருந்தார். அந்த அடிப்படையில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் ஆற்றிய தொண்டு மகத்தானது. மலேயா வாலிபர்கள் சங்கம் என்ற அமைப்பு ஒன்றை நிறுவி வாலிப சக்தி என்ற ஒரு பத்திரிக்கையைத் தொடங்கி மலேயா வாழ் இந்தியர்களையும், தமிழர்களையும் ஒன்று திரட்டினார். அவர் அமைத்த இந்திய இளைஞர் சங்கம் ஒரு மாபெரும் இயக்கமாக வளர்ந்தது. கல்வித்துறை, அரசியல் துறை, பொருளாதாரத்துறை, இராணுவத்துறை, பிரச்சாரத் துறை போன்ற பல பிரிவுகளை அமைத்து மலேயா எங்கும் அதை ஒரு வலிமையான இயக்கமாக உருவாக்கினார். இந்த அமைப்பின் முக்கியப் பிரிவாகத் தொண்டர் படை செயலாற்றியது. சீருடை அணிந்து கடுமையான பயிற்சி பெற்று இராணுவ மிடுக்கோடு இந்தத் தொண்டர் படை அணிவகுத்து வந்தபோது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசு கதிகலங்கிற்று. பிற்காலத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மலேயா வந்து இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தபோது அதற்கு அடித்தளமாக கணபதி அமைத்த தொண்டர் படை அமைந்தது. இந்திய தேசிய இராணுவத்தின் அரசியல் பிரிவாக நேதாஜி அமைத்த இந்திய சுதந்திர லீக் என்னும் அமைப்பின் அடித்தளமாக கணபதி அமைத்த இந்திய இளைஞர் சங்கம் அமைந்தது. கணபதி செய்து வைத்திருந்த இந்த அடிப்படை வேலைகளின் காரணமாக நேதாஜியின் பணி சுலபமாயிற்று. மலேசிய மக்களின் விடுதலைக்காக

படிப்பகம்

www.padippakam.com



மட்டுமல்லாமல், இந்தியாவின் விடுதலைக்காகவும் போராடியவராக அவர் விளங்கினார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானியர்கள் மலேயாவைக் கைப்பற்றியபோது மலேயா வாழ் மக்கள் எந்த இனத்தவர் ஆனாலும் பல கொடுமைகளுக்கு ஆனார்கள். இராணுவப் பணிகளுக்காக மக்களை ஊதியமில்லாமல் உழைக்கும்படி ஜப்பானியர்கள் கட்டாயப்படுத்தினர். போதுமான உணவு, உடை, மருந்துகள் இல்லாமல் மக்கள் வாடினார்கள். எதிர்ப்பவர்கள் ஈவு இரக்கமில்லாமல் ஒடுக்கப்பட்டார்கள். இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராட வேறு எந்த இனத்துத் தலைவர்களும் முன்வராத நிலைமையில் கொதித்தெழுந்த கணபதி ஜப்பானிய எதிர்ப்புப் படையை அமைத்துப் போராடினார். இதைக்கண்டு ஜப்பானிய இராணுவ அரசு திடுக்கிட்டது. பிற்காலத்தில் இந்திய தேசிய இராணுவம் அமைக்கப்படும் வரை இந்தப் படைதான் மக்களைக் காப்பாற்றியது.

தமிழ்ச் சமுதாயத்தின் சாபக்கேடாக விளங்கும் தீண்டாமையை ஒழிப்பதிலும் கணபதி தீவிரமாகப் பணியாற்றினார், 1936-38ம் ஆண்டுகளில் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை அவர் தொடங்கி வெற்றிகரமாக நடத்தினார். இந்தச் சமுதாயக் கொடுமையை மலேயாவிலிருந்து அறவே ஒழித்த பெருமை அவருக்கு உண்டு. இதற்கான ஒத்துழைப்பை சீனர்கள், மலாய் இனத்தவர் ஆகியோரிடமிருந்தும் அவர் பெற்றுக் கொண்டார்.

இந்திய விடுதலைக்குப் போராட நேதாஜி அமைத்த இந்திய தேசிய இராணுவத்தின் வரலாறு ஒரு வீர காவியம் ஆகும். இந்தக் காவியத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு தமிழர்களுக்கு இருந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் ஜெர்மன் நாட்டுக்கு சுபாஷ் பாஸ் சென்றபோது அங்கிருந்த பழம்பெரும் சுதந்திரப்போராட்ட வீரர் செண்பகராமனை அவர் சந்தித்துப் பேசினார் இந்திய தேசிய

படிப்பகம்

www.padippakam.com



இராணுவம் ஒன்றை அமைத்து இந்தியாவின் விடுதலைக்காகப் போராட வேண்டும் என்பது செண்பகராமன் கண்ட கனவாகும். அந்தக் கனவைப் பற்றி சுபாஷ் போசுக்கு முழுமையாகத் தெரியப் படுத்தி அவர் நெஞ்சில் வீரக்கனலை மூட்டினார். இரண்டாம் உலகப் போர் தொடங்கியபோது இந்தியாவிலிருந்து சுபாஷ்போஸ் தப்பி ஜெர்மனி வந்து முதலாவது இந்திய சுதந்திரப் படையை அங்கு அமைத்த செய்தி அழிக்கமுடியாத வரலாறு ஆகும். செண்பகராமன் கண்ட கனவை நேதாஜி நிறைவேற்றினார். ஜெர்மனியிலிருந்து போராடுவதை விட தென்கிழக்கு ஆசியாவுக்கு வந்து போராடுவது சிறந்தது என்பதை நேதாஜி உணர்ந்தார். ஜப்பானிய அரசின் உதவியோடு சிங்கப்பூரில் சுதந்திர அரசை அமைத்தார். இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கினார்.

கணபதியைப் பற்றியும் அவர் அமைத்த அமைப்புகள் பற்றியும் நேதாஜி ஏற்கனவே அறிந்து இருந்தார். எனவே, கணபதியை அழைத்துப் பேசினார். கணபதியும் அவர் தோழர்களும் கம்யூனிச இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை நேதாஜி உணர்ந்திருந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு அவர்களின் ஆதரவை நாடினார். நேதாஜிக்குப் பதிலளித்தபோது கணபதி பின்வருமாறு கூறினார் :

"நாங்கள் கம்யூனிஸ்டுகள்தான். ஆனால் தேசத்தின் விரோதிகள் அல்லர். இந்திய சுதந்திரத்திரப் போர்ராட்டத்தில் நாங்கள் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்லர். உங்களுடன் ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றார்.

இதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இரண்டாம் உலகப்போர் மூண்ட பிறகு இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு இதுதான் ஏற்றநேரம் என்பதை உணர்ந்த நேதாஜி வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்று பிற நாடுகளின் உதவியுடன் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்தவேண்டும் என்று முடிவு செய்தபோது அவருக்கு இந்திய கம்யூனிஸ்டுகள் துணையாக நின்றார்கள். இந்தியாவிலிருந்து தப்பிச்செல்ல உதவினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



சோவியத் நாட்டிற்குச் சென்று அந்நாட்டின் உதவியைப் பெறவேண்டும் என்பதை நேதாஜி நோக்கமாகக் கொண்டிருந்தார். அதற்கும் உதவுவதற்கு இந்தியக் கம்யூனிஸ்டுகள் முன்வந்தார்கள். ஆனால் எதிர்பாராதவிதமாகப் போரின் போக்கு மாறி சோவியத் நாடு பிரிட்டனுடன் கைகோத்து ஜெர்மனிக்கு எதிராகப் போராடவேண்டிய நிலைமை வந்தபோது இந்திய கம்யூனிஸ்டுகள் தங்கள் போக்கினை மாற்றிக் கொண்டார்கள். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய பாசிச நாடுகளின் உதவியை சுபாஷ் போஸ் பெற்றதைக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். இந்தச் சூழ்நிலையில் கம்யூனிச இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த கணபதி, சுபாஷ் சந்திர போசுடன் ஒத்துழைக்க முன்வந்ததின் மூலம் தனது தனித்தன்மையை நிலைநாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் சுபாஷ் போஸ் பற்றிய தங்களின் தவறான கருத்தினை இந்திய கம்யூனிஸ்டுகள் திருத்திக் கொண்டார்கள். சுபாஷ் போஸ் மாசுமறுவற்ற சுதந்திரப் போராட்ட வீரர் எனப் புகழுரை சொரிந்தார்கள். ஆனால் தொடக்கத்திலேயே நேதாஜியின் அப்பழுக்கற்ற தன்மையைக் கண்டறிந்த பெருமை தமிழ்த் தலைவனான கணபதிக்கே உண்டு. அவரது தீர்க்கமான தொலை நோக்குப் பார்வையை இது காட்டுகிறது. நேதாஜியின் அழைப்பை ஏற்று இந்திய தேசிய இராணுவ ஆசிரியர் பள்ளியில் கணபதியும் அவரின் தோழர்களும் இணைந்தனர். பயிற்சிப் பள்ளியில் இராணுவப் பயிற்சி ஆசிரியராகவும் கணபதி செயல்பட்டார். மலேயாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் அவர் சென்று மக்களைத் திரட்டினார். அவரது தோழர்கள் பல்வேறு முக்கியப் பொறுப்புகளை ஏற்றிருந்தனர்.

இந்தியாவின் எல்லைக்குள் புகுந்து இம்பால் முனையில் இந்திய தேசிய இராணுவம் போராடியபோது அவர்களுக்கும் ஜப்பானியர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்து விலகி இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தவர்களுக்கும் புதிதாக இந்திய தேசிய இராணுவத்தில்

படிப்பகம்

www.padippakam.com



சேர்ந்தவர்களுக்குமிடையே முரண்பாடுகள் மூண்டன. பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்து விலகி வந்தவர்களில் பெரும்பாலானோர் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். புதிய படையினரில் பெரும்பாலோர் தமிழர்களாக இருந்தனர். இதன் காரணமாக இந்தி அதிகாரிகள் 120 தமிழர்கள் மீது துரோகிகள் எனக் குற்றம் சாட்டி, அவர்களைப் பழிவாங்க முயற்சி செய்தனர். படைகளுக்குள் கலகத்தைத் தூண்டிவிட முயற்சி செய்தனர் எனக் குற்றம் சாட்டி கணபதியை இராணுவ நீதிமன்றத்தில் விசாரித்தனர். இந்தச் செய்தி நேதாஜிக்குத் தெரிவிக்கப்பட்டது. கணபதியைப் பற்றி நன்கு அறிந்திருந்த நேதாஜி அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை நம்பவில்லை. உண்மையை உணர்ந்த நேதாஜி அவர்கள் கணபதியை வரவழைத்துப் பேசி குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவித்துப் பாராட்டினார். எந்தக் காலகட்டத்திலும் தனது தனித்தன்மையை கணபதி விட்டுக்கொடுக்கவில்லை என்பதற்கு இந்த நிகழ்ச்சி நல்ல எடுத்துக்காட்டாகும். எதிர்பாராதவிதமாக ஜப்பான் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டு அரசு சரணடைந்த பிறகு இந்திய தேசிய இராணுவத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறியது. வேறு ஒரு நாட்டிற்குத் தப்பிச் சென்று நேதாஜி தனது போராட்டத்தைத் தொடரவேண்டும் என இந்திய தேசிய இராணுவத் தளபதிகள் அவரை வற்புறுத்தினார்கள். அதன் விளைவாக விமானம் மூலம் புறப்பட்ட நேதாஜி விபத்தில் சிக்கி மாண்டார் என்று பரப்பப்பட்ட செய்தி இந்திய தேசிய இராணுவ வீரர்களைத் திகைக்கச் செய்தது. மலேயாவில் மீண்டும் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டது. இந்திய தேசிய இராணுவம் கலைக்கப்பட்டது. அதிலிருந்த பெரும்பாலான வீரர்கள் மலேயா கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தனர். இதன் தலைமையில் தொழிற்சங்க வேலைகள் விரிவுப்படுத்தப்பட்டன. இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கணபதி வலிமை வாய்ந்த தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்கி அருந்தொண்டாற்றினார்.

படிப்பகம்

www.padippakam.com



அவரது அளப்பரிய தொண்டின் மூலமாக மலேயாவில் தொழிலாளர்கள் எந்த இனத்தவராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் கணபதியின் தலைமையில் திரண்டார்கள். பல்வேறு தொழிற்சங்கப் போராட்டங்களை அவர் நடத்தி முதலாளிகளுக்கும் பிரிட்டிஷ் அரசுக்கும் சிம்மசொப்பனமாக விளங்கினார். அகில மலேய தொழிற்சங்கக் கூட்டமைப்பு உருவானது. மலேயாவில் வாழ்ந்த மலாய், சீன, தமிழ் இணையமாகவும் அது திகழ்ந்தது. மேலும் இந்த மூன்று தேசிய இன மக்களையும் ஒன்றிணைத்து ஐக்கிய முன்னணி ஒன்று அமைக்கும் முயற்சியிலும் அவரின் பங்கு மகத்தானது.

இதுபோன்ற நடவடிக்கைகளினால் ஆத்திரம் அடைந்த பிரிட்டிஷ் அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திற்று. கடும் அடக்குமுறையை ஏவிவிட்டது. இதை எதிர்த்துப் போராட தலைமறைவு வாழ்வை கணபதியும் அவரது தோழர்களும் மேற்கொண்டார்கள். இந்தக் காலகட்டத்தில் கணபதி ஆற்றிய அயராத தொண்டு மக்களை ஒரு புரட்சிக்குத் தயார்படுத்தியது. கணபதியை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்தால்தான் மக்கள் புரட்சியை ஒடுக்க முடியும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசு தனது போலிஸ் படையை அவருக்கு எதிராக ஏவிவிட்டது. கடுமையான அடக்குமுறைகள் நடத்தப்பட்டன. எண்ணற்றவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இறுதியில் எதிர்பாராத விதமாக கணபதியையும் பிரிட்டிஷ் இராணுவம் சிறைபிடித்தது. கணபதி கைதானார் என்ற செய்தி காட்டுத் தீ போல மக்கள் மத்தியில் பரவியது. அதன் விளைவாக மக்கள் கொதித்து எழுந்தார்கள். வெள்ளை முதலாளிகள் உயிர் தப்ப ஓடி ஒளிந்தார்கள். கணபதி உயிருடன் இருக்கும் வரை மக்கள் கிளர்ச்சியை அடக்க முடியாது என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசு போலியான விசாரணை ஒன்றினை அவசர அவசரமாக நடத்தி அவருக்கு மரண தண்டனை விதித்தது. இதற்கு எதிராக மலேயா நாட்டில் மட்டுமல்ல

படிப்பகம்

www.padippakam.com



உலக நாடுகளிலெல்லாம் கண்டனக்குரல் எழுந்தது. மலேயாவில் இருந்த இந்தியத் தூதுவர் ஏ.வி. திவி அவர்கள் கணபதியைச் சிறைச்சாலையில் சந்தித்துப் பேச வேண்டிய சூழ்நிலை உருவானது.

இந்தியாவிலும் அதனுடைய எதிரொலி கேட்டது. தமிழ்நாட்டில் கண்டனக்குரல் எழுந்தது. எனினும் கணபதியைக் காப்பாற்றக்கூடிய அளவுக்குப் பெரும் கொந்தளிப்பு தமிழ்நாட்டில் ஏற்படவில்லை. இந்திய அரசு தலையிட்டு எப்படியாவது கணபதியைக் காப்பாற்றும் என்ற போலியான நம்பிக்கை எப்படியோ ஏற்பட்டது. ஆனால் அந்த நம்பிக்கை பொய்த்தது. கணபதி தூக்கிலிடப்பட்டார். இந்தியாவிற்கு வெளியே அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் எத்தகைய நிர்க்கதியான நிலைமையில் வாழ்கிறார்கள் என்பதைப் பற்றி மகாகவி பாரதி பாடியது நினைவுக்கு வருகிறது.

ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்பிறந் துள்ள
பற்பல தீவினும் பரவி மிவ்வெளியே
தமிழ்ச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்:

தாயகத் தமிழர்களால் கைவிடப்பட்ட நிலையில் அயலகத் தமிழர்கள் துயரக்கடலில் தவிப்பது குறித்து மனம் நொந்து பாரதி பாடியது உண்மைதான் என்பதற்குத் தூக்கிலே தொங்கிய கணபதி சான்றாகத் திகழ்கிறார். தாய்த் தமிழகம் கொதித்து எழுந்து

படிப்பகம்

www.padippakam.com



கணபதிக்காகப் போராடியிருக்குமானால், அவரைத் தூக்கிலே தொங்க விடுவதற்கு பிரிட்டிஷ் அரசு அஞ்சியிருக்கும். தனது உயிரைத் தியாகம் செய்ய நேரிட்டது. அயலகத் தமிழர்களுக்கு விழிப்புணர்வூட்டி அத்தகைய சிறந்த தலைமைத்துவத்தைப் பெற்றிருந்த அவரைப் பற்றி இந்தச் சிறுநூல் ஓரளவு விளக்குகிறது. தீரர் கணபதி அவர்களின் பரிமாணத்தை மீண்டும் நினைவூட்டும் விதத்தில் பெரிய அளவில் புத்தகம் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே இந்நூலின் தலையாய நோக்கம் ஆகும் என இந்நூலில் குறிப்பிட்டுள்ளபடி அவரின் முழுமையான வரலாறு எழுதப்பட வேண்டும். அவரோடு வாழ்ந்த, அவருடைய தொண்டு களுக்குத் துணைநின்ற பல தியாக சீலர்கள் இன்னமும் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் மூலமும் மலேயாவில் இன்னும் திரட்டப்பட வேண்டிய அறிஞர் குழு ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். நான் அறிந்த வரையில் தமிழ்நாட்டிலோ அல்லது தமிழர்கள் வாழும் அயல்நாடுகளிலோ தீரர் கணபதியைப் போன்ற ஒரு தியாகத் தலைவர் வாழ்ந்தது இல்லை. ஈழ விடுதலைப் போராட்டமும் அதற்குத் தலைமை தாங்கி நடத்தும் பிரபாகரனுமே இதற்கு விதிவிலக்கு.

கணபதியின் முழுமையான வரலாறு வெளிவருவது தமிழ்ச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஊட்ட நிச்சயமாக உதவும்.

பண்டைய நாளில் பழந்தமிழகத்தில் வாழ்ந்த வாணன் என்ற பெருவீரனின் பெயரைத் தங்கள் மார்புகளில் அன்றைய தமிழர்கள் எழுதி மகிழ்ந்ததாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

வாணன் பேர் எழுதாத மார்புண்டோ! என்று கூறும் அந்தப் பாடலுக்கு ஏற்பத் தீரர் கணபதியின் நாமம் தமிழர்களின் நெஞ்சங்களில் நிலைநிறுத்தப்பட வேண்டும். தியாகமும், வீரமும் நிறைந்த அவரின் வாழ்க்கை தமிழர்களுக்கு முன்மாதிரியான, பின்பற்றப்பட வேண்டிய ஒரு வாழ்க்கையாகும். அவரின் வீர

படிப்பகம்

www.padippakam.com



வரலாற்றைத் தமிழர்களுக்கு எடுத்துக் காட்டும் விதத்தில் ஒரு முன்னோடி நூலாக இந்த நூல் வெளிவருவதை நான் பாராட்டு கிறேன். உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் கைகளில் இந்த நூல் தவழவேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கான முயற்சி களுக்குத் தமிழர்களின் ஒத்துழைப்பு முழுமையாக இருக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

(பழ. நெடுமாறன்)
30/4/98

படிப்பகம்

www.padippakam.com

ஆர். நல்லகண்ணு
மாநிலச் செயலாளர்
இந்திய கம்யூனிஸ்டு கட்சி
தமிழ்மாநிலக் குழு

மலேயா அரசினால் 1949-ல் தூக்கில் இட்டுக் கொல்லப்பட்ட அமரர் கணபதி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவருடன் சேர்ந்து பணியாற்றிய தோழர்களைப் பற்றியும் சுருக்கமாக எழுதப்பட்ட நூல். இந்நூலைப் படித்தேன். நண்பர் உதயபாஸ்கரனும் மற்றும் சிலரும் சேர்ந்து சிரமப்பட்டு விபரங்களைச் சேகரித்து உருவாக்கியிருக்கிறார்கள்.

கால வெள்ளத்தில் மறந்துபோன பெயர் மலேயாகணபதி; 1940-வது ஆண்டுகளில் மலேயா கணபதியின் பெயர் பிரபலமாக இருந்தது. தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்; சாதாரண விவசாயக்குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, பிழைக்க வழி தேடி மலேயா சென்றவர். மலேயாவில் அப்பம் விற்றும், அதிகாரிகளின் வீட்டில் பாத்திரங்களைச் சுத்தம் செய்தும் பிழைத்து வந்த கணபதி, படிப் படியாக அரசியலிலும் கம்யூனிஸ்டாக மாறினார். தொழிற்சங்கத் தலைவரானார். உழைக்கும் மக்களை ஒன்று திரட்டினார். ஆசியத் தொழிற்சங்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இந்தியாவையும் மலேயாவையும் ஆண்டு வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கணபதியைத் தூக்கிலிட்டுக் கொன்றது. அமரர் கணபதியின் வரலாற்றை விளக்கும் சிறு நூலாக இருந்தாலும், கடல் கடந்த தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிவிக்கும். **திரைகடலோடியும் திரவியம் தேடு** என்ற பழமொழிக்கு அடித்தளமாகத் தமிழ்மக்களின் வாழ்க்கை அமைந்தது.

**"புலம்பெயராப் பழங்குடி"** என்று சிலப்பதிகாரத்தில் கூறப் பட்டுள்ளது. ஆனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இந்திய மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ்மக்களுக்கு - பிறந்தமண்ணில் பிழைக்க வழியில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பிழைப்புதேடி மலேயா, சிங்கப்பூர், பர்மா, ரங்கூன், இலங்கை, ஜாவா, சுமத்திரா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு ஒப்பந்தக்கூலிகளாகச் சென்றார்கள். சென்ற நாடுகளையெல்லாம் உழைப்பால் செழிக்கச் செய்தனர். வெள்ளை முதலாளிகளின் கொடுமைக்குள்ளானார்கள்.

'கரும்புத் தோட்டத்திலே எங்கள் தாயின் விம்மி விம்மி அழும் குரல் கேட்டிலையோ' என்ற பாரதியின் பாட்டு தமிழர்களின் சோகக் கதையைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

நண்பர்கள் தயாரித்திருக்கும் இச்சிறுநூலிலும், கடல் கடந்த தமிழர் இந்த நூற்றாண்டின் துவக்கமுதல் மலாயாவில் எப்படிவாழ்ந்தார்கள் என்பதை விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தமிழர்களின் வாழ்க்கை வரலாற்று நூலாகவும் இது அமைந்துள்ளது.

மலேயாவில் பிழைக்கச்சென்றவர்களில் சிலர் தொழிலாளி வர்க்க போதம் பெற்றவர்கள். புதிய மனிதர்களாக நாடு திரும்பினார்கள். சிலர் நாடுகடத்தப்பட்டார்கள்; தோழர் ஆர்.எச். நாதன் நாடு கடத்தப்பட்டவர். ஜனசக்தியில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். தோழர் பொறைக்கலம், தோழர் ஏ.எஸ்.கே துவக்கிய துறைமுகத் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து செயல்பட்டார்; தோழர்கள் சோழபாண்டி ராமானுஜன், வெங்கடேச சோழகர் மற்றும் தலைஞாயிறு கோவிந்தசாமி போன்றோர் தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் இயக்கத்திற்கு வித்திட்டார்கள். தோழர் ராஜ மாணிக்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சென்னை மாவட்டக் குழுவில் இணைந்து வேலை செய்து வருகிறார். மேலும் தொடர் வரலாறாகச் சொல்லலாம்.

படிப்பகம்

www.padippakam.com



மலேயா கணபதி அவர்கள் தூக்கிலிடப்பட்ட காலத்தில் இந்திய நாடெங்கும் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டிருந்தது. இக்கட்சியின் வாரப்பத்திரிக்கை "ஜனசக்தியும்" தடைசெய்யப் பட்டது. ஜனசக்தி மறைமுகமாக அச்சடிக்கப்பட்டு, காவல்துறையின் கண்ணுக்கு எத்துப்படாமல், தனியாகச் சுற்றுக்கு விடப்பட்டுவந்தது. மலாயா கணபதி தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்து, கட்டுரைகளும், கவிதைகளும் வெளிவந்தன; அப்பத்திரிகைகள் இப்போது கிடைக்கவில்லை, கட்சியின் பெயரில் இல்லாமல், தனியாக "முன்னணி" என்ற வார வெளியீடு கொண்டு வரப்பட்டது, தமிழ்ஒளி, குயிலன் போன்ற சிறந்த கவிஞர்களும், தி.க.சிவசங்கரன் போன்ற எழுத்தாளர்களும் நடத்திவந்தனர், மலாயா கணபதி தூக்கிலிடப்பட்டதைக் கண்டித்தும் தியாகச் சுடரைப் புகழ்ந்தும் கவிஞர் குயிலன் எழுதிய அருமையான கவிதையைத் தேடிப்பிடித்தேன். இரு நாட்களுக்கு முன்புதான் ஈரோட்டில் முதிய தோழர் நடேசன் மூலம் கிடைத்தது. லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் முதல் இந்தியப்பிரதமர் நேருவும் கலந்துகொண்டார். மலேயாவும் காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொண்டது. இதன் விபரங்கள் இக்கவிதையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. காமன்வெல்த் மாநாடு முடிந்த சில தினங்களுக்குள் தோழர் கணபதியை மலேயா அரசு தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டது. அக்கோர சம்பவங்களைக் கவிதையாக வடித்துள்ளார்.

"வெள்ளையரின் தாலியுடன் வீடுவந்து சேருமுன்னே
உள்ளம் கொதிப்பேற்ற ஒரு செய்திவந்ததடா,
ரத்தவிருந்துண்ட ரணநாற்றம் போகுமுன்னே
பத்திரிகைச் செய்திகளில் பார்த்திட்டோம் அச்செய்தி
ரப்பர் மரக்காடுகளில் ரத்தத்தை வேர்வையென
உப்பளத்து நீரெனவே போற்றிவரும் தொழிலாளர்
தங்கள் தலைவன் - தஞ்சை நிலம் பெற்றெடுத்த

www.padippakam.com



எங்கள் தமிழ்த்தோழர் ஈடற்றகணபதியின்
கட்டுவிடா நல்லவுடல் காளையிளம் பருவம்
ஆட்லியின் கையாட்கள் அமைத்திட்ட மேடையிலே
நட்டுவைத்த தூக்கினிலே நாக்குவெளித்தள்ள
கண்கள் பிதுங்க கரங்களும் சோர்ந்துவிழ
எண்ணற்ற தொழிலாளர் ஏங்கியபடி தூக்கிலிடப் பட்டான்
எனக்கேட்டுப் பதறிற்றே இவ்வையம்"

இக்கவிதைத் தொடரில் அன்றைய உலக அரசியலையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

மலாயா கணபதி தூக்கிலிடப்பட்ட கோர நிகழ்ச்சி இளைஞர்களை உலுக்கியது, தமிழ்நாட்டிலும் கம்யூனிஸ்ட் கட்சி மீது நடத்தப்பட்ட அடக்குமுறைக் கொடுமைகளை திராவிட இயக்கம் தொடர்ந்து கண்டித்து வந்தது. அப்போது திமுக தலைவர் கலைஞர் அவர்கள் இளமைத் துடிப்புள்ள உணர்ச்சிமிகு பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்து வந்தார். அவர் எழுதிய **"கயிற்றில் தொங்கிய கணபதி"** என்ற நூலையும் இவ்வெளியீட்டில் குறிப்பிட்டிருப்பது, வரலாற்று ஆதாரத்துக்கும், அமரர் கணபதியின் தியாகம் தமிழ் இளைஞர்களைச் சிந்திக்க வைத்துள்ளது என்பதற்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அமரர் கணபதியின் வரலாற்றைச் சிரமத்தோடு சேகரித்து நூலாக வெளியிட்டுள்ள நண்பர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடல் கடந்த தமிழர்களின் வாழ்க்கையோடு இணைந்து வரலாற்று நூலாகப் பயன்படுமென்று நம்புகிறேன். அனைவரும் படித்துப் பயன்பெறவேண்டுகிறேன்.

சென்னை
29.1.1996.

ஆர். நல்லகண்ணு

(ஆர். நல்லகண்ணு)

படிப்பகம்

www.padippakam.com



திருச்சி தியாகராஜன் சி.பி.எம்
மகாகவி பாரதிநகர்
சென்னை - 39

# காலத்தை வென்ற தோழர் கணபதி

ஒரு மரத்தில் பூத்த மலர்கள் அனைத்துமே பிஞ்சாகிக் காயாகிக் கனியாகி விடுவதில்லை. ஆழ்கடலின் அடியில் உள்ள சிப்பிகள் அனைத்திலுமே முத்துக்கள் உருவாவதில்லை. மிகக் குறைந்த ஒரு சில சிப்பிகளில் தான் வெண்முத்துக்கள், நன் முத்துக்கள் விளைவதுண்டு. இதே போல் மனித வடிவில் பிறந்த எல்லோருமே மனித நிலையை எட்டிப் பிடித்து மடிவதில்லை. பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடிந்த மனிதக்கும்பலில் பெரும்பாலானோர் மிதந்தவர் சிதைந்தவர் புதைந்தவர் என மாண்டு மடிகின்றனர். மிகச்சிலரே அவர்களது உடல்கள் மறைந்தாலும் பல கோடி மக்களின் உள்ளங்களில் பதிந்தவர்களாக நீண்ட நாட்களாக வாழ்ந்து கொண்டு வருகின்றனர்.

அரசியல் விஞ்ஞானம், கலை இலக்கியங்களென்ற வரிசையில் இன்றும் என்றும் மக்கள் நினைவில் நிலைத்திருப்பவர்கள் மிகச் சிலரே. மக்கள் நிலை உயர, தங்களைத் துயரப்படுத்திக் கொண்டு மடிந்த கார்ல் மார்க்ஸ் ஏங்கெல்ஸ், லெனின், மாசேதுங் இந்தியாவில் பகத்சிங் போன்ற தோழர்கள் வரிசையில் மலேசியாவில் தூக்குக்கயிற்றில் தொங்கிய மாவீரன் மலேயா கணபதியைக் கூறும் மதிப்பீட்டில் தப்பில்லையெனக் கருதுகிறேன்.

தாய்மொழியாகிய தமிழ்மொழிப்பற்று, கலை இலக்கியம், பகுத்தறிவு, நாத்திகம் அனைத்திலுமே ஈடுபாடு கொண்டவராக விளங்கியதோடு விளையாட்டுக் கழகங்களையும் ஊக்குவித்தார். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த மலேயாவை ஜப்பானியர் கைப்பற்றிய காலத்தில் அவர்களது கொடுங்கோன்மைக்கு எதிராக மக்களைத் திரட்டிப் போராடினார். இரண்டாம் உலகப் போரின் அச்சு நாடுகளுடன் இணைந்திருந்த ஜப்பான் வீழ்ந்த பிறகு மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கியது. எச்சரிக்கை உணர்வால் அவர்களது கெடுபிடிகளையும் மேலாதிக்க ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடிய புரட்சி வீரனாக விளங்கினார்.

www.padippakam.com



மக்கள் விடுதலைப் போராட்டமென்றாலே வர்க்கப் போராட்டம் என்பது சரியல்ல. அரசியல் விடுதலை வேறு, வர்க்க விடுதலை வேறு. இந்தியாவைப் பொறுத்தவரை தொழிலாளர்கள், விவசாயிகள், ஏழை, பணக்காரன், நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய அனைவருமே அரசியல் விடுதலைப் போராகிய மக்கள் விடுதலைப் போரில் பங்கு கொண்டனர். பின்னர் இந்தியா விடுதலை பெற்ற பின் பணக்காரர்களின் சுரண்டல்களமாக மாறிவிட்டது. ஆனால் மலேசியாவைப் பொறுத்த வரை பெரும்பாலும் உழைக்கும் மக்களே வாழ்ந்து வந்த படியால் மக்கள் விடுதலைப் போராட்டம் வர்க்கப் போராட்டமாகவே நடந்தது என்று வேண்டுமானாலும் கூறலாம்.

சுரண்டும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிட்டத்தட்ட 25 தொழிற்சங்கங்களுக்கு மேல் போராடி வந்தன. இத்தனைத் தொழிற்சங்கங்களுக்கும் இணைப்புப் பாலமாக ஒட்டு மொத்தத் தலைவனாகப் போர்க்குணத்தோடு தோழர் கணபதி பணியாற்றி வந்தார். வர்க்கப்போரின் தலைவனாக, மார்க்சீய சிந்தனையாளனாக, பொதுவுடமைப் போராளியாக, மக்களின் ஏகோபித்த தலைவனாகத் தோழர் கணபதி செயல்பட்டு வந்ததால் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கணபதியைக் குறிவைத்தனர். நாளாக நாளாக பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுங்கோன்மை உச்சகட்டத்திற்கு உழைக்கும் மக்களை ஒன்று திரட்டி ஆயுத மேந்திய சேனைத் தலைவனாக, வர்க்கப் போரின் நாயகனாக கணபதி வலம் வந்தார். பின்னர் ஒரு சமயம் ஆட்சியாளர்களால் கைது செய்யப்படுகிறார். கணபதி கைதானதை எதிர்த்து மக்களின் உணர்ச்சித் தீயாக மூண்டுவிட இதற்கு முடிவு கட்ட எண்ணிய பிரிட்டிஷ் ஆட்சியாளர் வெகுவிரைவில் தோழர் கணபதியைத் தூக்கிலேற்றி முடிவுகட்டக் காரணங்களைத் தேடினார்.

படிப்பகம்

www.padippakam.com



தோழர் கணபதி கையில் துப்பாக்கியோடு திரிந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கயிற்றில் தொங்கவிடப்பட்டார்.

மொழி உணர்வும், நாத்திகக் கொள்கையும் மார்க்சியக் கொள்கைக்கு ஏற்புடையவைகளே. எனவே தோழர் கணபதியவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தூக்கிலேற்றப் பட்டது மொழிக்காகவோ, நாத்திகக் கொள்கைக்காகவோ என்பதைவிட அவர் உழைக்கும் மக்களை ஒன்று திரட்டி வர்க்கப்போரின் தலைவனாக, பொதுவுடைமை வாதியாக, ஏகாதிபத்தியத்தின் எதிரியாக செயல்பட்டதால்தான் எனலாம். மாமேதை கார்ல் மார்க்ஸ் கூறியபடி நாத்திகத்தை எவ்வளவு காலம் பேசி வந்தாலும் முதலாளிவர்க்கம் கண்டு கொள்ளாது. ஆனால் ஏகாதிபத்தியச் சுரண்டலை எதிர்க்கும் போது மட்டும் விழித்துக் கொள்ளும் என்பது தான். தோழர் கணபதி அவர்கள் மலேசியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி ஊக்கமுடன் செயல்பட்டவர். அவருடன் தோளோடு தோள் நின்ற தோழர் வீரசேனன் சுட்டுக் கொல்லப்பட்டார். மக்கள் கிளர்ச்சி மீண்டும் மீண்டும் தலைதூக்கவே, அடுத்து தூக்கு மேடைக்கு வரிசைப்படுத்தியிருந்த தோழர் சாம்பசிவம் தன்னை கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக்கிக் கொண்டதே மேற்கூறிய விளக்கங்களுக்கெல்லாம் சான்றாகும். பின்னர் பணக்கார கும்பலால் அவர் கொலை செய்யப்பட்டது. அடுத்த கொடுமையாகும்.

இதில் வேதனை என்னவெனில் மலேசியாவில் இவ்வாறு மாபெரும் தியாகம் செய்து, செத்து மடிந்த கணபதி போன்ற தோழர்களைத் தமிழக மக்கள் முழுமையாகப் புரிந்து கொண்டு போற்றி தங்கள் நினைவில் நிறுத்தாத காரணங்கள் என்ன? அதன் மர்மங்கள் என்ன என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது. தோழர் கணபதியோடு ஒரு தொழிற்சங்கத்தின் செயலாளராக இருந்து நாடு கடத்தப்பட்டுத் தமிழகம் வந்து சென்னை ஹார்பர்

படிப்பகம்

www.padippakam.com



தொழிற் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றி வயதின் காரணமாக தற்போது மாதவரத்தில் ஓய்விலிருக்கும் தோழர் பொறைக்கலம் மலேயாவில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சான்றாக வாழ்ந்து வருகிறார்.

வர்க்கப் போரின் தலைவனாக, ஒரு பொதுவுடைமைவாதியாக ஏகாதிபத்தியத்தின் எதிரியாக வாழ்ந்து தூக்கில் தொங்கவிடப் பட்ட கணபதிக்குக் கரம் உயர்த்தி, தலைநிமிர்த்தி மரியாதை செய்ய நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

(திருச்சி தியாகராஜன்)

படிப்பகம்

www.padippakam.com

# தோழர் குருதேவன்

அரை நில பிரபுத்துவ சமூக உறவுகள் - காலனியாதிக்கத்தின் விளைவுகள் - ஏகாதிபத்தியத்தின் நிர்பந்தங்கள் - உள் நாட்டு அரசியல் சூதாடிகள் மலிந்த இன்றைய மலேயாவில் - மலேயாவின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளைப் பற்றிய விவரங்கள் போதுமான அளவில் இல்லை. இல்லையென்பதைக் காட்டிலும், மலேயா சமூகத்துக்குத் தெரிவிக்கப்படவில்லை. திட்டமிட்டு மறைக்கப் பட்டிருக்கின்றது. அத்தகைய வெற்றிட இடைவெளியை நிரப்பிச் சரி செய்யப் பரந்த அளவிலான, தொடர்ச்சியான ஆராய்ச்சி அவசிய மாகும், எஸ்.ஏ.கணபதியின் வரலாற்றை வெளிக் கொண்டு வரும் இவ்வரிய முயற்சி சரியான பயணத்தின் முதல் காலடிச் சுவடு ஆகும். மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் மாபெரும் தியாகியான எஸ்.ஏ.கணபதி தேசிய விடுதலைப் போராட்டத் தலைவராக மட்டுமல்லாமல் மலேயாவின் கூலி அடிமைகளின் புரட்சிகரத் தலைவராகவும் திகழ்ந்தார். இரண்டாம் உலகப்போரின் காலத்தில் - மக்கள், ஜப்பானிய எதிர்ப்பியக்கத்தில் பங்கு கொண்ட போது பிரிட்டன் மலேயாவை இழந்தது. பிரிட்டிஷ் அரசு வன்முறையை நிகழ்த்தியதால் தொழிலாளர் கிளர்ச்சியும்- சமூக கிளர்ச்சியும் பரவலான அரசியல் சீர்குலைவும் - குழப்பங்களும் குறிப்பிட்டுக் கூறப்படும் அளவுக்கு மலேயாவில் எழுந்தன.

பொதுவாக மலேயா மட்டுமல்ல - உலகம் முழுவதும் எஸ்.ஏ. கணபதியைப் பற்றி மிகக் குறைந்த அளவே தெரிந்து வைத்துள்ளனர். அவர் அகில மலேயா தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவராகவும், கையில் துப்பாக்கி வைத்திருந்தமைக்காகவும் பிரிட்டீஷ் காலனி அதிகாரிகளால் தூக்கிலிடப்பட்டார் என்ற அளவுக்கே தெரிந்து வைத்துள்ளது. மக்களின் குடிமை உரிமைகள் பறிக்கப்பட்டு, சுதந்திரம் பறிக்கப்பட்டு, பிரிட்டீஷ் அரசு விதித்த கடுமையான கட்டுப்பாடுகளும் நாகரீகமற்ற ஒடுக்குமுறைகளும் நிறைந்த காலத்தில்

படிப்பகம்

www.padippakam.com



நடந்த நிகழ்ச்சியானதால், பரவலாக மக்கள் மத்தியில் வரலாற்று ஆவணமாக அந்நிகழ்ச்சி உருவாகவில்லை. கி.பி. 1948-49ம் ஆண்டுகள் மலேயாவின் குடிமை உரிமைகளுக்கே எதிரான இருண்ட காலமாகும்.

மலாய் தேசிய இனங்களின் மீதான இத்தகைய அச்சுறுத்தலைக் கடுமையாகச் சந்தித்தது மலேயா தேசிய விடுதலை படை (MNLA) (Malaya National Liberation Army.) காலனியாதிக்கத்திற்கு, எதிரான அந்த போரினை மலாய் பிரிட்டீஷ் காலனி அதிகாரிகள் "அவசர கால ஆட்சிக் காலம்" என்று அழைத்தனர். அதனையே பிரிட்டீஷாருக்கு பின் ஆட்சியிலேறிய - பிரிட்டீஷ் ஆட்சிக்குப் பின் வந்த சுதந்திர மலேயாவின் ஏகாதிபத்தியவாதிகளும் கிளிப்பிள்ளை போலக் கடந்த 1963-லிருந்து கூறி வருகின்றனர். மலேயாவின் இத்தகைய புதிய காலனித்துவம் (New-Colonialism) தொடர்ச்சியாக மக்களால் எதிர்க்கப்பட்டு வருகின்றது.

சுதந்திர மலேயாவின் புதிய ஆட்சியாளர்களுக்கு (கி.பி. 1957 ஆகஸ்டு 31-லிருந்து) உள்ளிட்டு அவசர காலம் எனும் நெருக்கடிகள் கி.பி.1948 முதல் 1960 வரையில் நிலைத்து இருந்தது. ஆனால் கி.பி. 1960களுக்குப் பிறகு மலேயா தேசிய விடுதலைப் படையோ அல்லது மக்களோ தோற்கடிக்கப்படவில்லை. கி.பி.1955 முதல் கி.பி.1960 வரையிலான காலங்களில் மலேய தேசிய விடுதலைப் படை போராடாமலிருந்ததற்கு மலாய் கம்யூனிஸ்டு கட்சியின் உச்சத்திலிருந்த வலதுசாரி சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளே காரணமாக இருந்தன. இந்தச் சக்திகள் புதிய சூழ்நிலையிலான - ஒட்டு மொத்த காலனியாதிக்கத்தில் அரசியல் இடத்துக்கான வெற்றியின் கற்பனையிலிருந்து அதன் போக்கு எதிரியோடு அமைதி பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதாகவும் வாக்குவங்கி அரசியலில் (Electroal Politics) திரிபுவாத, நிலபிரபுத்துவ அரசியல் கட்சிகளோடு அமைதிப் போட்டிகளில் சரணடைவதாகவும் மாறியது. கி.பி. 1960களின் துவக்கத்திலிருந்து இடைக்காலம் வரையில் - உலக

படிப்பகம்

www.padippakam.com



கம்யூனிஸ இயக்கத்தின் சித்தாந்த விவாதங்களின் பின்னணியில் அத்தகைய சந்தர்ப்ப வாதத்தினைக் களையும் முயற்சிகளில் மலேயா கம்யூனிஸ்டு கட்சி ஈடுபட்டது. அவ்விவாதங்களும் - முரண்படுதலும் அன்றைய சீனப் புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சிக்கும் - சோவியத் யூனியனின் (CCP-CPSU) கம்யூனிஸ்டு கட்சிக்கும் இடையிலானதாக - மலர்ந்ததிலிருந்து உலக ஏகாதிபத்திய மேலாண்மைக்கும் சுரண்டலுக்கும் இடமளிப்பதாக கி.பி.1956லிருந்து அமைந்து விட்டது.

மாவோயிசக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பின்பற்றி மலாய் கம்யூனிஸ்டு கட்சி - விவசாயி புரட்சி - தேசிய விடுதலையை உள்ளடக்கிய புதிய சனநாயக புரட்சியினை ஒடுக்கப்பட்ட நாடுகளில் நடைபெறுவதை ஆதரித்தது. அதனை மா-சே-துங் வழியினிலான சமதர்மத்துக்கான பாதையாக மலாய் கம்யூனிஸ்டு கட்சி கருதியது. ஒரு நீண்ட மக்கள் யுத்தத்துக்காக மக்களைச் சார்ந்து - மக்களைத் திரட்டும் முயற்சிகளில் திட்டவட்டமான வடித்தெடுத்தது. தோழர்கள் பி.வீரசேனன் மற்றும் எஸ்.ஏ. கணபதி போன்ற எண்ணிறந்த பாட்டாளி வர்க்க தியாகிகளின் தியாக வெற்றிகளோடு - கி.பி.1960-க்கும் 1970-க்கும் இடைப்பட்ட காலத்தின் பின்பகுதியில் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சியாகவும் - கிளர்ச்சியாகவும் உயரே எழுந்தது.

இந்த புரட்சிகர கம்யூனிஸ வடிவமும் மலேயாவில் வெகு நாளைக்கு நீடிக்கவில்லையென்பது வருந்தத்தக்கது. கி.பி. 1976-ல் மாவோவின் மறைவுக்குப் பிறகு உலகின் வலிமை வாய்ந்த பணக்காரர்களினால் சுரண்டப்பட்ட ஏழை உலகம் குருதி சொட்டச் சொட்ட நலிந்திருந்த நிலையில் - சீனாவின் அதிகாரத்திலிருந்த புதிய ஆட்சியாளர்களை மலேயா கம்யூனிஸ்டு கட்சி அங்கீகரித்தது.

எஸ்.ஏ.கணபதியின் வாழ்க்கையைத் திரும்பத் தொகுத்தளிக்கும் இந்நல்முயற்சி எதிர்கால புதிய சவால்களுக்கும் அதனை வெல்லும்

படிப்பகம்

www.padippakam.com



ஆற்றல் படைத்த புதிய சிந்தனைகளுக்கும் உறைவிடமான ஆயிரக்கணக்கான கணபதிகளை மலேயாவிலும் - பிறபாகங்களிலும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. நமது கடந்த காலத் தியாகிகளை நினைவு கூர்வது ஒடுக்கப்பட்ட மக்களின் கிளர்ந்தெழும் உரிமை புதுப்பிக்கப்பட்டதாகப் பொருள் ஆகும். நமது முன்னோரின் வாழ்விலிருந்து நாம் பல பாடங்களைக் கற்போம். உருவாகும் கணபதிகள் அவர்கள் வாழ்வினை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், சாதியடிப்படைகளைத் தகர்ப்பதற்கும் அடிமைகளை உரிமைகள் படைத்த சுதந்திரமான மக்களாக மாற்றுவதற்கும் அர்ப்பணிப் பார்கள். வல்லரசுகளின் வெல்லவியலாத ஒரு சிலருக்கான வசதிக்கும் பலரின் பஞ்சத்துக்கும் உருவாக்கப்பட்ட உலகமயமாக்கலை அவர்கள் எதிர்ப்பார்கள். இவைகள் வீரமான - கடுமையான - என்றும்விட்டு கொடுக்கத் துணியாத மனதோடு இன்று மலேசியாவிலும் உலகிலும் பெருகி விட்ட எதிர்ப்புரட்சி யாளர்களைச் சந்திக்கத் தயாராகும் கடமையினை ஆயிரக்கணக்கான கணபதிகளின் கையில் ஒப்படைக்கும் நூல் இந்நூலாகும். இந்நூலினை எழுதிய நூலாசிரியர் இளவல் வழக்கறிஞர் உதயபாசுகர் அவர்களுக்கும் நூல் வெளியீட்டுக் குழுவின் பொறுப்பாளர் தோழர் இன்குலாப் அவர்களுக்கும் வெளியீட்டுக் குழுத்தலைவர் தோழர் மோகன் அவர்களுக்கும் இந்நூலுக்கு உதவிய எண்ணிறந்த மலேயா தோழர்களுக்கும் இந்திய தோழர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன் புரட்சிகர வணக்கங்கள்.

தோழர் குருதேவன்

படிப்பகம்

www.padippakam.com



இன்குலாப்
வெளியீட்டுப் பொறுப்பாளர்
சென்னை-600 014

# மலாயா கணபதியும் அவர்தம் தோழர்களும் காலத்தின் தேவை

வரலாற்றின் மாபெரும் திருப்பங்கள் யாரால் சாத்தியப் பட்டன? மக்களுக்காகத் தம்மைச் சமர்ப்பித்துக் கொள்ளும் மனிதர்களால்தான். எளியவர்களாக வரலாற்று அரங்கில் நுழையும் இம்மனிதர்கள், விடுதலைப் போராட்டத்தை வரித்துக் கொள்ளும்போது சமூகத்தையே உருவாக்குபவர்களாகவும் உயர்ந்து நிற்கிறார்கள்.

மலேயா கணபதியும் அவர்தம் தோழர்களும் அத்தகைய எளிய மனிதர்கள்தான். இடியாப்பம் விற்பவர்களாகவும், தோட்டத் தொழிலாளர்களாகவும், துறைமுகப்பாட்டாளிகளாகவும், ஒரு வாழ்க்கையைத் தேடி மலேயா சென்ற இம் மனிதர்களை, வரலாறு விடுதலைக்குப் போராடுபவர்களாக மாற்றியது. விடுதலை, தன்னை ஏற்குமாறு ஒவ்வொரு மனிதனையும் வேண்டுகிறது, விடுதலையை ஏற்பதற்கு இறுதியில் உயிரையும் தர வேண்டியதிருக்கும் என்று வரலாறு அறை கூவுவதால் பலர் விடுதலைக்கு முகம் கொடுக்க மறுக்கிறார்கள், தன் பிள்ளை, பெண்டாட்டி என்ற கடுகு வட்டத்துக்குள் நிறைவு கொள்கிறார்கள். மானுடத்தையே தனது சுற்றமாக வரித்துக் கொண்ட மாபெரும் மனித நேயர்கள் விடுதலைக்குத் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒருபுன்முறுவலுடன் தத்தம் செய்கிறார்கள். வரலாறு இயங்குகிறது அதன் இயங்குதிறனாக இந்த மனிதர்களின் வாழ்க்கை முறையே உள்ளோடுகிறது.

பஞ்சாப் ஒரு பகத்சிங்கால் தனது முகம் நிமிர்த்துகிறது என்றால், தமிழினம் கணபதியாலும், அவர்தம் தோழர்களாலும்

படிப்பகம்

www.padippakam.com



முகம் நிமிர்த்தும் தகுதியைப் பெற்றிருக்கிறது. ரசிகர் மன்ற அரசியலுக்கு உதாரணமாகிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழ் மக்களுக்கு முற்றிலும் வேறுபட்டவர்களாக அந்த மனிதர்கள் இருந்தார்கள்.

இன்று மலேசியாவின் பாட்டாளி மக்களுக்கு மலேயா கணபதி போன்றவர்கள் போராடிப் பெற்றுத் தந்த உரிமைகளின் தியாக வரலாறு தெரியாமலேயே இருக்கிறது. தமிழகத்தில் இன்றைய ரசிகர் மன்ற அரசியல் அவர்களையும் தொற்றிக்கொள்ளும் அச்ச நிலையும் இருக்கிறது. அங்குள்ள முதுபெருந் தோழர்கள், மலாயா கணபதியையும், வீரசேனனையும் சாம்பசிவத்தையும், ராமதாஸ் என்கிற அந்தோணி சாமியையும் நினைவுகூர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அனைத்துக்கும் மேலாகத் தொழிலாளர் வர்க்கத்திடம் எத்தகைய போராளிகளினால் தலைமை தாங்கப்பட்டது என்பதை நினைவூட்ட விரும்புகிறார்கள். இத்தகைய சூழலில் இந்த நூலின் வருகை தமிழினத்துக்கும் சிறப்பாக மலேசியத் தொழிலாளி வர்க்கத்துக்கும் மிகப் பயன்பாடுகளுடையதாக அமையும்.

அளவில் சிறியதாக இருப்பினும் ஒரு பெரிய வரலாற்று நூலுக்கான அடிப்படையான செய்திகளை இது கொண்டிருக்கிறது. மலேயா கணபதியை மட்டுமல்லாமல், அவருடன் தோளோடு தோள் சேர்ந்து போராடிய குருதேவன், ராஜமாணிக்கம், அந்தோணி சாமி, மலேயா பழனி போன்ற பல தோழர்களின் பங்கேற்பையும் கவனமாக இந்நூல் பதிவு செய்திருக்கிறது. தோழர் குருதேவன், வெறுந்தாத்தாவாக மட்டுமே இங்குள்ள கட்சியால் அறிமுகம் செய்து வைக்கப் பட்டிருக்கிறார். ஆனால் அவரது வாழ்க்கையின் அறிமுகமாகாத மகத்தான பகுதிகள் எவ்வளவோ? புரட்சியாளர் பகத்சிங், சந்திரசேகர் ஆசாத் ஆகியோரால் நிறுவப்பட்ட இந்துஸ்தான் குடியரசுப் படையின் அயல் நாட்டுச் செயலாளர், நேரடியாக

படிப்பகம்

www.padippakam.com



சுபாஸ்சந்திர போஸின் இந்திய தேசியப்படையில் வீரர்களைச் சேர்க்கும் அதிகாரி, சிங்கப்பூரில் சுபாஸ் சந்திரபோஸையே அறிமுகம் செய்த தகுதியாளர், இந்திய மலேயா நாடுகளின் விடுதலைக்குப் போராடிய ஒரு போராளி இப்படி எத்தனையோ பக்கங்கள் இன்னும் படிக்கப்படாமலேயே உள்ளன.

இந்த நூல் ஒரு அவசரமான வரலாற்றுக் கடமையை வற்புறுத்துகிறது. புரட்சி வரலாற்றின் மிஞ்சியிருக்கும் மாபெரும் தியாக சாட்சியங்களைக் கொண்டு அந்த வரலாற்றை எழுதி முடிக்க வேண்டும் என்பதே அது.

பொதுவுடைமைவாதி என்பவன் தேசிய விடுதலைக்கும் பாட்டாளி வர்க்க விடுதலைக்கும் தன்னை ஒப்படைப்பவன் என்பது பொது விதியாகலாம். இந்தியத் துணைக்கண்டத்தில் இன்றைய தமிழகப் பொதுவுடைமையாளர்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து செயல்பட்டவர்களாக மலேயா கணபதியும் அவர்தம் தோழர்களும் இருந்தனர் என்பதை இந்நூல் உணர்த்தும்.

இந்நூலாசிரியருக்கும் குழுவுக்கும், இதன் சிறப்பான உதவியாளர்களுக்கும், ஒரு வரலாற்றுத் தேவையை நிறைவு செய்வதற்காக என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இன்குலாப்)

படிப்பகம்

www.padippakam.com



எஸ்.முத்து உமய வேலாயுதம்
ஐ.என்.ஏ.தியாகி
ஆசாத் ஹிந்து பௌஜ் சங்கம்
தமிழ்நாடு பிராந்தியம்
இந்தியா
சென்னை

# புரட்சிக் கனல் தூக்கு மேடை கணபதியும் அவர் தம் தோழர்களும்

தென் கிழக்கு ஆசியாவில் பிரிக்கப்படாத மலேயா — சிங்கப்பூர் நாட்டில் தனது வாழ்க்கையில் எண்ணற்ற மலேயா மக்களின் விடுதலைக்காக ஏகாதிபத்திய வெறியர்களை விரட்டி அடித்தும் தாய்மொழியாம் தமிழ் மொழியைப் பல மொழி பேசும் மக்களோடு இணைத்தும் - மலேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் மார்க்ஸிய தத்துவத்தைப் போதித்தும் தன்னுயிரை, மலேசியா மண்ணிற்கு அளித்துத் தியாகியாகப் பரிமாணம் பெற்றவர் அஞ்சா நெஞ்சன் கணபதியாவார். தோழர்கள் குருதேவனும், பழனியும், வீரசேனனும், நாதன் சாம்பசிவம் மற்றும் உள்ள தோழர்களை இணைத்து மலைத்தோட்ட மற்றும் ஹார்பர் தொழிலாளிகளை இணைத்து ஒரு மித்த கருத்தோடு அவர் செயல்பட்டார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் 1943ம் ஆண்டு மலேசியாவில் கர்ம வீரன் கணபதி மற்றும் உள்ள தோழர்களை இணைத்து இந்திய விடுதலைக்கு உறுதுணையாக இருக்க இருமுறை பேச்சு நடத்திய போது கம்யூனிஸ்டுகள் என்று தெரிந்தேதான் நான் உங்களை இந்திய விடுதலைக்கு அழைக்கிறேன் என்று நேதாஜி அவர்கள் உரைத்த பொழுது இந்திய மக்கள் மட்டுமல்ல ஆசிய மக்களுக்கே விடுதலை தேடித் தரவேண்டும் என்று கூறி இந்திய படையில் முன்னணி வீரனாகத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர். அவ்வாறு வீர சபதத்துடன் போராடும் பொழுது வெள்ளையர்கள் கையில் பிடிபட நேர்ந்த பொழுது அஞ்சா நெஞ்சன் தீரர் கணபதி அவர்கள் பீடு

படிப்பகம்

www.padippakam.com



நடைபோட்டு, சாலையில் தூக்குமேடை நோக்கி சென்ற பொழுது இருமருங்கிலும் நின்று வீரகோஷம் எழுப்பிய பல்லாயிரக்கணக்கான மக்கள் கணபதியை நெஞ்சார்ந்து பாராட்டி "உன்னுடைய கோஷத்தை, மார்க்ஸிய தத்துவத்தை எங்களின் மனதிலே ஊட்டிச் செல்கின்ற உன் வழித் தோன்றலாக இருப்போம்" என கூறிப் புகழஞ்சலி செலுத்திய மக்கள் பல்லாயிரம், பல்லாயிரம் ஆவர்.

தரணி புகழும் தஞ்சையிலே பிறந்து (மைனா) மலேசியாவில் வீர திருமகன்கள் பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் வழியிலே உயிரை விடுதலைக்குப் பணயம் வைத்த தூக்குமேடை கணபதி அவர்களையும் அவர்தம் தோழர்களையும் வணங்கி அவர்களின் சேவைகளைப் பின்பற்ற வேண்டும் என நினைவுறுத்துகின்றோம்.

முத்து உமய வேலாயுதம்

(எஸ்.முத்து உமய வேலாயுதம்)

படிப்பகம்

www.padippakam.com



(காலம் சென்ற) சுவீ. நடராசன்
மலேசிய தமிழக நட்புறவு மன்றம்
கோலாலம்பூர்.

மலேசிய வரலாற்றில் மாபெரும் பொது உடமைச் சிற்பி தியாகி கணபதி.

தமிழ் நாட்டுப் பெரியாரின் தலைசிறந்த சீடன். சீர்திருத்தப் பள்ளிகளின் தலைவன் - மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் இரும்புக் கரங்கள் என மலேசிய - சிங்கை - இந்தியா - சீனா ஆகிய நாடுகளின் விடுதலைக்காக இடையறாது போராடியவன். வெகுஜனம் மற்றும் தொழிற்சங்கம் ஆகியவைகளைச் சரியாக வழி நடத்தியவன்.

இந்திய தேசிய விடுதலைக்காக மலேசிய திராவிடர் நெஞ்சங்களை ஒன்று திரட்டித் தரம் மிக்க போர்ப் பயிற்சி வழங்கி உலகத் திராவிடர்களிலேயே மலேசிய சிங்கை திராவிடர்கள் தான் தரம் மிக்கவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டிய மாபெரும் மனிதப் பற்றாளன் - மறைந்து 46 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

இதில் விந்தையிலும் விந்தை என்னவென்றால் மேற்கூறிய நாடுகளின் விடுதலைக்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை மலேசியாவைத் தளமாகக் கொண்டு நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களோடு தோளோடு தோள் கொடுத்துப் போர் பரணி பாடியது மாபெரும் வரலாற்றின் திராவிடர் படை தான் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

நமது கதாநாயகன் தூக்கலிடப்பட்டிருக்காவிட்டால் அல்லது எமது நாட்டு மக்கள் படை இந்தியாவைத் தமது தாயகம் என்று நினைத்திருக்காவிட்டால் எமது நாட்டு சீன வம்சாவளிகள் சீனப் பெரு நிலம் செல்ல மாட்டோம் என்று அடம்பிடித்து மலேசியாவிலேயே தங்கியதைப் போல் எமது திராவிடர் படையும் செய்திருந்தால் எமது மண்ணின் வாரிசுகள் இன்றும் உலகின் பல்வேறு நாடுகளில் அவதிக்குள்ளாகிக் கூனிக்குனிந்து வாழும் திராவிடர்கள் போல் இருந்திருக்க மாட்டார்கள்.

புதிய தாயகத்தில் எழுச்சி மிக்க வரலாறு இடையறாது வளர்ச்சி பெற்று மிக வேகமாக முன்னேறும் நாடுகளாகத் தங்கத்

படிப்பகம்

www.padippakam.com



திராவிடர்கள் வாழும் நாடுகள் இருந்திருக்கும், இன்று கூடப் பாருங்கள், ஆசியாவிலேயே ஏன் உலகிலேயே முன்னேறும் நாடுகளில் மலேசிய நாடு முதன்மையானது.

இதில் திராவிடர்கள் பங்கு அளவுக்கதிகமானது என்றால் மிகைப்படுத்தப்பட்ட கருத்தாக இருக்க முடியாது.

எனது மாவீரன் தியாகி கணபதியும், திரு குருதேவன், டாக்டர் ராஜ மாணிக்கம் போன்றோரும் மலேசிய மண்ணில் படைத்த மாபெரும் வரலாறு போல் உலகின் வேறு எந்த நாட்டுத் திராவிடத் தியாகிகளும் படைத்திருக்கவில்லை.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் திராவிடச்சித்தர்கள் மனித குல வாழ்வுக்கு அமைத்துத் தந்ததைப்போல் எமது மலேசிய திராவிடப் போராளிகளும் செய்திருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது மலேசிய மண்வாசம் மகத்தானது என்பதை யார் தான் மறுக்க முடியும்?

வரலாற்றுச் சிற்பி மாவீரன் நேதாஜிக்கு ஜப்பானிய அரசு செய்திருக்கும் மரியாதையை அவன் போராட்டத்தால் சுதந்தரம் பெற்ற நாட்டின் அரசு நிர்வாகம் - அவனை மதிக்கவோ மரியாதை செய்யவோ இல்லை.

ஜப்பானிய அரசு இவ்வீரனுக்காக வழங்கிய 148 கோடி நிதியைப் பெற்று காமா சோமாவென்று - தேவையற்றவர்களுக்கும் தவறானவர்களுக்கும் வழங்கிய இந்திய அரசு - முழுக்க முழுக்க மலேசியாவை மையமாகக் கொண்டு செயலாற்றிய உண்மையான, முதன்மையான எமது போராட்டத் தியாகிகளை இனம் கண்டு நிதியை நியாயமான முறையில் வழங்கவில்லை. அல்லது கவனிக்கப்படவே இல்லை.

சுதந்தரப் போராட்டத் தியாகிகள் படவேண்டிய துன்பம் என்னென்ன என்று அறிய முற்படும் இன்றைய இளையோர்கள் எமது மலேசிய திராவிடர் சமுதாய தியாகிகள் வரலாற்றைப் படித்துக் கேட்டு - புதிய கோட்பாடுகளை வகுத்து எமது தியாகச் சுடர்களின் வெற்றி இயல் போராட்ட முறைகளை அறியுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



எம்.ஏ.பழனியப்பன்
19, செவாலியர் சிவாஜிகணேசன் தெரு,
தியாகராய நகர்
சென்னை - 17.

மலேயா - சிங்கப்பூர் நாடு கடத்தப்பட்ட விடுதலைப் போராளிகள், இந்தியாவில் கவனிப்பாரற்று அனாதைகள் போல் வாழ்ந்து வருகிறார்கள் என்ற சங்கதி, **டாக்டர். ராஜமாணிக்கம்** அவர்கள் மூலமாக எனக்குத் தெரிய வந்தது.

டாக்டர் ராஜமாணிக்கம் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர், மதராஸ் ஹார்பர் தொழிலாளர் சங்கத்தின் பொருளாளர் எ.ஜீவா அவர்கள்.

சில மாதங்களுக்கு முன்பு நான், டாக்டர் ராஜமாணிக்கம் அவர்களை மதராஸ் ஹார்பர் தொழிலாளர் சங்கத்தில் தோழர் எ.ஜீவாவுடன் சந்தித்தேன். தன்னைப்பற்றிய முழு விபரத்தையும் அவர் என்னிடம் கூறி, என்னைப் போன்று நாடு கடத்தப்பட்ட பலரும் நிர்க்கதியில் உள்ளதாகவும், இதுபற்றிய விபரத்தைப் பத்திரிகையில் செய்தியாக வெளியிடும்படியும் என்னிடம் கூறினார். அச்சமயம், நான் ஜனசக்தி பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். இப்போதும் அதே பணிதான்.

மலேயா - சிங்கப்பூர் நாடு கடத்தப்பட்டோர் நிலை குறித்த செய்திகளை எந்தப் பத்திரிகையையும் விட **"ஜனசக்தி"** உணர்வுப் பூர்வமாக, முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரம் செய்தது,

பின்னர் ஓரிரு மாதங்கள் கழித்து டாக்டர் ராஜமாணிக்கம் என்னைத் தேடி ஜனசக்தி அலுவலகத்திற்கு வந்தார். **"மலேயா கணபதியும் அவர்தம் தோழர்களும்"** என்ற தலைப்பில் சிறு நூலுக்கான கையெழுத்துப் பிரதி வைத்திருந்தார். மலேயா கணபதி மற்றும் அவர்தம் தோழர்கள் பற்றி நூல் வெளியிடத் திட்டமிருப்பதாகவும், கையெழுத்துப் பிரதியைப் படித்து அணிந்துரை ஒன்று எழுத வேண்டும் என்றும் என்னை அவர் கேட்டுக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



'மலேயா கணபதியும் அவர்தம் தோழர்களும்' என்ற இச்சிறு நூல் பல்வேறு கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டதாகும்.

தஞ்சை மண்ணில் தம்பிக் கோட்டையில் 1911 இல் ஆறுமுகத் தேவருக்கும், வைராத்தாளுக்கும் மகவாகப் பிறந்தவர் கணபதி. பத்து வயதில் மலாயா செல்ல வேண்டிய குடும்பச் சூழல்.

மலேயாவில் இருந்த சின்னஞ் சிறுவன் கணபதி தனது குடும்பத்தினருக்கு [illegible] ஒன்றில், "நமது குடும்பம் சிதைந்து போனபின், [illegible] இங்கு வந்தேன் என்பதை நீ அறிவாய். அப்பம் [illegible] கொண்டும், அதிகாரி வீட்டில் மங்கு (பாத்திரம்) கழுவிக் கொண்டும் ஆங்கிலம் படித்தேன்" என்று குறிப்பிடுகிறார் இக்கருத்து கொடுமையான வாழ்வை எடுத்துக் காட்டிய போதிலும், பல மொழி கற்றுத் தேற வேண்டும் என்ற அச்சிறுவனின் ஆர்வத்தைக் காட்டுகிறது. இச்செய்தி இந்நூலில் நெஞ்சை நெகிழ வைக்கும் செய்தியாகும்.

பிழைப்போடு கணபதி நின்றுவிடவில்லை. மலேயா மக்களின் சுபிட்ச வாழ்வுக்காகவும், மலேயாவின் விடுதலைக்காகவும் போராடினார் என்பதுதான் கணபதியின் முழு வாழ்க்கையாகும்.

ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்ட நாடுகளில் விடுதலைக்குப் போராடிய பல்வேறு நாடுகளில் இருந்த முற்போக்கு அமைப்புகளுடன் கணபதி அவர்கள் இடையறாது தொடர்பு வைத்து, தனது போராட்டப் பாதையை மேலும் மேலும் செழுமைப்படுத்தினார் என்பதை இந்நூல் தெளிவுற விளக்குகிறது.

மொழி வளர்ச்சி, தொழிற்சங்க இயக்கம், மக்களின் எழுச்சி மிக்க போராட்டம், கொரில்லாப் போர் முறை ஆக - இப்படிப் பன்முகத் துறைகளிலும் தலைவனாக விளங்கிய, தளபதியாக, முதல் நபராய் நின்று போரிட்ட கணபதி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸை ஒரு சமயம் சந்திக்க நேர்ந்தது. அப்போது நேதாஜி, கணபதியைப் பார்த்து ஒரு கேள்வி எழுப்பினார்

படிப்பகம்

www.padippakam.com



'இந்திய தேசாபிமானிகளே! நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது. நீங்கள் ஒப்புதல் அளித்தால் போராட்டத்தைத் துவங்க முடியும்'.

கணபதி அளித்த பதில் என்ன தெரியுமா?

"நாங்கள் கம்யூனிஸ்டுகள்தான். ஆனால் தேசத்தின் விரோதிகள் அல்ல. சர்வதேசியக் கண்ணோட்டத்துடன் தேசியத்தை அழைத்துச் செல்வோம். சுருங்கக் கூறின், மலாயா மக்களின் இதயங்களிலும், உலகெங்குமுள்ள முற்போக்காளர்களின் எண்ணங்களிலும் கணபதி அவர்கள் எவ்வாறு உணர்வு பூர்வமாக இடம் பிடித்தார் என்பதைப்பல்வேறு சம்பவங்களின் வாயிலாக இந்நூல் விளக்குகிறது.

தான் பிழைக்க வேண்டும் என்பதற்காகச் சிறு வயதில் கப்பல் ஏறிப் புறப்பட்ட கணபதி, தனது இளமையை மலேயா நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டு மகுடம் சூட்டிக் கொண்டார்.

ஒரு கணபதியைக் கொன்று விட்டதால் அன்றைய ஆட்சியாளர்களுக்குத் தற்காலிக வெற்றிதான். ஆனால் இன்றைக்கு அங்கிங்கெனாதபடி எங்கும் புரட்சிக்கனல் கணபதிகள் இருப்பது மக்களின் நிரந்தர வெற்றி.

இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கணபதியின் உருவம் தோன்றுவதோடு, அவரது லட்சியங்கள் இதயத்தைக் கவ்வும் என்பது திண்ணம்.

M.A. Palaniappan

(எம்.ஏ.பழனியப்பன்)

படிப்பகம்

www.padippakam.com



தி.மோகன்
தலைவர். மலாயா கணபதி நூல்
வெளியீட்டுக் குழு
எண். 9, 9வது தெரு, அணுவாற்றல் நகரியம்
கல்பாக்கம் - 603 102

## வெளியீட்டு குழுவின் விண்ணப்பம் . . .

மாவீரன் மலாயா கணபதியின் இவ்வரலாற்று நூலிற்கு முன்னுரையாகவும் விண்ணப்பமாகவும் மகிழ்ச்சியுடன் தமிழர்களின் வரலாற்று மைல்கல்லில் பொன்னேடுகளால் பொறிக்க கூடிய இச்சிறப்பு மிக்க நூலைத் தங்களுக்கு அளிக்கின்றோம். தக்க கால கட்டத்தில் இந்நூல் முற்போக்காளர்களுக்கும் - சமூக நீதி, - சமூக மாற்றம் விரும்பும் - ஜனநாயக இயக்கப் போராளிகளுக்கும் - இன்னமும் எண்ணற்ற நெஞ்சங்களுக்கு உறுதுணையாகவும் உற்சாகம் தரும் மாமருந்தாகவும் இருக்கும் என உறுதியாக நம்புகின்றோம். இந்நூலினை முனைப்போடு மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நம்பிக்கையில் மலாயா கணபதி நூல் வெளியீட்டுக் குழு சார்பில் வெளி வருகின்றது.

பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தின் கொடுமைக்கும் சுரண்டலுக்கும் உள்ளான மக்கள் இந்தியாவில் மட்டுமல்லாது மலாயா நாட்டுத் தோட்டங்களிலும் அந்நாளில் வாழ்ந்து வந்தனர். அந்தச் சுரண்டலுக்கெதிராக உதிரம் சொரிந்தவர்கள் பலர் - போராட்டங்களில் பங்கு பெற்றவர்கள் பலர். அவர்களில் தலையானவர் - ஏதோ வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்ற பத்தாம்பசலிப் பழமொழிக்கு எதிராக மானுட விடுதலைக்குத் தன்னை முழுமையாகச் சிறு வயதிலேயே ஈடுபடுத்திக் கொண்டவர் கணபதியாவார். எவ்விதச் சமரசமுமின்றி, தொய்வில்லாமல் - நேர்மை, உண்மை, உழைப்பு, கொள்கைஉறுதி போன்ற அரும் பெரும் பண்புகளோடு களம் கண்ட போராளியாவார். போராட்டக் காலங்களில் புடம் போட்ட மாவீரன் கணபதியாவார்.

படிப்பகம்

www.padippakam.com



வரலாற்றுப் புகழ் மிக்க தலைவர்களின் மகத்தான தியாகங்களுக்கும் - போராட்டங்களினால் உருவாக்கிய அமைப்புகளுக்கும் படைப்புகளுக்கும் பெருமை அவர்களின் சித்தாந்தங்கள் இன்று வரை நிலைத்து நிற்பதில் தான் அமைந்துள்ளது. நேர்மையின் அர்ப்பணிப்பான மாவீரன் கணபதியின் பேராற்றலைக் கண்டு குலை நடுங்கியது பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம். கணபதி நடத்திய வீரம் செறிந்த போராட்டங்களுக்கு அடிப்படை அவர் தம்மைத் தம் வாழ்நாளில் புரட்சிகரப் பொதுவுடைமையாளராக மாற்றிக் கொண்டதுதான் ஆகும்.

மலேயாவில் பிரிட்டீஷ் கொடுங்கோன்மையினை எதிர்த்து அவர் நடத்திய போராட்ட நிகழ்ச்சிகள் எண்ணிறந்தவை. இராணுவ அதிகாரத்தினைத் தீரத்துடன் எதிர்த்தார். தொழிலாளிகள் ரப்பர் எஸ்டேட்டுகளிலும் - நிலக்கரி ஈயச் சுரங்கங்களிலும் கடுமையாகச் சுரண்டப்படுவதை எதிர்த்துத் தொழிற்சங்கம் கட்டியமைத்துப் படிப்படியாக தொழிலாளிகளின் வாழ்வுரிமைக்காக முழுமையாகப் பாடுபட்டார். எட்டு மணி நேர வேலைக்காகப் போராடுவது சனநாயக உரிமைக்காகப் போராடுவது - கொத்தடிமைகளை மீட்கப் போராட்டம் தலித் மக்களுக்கான போராட்டம் - தீண்டாமை ஒழிப்பு என அவர் போராடியது பன்முகம் கொண்டதாகும்.

பொருளாதாரப் போராட்டங்கள் மட்டுமல்லாமல் அரசியல் சமூக - பொருளாதார விடுதலையைக் கருத்தில் கொண்டு சமரசமற்ற போராட்டத்தை நடத்தி - பிரிட்டீஷ் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல். ரப்பர் எஸ்டேட்டுகளை - ஈயச் சுரங்கங்களைப் பறிமுதல் செய்தல் என்பது கணபதியின் மகத்தான தியாகச் செயல் ஆகும். கணபதியின் நோக்கம் மலாயா தமிழர்களின் விடுதலை மட்டுமல்லாது இந்திய நாட்டு விடுதலையையும் உள்ளடக்கியிருந்தது என்பது அவர் மாவீரன் நேதாஜியுடன் இணைந்து ஐ.என்.ஏவில் பணியாற்றியதால் தெளிவாகும். ஆயுதப் போராட்டம் தான் தீர்வு எனக்கண்டு மக்கள் போராட்டங்களைக் கட்டமைத்தார்

படிப்பகம்

www.padippakam.com



அவற்றினை விடுதலைப் படையாக மாற்றிப் போராடினார். தனிநபர் சாகசங்களினால் எதையும் சாதிக்க இயலாது எனத் தெரிந்தவர். அதனால் மக்கள் பேராதரவுடன் பல தோழர்களைப் பயிற்றுவித்து - உறுதுணையாக இருந்த தோழர்களுக்கு அரசியற்பயிற்சியளித்துச் சரியான தலைமையளித்து வழி நடத்திச் சென்றார். மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் சேவை- பயம் என்பதே என்னவென்று அறியாத வீரச் செயல்கள் சிந்தனைக் கூட்டுச் செயல்பாடு - கொள்கை உறுதி இத்துணை நெறி முறைகளையும் கடைப்பிடித்து வந்த வரலாற்று நாயகனை பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் கையில் துப்பாக்கி வைத்திருந்த ஒரே காரணத்தினைக் காட்டிச் சிறையில் அடைத்து -உலக நாடுகளின் கண்டனங் களுக்கிடையே அவரை இளம் வயதிலேயே மலாயாவின் கோலாலம்பூர் புடு சிறையில் தூக்கிலிட்டது. பிரிட்டீஷ் அவசர சட்டத்தின் கீழ் மரண தண்டனையைப் பெற்ற முதல் இந்தியராவார். தூக்கிலிடப்பட்டு விட்டார் கணபதி என எவரும் இறுமாப்பு அடைந்து விட இயலாது எனவும் - எண்ணற்ற கணபதிகள் உருவாகி விட்டனர் எனவும் இந்நூல் வெளி வருவதே உங்களுக்கு உணர்த்தும். புரட்சியாளர்கள் என்றுமே சாவதில்லை அவர்கள் உலகில் புத்தம் புதுப் புரட்சியாளர்களாய் உருவாகிக் கொண்டே இருக்கின்றார்கள் என்பதே உண்மை. கணபதியுடன் களம் நின்று பலியான எண்ணற்ற தமிழ் மறவர்களைப் பற்றியும் இந்நூல் இயம்புகின்றது. அவர்கள் எல்லாம் மறக்க முடியாத - வரலாற்று நாயகர்கள் ஆவர்.

"உலகில் உள்ள அடிமைச் சமுதாயங்கள் அனைத்துக்கும் நானே தலைவன் என்று கூறவில்லை - தீர்க்கப்படவேண்டிய பல்வேறு பிரச்சினைகள், கொடுங்கோன்மைகள் நம் நாட்டில் இல்லையென்று நான் கூறவில்லை ஆனால் மனிதன் தன் வாழ்நாளில் எந்த அளவிற்குப் பணியாற்ற முடியும் என்பதனை உணர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை மட்டும் நான் எடுத்து கொள்கின்றேன்" என்றார் டாக்டர் அம்பேத்கார். பொதுப்பணியின் நோக்கம் - அதன் வரையறை பற்றி அவர் கூறினாலும் எல்லைக்

படிப்பகம்

www.padippakam.com



கோட்டை நிர்ணயித்து இருந்தாலும் எல்லையை மீறி ஒட்டுமொத்த சமூகங்களின் விடுதலைக்குச் சிறந்த சேவையினை ஆற்றிவிட்டுச் சென்றார். இருந்தாலும் அவரின் சேவையை மறந்து அவரை ஒரு சாதீயத் தலைவராகக் குறுக்கிப் பார்த்து விடுகின்றது இந்திய சமூகம். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் மாவீரன் கணபதி தமிழ்நாட்டில் பிறந்து - தமிழனாக இருந்தும் - கடல் கடந்து சென்று - ஏழைக் குடும்பத்தில் பிறந்துள்ளோம் என்ற தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்து விடுதலை வேட்கையை உள்வாங்கிக் கொண்டு தியாகத்தில் விண்ணுயர வளர்ந்து உலகத் தலைவராக உயர்ந்தவரை வரலாற்று ஏடுகளில் இங்குக் காண இயலவில்லை. காரணம் வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆதவனை முழங்கை நீட்டி மறைத்து விடலாம் அரசியல் நடத்தி விடலாம் எனச் சிலர் நினைக்கலாம். உண்மை விடுதலையை எதிர்பார்க்கும் மக்களுக்கு வரலாறு தெரிய வேண்டியுள்ளது. புரிய வேண்டியுள்ளது. வரலாற்று மாற்றங்கள் தலைவர்களால் மட்டும் நிகழ்வது அல்ல - மக்கள் இயக்கங்களால் தான் உருவாகின்றன. மாவீரன் கணபதியின் வரலாற்று நூல் - வெறும் மாவீரன் புகழ்பாடுவதாக மட்டுமில்லை - அவர்தம் தியாகங்களையும் அவரின் நடைமுறைகளையும் எடுத்துரைக்கின்றது. இது காலத்தினால் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமை.

தமிழக வரலாற்றில் துவக்கக் கால கட்டத்தில் மாவீரன் கணபதியைப் பற்றி "கயிற்றில் தொங்கி கணபதி" என்ற நூலினை எழுதி வெளியிட்ட தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி மதிக்கப்படக் கூடியவர். தமிழகத்தில் பல நபர்களைப் பற்றியும் அவர்தம் தோழர்களைப் பற்றியும் கருத்துக்களை வெளி யிட்டுள்ளார்கள் என்பதனை நினைவுகூருகின்றோம்.

இவ்வரிய நூல் வெளி வருவதற்குப் பல காலமாகப் பெரிதும் விரும்பிக் கணபதியோடு தோள் கொடுத்து எண்ணற்ற தியாகங்களை செய்து இன்று வரை விடாப்பிடியாகப் போராடி வரும் - நூலின் கருவாக விளங்கும் தோழர் குருதேவனுக்கு நூல் குழுவின் தலைவர்

படிப்பகம்

www.padippakam.com



என்ற முறையில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து கொள்கின்றேன். இப்பெட்டகத்துக்கு வடிவம் கொடுத்து இதனை வெளிக் கொண்டு வருவதற்கு நாங்கள் சந்தித்த இன்னல்கள் ஏராளம். இந்நூலாசிரியர் தோழர் வழக்கறிஞர் உதய பாசுகர் பல மிரட்டல்களுக்குப் பணியாமல் அவதூறுகளைக் கண்டு அஞ்சாமல் செவ்வனே இப்பணியினை முடித்தமைக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

துவக்க காலக் கட்டத்தில் சொல்லிலும் செயலிலும் உத்வேகத்தோடு - உண்மையோடு இந்நூல் வெளி வர வேண்டும் என அரும்பாடுபட்ட நாடு கடத்தப்பட்ட தோழர்களில் முக்கியமான தோழர் மலேயா பழநி அவர்கட்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவருடன் இணைந்து செயல்பட்டநாடு கடத்தப்பட்டவர்களின் சங்கத்தின் தலைவர் டாக்டர் நாகை ராசமாணிக்கத்திற்கும் நூல்குழுவின் துவக்க கால கட்டங்களில் எனக்குப் பேருதவியாக இருந்து செயல்பட்ட தோழர் சி.மதிவாணன் (சி.பி.ஐ. எம்.எல்.) அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரைகேட்டு அறிவாலயம் சென்றவுடன் எனக்கு இந்நூலின் நகலினைப் பல்வேறு பணிச்சுமைகளுக்கு இடையிலும் உடனே படித்துணர்ந்து செம்மையான அணிந்துரைகளைச் சில தினங்களுக்குள் அளித்த கலைஞர் கருணாநிதி - தி.மு.க தலைவரவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இந்நூலிற்கு சில புகைப்பட நகல்களை வழங்கி - வாழ்த்துரை அளித்த இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுச் செயலர் நல்லகண்ணு அவர்கட்கும்.

அணிந்துரை வழங்கிய தமிழ்த் தேசிய கட்சித் தலைவர் தோழர் நெடுமாறன் அவர்கட்கும் திருச்சி தியாகராாசன் அவர்கட்கும். ஐ.என்.ஏ தியாகி உமய வேலாயுதம் அவர்கட்கும் - சனசக்தி

www.padippakam.com



துணையாசிரியர் தோழர் எம்.ஏ.பழநியப்பன் அவர்கட்கும் - மலாயாவின் காலம் சென்ற சு.வி. நடராசன் அவர்கட்கும் நன்றி கூறக் கடமைப்படுள்ளேன்.

மனித குல விடுதலைக்குப் பாடுபட்டு உயிர் நீத்த தியாகி மாவீரன் கணபதிக்கு அஞ்சலி செலுத்துவதோடு அவரோடு வீரமரணம் எய்திய தோழர்களுக்கும் இன்றளவும் போராடி உயிர்நீத்த அனைத்துத் தியாகிகளுக்கும் - அஞ்சலி செலுத்தி - இந்நூலின் கருத்தின்படி கற்றுணர்ந்து பல விடுதலை வீரர்கள் உருவாக வேண்டும் என வேண்டி விரும்பி எனது வெளியீட்டு விண்ணப்பங்களை முடித்துக் கொள்கின்றேன்.

நன்றி

வணக்கம்

தோழமையுடன்
தி.மோகன்

படிப்பகம்

www.padippakam.com



# மாவீரன் மலேயா கணபதி

## உள்ளடக்கம்


| | | ப. எண் |
|---|---|---|
| 1. | நூலாசிரியர் உரை | 47 |
| 2. | வரலாற்றுத் துவக்கம் | 54 |
| 3. | மலேயா அமைவிடத் திறனாய்வு | 62 |
| 4. | 1920-ம் ஆண்டுகளில் மலேயா | 67 |
| 5. | தியாகக் கிராமத்தின் தீரன் கணபதி | 70 |
| 6. | தீரர் கணபதியின் துவக்ககாலப் பணிகள் | 75 |
| 7. | வாழும் இலக்கியம் கணபதி | 81 |
| 8. | கணபதி ஒரு பொருள் முதல்வாதி | 86 |
| 9. | தீண்டாமைக் கொடுமை ஒழித்தவன் கணபதி | 95 |
| 10. | மலேயாவில் மக்கள் சனநாயகக் கழகம் | 99 |
| 11. | மாவீரர்கள் நேதாஜி - கணபதி - எம் ஆர் குருதேவன் சந்திப்பு | 107 |
| 12. | தோழன் எப்போதும் தோழனே | 117 |
| 13. | ஜப்பானியர்கள் பிடியில் மலேயா | 120 |
| 14. | ஜப்பானியர்கள் பின்வாங்கிய பிறகு | 126 |
| 15. | சிங்கப்பூரில் ஐ.என்.ஏ. சின்னம் | 132 |
| 16. | அகில மலேயா பொதுத் தொழிலாளர் சங்கம் (PMFTU) | 133 |
| 17. | மலேயா பொது வேலைநிறுத்தம் - அவசரச்சட்டம் | 139 |
| 18. | புரட்சிப் படைகள் பதிலடி | 144 |
| 19. | புயலும் சிறை புகுமோ! சிறையிலும் பரணிபாடுமோ! | 151 |
| 20. | தூக்கு மேடை | 156 |
| 21. | தாய்த்தமிழகத்தின் துடிப்பு | 166 |
| 22. | இடதுசாரி இயக்கங்களின் கண்டனம் | 171 |
| 23. | உலகின் கண்டனக் கணைகள் | 174 |
| 24. | வரலாற்றின் வஞ்சனைகள் | 183 |
| 25. | தியாகிகள் வரிசை தொடர்கின்றது | 193 |
| 26. | மலேயாவின் வரலாற்றில் நினைவில் நிற்பவர்கள் | 199 |
| 27. | நூலாதாரங்கள் | 208 |


படிப்பகம்

www.padippakam.com



# 1. நூலாசிரியர் உரை
# போராட்ட பாதையில்
# என் எழுத்து நிழலில் - சிறிது நான்

உலகப் பாட்டாளிகளே! உலகத் தமிழர்களே! வணக்கம்.

என்னை ஒரு எழுத்தாளனாக நான் நினைத்துக் கொள்வதேயில்லை. ஆனால் அக்கிரமமும் - அநியாயங்களும் திட்டமிடப்பட்டு - மிக வெளிப்படையாகப் பகிரங்கமாக நடைபெறும் போது என்னுடல் மிகத் துடிக்கும் - உடல் குருதி கொந்தளிக்கும், உயிரைச் சுமந்து கொண்டு மோதலுக்குத் தயாராகி விடும். அக்கிரமத்தின் அனைத்துப் பற்களையும் அடியோடு நொறுக்கி விட மனம் துடிக்கும். நியாயத்தை நியாயம் என்று சொல்லக் கூட அஞ்சுபவர்களைக் கண்ணுறும் போது - அவர்களை இவ்வியற்கையின் சுமை என மனம் இகழும். அநியாயத்துக்கு ஆலவட்டம் சுற்றும் மனிதப் பிறவிகளைக் காணும் பொழுது இயல்பிறந்த அருவறுப்பு என் மெல்லிய இதயத்தில் எழும் - இத்தகைய உயிர்க் கொந்தளிப்பிற்கு ஏதாவது ஒரு வடிவம் கொடுத்து உள்ளத்திற்குச் சிறிது ஆறுதலாவது தேட முற்படுவது தான் இவ்வெழுத்துப் பணி எனும் நான் இளைப்பாறும் நிழல். ஒரு சமூகப் போராளியின் எழுத்து வடிவிலான போராட்டம் இது.

சென்னை சட்டக் கல்லூரியில் நான் மாணவனாகப் பயின்று கொண்டிருந்த போது நானும் மாநிலக் கல்லூரி மாணவரும் -இன்றைய இளம் வழக்கறிஞருமான வியாசை இரா.நடராசனும் இன்றைய இளம் வழக்கறிஞரான திரு. பாலகிருஷ்ணனும் **"அனைத்துக் கல்லூரி மாணவர் மாமன்றம்"** எனும் போர்க் குணம் கொண்ட மாணவர் அமைப்பினை உருவாக்கினோம் தியாகராய கல்லூரி பி.சிவ மூர்த்தி, இன்றைய இளம் வழக்கறிஞரான திரு.இரா. கௌதமனின் இளைய சகோதரர் திரு.இரவி, கந்தசாமி

படிப்பகம்

www.padippakam.com



நாயுடு கல்லூரி மறைந்த திரு.லோகநாதன் - மாநிலக் கல்லூரி குமார் ஆகியோர் பொறுப்பாளர்களாகத் திகழ்ந்தனர். மற்றும் அனைத்துத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அமைப்பு - அனைத்துத் தொழிற் பயிற்சி மாணவர் அமைப்பு என அமைப்புகள் என் தலைமையில் துவக்கப்பட்டன. இதயம் பேசுகின்றது. 'வார இதழில் நிருபராகப் பணியாற்றும் சகாயராஜ் பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவர் - என்னுடைய போராட்ட தளபதிகளுள் ஒருவர்.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மாணவர் போராட்டம் - விடுதலைப் புலிகளைப் பற்றிப் பொய்ப் பிரச்சாரம் செய்தவர்களை எதிர்த்துப் போராட்டம் - (இப்போராட்டத்தில் நானும் நடராசனும் மாநிலக் கல்லூரியில் அரசியல் ரௌடிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டோம் - கைது செய்யப்பட்டோம்) -ஈராக்கின் மீதான போரை நிறுத்தக் கோரி அமெரிக்கத் தூதரகம் முன் தீவிர ஆர்ப்பாட்டம். என் தலைமையில் - மாணவர் தலைவர்களால் அமெரிக்க தூதரக அதிகாரியிடம் போர் நிறுத்தம் கோரும் மனு அளிக்கப்பட்டது. - சட்ட எரிப்புப் போராட்டம் - அன்றைய சனநாயகப் படுகொலையைக் கண்டித்து அனைத்துக் கல்லூரிகளில் கறுப்பு கொடி ஏற்றும் போராட்டம் சென்னை சட்டக் கல்லூரியில் நான் கறுப்பு கொடியேற்ற இன்றைய உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களான திரு. பாலகிருஷ்ணன் - கோவில்பட்டி ராசசேகர், திருப்பத்தூர் வழக்கறிஞர் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதச்சார்பின்மைக்காக மனிதச் சங்கிலி முயற்சி - பல்வேறு கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த அக்கிரமங்களை அம்பலப்படுத்தும் போராட்டம் - ஐ.டி.ஐ, மாணவர்களின் பயிற்சி காலக் கோரிக்கைகள் தொடர்பான மாபெரும் மாணவர் ஊர்வலம் - என மாணவ சக்தியைத் திரட்டித் தொடர் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தினேன். போராட்ட அறிக்கைகளைச் செய்தித்தாள்களுக்குக் கொடுத்ததும் அவ்வறிக்கைகளைப் பெரிதும், தினகரன், முரசொலி, விடுதலை, மாலைமலர், தினத்தந்தி, தினமணி, தினமலர் மிக

படிப்பகம்

www.padippakam.com



முக்கியத்துவத்துடன் வெளியிட்டதும் எனது அடக்கமான எழுத்துப் பணிப் பயிற்சியாகும். சென்னையை அடுத்த எண்ணூர் இராஜாளி இலக்கிய அமைப்பு தலைவர் கவிஞர் இந்துமதியன் எம் போராட்டங்களுக்குச் செய்திப் பிரிவில் பணியாற்றினார்.

மேற்கண்ட போராட்டங்களில் நாங்கள் கைதானதைக் கேள்விபட்டதும் பல சமயம் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் என் நண்பருமான செங்கை சிவம் எங்களை வெளியிலெடுத்தார். அவராகவே மிக ஆர்வமுடன் எங்களை விடுவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். என் மாணவன் கதிரொளி கமலகண்ணன் வெளி நடவடிக்கைகளைக் கவனித்தார். அனைத்து ஐ.டி.ஐ. மாணவர்களின் மாபெரும் மாணவர் கூட்டம் என் தலைமையில் சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபாவில் நடைபெற்றது.

தி.மு.க.வின் இன்றைய பொருளாளரான ஆற்காடு வீராசாமியவர்கள் அதில் கலந்து கொண்டு சிறப்பித்தார். மற்றும் செங்கை சிவம் - புரசை வி.எஸ் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர். ஐ.டி.ஐ. மாணவர் தலைவர் கதிரேசன் முன்னிலை வகித்தார். சென்னை சட்டக் கல்லூரியின் செலிபிரிட்டி விழாவில் நண்பர் மு.க. ஸ்டாலின் தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் - செங்கை சிவம் எல்.பலராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். இன்றைய இளம் வழக்கறிஞரான தமிழ் வேந்தன் என் பொறுப்பில் நடத்திய விழா அதுவாகும்.

ஒவ்வொரு எழுத்தாளருக்கும் ஆயிரக்கணக்கில் ஏன் இலட்சக் கணக்கில் வாசகர் இருப்பார்கள். ஆனால் என் எளிய எழுத்துக்களின் முதல் வாசகர் தமிழகத்தின் தலை சிறந்த எழுத்தாளரும் சிந்தனையாளரும் - சமூகப் போராளியுமான டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களாவார். மடல்கள் எனும் பெயரில் எத்தனையோ கிறுக்கல்கள்! - 'அம்மடல் புறாக்கள் கலைஞரின் மாடத்தைச் சென்றடையும். அத்தகைய கட்டுரைகளில் தீரர் மலேயா கணபதியவர்களைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய

படிப்பகம்

www.padippakam.com



கட்டுரையைக் கலைஞர் அவர்கள் "முரசொலியில்" ஒரு பக்க அளவில் - மிக முக்கியத்துவத்துடன் வெளியிட்டு என்னை உற்சாகப்படுத்தினார். எனக்குள் ஒரு நம்பிக்கையை உருவாக்கி எழுத்தாளராக்கினார் என்றே சொல்வேன்.

இந்நிலையில் தோழர் குருதேவன் - என்னுடைய நீண்ட நெடுங்காலக் குடும்ப நண்பர் என் குடும்பத்தில் ஓர் பெரிய உறுப்பினராவார். சொத்து - சுகம் - சொந்தம் போன்ற வாழ்க்கை இடர்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு ஒவ்வொரு தோழரின் இல்லமும் என் இல்லம் - அவர்கள் விரும்பியளிப்பதே என் உணவு கொள்கையை உயர்த்தி பிடிப்பதே என் வாழ்க்கையென ஒரு உண்மையான மார்க்ஸிய - லெனினிய - மாவோயிஸ வாழ்க்கை எத்தகையது என உலகிற்கு உணர்த்திட வாழ்ந்து வரும் தியாகி அவராவார். என்னை வளர்த்தெடுத்தவர் அவராவார். அவர் **"மலேயா வரலாற்றுக் குறிப்புகள்"** எனும் வைரமணிகளையும் - தியாக முத்துக்களையும் என்னிடமளிக்க அதனைப் பட்டை தீட்டி மெருகூட்டி மலேயாவின் விடுதலை போராட்ட வரலாறு எனும் வைரங்கள் ஒளி விடும் முத்துவடம் புனைந்துள்ளேன். என் முத்திரைகளோடு தான் இதனை என் வாசமாகவும் - சுவாசமாகவும் படைத்தளிக்கின்றேன். வாக்குக்கும் வாழ்க்கைக்கும் மாறுபடாது வாழ்க்கை வாழ்கின்றவன் நான். வரலாறு என்பதே கடந்த கால உண்மைகளைத் தொகுப்பதுதானே - ஆனால் ஏனோ பெரும்பான்மையான நாடுகளின் வரலாறு ஒரு பகுதியை மறைத்து - சிலவற்றைத் திருத்தித் தொகுக்கப்பட்டுள்ளது. முதல் இந்திய சுதந்திரப் போர் (1857) என்பது வெறும் சிப்பாய்க் கலகமாக மட்டும் வெள்ளைச் சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இன்றைக்குக் காணப்படும் உலகின் வரலாறு முதலாளித்துவ சிந்தனைகளோடு சமன் செய்து கொண்ட உலக வரலாற்றின் ஒரு பகுதியே ஆகும் - அதன் மறைக்கப்பட்ட மறு பகுதியை வெளிக் கொண்டு வரும் முயற்சியில் எழுந்ததே இச்சிறு நூல் ஆகும். திராவிட முன்னேற்ற

படிப்பகம்

www.padippakam.com



கழக தலைவர் மு. கருணாநிதியவர்கள் தமது நூலகத்திலிருந்து கயிற்றில் தொங்கிய கணபதி எனும் (காலம் 1949) பதினைந்தே பக்கங்கள் கொண்ட சிறு நூலைக் கடும் முயற்சியெடுத்துத் தேடி எமக்கு ஆதார நூல்களில் ஒன்றாக அளித்ததும் - இந்நூலுக்கு - தியாகிகளின் தியாகங்களுக்குப் பெரு மதிப்பளித்து முதன் முதலாக அணிந்துரையை இல்லத்துக்கே அனுப்பிய பெருமைக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் நல்லக்கண்ணு அவர்கள் இந்நூல் சிறப்படைய ஆலோசனைகள் - கணபதி நினைவுத் தூண்-தினமணி செய்திப் படங்கள் போன்ற புகைப் படங்களையும் அளித்து இவ்வரலாற்று நூலை முழுமையடையச் செய்த பெருமைக்குரியவர் என்பதுடன் அணிந்துரையும் அளித்து நன்றி உடையவராய் எம்மை ஆக்கி விட்டார். ஜனசக்தி ஆசிரியர் ஏ.கோபு, ஆலோசனைகள் பல வழங்கினார்.

என் மனதுக்கினிய தோழர் இன்குலாப் அவர்கள் இந்நூலடக்கங்கள் குறித்து என்னிடம் மெல்லிய வேறுபாடுகள் கொண்டிருப்பினும் - ஓர் புதிய எழுத்தாளனை ஊக்குவிக்கும் பணியாக இந்நூலைச் சில இடங்களின் செப்பனிட ஆலோசனை வழங்கி அணிந்துரையும் நல்கியதும் பெருமை படைத்ததாகும்.

இன்று தமிழர் நலன் காக்க தம் ஈழத்தமிழர் போராட்டத்தில் விடுதலை புலிகள் இயக்க தலைவர் பிரபாகரன் அவர்களது நிலை பாட்டினைத் தொடர்ச்சியாக தமிழகத்தில் வலுப்படுத்தி வருபவருமான தமிழ் தேசிய தலைவர் திரு.பழ. நெடுமாறன் அவர்களின் அணிந்துரைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளியீட்டுக் குழுத் தலைவர் தோழர் தி.மோகன் அவர் களுடன் மிகக் குறைந்த மணி நேரங்களே நான் பழகியிருப்பினும் ஒரு மாறுபட்ட மனிதரைச் சந்தித்த மனநிறைவு என் மனதுக்கேற்பட்டதை மறைக்க இயலாது. நமது விழித்திரைகளில் கூட நிற்கத் தகுதி பெறாத மக்கள் கடலில் அவர் என் மனத்திரையில்

படிப்பகம்

www.padippakam.com



வரையப்பட்ட ஓவியம் ஆனார் - அவர் தம் நேர்மை - வாய்மை கடும் உழைப்பு - தேனீ போன்ற சுறுசுறுபபு, சிவப்பு சித்தாந்தச் செறிவு - அதில் பிறழா மன உறுதி போன்ற நற்பண்புகளை அடர்த்தியாக என்றென்றும் நினைத்துப் பார்க்க கடமைப் பட்டவன் நான்.

இந்நூல் வெளியீட்டுக்குக் கடும் உழைப்பாற்றிய எழுபது வயது இளைஞர் என்னையும் சுறுசுறுப்பாக்கும் துடிப்புக்குரியவர் எனது மாறா அன்புக்குரியவர் மலேயா - சிங்கப்பூர் நாடு கடத்தப்பட்ட தியாகிகள் சங்க தலைவர் திரு டாக்டர் நாகை ராசமாணிக்கம் நல்கிய ஆலோசனைகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவன். இவ்வரிய முயற்சியினை ஆதரித்த தமிழறிஞர் எழுகதிர் ஆசிரியர் அரு. கோபால் அவர்களுக்கும் - மனித அறிவாலயம் அமைப்பாளர் தோழர் அ.ப. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து கொள்கின்றேன்.

மடல்களின் மூலம் ஆலோசனைகள் வழங்கிய தாம்பரம் விசுவநாத தாஸ் மன்றத் தலைவர் மலேசியா பழனி அவர்களுக்கும், அன்பையும், ஆலோசனைகளையும் கனிவோடு வழங்கிய இந்திய கம்யூனிஸ்டு கட்சி தோழர் ஐ.என்.ஏ தியாகி மலேயா போராட்ட வீரர் தோழர் பொறைக்கலம் அவர்களுக்கும் திரு. உமய வேலாயுதம் அவர்களுக்கும் - பல நூல்களை எழுதி புகழ் படைத்த தோழர் திருச்சி தியாகராசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என்னை நல்ல எழுத்தாளராக உருவாக்க வேண்டும் என்று இப்பணியினையளித்த தோழர் குருதேவனுக்கு உயரிய நன்றியினையும் - அதே விதத்தில் எனக்கு ஆதரவளித்த - சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆசிரியர் சங்க தலைவர் மு. தேவராஜன் ஆசிரியருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



இந்நூல் தங்களின் கரங்களில் ஆம் ஆயிரம் உழைக்கும் கரங்களை உருவாக்க இந்நூலைப் படித்து விட்டு நீங்கள் என்னைப் பாராட்டினாலும் சீராட்டினாலும் அது .என்னை இயக்குகின்ற மா-சக்திக்கே உரியது.

இந்நூலுக்கு அழகிய அட்டைப்படம் வரைந்து தந்த ஓவியர் கு. புகழேந்தி அவர்களுக்கும், தட்டச்சுச் செய்த சன்வே எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கும், பிழைதிருத்தம் செய்த பேராசிரியர் மு. முகமதலி, (புதுக்கல்லூரி) அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரா.உதயபாஸ்கர்)
வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்

எண்3, அறிஞர் அண்ணா தெரு,
மகாகவி கம்பர் நகர்
மாதவரம் பால்பண்ணை
சென்னை 51, தமிழ்நாடு, இந்தியா.

படிப்பகம்

www.padippakam.com



## 2. வரலாற்றுத் துவக்கம்

இது ஒரு முன்னுரையாகவும் விண்ணப்பமாகவும் கருதப்படலாம். இந்நூல் வெளிவருவதற்கு மலேயா கணபதியும் அவர் தம் தோழர்களும் எனும் நூல் வெளியீட்டுக் குழுவின் முன்முயற்சிகள் காரணமெனினும் அதற்கும் முன்னரே ஓர் உயரிய வரலாற்று நடை முறை நிலவியதை மறந்து விட இயலாது.

வரலாறு என்பது என்ன? மனித வர்க்கம் தோன்றியது முதல் இன்றைய வரையிலான கடந்த காலம் வரலாறா? கடந்த காலம் என்பதே வரலாறாகிவிடாது. ஒரு சாதாரண மனிதன் (Layman) குறுகிய பொருளில் அதனை ஒரு வரைவிலக்கணமாக எடுத்துக் கொள்ளலாமே தவிர - அது முழுமையானதல்ல. செழுமையான வரலாற்று அடிப்படையில் வரலாறு என்பதன் விரிந்த வரைவிலக்கணமாவது மனிதனும் -மனித வர்க்கமும் உருவாக்கிய உயரிய குணவியல்புகளே - உயரிய நடைமுறைகளே வரலாறு எனப்படும். மனித குலத்தின் உயரிய சமூக நடைமுறைகள் - அரசியல் நடைமுறைகள் - வர்க்கப் போராட்டம் - விடுதலை ஆகியவற்றின் பரிமாணங்களின் காலக்கிரமத் தொகுப்பே வரலாறு என்பதாகும்.

உலக வரலாற்று வல்லுநர்கள் ஆணித்தரமாக எடுத்துரைப்பது வரலாறு என்பதே போராட்ட வரலாறு தான் என்று எடுத்துரைக்கின்றனர். உலகின் அனைத்து விடுதலைப் போராட்டங்களும் மக்கள் விடுதலைப் போராட்டங்களே ஆகும். மக்கள் என்பது பெரும்பான்மையான உழைத்துண்ணும் மக்களையே குறிக்கும். அப்பொருளில் மக்கள் சனநாயகப் புரட்சியே விடுதலைப் போராட்டம்- அதை நோக்கிய தேச விடுதலைப் போராட்டங்களே உண்மையான சுதந்திரப் போராட்டங்கள் ஆகும். சமூக -பொருளாதார விடுதலை எட்டப்படாத எந்த ஒரு சுதந்திர நாடும் மூன்றில் ஒரு பகுதி சுத்ந்திரம் ஈட்டிய நாடு என்பதே சரியான

படிப்பகம்

www.padippakam.com



கருத்து. அந்த மூன்றில் ஒரு பகுதியான சுதந்திரமும் சமூக-பொருளாதார தாக்குதல்களைப் பயன்படுத்தி இல்லாத் தன்மையினதாக ஆக்கப்படும். அதனால் தான் போலிச் சுதந்திரம் என்ற கூக்குரல் எழுகின்றது. தேச விடுதலை என்பது - விடுதலைக்குப்பின் சமூக விடுதலையாக- பொருளாதார விடுதலையாகக் குறைந்த பட்சக் காலத்துக்குள் - சட்டங்களைப் பயன்படுத்தியாவது எட்டப்பட வேண்டும். ஆனால் விடுதலையடைந்த நாடுகள் சட்டங்களைப் பயன்படுத்தி - சட்டங்களை இயற்றிச் சமூக - பொருளாதார இறுக்கத்தைப் பாதுகாக்கின்றன. அதனைச் சுட்டிக்காட்டுபவர்களைத் தேசத் துரோகிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் பட்டம் சூட்டி - மேலும் பயங்கரவாதி என்றும் போலி செய்திதாள்கள் தங்களின். ஒப்பனைக் கலைகளோடு மக்கள் முன்னிலையில் அவர்களைக் காண்பித்து - சனநாயகத் துரோகத்தினை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இவைகளை - இந்த கூட்டு சனநாயக துரோகக் கூட்டத்தினை அம்பலப்படுத்துவது அம்முயற்சிகளைத் தகர்த்துக் கொண்டு அனைத்து மக்கள் விடுதலைப் போராட்டங்களையும் வெளிக் கொண்டு வருவதும் உண்மையான வரலாற்றுப் பணியாகும். உலக உருண்டையையே மாற்றியமைத்தவர்கள் தொழிலாளிகள். அவர்கள் இல்லையெனில் போராட்டமேயில்லை. வரலாறும் இல்லை. அத்தகைய வரலாற்றினைத் தமதாக்கிக் கொண்டவர்களில் மலேயா கணபதியும் அவர்தம் தோழர்களும் மூன்று நாடுகளின் தியாகிகளாவர். இந்தியா, மலேயா, சிங்கப்பூர் நாடுகளின் மறக்கவியலாத் தியாகி கணபதியாவார். மறக்கடிக்கப்பட்ட அவரின் வரலாறு இன்று வெள்ளமெனத் தீமைகளைத் தகர்த்துக் கொண்டு - மூன்று நாடுகளுக்கு மட்டுமன்றி உலக நாடுகளுக்கும் பரணிபாடி பவனி வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



மாபெரும் தோழர் குருதேவன் அவர்களின் இடையறாத தொடர்ச்சியான கடும் உழைப்பு இந்நூல் எனும் வரலாற்றினை ஆவண வடிவத்தில் உருவாக்கியுள்ளது. அப்பணிக்காகத் தீரர் மலேயா வரலாற்று நூல் வெளியீட்டுக் குழு அமைக்கப்பட்டு, அதன் தலைவராகத் தோழர் தாம்பரம் மோகன் அவர்கள் தொடர்ச்சியாகச் செயல்பட்டார். நூலின் வரலாற்றுக் குழுவொன்று தமிழகம் முழுவதும் சிறு பயணம் மேற்கொண்டு பல்வேறு ஐ.என்.ஏ. தியாகிகள், வறுமையில் உழன்று கொண்டிருக்கும் வரலாற்றின் முதுமைச் சின்னங்கள் - குடிசைகளில் குடும்பத்துக்கே சுமையாகிச் சுவரோரங்களில் கிழிந்த பாயில் ஒடுங்கிய உடலங்களாகத் திகழும் வரலாற்றுப் போராளிகள் ஆகியோரைச் சந்தித்துச் சில விவரங்களை ஈட்டி வந்தது. தோழர் குருதேவன் என்னுடன் இருப்பது ஒரு பெரிய வரலாறே என்னுடன் வாழ்வதற்குச் சமம் எனக் கூறலாம். அவரின் நினைவுக் குறிப்புகளே இந்நூலின் பெரும்பான்மை எழுத்துக்கள். முப்புறம் கடல் சூழ் நாட்டில் தமிழர்கள் உருவாக்கிய உயரிய நடைமுறைகளையே தொழிலாளிகளாய் படைத்த உன்னத மாண்புகளையே மாவீரன் மலேயா கணபதி எனும் இந்நூல் வாசகர்களுக்குத் தருகின்றது.

தமிழ்நாட்டில், தலைநகர் சென்னையில் கி.பி. 1949-ல் மலேயாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட தோழர்களால், அவர் தம் ஆதரவாளர்களும் பாட்டாளி வர்க்கமும் பிற அரசியல் கட்சிகளின் முற்போக்காளர்களும் அளித்த அன்பினை, ஆதரவினைக் கொண்டு மலேயா - சிங்கப்பூர் நாடுகளிலிருந்து நாடு கடத்தப்பட்ட தியாகிகள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பின் தலைவராகத் தூக்கு மேடையிலிருந்து மீண்ட மலேயா சாம்பசிவம் அவர்களும், பொதுச் செயலாளராகத் துறைமுகத் தொழிற்சங்க தலைவர் தோழர் பொறைக்கலம் அவர்களும், பொருளாளராகச் சென்னை தாம்பரம் விஸ்வநாததாஸ் மன்ற தலைவர் மலேசியா பழனி அவர்களும் பதவி வகித்து அரும்பணியாற்றினர். நாடு கடத்தப்பட்ட தோழர்களின் நன்னம்பிக்கை முனையாக அச்சங்கம் அவ்வாண்டில் தியாகி கணபதி அவர்களின் நினைவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது.

படிப்பகம்

www.padippakam.com



அதுமட்டுமல்லாமல் நாடு கடத்தப்பட்ட தியாகிகள் மாநாட்டினை கி.பி. 1952-ல் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் சிறப்பாகக் கொண்டாடியது. அம்மாநாட்டின் சிறப்பு அழைப்பாளராகத் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். இருப்பினும் தி.மு.க. சார்பாக கனியூர் மதியழகன் அவர்களும், காங்கிரஸ் கட்சி சார்பில் திரு பூபாலன் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சி சார்பில் நாகை முருகேசன் அவர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். கோலாகலமாகக் கொண்டாடப் பெற்ற அம்மாநாடு நாடு கடத்தப்பட்ட தியாகிகளின் ஆதரவற்ற நிலைமை குறித்துக் கவலை தெரிவித்தது. மேலும் அவர்களின் வாழ்வியல் சூழ்நிலைகளைச் சீர்படுத்த வேண்டியும் - தியாகிகளின் வாழ்வை மேம்படுத்தக் கோரியும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்தகைய தீர்மானங்களின் நகல்கள் மலேய, இந்தியத் தமிழக அரசுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாநாட்டில் இளவயதில் மாவீரனாக மலர்ந்து தியாகியாகப் பரிணமித்த மலேயா கணபதியின் பெரிய அளவிலான திருவுருவப்படமும் திறந்து வைக்கப்பட்டது மாபெரும் சிறப்பாகும். அத்தியாக மறவனின் சிறு புகைப்படங்கள் ஆயிரக்கணக்கில் மாநாட்டில் அனைவருக்கும் அளிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் விரவி வாழ்ந்து வரும் மலேயா தியாகிகளின் முகவரிகளுக்கும் தோழர் கணபதியின் புகைப்படங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அத்துடன் சென்னை மக்கள் கலா மன்றம் என்ற ஒரு கலை இலக்கிய அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டது. அக்கலை இலக்கிய அமைப்பு வேலூார் வீரசேனன் எனும் நாடகாசிரியர் தலைமையில் தோழர்கள் இளமதி, நெடுமாறன், ராமகிருஷ்ணன் ஆகியோர்களின் பெருழைப்புடன் கயிற்றில் தொங்கிய கணபதி எனும் வரலாற்று நாடகம் சென்னையில் பல்வேறு இடங்களில் நடத்தப் பெற்றது அந்நாடகம் மக்களிடையே பெரிதும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன்

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் அமோக ஆதரவையும் ஈட்டியது. தியாக மறவன் கணபதிக்கு அணி சேர்க்கும் விதத்தில் அக்காலத்தில் திராவிட இயக்கத் தளபதியாகத் திகழ்ந்து இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி எழுதிய மிக சிறு நூலான கயிற்றில் தொங்கிய கணபதி - மறைந்த மாவீரனின் புகழைத் தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பறைசாற்றியது.

14 இதழ்கள் கொண்டிருந்தாலும், தோழர் கணபதியவர்கள் தூக்குக் கைதியின் உடைகளோடு தூக்கில் தொங்குவது போன்ற மேலட்டையுடன் காணப்பட்ட அச்சிறுநூல் தமிழர்களின் உதிரத்தில் கணபதியின் சரித்திரத்தைச் செதுக்கியதெனலாம். அறிவுப்பண்ணை - வெளியீட்டின் பதிப்புரையே படிப்பவர்களை எழுச்சியுறச் செய்தது. அதன் பதிப்புரையை அப்படியே தருகின்றேன்.

## கயிற்றில் தொங்கிய கணபதி

### பதிப்புரை

இருபத்தி நான்கு வயது இளைஞன் - எழில் நிறை தமிழன், கணபதி கயிற்றிலே தொங்க நேரிட்டது. கதியற்றவராய் - காப்பாற்ற நாதியற்றவராய் ஏன்? - ஏன்?

இதைப் படியுங்கள்

பதிப்பகத்தார்

பின் அதன் தொடர்ச்சியாகக் கணபதியின் புகழ் பரப்பியது, தோழர் குருதேவன் (இன்றும் சென்னையில் வாழ்ந்து வரும் முது பெரும் கம்யூனிஸ்ட் குருதேவன் ஆவார்) அவர்களால் இயற்றப்பட்ட பாடல். அஃதாவது

படிப்பகம்

www.padippakam.com



எத்தனை எத்தனை தோழர்கள் இருந்தோம்
எத்தனை எத்தனை தோழர்கள் இருந்தோம்
எத்துணை எத்தனை கோரிக்கைகள் விடுத்தோம்
அத்துணையும் பாழாச்சே!
அய்யகோ உம் உயிர் போச்சே!
பொதுவுடமை வளர்த்தவனே!
வெள்ளையனை எதிர்த்தவனே!
செந்தொண்டர் தலைவனாய் வாழ்ந்தாய்
தியாகியாய் மறைந்தாய்
எம் தொண்டர் ஏழைகள் தொண்டர்
எழுந்திடும் புதுயுகத் தொண்டர்
தியாகியாய் மறைந்தாயோ!

என்ற பாடலை மக்கள் மத்தியில் நாடு கடத்தப்பட்ட தியாகிகள் பாடி கணபதி புகழ்தனைப் பரப்பினர். மேலும் வீரசேனன், புரட்சிப் பித்தன் ஆகியோரது நினைவுகளைப் பரப்பும் பாடல்களும் மக்கள் திடலுக்குக் கொண்டு வரப்பட்டன. தோழர்களின் நினைவுப் பாடல் திரட்டு தியாகிகளின் புகழை நீண்டகாலம் மக்கள் சமுதாயத்தில் பாடிக் கொண்டிருந்தது. எனினும் அப்பணி தொடர்ந்து நடைபெற இயலாது மறைந்து போனது கொடுமை. பல்வேறு காரணங்களால் பலகாலமாக மறக்கப்பட்டு விட்ட கணபதியின் புகழ்பரப்பும் பணி மீண்டும் இவ்வரிய முயற்சியாகத் துளிர் விட்டிருப்பது தோழர் மலேசிய பழனி அவர்களின் அரிய முயற்சியினாலும், இடையறாத உழைப்புகளாலும் தான் என்று கூறினால் மிகையாகாது. அவர்தம் பெரும் முயற்சியினால் தோழர் கணபதி நூல் வெளியீட்டு கமிட்டி உருவானது.

படிப்பகம்

www.padippakam.com



கி.பி. 1994-ம் ஆண்டில் உருவான நூல் வெளியீட்டுக் குழு தோழர் கணபதியவர்களின் நினைவுநாளைக் கொண்டாடியது. எங்கெல்லாம் தமிழுணர்வும் பொது உடமைச் செறிவும் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் தீரர் கணபதியவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்படும் அழைப்பு விடப்பட்டது. தீரர் கணபதியின் நூல் தொடர்பான விளம்பரங்கள் செய்வதற்கு விவரங்கள் நிரப்பப்பட்ட, பிரச்சாரக்குழு வொன்று அமைக்கப்பட்டது. அக்குழு தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று மாபெரும் பணியாற்றியது. சென்னையிலும் பணியாற்றியது. உடனடியாக மாவீரன் கணபதியின் புகழ் வரலாற்றினை உலகம் மீண்டும் அறிந்து கொள்ளும் விதத்தில் பெரிய அளவில் நூலொன்று வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதே அதன் தலையாய நோக்கம் ஆகும். அப்படியாயின் இச்சிறு நூல் எதற்கு என்ற கேள்வி எழும். முதன்மை நூலுக்குப் பல்வேறு தகவலாதாரங்களைத் திரட்டித் தரப்போகும் முன்முயற்சியாக மறைந்த தியாகி கணபதியவர்களின் மணியோசையாக இச்சிறு நூல் வெளிவருகின்றது. இச்சிறு வரலாற்று நூல் மற்றொரு வரலாற்றை படைக்க வேண்டும் என்பதே இப்படைப்பின் நோக்கம் ஆகும். இந்நூல் வாசகர்கள் மத்தியில் ஓர் அரசியல் விழிப்புணர்வை உருவாக்குமானால் இந்நூல் அதற்குரிய நோக்கத்தை எட்டியதாகப் பொருள் கொள்ளலாம். இந்நூல் தமிழர்கள் மத்தியில் கணபதி போன்ற மாவீரர்களை உருவாக்கி தமிழ்ச் சமுதாயத்தின் மேன்மையை உயர்த்தப் பயன்படுமானால் நூலில் ஒவ்வொரு எழுத்தும் பலனை ஈட்டியதாகக் கருதி கொள்வோம். இந்நூல் உழைக்கும் வர்க்கத்தை உயர்த்த உதவுமானால் இந்நூல் உருவாக்கத்தில் சிந்தப்பட்ட ஒவ்வொரு வியர்வைத் துளியும் விளைச்சலை ஈட்டியுள்ளது எனப் பொருள் கொள்வோமே. தமிழன்;

படிப்பகம்

www.padippakam.com



ஆம், அவன் கங்கை கொண்டவன். கடாரம் வென்றவன் - கடற்படை நடத்தித் தம் முகவரியினைத் தூர கிழக்கு நாடுகளில் எல்லாம் செம்மையாகச் செதுக்கியவன். ஆம், அவன் எரித்திரியாவுக்கும், யவனத்துக்கும், ரோமபுரிக்கும் கூட வாணிகம் செய்தவனாம், வரலாறு கூறுகின்றது. தமிழன் அக்காலத்தில் வெளியிட்ட நாணயங்கள் காலப் பெட்டகமாக உலகக் கடல்களின் ஆழத்தில் அழுத்தமாக ஊடுருவியுள்ளதாம். ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இத்தகைய தமிழனைப் பற்றிய புகழலைகள் வரலாற்றின் கரைகளைத் தொடர்ச்சியாக மாலையிடலாம். ஆனால் உண்மை வாழ்வினைப் பொருத்த வரையில் அவை வளமைக் கரையைத் தொடவியலா ஏழ்மை அலைகளே!

தமிழனின் புகழ்மிகு போதையைத் தெளிவித்துக் கொண்டு அவனின் முகவரியைக் காலமெனும் அடர்ந்த காட்டினுள் தேடினால் தெரிய வருவதெல்லாம் திரைகடலோடித் திரவியம் தேடச் சென்றவன் விரிகடல் மேவ விலாசம் தெரியா அளவுக்குச் சுரண்டப்பட்டுள்ளான். தமிழனின் உழைப்பு கடல் கடந்து கடுமையாகச் சுரண்டப்படுகின்றது. தமிழனின் உழைப்பு சுரண்டப்படுவதை வங்கக் கடலும், இந்தியப் பெருங்கடலும் அவை தம் அலைகளால் தமிழகத்துக் கரைகளில் எழுதி கொண்டேயிருக்கின்றன. ஆனால் அதை ஏறிட்டுப் பார்க்கத்தான் இங்கே இதயமுள்ள தமிழனில்லை. இலங்கையின் தேயிலைத் தோட்டங்கள் முதல் மலேயாவின் ரப்பர் தோட்டங்கள் வரை தங்கத் தமிழனின் உழைப்பு - கடும் உழைப்பு உரமாகத் தூவப்பட்டுள்ளது. வரலாறு. பசுமை நிறைந்த நாடுகளில் எல்லாம் தம் வியர்வைத் துளிகளை விதைத்தவன் தமிழன். இத்தகைய வளம் கொழிக்கும் நாடுகளுள் ஒன்றுதான் இன்றைய மலேசியா - அன்றைய மலேயா அதற்கும் முன்னால் தீபகற்ப மலைநாடு.

படிப்பகம்

www.padippakam.com



# 3. மலேயா அமைவிடத் திறனாய்வு

மலேயா ஒரு முப்புற கடல் சூழ் மலை நாடு (Peninsula). நிலநடுக் கோட்டுக்கு அருகில் அமைந்துள்ள நாடுகள் அடர்ந்த காடுகளைப் பெற்றுள்ளதுபோல் மலேயா - தன் மண்வளத்துக்கேற்ப - கடல் சூழ் வானிலைக்கேற்ப மலைக்காடுகளாய்த் திகழும் வளமான நாடு. மலைக்காடுகளாய்த் திகழ்ந்த மலேயாவினை மலைத் தோட்டங்களாக மாற்றியவர்கள் தமிழர்கள் ஆவர். சீனர்களின் குடியேற்றம் தமிழர்களுக்கு மிகப் பிற்காலத்தில் அமைந்ததே ஆகும். ரப்பர் தோட்டங்கள் செம்பனை மரங்கள் - தகரம் - ஈயம் எனும் இயற்கைச் செல்வங்கள் நிலக்கரி மற்றும் -கனிம வளங்கள் நிறைந்த கவின் மிகு நாடு மலேயா ஆகும். வரலாற்றாராய்ச்சியாளர்களின் கருத்துப்படி மலேயா பண்டைய லெமூரியா கண்டத்தின் தொடர்புடைய பகுதியாகும். இன்றைய இலங்கை தீவு இந்தியாவுடன் இணைந்த பகுதியே ஆகும். தமிழிலக்கியங்களில் சொல்லப்படும் கடல் கொந்தளிப்புத்தான் - இந்தியாவுக்கும் - இலங்கைக்கு மிடையேயான பாக் நீரிணைப்பு எனும் குறுகிய கடல் பகுதியினை உருவாக்கியுள்ளது என நம்பலாம். மாறாக பாக் நீரிணைப்பு கடல் கொந்தளிப்பேயில்லாமல் காலப் போக்கில் உருவானதாக இருக்கலாம். ஏனெனில் மிக குறுகிய பகுதி கடல் அரிப்பினைப் பொருத்தவரையில் அது எப்போதும் சாத்தியம் ஆகும். நிலத்தைவிட - நீருக்கு அதிக சக்தியுள்ளது; நீரைவிடக் காற்றுக்கு அதிக சக்தியுள்ளது.

தென்கிழக்காசிய நாடுகளிலேயே மலேயா வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நாடென்பது மட்டுமல்லாமல் அதன்கண் வாழும் மக்களின் சமூகக் கலவையால் அரசியல் முக்கியத்துவம் பெற்ற நாடாகவும் தொடர்ந்து விளங்கி வருகின்றது. அமைதிக் கண்டமான ஆஸ்திரேலியாவின் நீர்வழியில் அமைந்துள்ளது. இந்நாடு மலாய் தேசிய இனம் - சீன தேசிய இனம் - தமிழ்த் தேசிய இனம் எனும் மூன்று தேசிய இனங்களின் சமூகக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



மலேயா தமிழர்களைப் பொருத்தவரையில் அவர்களது தலைமுறை சோழர்கள் காலம் முதல் துவங்கியிருக்க வாய்ப்புகள் உண்டு. சோழ வரலாற்றில் புகழ் பெறு மாமன்னன் ராசராசசோழன் ஆவார். அவருடைய பொருத்தமான வாரிசு முதலாம் ராசேந்திர சோழனே ஆவார். வரலாற்றாசிரியர்கள் ராசேந்திர சோழனின் ஆட்சியை மாமன்னன் ராசராசன் ஆட்சியின் நீட்சியே என்று குறிப்பிடுகின்றார்கள். ராசேந்திர சோழனின் ஆட்சி ராசராச சோழனது பண்பாட்டு வளர்ச்சியாகத் திகழ்ந்ததனால் அவ்வாறு வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். முதலாம் ராசராசசோழன் கி.பி. 985 முதல் கி.பி.1014 வரையில் ஆட்சி செய்துள்ளார். முதலாம் ராசேந்திர சோழனோ கி.பி.1012 முதல் கி.பி.1044 வரையில் ஆட்சி செய்துள்ளார். இலங்கையின் வடபகுதியை வென்று அங்கே சோழர் ஆட்சியைப் பரப்பியவர் முதலாம் ராசராச சோழப் பேரரசனே ஆவார். மாலத்தீவுகளைக் கூட வென்று அங்கும் தமிழ் மணம் வீசச் செய்தவரும் அவரே, ராசேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் தரைப்படையை விடக் கடற்படை வெற்றிகள் மிக்க புகழ் பெற்றவை. அவர் தான் மலேயாவிலுள்ள கெட்டா எனப்படும் கடாரத்தை வென்றவர். சுமத்ரா தீவிலிருந்து ஸ்ரீ விஜய பேரரசினை கி.பி.1025ல் வென்றார். இலங்கைத் தீவு முழுவதையும் வென்றார். இன்றைக்கும் சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய பெயர்கள் தமிழ்ப் பெயர்களே ஆகும். இலங்கையின் பல இடப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களே என மொழியறிஞர்கள் கூறுகின்றனர்.

மலேயாவின் அரசியல் முக்கியத்துவம், மூன்று தேசிய இன அடிப்படைகளில் நிலவுகின்றது. மலேயா கி.பி.1957ல் விடுதலையடைந்தது. அந்நாட்டின் தேசிய விழிப்புணர்ச்சி காரணமாக துங்கு அப்துல்ரகுமான் தலைமையில் விடுதலையடைந்தது. ஆனால் மலேயாவின் விடுதலைக்கு வித்திட்டவர்கள் மாவீரன் கணபதி, வீரசேனன், எம்.ஆர்.குருதேவன் ஆகியோரே! சீன கம்யூனிஸ்டு கட்சியின் கிளையான மலேயா கம்யூனிஸ்டு கட்சி தலைமையில் கி.பி.1949லேயே விடுதலை பெற்றிருக்க வேண்டியது. மலேயாவின் சுதந்திரப் போராட்டம்

படிப்பகம்

www.padippakam.com



கம்யூனிஸ்டு என்ற அடிப்படையில் உலக முதலாளித்துவத்தின் பின்னணியில் கடுமையாக ஒடுக்கப்பட்டு பின்னர் கி.பி.1957ல் கம்யூனிஸ்டுகள் அல்லாதவரின் விடுதலை நாடாக மலர்ந்துள்ளது. ஆனால் அன்றுமுதல் இன்றுவரையில் மலாயாவின் கம்யூனிஸ்டுகள் பெரும்பாலும் தமிழர்கள் - சீனர்கள் மறைமுகமாக ஒடுக்கப்பட்டுத்தான் வருகின்றார்கள். ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மாவீரன் பிரபாகரன் தலைமையில் உருவானது முதல் உலகம் முழுவதும் தமிழர்கள் மறைமுகமாக ஒடுக்கப்படுகின்றார்கள். உலக நாடுகளில் பெரும்பான்மை நாடுகள் இதனைப் பின்பற்றி வருகின்றன. மலேயாவும் அதே பணியைச் செய்து வருகின்றது.

மலேயா அன்று முதல், இன்று மலேயாவின் பிரதமராக இருக்கும் டாக்டர் மகதிர்பின் முகம்மது ஆட்சி வரையிலும் இஸ்லாமிய அடிப்படையிலான அரசாக விளங்கி வருகின்றது. பெரும்பான்மையான இனம் மலாய் மக்களினம். இஸ்லாமிய அடிப்படை வாதத்தை நோக்கி மலேயா செல்லவில்லை என்றாலும் மதமாற்றங்கள் ஊக்குவிக்கப்படும் சூழ்நிலை காணப்படுவதாகத் தெரிய வருகின்றது. மலேயாவின் தமிழ்த் தேசிய இனம் கி.பி.1920-ல் போர்க்குணம் கொண்ட மறத்தமிழர் குலமாகப் பவனி வருகின்றது. சீன தேசிய இனமோ பொதுவுடமைக் கருத்துக்களை மையமாகக் கொண்ட மங்கோலிய இன நீட்சியாகும். இஸ்லாமிய அடிப்படை வாதமில்லாத மலாய் இனம், பொதுவுடமைக் கருத்தின் நீட்டிப்பான சீன இனம் வீறுகொண்ட போர் வரலாற்றின் தொடர்ச்சியான தமிழ் இனம் என அரசியல் முக்கியத்துவம் பெற்ற நாடு மலேயா குடியரசாகும். இஸ்லாமிய அரசுக்கு உலகம் முழுதான இஸ்லாமியர்களின் நேரடி, மறைமுக ஆதரவும் - பொது உடமைச் சீனர்களுக்குச் சீனாவின் - மங்கோலிய இன மக்களின் ஆதரவும் - வீரத் தமிழ் மக்களுக்கு உலகத் தமிழர்களின் ஆதரவும் நேரடியாக - மறைமுகமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அதனால் தான் அரசியல் முக்கியத்துவம் பெற்ற மலேயா

படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சியிலும் - வளர்ச்சியின் போதிய பங்கிடுதலிலும் - உழைப்பிலும் மூன்று இனங்களின் போதிய பங்களிப்பும் நிலவும் வரையில் மலேயா குடியரசுக்குச் சிக்கல்கள் இருக்காது என்றே உறுதியாகக் கருதலாம்.

அக்காலங்களில் மலாய் நாட்டின் மூன்று பெரிய தேசிய இனங்களும் சிறுபான்மை மக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்பட்டனர். சக்காய் காட்டுவாசிகளும் ஜாவா, டாயாக், ஜப்பானிய - ஆங்கிலேய - மலாய் கலப்பினத்தவர்கள் - ஆங்கிலேயர், பிரான்சு, பொகீஸ் போன்ற சிறுபான்மையினர் இருந்தாலும் அவர்களுக்குள் நடைமுறை இணக்கம் நிலவியது சிறப்பானதொன்றாகும். முதலாம் ராசேந்திர சோழன் கடாரம் வென்ற காலத்தில் அங்கே மேற்குறிப்பிடப்பட்ட மலைவாழ் மக்களே வாழ்ந்திருக்க வேண்டும். மலாய் இனம் பின்னர் குடியேறிய இனமாகக் கருதலாம். மலாயாவின் - சுமத்ராவின் - மாலத்தீவின் மக்கள் திராவிட இன வரலாற்றின் பழங்குடிகளாக இருந்திருக்கவே அதிக வாய்ப்புகள் உண்டு. மலேயாவின் வரலாற்றில் கி.பி.1920-லிருந்தே நடைபெற்ற போராட்டங்கள் பல இன மக்களின் நன்கொடையாகத் திகழ்ந்து வந்துள்ளன. இனங்களை இணைத்துப் போராடுவதென்பது இயற்கையான தேவையாகி விட்டது, போராட்டங்கள் அவர்களை இணைத்தது. போராட்டங்களுக்குப் பின்னால் நாளடைவில் கம்யூனிஸ்டுகள் இயங்கினர் மலேயாவின் சனநாயக விடுதலையில் தமிழர்களின் பங்கு அதிகமாகும் என்பதில் ஐயமில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள் நாளடைவில் கம்யூனிஸ்டுகளாயினர். அந்நாளில் தென்கிழக்காசிய நாடுகளில் பெரும்பாலானவை பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தின் காலனிகளாக திகழ்ந்தன. மலேயா, இந்தியா, பர்மா போன்ற நாடுகளனைத்துமே பிரிட்டீஷ் பேராட்சியின் கீழ் நிலவியது. ஒரே பேராண்மையின் ஆதிக்கத்திலிருந்ததாலேயே இந்தியாவின் உழைக்கும் சக்தி பெரும்பாலும் தமிழர்கள் - தமிழர்களிலும் பெரும்பான்மையாகத் தஞ்சை - நாகை இராமநாத புரம் போன்ற தென் மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் - கேரளாவைச் சார்ந்தவர் அதில் சில சதவீதம் -

படிப்பகம்

www.padippakam.com



குறைந்த பட்ச வட இந்தியர்கள் என இந்தியாவின் உழைக்கும் சக்தி மலேயா முதலாளித்துவத்திற்கு அதன் பின்னணியிலான உலக ஏகாதிபத்தியத்திற்குக் குறைந்த கூலியில் பணயமாக்க இயன்றது. மனித குல விடுதலையின் உலகப் போராட்டத்தில் மலேயாவின் போராட்ட பங்கினைச் சுமந்தவர் மாவீரன் கணபதியாவார். கணபதியின் வாழ்வியலைப் புரட்டினால் அதில் தோழர் எம்.ஆர்.குருதேவன் பக்கங்களாக - இதழ்களாகச் சிரித்துக் கொண்டிருப்பது புலனாகும்.

இன்று உலகின் சந்தையாகத் திகழும் சிங்கப்பூரில் - அன்று ஐ.என்.ஏவின் தற்காலிக அரசில் கணபதி முக்கிய பங்கு வகித்தவர் ஆவார். இந்திய உழைக்கும் வர்க்கம் மலேயாவில் சுரண்டப்பட்டு நின்ற கொடுமையைக் கண்ணுற்றுக் கலங்கியதோடல்லாமல் கடிந்து நின்று அக் கொடுமைக்கெதிராகப் போர் தொடுத்தவர் கணபதியாவார்.

தீரர் கணபதியவர்களின் வரலாற்றைத் தொகுக்க முனைவதிலேயே மலேயா போராட்ட வரலாறும் அடங்கி விடுகின்றது. இன்று மறக்கடிக்கப்பட்ட அவரின் வரலாறு வெள்ளமெனப் புறப்பட்டுத் தடைகளைத் தகர்த்துக் கொண்டு உலக நாடுகளில் பரணிபாடி பவனி வருகின்றது.

அக்காலங்களில் மலேயா பொது உடமை சக்திகளின் கலவைக் கூடமாய் திகழ்ந்தது. மலேயாவில் கம்யூனிஸ்டுகளின் போராட்டம், காங்கிரஸின் தேசியப் போராட்டம், திராவிடச் சிந்தனை யாளர்களின் தமிழ் மொழிப் போராட்டங்கள், தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்கள், மலேயா விடுதலைப் போராட்டம் - உலக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், வர்க்க போராட்டம் அனைத்திலும் கணபதி உயரிய தலைமையேற்றிருந்தார். அன்றைய பிரிட்டீஷ் மேலாண்மை எதிர்ப்புப் போரினில் மலேயாவின் சக்திகள் இந்தியாவில் நிலவிய நிர்ப்பந்தங்களுக்கு ஈடு கொடுத்தன. தமிழர் களானதால் திராவிடச் சிந்தனை ஈர்ப்புக்கும் ஈடு கொடுத்தது இயல்பே யாகும். மேலும் உலகில் எங்கெங்கெல்லாம் மேலாதிக்கக் கொடுமைகள் நிலவுகின்றதோ - அங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்கள் இரண்டாம் தரமாக்கப்பட்ட மக்கள் தங்களுக்குள் ஐக்கியப்பட்டுப் போவது பெரிதும் இயல்பான ஒன்று ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

# 4. 1920-ம் ஆண்டுகளில் மலேயா

இன்று உலகம் முழுவதும் எங்கும் அரசியல், எதிலும் அரசியல்; அரசியல் இல்லாது அணுவும் அசையவில்லை. அரசியல் உணர்வு அனைவருக்கும் தேவை என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையே எனினும் அரசியல் காய்களாகவும், அரசியலின் ஆடற் பெண்களாகவும் ஒரு சமுதாயமே மாற வேண்டிய அவசியமில்லை. மதம் - சாதி என்ற மலிவான அடிப்படைகளில் நாட்டின் குடிமகன்கள் கவசம் பூட்டிக்கொண்டு சுயநலப் போர் நடத்தும் சமுதாயமாக அமைந்துவிடின் அதனை நாடு என அழைப்பதைக் காட்டிலும் கவர்ச்சி பூசப்பட்ட மனிதக்காடு என அழைக்கலாம். இன்று இந்தியாவில் தெருவுக்குத் தெரு சங்கங்கள், நான்கு பேர் கொண்ட சங்கம் எழுது புத்தகம் அச்சடித்து (Letter Pads) விட்டால் உடனே அச்சங்கத்தின் பின்னால் உலக நாடுகளின் சக்திகள், அச்சங்கம் உனக்கா - எனக்கா எனப் போட்டி போட்டுக் கொண்டு வள்ளன்மையைத் திறந்து விடுகின்றன. அதனால் இளைஞர்களும் நடுத்தர வயதினரும் பதவிக்காக எதையும் செய்யத் துணிந்து விட்ட நிலை. A very letter pad itself fetches fortunes.

மலேயாவைப் பொருத்த வரையில் கி.பி.1920-களிலேயே மலேய இந்தியர்கள் சரியான அரசியல் பிரதிபலிப்புகளைக் கொண்டு விளங்கினார்கள், மலாயா இந்தியர்கள் என்றழைப்பதைக் காட்டிலும் மலேயா தமிழர்கள் என்றழைப்பதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் மலேயா இந்தியர்களில் பெரும்பாலானோர் மலாய் தமிழர்கள் ஆவார்கள். கி.பி.1920-களிலேயே மலேயா தமிழர்கள் இரு கூறாகப் பிரிந்து நின்றார்கள், அது தமிழ்நாட்டின் பிரதிபலிப்பு ஆகும். தமிழ்நாட்டுத் திராவிட இயக்கப் பிரதிபலிப்புகள் மலேயாவில் எதிரொலித்த, அக்காலத்தில் மலேயாவில் இரு பெரும் தமிழ்ச் செய்தித்தாள்கள் வெளிவந்தன இந்திய தேசிய காங்கிரஸ்

www.padippakam.com



கட்சியையும் மலேயா மத்திய இந்திய சங்கத்தையும் ஆதரித்துப் போற்றியது தமிழ் நேசன் செய்தித்தாள். அச்செய்திதாளின் ஆசிரியர் திரு நரசிம்ம ஐயங்கார் ஆவார். மலேயாவின் திராவிட இயக்கப் பற்றாளர்களின் செய்தி இதழாகத் தமிழ் முரசு விளங்கியது, தமிழ் முரசு தமிழகத்தின் சுயமரியாதைச் சிங்கமான ஈ.வே.ராமசாமி பெரியார் அவர்களின் திராவிடத் துணை தேசியத்தை ஆதரித்தது. மலேயாவில் திராவிடப் பற்றாளர்கள் - தமிழ்ப் பற்றாளர்கள் - வியாபாரிகள் - தொழிலாளிகள் மத்தியில் தமிழ் முரசு மிகப் பிரபலமாகத் திகழ்ந்தது. இவ்வாறு மலேயா இந்தியர்கள் - தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இரு கூறாகப் பிரிந்து நின்றது தமிழகத்தின் எதிரொளிப்புகள் ஆகும். கணபதியின் காலத்தில் தமிழ்முரசு, தமிழ் நேசன் ஆகிய இரு தரப்பினரையும் ஒரு சேர இணைத்து விடுதலைப் போராட்டம் பெருக வைத்தது. கணபதியின் மாபெரும் பெருமையே ஆகும்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து - பதினோராம் நூற்றாண்டு வரையில் தமிழ் மன்னர்களான சோழ மன்னர்களின் ஆட்சி மலேயாவின் பெரும் பகுதிகளில் நிலவியது வரலாறு. அக்காலத் தமிழர்களின் வழித் தோன்றல்களைப் பற்றி இன்னமும் ஆராய வேண்டியுள்ளது. எனினும் இன்றைய மலேயா தமிழர்கள் பிரிட்டீஷ் காலனியாதிக்கத்தின் விளைவானவர்கள் என்பதில் ஐயமில்லை. கி.பி.1920-க்கு முற்பட்ட மலேயா தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள் தன்னெழுச்சியானவை என்றே உறுதியாக எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். கி.பி. 1919லியே மலாயாவில் சிறப்புக் காவல் துறைப் பிரிவு அமைக்கப்பட்டு மலாய் இந்தியப் பிரச்சினைகளில் ஆர்வங்காட்டுவோரைக் கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையும் - இந்திய - தமிழ் அரசியல் தலைவர்களாகக் கருதப்பட்டவர்களைக் கூட மலேயாவில் நுழைய முடியாதவாறு தடைகள் விதிக்கப்பட்டதையும் - இந்தியக் கூலிகளுக்கு மட்டுமே மலேயா சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றதையும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களே சிறப்பாகத் தெரிவிக்கின்றன

படிப்பகம்

www.padippakam.com



அவைகள் பின்வருபவையாகும் :

அ) இந்திய சுதந்திரப் போராட்டங்கள் அதன் பிரதிபலிப்புகள்

(ஆ) காலனி நாடுகளை ஒடுக்குவதில் சர்வாதிகாரப் போக்கோடு நடந்து கொள்கின்றார்கள்.

(இ) மலேயா பிரிட்டீஷ் ஆட்சியோ மக்களை இரும்புக் கரங்களால் ஒடுக்கி உதிரத்தைப் பிழிந்து எடுக்கின்றது.

(ஈ) போராட்டங்களின் மூலம்தான் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

உ) தமிழகத் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் - நீதிக்கட்சியின் உதயம் - திராவிட இயக்கத் தோற்றம் ஆகியவை

ஊ) செங்கொடி தொழிற்சங்க இயக்கங்கள்

எ) இந்திய கம்யூனிஸ்டு இயக்கங்கள்

ஏ) பகத்சிங் அவர்களின் இந்துஸ்தான் சோசலிஸ்டு ரிப்பப்ளிக்

மலேயாவின் விடுதலைப் போராட்ட வரலாறு - வளமான ஆதாரங்களோடு வரலாற்று அடிப்படைகளோடு கடந்த கி.பி. 1920-ம் ஆண்டிலிருந்தே துவங்குகின்றது என உறுதியாக முடிவு செய்யலாம்.

அக்கால மலேயாவின் நிலைதனை அன்றை மலேயா கம்யூனிஸ்டு கட்சியில் கி.பி. 1925-ம் ஆண்டின் தீர்மானங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அத்தீர்மானங்களிலிருந்து முக்கிய மானவற்றைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) உலக ஏகாதிபத்தியங்கள் தங்கள் சுரண்டல் கொள்கையை ஓர் உச்சகட்டத்திற்குக் கொண்டு சென்றுள்ளன.

(ஆ) காலனி நாடுகளை ஒடுக்குவதில் சர்வாதிகாரப் போக்கோடு நடந்து கொள்கின்றன.

(இ) மலேயா பிரிட்டீஷ் ஆட்சியோ மக்களை இரும்புக் கரங்களால் ஒடுக்கி உதிரத்தைப் பிழிந்து எடுக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



(ஈ) போராட்டங்களின் மூலம்தான் மக்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

தீர்மானங்கள் பிற காலனி நாடுகள் போன்று மலேயா மக்கள் சுரண்டப்பட்டு - தோட்டங்களுக்கு உதிரத்தை வார்த்த உழைக்கும் மக்களாய்த் திகழ்ந்தார்கள் என்பதையும் வரலாற்று ஆவணமாய் எடுத்தியம்புகின்றது. அத்தகைய அரசியல் கலாச்சார - பொருளாதாரச் சூழ்நிலைகள் நிலவிய மலேயாவில் தான் "ரசூலா" எனும் கப்பலில் கி.பி.1920களில் ஒன்பது வயது கணபதி வந்திறங்கினான் - தம்பிக் கோட்டை கணபதி, மலாயாவின் மண்ணை மிதித்தான்.

## 5. தியாகக் கிராமத்தின் தீரன் கணபதி

கி.பி.1900-ம் ஆண்டுகளில் மலாய் நாட்டில் துவக்க காலத்தமிழர்கள். "நான் யார் தெரியுமா? பாக்கு வெட்டிக் கப்பலில் மலேயா வந்ததாக்கும்" "எங்கள் குடும்பம் பாக்கு வெட்டிக் கப்பலில் மலாயா வந்ததாக்கும்" என்று பெருமையாகத் தங்களைப் பற்றிப் பேசிக் கொள்வதுண்டு. பாக்கு வெட்டிக் கப்பல் என்றால் என்ன? அது எப்படி இருக்கும் என்று அன்று பலருக்குப் புரிந்திருக்காது. பாய்கட்டிக் கப்பல் என்பதன் மருவுச் சொல்லே பாக்கு வெட்டிக் கப்பல் என்றாகியது. பின்னர் பாய் மரக் கப்பல் என்றானது. பாய்மரக் கப்பல் பயணம் என்ன அவ்வளவு எளிதா? முத்தெடுக்க மூச்சையடக்கிய தமிழனுக்கு அன்றே கத்தும் கடல் மேவும் காற்றை அடக்கவும் தெரிந்திருந்தது. கடற்படை நடத்தி தூரகிழக்கு நாடுகளில் புலிக்கொடி நாட்டவும் இயன்றது. கி.பி.1990ம் ஆண்டுகளில் மலாய் மொழியில், 'கப்பலாங் பிலாயார் சிம்பிளான் பூலான் மத்தி கப்பித்தான் மத்தி கிராஸி' என்பார்கள். அதன்பொருள் கப்பல் ஒன்பது மாதம் பயணித்தது. ஆனால், அதன் தளபதிகளும் மற்றவர்களும் இறந்து போயினர் என்பதாகும். அன்றைய

படிப்பகம்

www.padippakam.com



கப்பல் பயணமோ மாதக் கணக்கில், காற்றெனும் தோழன் தோழமை மறந்தால் ஆண்டுக் கணக்கில். அவன் சர்வாதிகாரியாய்ச் சீறினாலோ மரணம். ஆம். அத்தகைய மரணங்களுக்கே முகாரிபாடி விட்டு மலாயாவின் மண்ணை மணக்கச் செய்தவன் தமிழகத்துத் தமிழன்; அவர்கள் தம் வரிசையிலே ரகுலா கப்பலில் பயணித்து மலேயாவில் வந்திறங்கியவன்தான் தஞ்சை மாவட்டத் தம்பிக் கோட்டை கணபதியெனும் ஒன்பது வயதுச் சிறுவன்.

பொன் விளையும் பூமி என்று கொண்டாடப்படும் மண் உண்டு. தியாகம் தோய்ந்த பூமி என்று உள்ளம் மகிழப் போற்றப்படும் மண் உண்டு. தியாகம் ஊற்றெடுக்கும் பூமி என்று நன்றியுணர்வோடு கருதிப் போற்றப்பட வேண்டிய மண்ணும் உண்டு. அமெரிக்கத் தொழிலாளிகளின் செங்குருதி தோய்ந்த சிகாகோவின் வீதிகளும் ஹேமார்க் திடலும் தியாகம் தோய்ந்த மண் ஆகும். கி.பி. 1919-ல் இந்தியாவின் அமிர்தசரஸ் ஜாலியன் வாலாபாத் படுகொலை நடந்த உயிர் வேள்வித் திடல் தியாகம் ஊற்றெடுத்த பொன் மணல் பூமியாகும். சிறுவன் பகத்சிங் நடந்தே வந்து தினமும் ஸ்பரிசித்துப் பார்த்து இலட்சியத்தை உடும்பாக உணர்வில் செதுக்கிக் கொண்டானே, அந்த ஜாலியன் வாலாபாக் மண் தியாகக்கவசம் பூண்ட பூமியாகும். அவ்வழியில் தஞ்சை மாவட்டத்தின் பட்டுக் கோட்டைக்கு அருகிலுள்ள தம்பிக் கோட்டை கிராமமும் தியாகம் நிறைந்த பூமியாகும். தம்பிக்கோட்டை தங்க பூமியெனும் மாசுமறுவற்ற பெரும் புகழ் ஈட்டிய மாவட்டம் தஞ்சை மாவட்டமாகும். மரவக்காடு பெரிய கணபதி, கணபதியின் சகோதரர் எஸ்.ஏ.சற்குணம், கீழக்காடு சுப்பிரமணியன், இராமலிங்கம், இராமச்சந்திரன், கமலப்பன், மேலக்காடு சற்குணம், ஆறுமுகச்சாமி இப்படியாக எத்தனையோ தியாகிகளை ஈன்ற தஞ்சை, தமிழ்த் தாயின் கருவறை என்று சொன்னால் மிகையாகாது. அதனினும் பல தியாகசீலர்களைத் தரணிக்களித்த தென்னை வன அழகு சொரியும் தம்பிக் கோட்டை கீழக்காடு கிராமம் தான் மலாயா கணபதியின் தாய்க் கிராமம் ஆகும். தந்தை சீர்மிகு ஆறுமுகத்தேவருக்கும் தாய் வைராத்தாளுக்கும் கணபதி மகனாய்ப் பிறந்தார். ஆறுமுகத் தேவருக்கு

படிப்பகம்

www.padippakam.com



இரண்டு மனைவிகள். முதல் மனைவியின் மகன்கள் திருதியாகராசன், திரு. நடராசன் ஆவர். இளைய மனைவியின் முதல் மகன் நம் வரலாற்று நாயகன் எஸ்.ஏ.கணபதியாவார். இளைய மகன் எஸ்.ஏ.சற்குணம் ஆவார். கணபதி அவர்களின் உறவினர், நண்பர், போராட்டவீரர் என்பதாலேயே பின்னாளில் நாடு கடத்தப்பட்ட ஆறுமுகத்தேவரும் தம்பி கோட்டைக்காரரே. சாதியம் கூடாது என ஆறுமுகத்தேவர் என்ற தம் பெயரை ஆறுமுகச்சாமி என மாற்றி கொண்ட கொள்கைத் தூண் ஆவார்.

காலத்தின் சுழற்சியில் நடுத்தரக் குடும்பமாகத் தஞ்சைத் தரணியில் திகழ்ந்த கணபதியின் குடும்பம் பொருளாதாரத்தில் தாழ்ந்தது. வறுமை வாட்டியது. பிழைக்கவும் உழைக்கவும் தம் ஒன்பது வயதிலேயே கணபதி எனும் சிறுவன் மலேயா பயணமானான். எத்தகைய சூழ்நிலையில்? அன்றைய திராவிட இயக்கத் தளபதியாக திகழ்ந்தவரும் - இன்றைய தமிழகத்தின் முதுபெரும் தலைவரும் மூதறிஞருமான கலைஞர் கருணாநிதியவர்கள், கணபதியைத் தூக்கிலிடுதலைக் கண்டித்து தமிழகம் முழுவதும் உணர்ச்சி முழக்கத்தோடு உரையாற்றிய எழுச்சியுரைகளின் தொகுப்பு நூலான "கயிற்றில் தொங்கிய கணபதி" பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

"நமது குடும்பம் நசித்துப் போனபின், நான் எப்படி இங்கு வந்தேன் என்பதை நீ அறிவாய். அப்பம் விற்றுக் கொண்டும், இராணி வீட்டில் (அதிகாரி வீடு) மங்கு (பாத்திரம்) கழுவிக் கொண்டும் ஆங்கிலம் படித்தேன்.

தமிழகத்தின் நசிந்து போன குடும்பங்களின் வாரிசாக சிறுவன் கணபதி மலேயா பயணித்தான்".

மேலும் கலைஞர் தனக்கேயுரிய சொல் நயத்தோடு பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அச்சிறு நூல் தொடர்கின்றது:

படிப்பகம்

www.padippakam.com



"தஞ்சை மாவட்டத்திலே ...... தங்க நிற நெல் விளையும் சோழ வள நாட்டினிலே . . . . தம்பிக் கோட்டையிலே பிறந்த கணபதி, ஒருசாண் வயிற்றுக்காக இளமையிலேயே மலாயாவுக்கு ஓடினார் . . . . . கருங்கல் கணபதிக்கு கூடச் சுடச் சுட அதிரசமும் அக்கார வடிசலும், ஆனால் . . . தம்பிக் கோட்டை கணபதிக்கோ தாங்காத பசி".

ஆம். கணபதியின் வறுமையை - அதுவும் இளமையில் வறுமையைக் கலைஞர் எழுதுகோலால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். தஞ்சையிலே தங்க நிற நெல் விளையலாம். ஆனால் அதனை விளைவிக்கும் விவசாயியின் வாழ்க்கை தங்கமல்லவே தங்கமல்ல! என்றாலும் தங்க நிறமும் அல்ல. வறுமையின் நிறம் கூலி விவசாயி. விவசாயக் கூலிகளின் வாழ்க்கை வறுமை வயலில் ஏழ்மைப் பயிர்களைத்தானே நித்தம் அறுவடை செய்கின்றது. கணபதி என்ன விதிவிலக்கா? இல்லை கணபதி என்ற பெயருக்காக எவராவது தினமும் சுண்டலும் - உருண்டையுமாகக் கொடுத்து ஏழைச் சிறுவனை வளர்த்து ஆளாக்கி விடுவார்களா என்ன? சிறுவன் கணபதி தாங்கவியலா பசியோடு மலேயாவுக்கு ஓடினான். தமிழன் வறுமையில் வயிற்றுக்காக ஓடிய ஓட்டம் உலக இனங்களில் முதலிடம் பெறும் எனக் கருதலாம். திரைகடலோடி திரவியம் தேடு என்பது பொன்மொழி. தமிழன் தான் சென்ற இடங்களில் எல்லாம் திரவியம் தேடினானா? இல்லை. தனது குருதித் திரவத்தினை தான் மிதித்த நாடுகளின் முன்னேற்றத்துக்காகத் தாரை வார்த்து - வார்த்து வயிறு ஒட்டிப் போனவன். மூதறிஞர் கருணாநிதி கடல்நீர் ஏன் உப்பாக இருக்கின்றதென்றால் அது கடல் கடந்த தமிழர்களின் கண்ணீரால் என்கிறார். கடல் கடந்த தமிழனின் அவலங்களைச் சொல்லாலோ எழுத்தாலோ வடிக்க இயலாது. தமிழன் குடல் வளர்க்கும் பணிக்காக மட்டும் கடல் தாண்டவில்லை - வயிறு வளர்ப்பதுடன் தமிழ்ச் சமுதாயத்தின் மேன்மையை வளர்க்கத்தான் கடல் தாண்டினான். அப்படி கடல் தாண்டிச் சென்று மலேயாவில் தமிழனின் மேன்மையை உயர்த்தியவர்கள் தோழர் எம்.ஆர். குருதேவன் -அவரின் நிஜமாகத் திகழ்ந்த தளபதி கணபதி மற்றும் அவர் தம் தோழர்கள் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com



சூழ்நிலையில் தான் மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதை நீர் தெளிவினும் நிறை தெளிவாகக் காண்பிக்கின்றது. அத்தகைய பகைப்புலனில் நின்று மெத்த புரிந்து கொண்டுதான் கர்மவீரர் கணபதி தனது செயல்பாடுகளைத் தொடங்குகின்றார்.

தனது தாய்மொழியைப் புரிந்து கொண்டவனே தன் நாட்டினைப் புரிந்து கொண்டவன் என்ற பேருண்மைக்கொப்ப கணபதியவர்கள் முதன் முதலில் தொடங்கியது மொழி வளர்ச்சிப் பணியினைத்தான். பின் அறியாமை நீக்குதல், விளையாட்டுக்களில் திறமை ஆகியவற்றிற்கான அமைப்புகளை உருவாக்குதல் என்று செயல்பட்டார். அத்தகைய அமைப்புகளாவன

(அ) தமிழர் சீர்திருத்தச் சங்கம்

(ஆ) விளையாட்டரங்கம்

(இ) இந்திய இளைஞர் சங்கம்

(ஈ) பகத்சிங் உடற்பயிற்சி மன்றம்

**தமிழர் சீர்திருத்தச் சங்கம் :** இச்சீர்திருத்தம் தமிழர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு, மற்றும் பகுத்தறிவுப் பாதைக்கு வழிவகுத்தது. தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் செயல்பாடுகள் மலேசியா முழுவதும் சென்றடைய, பின்வரும் தோழர்கள் அரும் முயற்சிகள் எடுத்தனர். குறிப்பாக பினாங்கு சிதம்பரநாதன், தமிழ்நேசன், அமீது களஞ்சியம், செயங்கொடி, வரதராசன், ராமகிருட்டினன், மலாக்கா தமிழ்க் கொடி, ஆசிரியர் அருணாச்சலம் செட்டியார், ரெ.ரா. அய்யாறு கனக சுந்தரம், கோலாலம்பூர் இரா.சண்முகம், முருகையா, இலங்கை ரங்கநாதன், ஈரோடு அங்கமுத்து, சி.வி.குப்புசாமி, ந.வீரப்பன், ஜொகூர் டி.எஸ்.குருசாமி புலவர், கோ.வி.பாரதிமோகன், வாயுமேடு கல்யாணச் சுந்தரம், மலேயா சாம்பசிவம், பொந்தியான் நாச்சியப்பன், சிங்கப்பூர் தமிழ் முரசு ஆசிரியர் கோ.சாரங்கபானி, மாயூரம் கிருஷ்ணசாமி, காந்தரசம் சுப்பையா, அறிஞர் மெய்யப்பன், சிங்கை வானொலி கவிஞர் பழநிவேல், லட்சுமணன் துரை, பாலப்பன், சின்னப்பதாஸ்

படிப்பகம்

www.padippakam.com



புலவர், எம்.ஆர்.குருதேவன், கறம்பக்குடி தமிழ்த் தொண்டன், டாக்டர் நாகை ராசமாணிக்கம், கிள்ளாங் செயபாரதி, ஜீவானந்தம், தங்கவேல், வீரவர்மன், பிரம்மச்சாரி கைலாசம், திருக்குறள் முத்து, மயில்ராவணன், முத்தைய்யா, சண்முகம், ரங்கராசன், வீரபாகு, மாரியப்பன் ஆகியோர் மலேயாவின் தமிழர்களை மொழியடிப் படையிலும், அரசியல் அடிப்படையிலும் சீர்திருத்தித் தெளிவுபடுத்தினர்.

**விளையாட்டுத் துறை** :- தமிழர்களின் விளையாட்டுக்கள் என்றாலே அவைகள் வீர விளையாட்டுகள் தாம். உடலை வளர்த்தேன்-உயிர் வளர்த்தேனே என உடற் பயிற்சி, பேட்மிண்டன், கால்பந்து விளையாட்டுக்களுடன் குத்து வரிசை, சிலம்பம், குத்துச் சண்டை, மல்யுத்தம், தொண்டர் அணி பயிற்சி, இராணுவப் பயிற்சி ஆகியன ஆகும். ஜவகர்லால் நேரு அவர்களின் பெயரில் சிங்கப்பூரில் அமைக்கப்பட்டிருந்த இறகுப் பந்து விளையாட்டுக் குழு தனியான சிறப்புப் பெயரை ஈட்டியிருந்தது.

**லோரோங் கிருஷ்ணா** :- லோரோங் கிருஷ்ணா என்றால் மலாய் மொழியில் கிருஷ்ணன் கோயில் சந்து எனப் பொருள்படும். லோரோங் கிருஷ்ணா பெரும் புகழ் ஈட்டிய இடமாகும். அவ்விடம் கணபதி, வீரசேனன், குருதேவன், கீழக்காடு சுப்பிரமணியம், மரவக்காடு பெரிய கணபதி, இந்திய எழுத்தாளர் தோழர் மார்க்ஸின் தந்தையான பாப்பா நாடு அந்தோணிசாமி, திருமக் கோட்டை இரத்தின சபாபதி உள்ளிட்ட எண்ணற்ற புரட்சியாளர்கள் தங்கியிருந்து போராடிய இடம். இந்தியாவின் தெலுங்கானா போன்று லோரோங் கிருஷ்ணா - அரசுக்கும் - பிற்போக்காளர் களுக்கும் நடுக்கத்தை உருவாக்கும் பெயராக இருந்தது. அந்தச் சிறிய சந்திலே எத்தனையோ வீர - தீர சாகசங்கள் நிகழ்ந்தன; அந்தத் தெருவே பெரிய விளையாட்டரங்கமாகத் திகழ்ந்தது. மலேயாவின் பெரிய தேசிய இனங்களான மலாய் - இந்திய - சீன சமுகத்தினரின் ஒற்றுமைக் கூடமாக அது திகழ்ந்தது. விளையாட்டும் - கட்டுப்பாடும் இணைந்து, இயைந்து நிற்க வேண்டியது தான்

படிப்பகம்

www.padippakam.com



விளையாட்டின் முதல் விதியாயிற்றே. அதன்படி அங்கே பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் அனைவரும் கட்டுப்பாட்டின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார்கள். மாதம் ஒரு முறை அவர்கள் தம் வகுப்புகள் கூட்டப்பட்டு அரசியல் கலாச்சார வகுப்புகள் அங்கே நடத்தப்பெற்றது அதனினும் சிறப்பாகும். 'பீமன் போல் உடல் வேண்டும். அதில் பிடிப்பிடியாய்ச் சதை வேண்டும் - காமன் போல் அழகு வேண்டும் சற்றும் கலங்கா மன உறுதி வேண்டும்' எனும் பாரதியின் திரு மொழிப்படி உடல் காக்க பகத்சிங் உடற்பயிற்சி மன்றத்தினைக் கணபதி துவக்கினார். சிங்கப்பூரின் பெரிய உடற் பயிற்சி மன்றத்தினை உருவாக்கி கணபதி அதில் அனைத்துச் சமூக இளைஞர்களுக்கும் பயிற்சியளித்தார். பகத்சிங்கின் புகழ் பரவியது. உடற்பயிற்சியும் தேசப்பற்றும் அங்கே போதிக்கப்பட்டன. அதன் காரணமாக அங்கே பயிற்சி பெற்றவர்கள் விளையாட்டு வீரர்களாக மட்டுமல்லாமல் போர் வீரர்களாகவும் - வரலாற்று வல்லுநர் களாகவும் சுடர் விட முடிந்தது. தோழர் முகமது என்பவர் தலைமையில் தொண்டர்களுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் பேச்சுப் பயிற்சியளிக்கப்பட்டது. முகம்மது ஒரு சிறந்த பேச்சாளராவார். ஒழுக்கம், அரசியல், பண்பாடு, கட்டுப்பாடு, பொதுஅறிவு, தேசியம், சர்வ தேசியம் என அனைத்துத் துறைகளிலும் பகத்சிங் மன்றத்தின் மூலம் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். தோழர் கணபதியும் படித்தார், உணர்ந்தார், கற்றுக் கொண்டார், கற்பித்தார். அவரைச் சுற்றி எப்போதும் ஓர் இளைஞர் படை சூழ்ந்திருக்கும். கணபதியவர்களின் நடைமுறை, பேச்சு, நேர்மை, உழைப்பு, நாட்டுப்பற்று, மக்கள் தொண்டு ஆகியவை இளைஞர்களையும் - மக்களையும் அவர் பால் ஈர்த்தது. மக்கள் அவரை நம்பிக்கையுடன் நோக்கினர். அன்புடன் பழகினர். அவருடன் பழகுவது ஒரு கௌரவமாக அக்காலத்தில் கருதப்பட்டது. மக்களின் அனைத்து வாழ்வியல் நிகழ்ச்சிகளுக்கும் அவர் அழைக்கட்டார். அவராகவும் கலந்து கொண்டார். மக்களும் - தீரர் கணபதியவர்களும் பிரிக்கவியலாத அளவுக்கு இணைந்து இயைந்து காணப்பட்டனர். ஆம். அது ஓர் உயரிய வரலாற்று நடைமுறையென குறிப்பிட வேண்டியது அவசியம் ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com



**இந்திய இளைஞர் சங்கம்** : உலக ஏகாதிபத்தியத்திலிருந்து எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவும் - குறிப்பாக இந்தியாவையும் மலேயாவையும் பாதுகாக்க ஓர் அமைப்பு. தேவையென்பதையுமுணர்ந்த காலத்தில் இந்திய இளைஞர் சங்கம் மலேயாவில் தோன்றியது எனலாம். தேசத்தின் பெயரால் சில அமைப்புகள் இருந்தாலும் அவைகள் பிரிட்டனுக்கு விட்டுக் கொடுத்துப் போகும் அமைப்புகளாகத் திகழ்ந்தன - போலி சுதந்திர அமைப்புகளாய் மாறிவிட்டன. சந்தர்ப்பவாதப் புயலிலும் திசைமாறாத சுதந்திர அமைப்பாக இந்திய இளைஞர் சங்கம் கணபதியின் தலைமையில் ஓர் இயக்கமாகவே செயல்பட்டது. அவ்வமைப்பில் கல்வித்துறை, பிரச்சாரத் துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை, இராணுவத் துறை எனப் பல பிரிவுகளை கணபதி உருவாக்கி பல கமிட்டிகளை அமைத்தார். **இந்திய இளைஞர் சங்கத்தில் நாடகக்குழு** கணபதியை இயக்கிய இலட்சிவாதியாகவும் திகழ்ந்த தோழர் குருதேவன் அவர்கள் இயற்றிய "காதலா - கடமையா" எனும் நாடகம் கி.பி.1937ல் மலேயாவின் பல பாகங்களில் நடத்தப் பெற்றது. தோழர்கள் கணபதி வீரசேனன், மேகநாதன், மற்றும் பல தோழர்கள் அந் நாடகத்தில் நடித்தனர். அது அன்றைய பிரபல பெண் எழுத்தாளர் ஜூனைதா பேகம் இயற்றிய நாவலைத் தழுவியது. ஜூனைதா பேகம் அக்காலத்தில் சிறந்த எழுத்தாளர் ஆவர். அந்நாடகம் பிற்காலத்தில் மக்கள் கலா மன்றம் சார்பாக நாடு கடத்தப்பட்ட தோழர்களால் சென்னை மியூசியம் கலையரங்கில் தோழர் ஜீவானந்தம் தலைமையில் நடத்தப்பெற்றது.

**வாலிப சக்தி** :- வாலிப சக்தியென்பது ஒரு மாத இதழ் அவ்விதழின் ஆசிரியர் புதுச்சேரி கா.வி.சோம சுந்தரம் ஆவார். அவ்விதழினை இந்திய இளைஞர் கழகம் நடத்தியது - அது வாலி பர்களின் எதிர்காலம், கடமை, உணர்ச்சி, இளைஞர்களுக்கும் தேசியத்திற்குமான தொடர்பு ஆகியவற்றை விளக்கும் கட்டுரைகள் தாங்கிய தமிழர் உந்து சக்தியாகத் திகழ்ந்தது உலகின் முடிவினை

படிப்பகம்

www.padippakam.com



நிர்ணயிப்பவர்கள் இளைஞர்கள்தான் என்பதை அரசியல் - சமூக பொருளாதார விவரங்களின் கண்ணோட்டத்துடன் பொருத்தமான எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியது. அவ்வெளியீடுகள் அன்றைய காலக்கட்டத்தில் பெரிதும் பரபரப்பை ஏற்படுத்தின. ஜப்பானிய இளைஞர் கழகத்தைப் போல, பிரசண்ட விகடன் ஆசிரியரும் மறைந்த தமிழ் எழுத்தாளருமான நாரண துரைக்கண்ணன், ஏ.இளங்கோவன், பி.எஸ்.ராமைய்யா ஆகியார் நடத்திய சென்னை மாகாண இளைஞர் இயக்கத்தினைப் போல மலேயா தமிழ் வாலிபர்களின் இயக்கமும் துள்ளி நடைபோட்டது. அவ்வியக்கத்தினர் நேதாஜியவர்கள் ஐ.என்.ஏ படை அமைத்த போது அழைக்கப்பட்டு அதிலிணைந்தனர். ஐ.என்.ஏ படையில் அவர்களே முன்னணியிலிருந்து புகழ் பெற்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# 7. வாழும் இலக்கியம் கணபதி

கணபதி என்ற போராட்ட வீரனுக்குத்தான் அந்நாளில் எத்துணை முகங்கள். ஆம். அவர் ஒரு தமிழறிஞராக தமிழ் ஆய்வாளராக - தமிழ்த் தொண்டராக - தத்துவ இயல் வல்லுநராக - தத்துவப் பிரச்சாரகராக - போராட்டத் தளபதியாக - புரட்சியின் அதிகார பீடமாக - தேசத் தலைவனாக - சர்வதேச விடுதலையின் துணைவனாக - பாட்டாளி வர்க்க குணவியல்புகளின் குன்றமாக - அப்பப்பா -அவரின் பன்முகப் பங்களிப்பு எத்துணை பரிமாணங்களில் - பிரகாசிக்கின்றது. கணபதி தமிழ் மொழி வளர்ச்சியில் பேரார்வம் காட்டினார். தமிழகத்தின் பகுத்தறிவு இயக்கத்தின் விளைவாக கணபதி எனும் தன் பெயரினைக் களைந்தது தூய தமிழ் நடையில் அவர்க்கிருந்த ஈடுபாட்டினை புலப்படுத்துகின்றது.

அந்நாட்களில் தமிழகத்தில் பகுத்தறிவு, குடியரசு, தமிழ்நாடு மணிக் கொடி, வெற்றிமுரசு, மன்றம், நவசக்தி, நம்நாடு இந்துஸ்தான், குயில், லோகசக்தி, விடுதலை ஆகிய இதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன. பர்மாவிலிருந்து அமிர்த குணபோதினி, ஆனந்த குணபோதினி செய்தி இதழ்களும், இலங்கையிலிருந்து வீரசேகரியும் தமிழர் செய்தி இதழ்களாக உலகை வலம் வந்தன. உலகத் தமிழர்களின் புகழ்தனை நிலைப்படுத்திய மேற்குறிப்பிட்ட செய்தி இதழ்கள் கடல்கடந்த தமிழர்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்தின. தமிழகத்திலும் கடல் கடந்த தமிழர்களிடையேயும் ஒரு மாபெரும் சிந்தனைப் போக்கினை இச்செய்தி இதழ்கள் உருவாக்கின. 'இந்தியாவின் இங்கர்சால்' ஈ.வெ.ராமசாமி பெரியாரும் கடல்கடந்து பல நாடுகளுக்குச் சென்று தமிழர்கள் மத்தியில் எழுச்சியுரையாற்றினார். தமிழின வரலாற்றில் பெரியார் ஒரு யுகம் என்பதை எவரும் மறந்து விட இயலாது. மலேயாவில் தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் சார்பாக தமிழ் முரசு என்ற செய்தி இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. தமிழ்முரசு ஆசிரியர் திருவாரூர்

படிப்பகம்

www.padippakam.com



சாரங்கபாணி சிறந்த தமிழறிஞராவார். அவர் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் பணியாற்றினார். தமிழ் முரசு இதழின் வளர்ச்சிக்கு கணபதி பெரிதும் துணைபுரிந்தார். தமிழர் சீர்திருத்தச் சங்கத்திற்கு வரும் அனைத்து இதழ்களையும் ஆர்வமுடன் படித்தார். தமிழ் நேசன் செய்தி இதழின் ஆசிரியர் நரசிம்ம ஐயங்கார். அவரும் சிறந்த தமிழறிஞராகத் திகழ்ந்து தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர். குடியரசு பதிப்பகத்தாரின் நூல்களில் தோழர் சிங்கார வேலரின் சம தர்மப் புத்தகங்களான **"கடவுளும் பிரபஞ்சமும், கடவுள் சுயராச்சியம் யாருக்கு?" சமதர்ம உபன்யாசம்"** ஆகிய நூல்களைப் படித்ததன் காரணமாக கணபதியவர்களுக்கு மார்க்ஸிய லெனினிய கண்ணோட்டம் ஏற்பட்டது. அதன் பின்னர் சீன கம்யூனிஸ்டு கட்சியின் கிளையாக (CPM - Communist Party of Malaya) மலேயா கம்யூனிஸ்டு கட்சி துவக்கப்படவே அவர்களின் வெளியீடுகளும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் **"ஜனசக்தியும்"** அவருக்குக் கிடைத்தன. கணபதி சிறந்த தமிழ்ப் பற்றாளர் - தமிழ்ப் பேச்சாளர் ஆவார். அவர்தம் அனைத்துச் சொற்பொழிவுகளிலும் பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகளை மிகப் பொருத்தமாகப் பயன்படுத்துவார். அவரின் சொற்பொழிவுகளில் பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் உவமைகளாய் நின்று தமிழ் வளர்த்தன.

இவ்வகையில் தமிழறிஞர் அருணாச்சலம் செட்டியாரின் தமிழ்க் கொடி இதழ், ஆசிரியர் காளையார் கோயில் இளவழகனின் **"பாட்டாளிமுரசு"** இதழ் போன்றவை குறிப்பிடத்தக்கவை. பாட்டாளி முரசு என்ற பெயர் தோழர் குருதேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆசிரியர் குழுவில் காரைக் குடிநாராயணன், நாகைபாலு ஐ.என்.ஏ அதிகாரியாகத் திகழ்ந்த புஷ்பராசு ஆகியோர் திகழ்ந்தனர். பாட்டாளி முரசில் "நேருவின் புதிய ரஷ்யா, சோசலிஸ்டு ஜெயபிரகாஷ் நாராயணனின் "அபேதவாதம் என்றால் என்ன? ஜமதக்னியின் மொழி பெயர்ப்பான "மார்க்ஸியம்" வீர சவார்க்கரின் "எரிமலை" வரதராஜூ நாயுடுவின் **"செயக்கொடி"** இதழ், சுத்தானந்த பாரதியின் மொழி பெயர்ப்புகள்

படிப்பகம்

www.padippakam.com



வங்கப் புகழ் எழுத்தாளரான பங்கிம் சந்திர சாட்டர்ஜியின் ஆனந்தமடம் போன்ற படைப்புகள் வெளியிடப்பட்டன. தமிழறிஞர் இலங்கை ரங்கநாதனின் **"சனநாயகம்"** இதழ், தமிழறிஞர் கனகராசுவின் **"சமதர்மம்"** இதழ் போன்ற இதழியல் வளர்ச்சியில் கணபதி உறுதுணையாயிருந்தார்.

கணபதி ஒரு சிறந்த தமிழிலக்கியவாதி ஆவார். அவர் தமிழ்க் கவிதைகளிலும், காவியங்களிலும் விரவிக் கிடக்கும் வீரம் செறிந்த பாடல்களைப் பிறரைப் பாடச் சொல்லிக் கேட்டு இன்புறும் இலக்கிய மனம் படைத்தவர். கணபதியின் தமிழ் மொழிப்பற்று மிக ஆழமானது. ஆனால் அது எப்போதும் மொழி வெறியாக கொடும் வடிவம் எடுத்தது இல்லை. அநாகரிக கலாச்சாரம் தவிர்த்து - எல்லாக் கலை இலக்கியங்களும் மக்களின் நல்வாழ்விற்குத் துணை செய்ய வேண்டும் என்பதே அவரின் தலையாய நோக்கமாகத் திகழ்ந்தது. கலையாக இருப்பினும் - இலக்கியமாக இருப்பினும் அது மக்கள் கலை இலக்கியமாக இருக்க வேண்டும்.

கணபதி தமிழ் மொழி வளர்ச்சியை மட்டுமல்லாது, மொழிப் போராட்டங்களையும் ஊக்குவித்தார். குறிப்பாகத் தமிழ் நாட்டில் கி.பி.1938-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன. தமிழ் மொழி காக்கும் உண்ணா நோன்பில் தாளமுத்து - நடராசன் எனும் இரு இளைஞர்கள் பலியாயினர். ஏறக்குறைய 2000 பேர் சிறையேகினர். தனிநாயகம் அடிகள் ஈழத்து அடிகள் கே.எம்.பாலசுப்பிரமணியம், அண்ணா, அருணகிரிநாதன் ஆகியோர் கைதாகினர். 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' - என மறைமலையடிகள் மொழிப் போராட்டத்தில் முழங்கி தன்மகன் திருநாவுக்கரசு - மருமகன் ஆகியோருடன் குடும்பத்தோடு கைதானார். பெரியார், பட்டுக் கோட்டை அழகர்சாமி, நகர தூதன் ஆர்.திருமலைச்சாமி, மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார், கலிபுல்லா ஆகியோர் கைதாகினர். அப்போராட்டத்தில் மலாயாவிலிருந்து முன்று தமிழர்கள் - திருவாளர்கள் லட்சுமணன், நடராசன், சாமி ஆகியோரைக் கணபதி

படிப்பகம்

www.padippakam.com



தமிழகத்துக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்து - மொழிப் போராட்டத்தில் கலந்து கொண்டு - சிறை ஏகி - தண்டனைக் காலம் முடிந்ததும் விடுதலையாகி மலேயா திரும்பினர். தமிழகத்தின் உலகத் தமிழ் மாநாடுகள் இதனைக் குறிப்பிட தவறியது ஏன் என்று புரியவில்லை. கணபதியின் தலைமையிலான தோழர்கள் தமிழ் மொழிக்கு உரிய பங்களிப்பு அளிக்கத் தவறியதேயில்லை.

கணபதியின் தமிழ்ப் பற்றும் - தோழர்களின் நல்லாதரவும் மலாயாவில் பல தமிழ் மன்றங்களை உருவாக்கின. பாரதி மன்றம், பாரதிதாசன் மன்றம், தமிழ்ச் சிந்தனையாளர்கள் திரு.வி.க மன்றம், மறைமலையடிகள் மன்றம், நீலாம்பிகை மன்றம், தாமரைக்கண்ணி மன்றம், வ.உ.சிதம்பரனார் மன்றம், மா.வே.சிங்காரவேலர் மன்றம் என மன்றங்களாகத் திகழ்ந்தன. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழ்ந்துரைக்கப் பட்டவரும் சாகும் வரையிலும் காவல் துறையால் கண்காணிக்கப்பட்டு வந்த போராளியுமான மா.வே.சிங்கார வேலனார் பெயரால் ஒரு படிப்பகம் கணபதியின் இல்லத்தில் திகழ்ந்து பலருக்கும் பயன்பட்டது. கணபதி உலகச் சிந்தனையாளன் லெனின் மன்றம், பேரறிஞர் மார்க்ஸ் மன்றம், பகத்சிங் நினைவு மன்றம், தோழர்கள் கே.டி.கே.தங்கமணி மன்றம், ஜீவானந்தம் மன்றம், தோழர் ராமமூர்த்தி மன்றம் என மன்றங்கள் நிறைந்த மாமன்றமாக மலாயாவை மாற்றினார். மன்ற உறுப்பினர்களின் இன்ப - துன்பங்களில் பங்கு பெற்றதோடு - தொழிலாளர்களோடு தொழிலாளியாய், தமிழர்களில் மாத்தமிழனாய் வாழ்ந்தார் மலேயாவின் மாவீரர் கணபதி. அவர் ஒரு பொது உடைமைக் காவலர். போர்க்குணத் தொழிலாளி ஆவார். கணபதி எங்கும் தமிழ் - எதிலும் தமிழ் என்பதில் ஆர்வம் காட்டினார். தூய தமிழ் நடையில் உரையாற்றுவார். அவரின் பிற தோழர்களும் தூய தமிழ் பேச்சாளர்கள் ஆவர். கணபதி பட்டிமன்றம், கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் பாட்டாளித் தமிழ் வளர்த்தார்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழர் தன்மானம் காத்த இனமானப் போராளி கணபதி :- அக்காலத்தில் மலேயாவில் தமிழர்களை "ஓராங்கிள்ளேங்" என்று மிக இழிவாக அழைப்பது வழக்கம். "ஓராங்கிள்ளேங்" என்ற மலாய் மொழிச் சொல்லுக்கு, திருடன், கொலைகாரன், தாழ்ந்தவன் என்று பொருள். அதனை **மாற்றியமைத்தவர்** கணபதியாவார். அவ்வழக்கத்தினை எதிர்த்து மாபெரும் தமிழர் போராட்டங்களைக் கணபதி நடத்தினார். தமிழர்களை **"ஓராங் தமிழ்"** என்று அல்லது **"இந்தியன்"** என்றே அழைக்க வேண்டும் என அரசுக்கும் பல்வேறு சமூகத்தலைவர்களுக்கும் கணபதி மனுக்கள் அனுப்பினார். உலகின் தொன்மையான தனி நாகரிகம் படைத்த தமிழர்கள் அவ்வாறு இழிவு படுத்தும் விதத்தில் அழைக்கப்படக் கூடாதென மாபெரும் சுவரொட்டிகள் மலாயா முழுவதும் ஒட்டபெற்று மலாய் மக்களுக்குப் பிரகடனப்படுத்தப்பட்டது. மலாய் கம்யூனிஸ்டு கட்சியும் இதற்காகப் போராடியது. சில இடங்களில் கணபதி அவ்வழக்கத்தினைச் சட்டத்தின் துணையோடு எதிர்த்தார். தமிழினத் தலை மகன் கணபதியின் இடையறாத போராட்டத்தினால் "ஓராங்கிள்ளேங்" என்ற அவப்பெயர் தானாக மாறத் தொடங்கியது. கடல்கடந்த தமிழனின் அவப்பெயரினை ஒழித்த ஈடு-இணையற்ற தமிழ்ப் போராளி **கணபதியாவார். கணபதி மறைந்தாலும்** அவர் ஒரு வாழும் தமிழிலக்கியமாவார். **அதனால்தான் தனது "கயிற்றில் தொங்கிய கணபதி" சிறு நூலில் கலைஞர் கருணாநிதி,** "அய்யோ கணபதி! அருமைத் தமிழகத்தின் அன்புச் செல்வா! எப்படியப்பா உன் உயிர் நீங்கிற்று? உன்னைப் பெற்ற வயிறு பற்றி எரிகிறதடா!" என்று கணபதி தூக்கிலிடப்பட்ட போது அரற்றிப் புலம்பி எழுத்தால் அழுகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com

## 8. கணபதி ஒரு பொருள்முதல்வாதி

தேசிய விடுதலை இயக்கத்துக்கு ஒரு வலுவான - விட்டுக் கொடுக்காத வீரர்கள் படை கொண்ட அமைப்பு அவசியம் என்று கருதினார் கணபதி. அதனால், இந்திய இளைஞர் சங்கத்தினை அமைத்தார் என இதற்கு முன் அத்தியாயமான **"கணபதியின் துவக்க காலப்பணிகள்"** என்ற அத்தியாயத்தில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். அவ்வமைப்பினில் பல கமிட்டிகள் செயல்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது, அத் துறைகளில் மிக முக்கியமானது செந்தொண்டர் படை. இது ராணுவத் துறையே ஆகும்.

தொண்டர் படையினருக்குச் சீருடைகள் அளித்து கட்டுப்பாடு மிக்க கடுமையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருந்தது. இராணுவ மிடுக்கோடு தொண்டர் படை பவனி வரும் போது மலேயாவின் காவல் துறையே வியக்கும். இராணுவப் பயிற்சியோடு கற்பித்தலும் நடந்தது. இந்திய இளைஞர் சங்கத்தின் தொண்டர் படைதான் பின்னாளில் நேதாஜி அவர்களின் இந்திய தேசிய ராணுவத்தில் உள்ளிழுத்துக் கொள்ளப்பட்டு அதன் பிரதான சக்தியாகத் திகழ்ந்தது. ஐ.என்.ஏவின் பெரும்பாலான அதிகாரிகள் கணபதியின் தொண்டர் படையினர் ஆவர். இன்றளவும் உலகின் சிவப்பு நட்சத்திரத் தமிழர்களாய் மின்னும் தோழர்கள் வீரசேனன், சற்குணம், இளங்கோவன், இரணியன், மயில்ராவணன், ஆறுமுகம், புரட்சிப் பித்தன் போன்றவர்கள் இந்திய இளைஞர் சங்கத்தின் தொண்டர் படையில் பணியாற்றியவர்கள் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com



**இந்துஸ்தான் சோசலிஸ்டு படையும் - இந்திய இளைஞர் சங்கமும் :-**

இந்திய இளைஞர் சங்கத்தை இயக்குவதில் தோழர் கணபதியவர்களுடன் இந்துஸ்தான் சோசலிஸ்டு குடியரசுப் படைகளின் மலேயா பகுதி அமைப்பும் மறைமுகமாகப் பங்கு பெற்றிருந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டிய உண்மையாகும். இந்துஸ்தான் சோசலிஸ்டு குடியரசுப் படைகள் இந்தியாவின் ஒப்புயர்வற்ற புரட்சியாளர் சந்திரசேகர ஆசாத் தலைமையில் தியாகி பகத்சிங்கும் அவரின் தோழர்களான ராசகுரு, சுகதேவ் ஆகியோரும் நடத்திய இயக்கமாகும். அவ்வமைப்பின் கிளைகள் பர்மா, சிலோன், பேரனியோ போன்ற நாடுகளில் இருந்தது போன்று மலேயா சிங்கப்பூரிலும் காணப்பட்டன. கடந்த 1936-37 ஆண்டுகளில் அவ்வியக்கம் தொடர்பான பதினான்கு தோழர்களை மலேயா பிரிட்டீஷ் அரசு சிங்கப்பூரிலிருந்து நாடு கடத்தியது குறிப்பிடப்பட வேண்டிய உண்மையாகும் அவர்களில் ஒருவர் தோழர் ராமதாசு ஆவார். அவர் இன்றும் உத்தரபிரதேச இலக்குமணபுரியில் பிரபல மக்கள் தலைவராகத் திகழ்கின்றார்.

**இந்திய இளைஞர் கழகத்தில் பண்டித நேரு :-** இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பண்டிதநேரு அவர்கள் சிங்கப்பூர் நகருக்கு ஒருமுறை வருகை தந்திருந்தார். அப்போது தீரர் கணபதியும் அவர்தம் தோழர்களும் அவரை இந்திய இளைஞர் சங்கக் கட்டிடத்துக்கு அழைத்துச் சென்றனர். அவ்வழகிய கட்டிட உட் சுவர்களில் பல்வேறு சமூகப் புரட்சியாளர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியோரது உருவப்படங்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. அப்படங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டே வந்த பண்டித நேரு அப்படங்களில் ஒரு படத்தினைப் பார்த்துப் பிரமிப்படைந்தார், ஆம், அது அவருடைய உருவப்படமே ஆகும். இளம் வயதில் குதிரையில் மிக கம்பீரமாக அமர்ந்திருக்கும் பண்டிதநேரு அவர்களின் உருவம் நூல்துணியினால் ஓவியமாக வரையப்பட்டு

படிப்பகம்

www.padippakam.com



ஆறு அடி உயரத்தில் மிக்க பொலிவோடு தோற்றமளித்துக் கொண்டிருந்தது. அக மகிழ்ந்த நேரு அவர்கள் கணபதியைக் கை குலுக்கிப் பாராட்டினார். பின் கணபதியும் - பண்டித நேரு அவர்களும் சிங்கப்பூர் இந்திய விருந்தில் கலந்து கொண்டனர். சிங்கப்பூரில் பிரபல தலைவர்களான பிரம்மச்சாரி கைலாசம், தலைவர் சேதுப் பிள்ளை, எம்.ஆர். கோபால் ஆகியோரும் அவ்விருந்தில் பங்கேற்றார்கள்.

கணபதி செய்த தொழில் இடியாப்பம் தயாரித்தல். மலேயாவில் அனைவரும் விரும்பிச் சாப்பிடும் உணவு என்பதால் நல்ல வருவாய். ஆயினும், அறிவியல் அறிவு பெற வேண்டி அத்தொழிலைக் கணபதி விடுத்தார். பின் பல சிறு கைத்தொழில்கள் - சிறு வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தாலும் இறுதியில் சிங்கப்பூர் தொலைபேசி நிறுவனத்தில் ஒரு தொழிலாளியாகப் பணியில் சேர்ந்தார். அதன் காரணமாக அவர் தொழிற்சங்க இயக்கத்தில் பங்கேற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மலேயாவின் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மட்டும் சிங்கப்பூர் திகழாமல் உலகத்தின் புவியியல் பொருளாதார - சமூக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் அமைந்திருப்பதன் காரணமாக மலேயாவின் தொழிற்சங்க இயக்க வரலாறும் தீரர் கணபதியின் தீரமிக்க வரலாறும் சிங்கப்பூரினை மையமாக வைத்தே துவங்குகின்றது. அக்காலத்தில் மலேயாவின் அரசியல் கோட்டையாகவும் சிங்கப்பூர் திகழ்ந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன் சிங்கப்பூரில் கி.பி.1936-ம் ஆண்டுகளில் இயங்கிய முக்கியத் தொழிற்சங்கங்களாவன:

(அ) தொலைபேசி நிறுவன தொழிலாளர் சங்கம் (வீரசேனன்)

(ஆ) நகர சபைத் தொழிலாளர் சங்கம் (ஆறுமுகம்)

(இ) பொதுப்பணித்துறைத் தொழிலாளர் சங்கம் (அப்பாதுரை)

(ஈ) மருத்துவத் தொழிலாளர் சங்கம் (தங்கவேலு, ரங்கராசன்)

(உ) இரயில்வே தொழிலாளர் சங்கம் (பட்டுராசு)

படிப்பகம்

www.padippakam.com



(ஊ) டிராம்வே தொழிலாளர் சங்கம் (மறவக்காடு பெரிய கணபதி)

மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த செங்கல் தொழிலாளர் சங்கம், சுருட்டுத் தொழிலாளர்கள் சங்கம், இரும்பு தொழிலாளர்கள் சங்கம் ஆகிய சங்கங்கள் முறையே தோழர்கள் சுந்தரராசு, ஜீவானந்தம், மயல்ராவணன், அமீது, வீரசோழன், ரங்கராசன், தங்கவேல், ஆகியோர் தலைமையில் இயங்கியது. முதலாளிகளுடைய பல்வேறு பயமுறுத்தல்களைக் கண்டு கலங்காமல், எவ்வித இழப்புகளுக்கும் பின் வாங்காமல், தியாகங்களை, தமதாக்கிக் கொண்டு, வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்துடன் பாட்டாளி வர்க்க இயல்புகளோடு மேற்கண்ட சங்கங்கள் போராடியது மலேயா வரலாற்றின் மனதிற்கினிய சிறப்பியல்பு ஆகும்.

**சிகையலங்கரிப்பவர்கள் சங்கம் :-** இது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு துவக்கப்பட்டது. சிகையலங்கரிப்பவர் சங்கத்தில் சிகை திருத்தும் தொழிலாளியும் - அக்கடை முதலாளியும் உறுப்பினர் களாக அங்கம் பெற்றிருந்தனர். அவர்களுக்குள் ஏற்படும் சிக்கல்களைச் சங்கத்திற்குள்ளேயே தீர்த்துக் கொண்டது சிறந்த நடைமுறையாகத் திகழ்ந்தது. அச் சங்கத்தினுள் முதன்மையாக வைக்கப்பட்டது அரசியலே ஆகும். இரண்டாவதே தொழில் ஆகும். அவ்வமைப்பு ஏராளமான தியாகிகளை உருவாக்கித் தந்த அமைப்பு ஆகும். தோழர்கள் கந்தர்வகோட்டை மதிவாணன், அண்டமிராச கோபால், மாயூரம் இளங்கோ, கும்பகோணம் அன்னதானம், புதுக்கோட்டை வீரவர்மன், மதுரைமுத்து, தாம்பரம் மலேசியா பழனி, காரைக்குடி சிதம்பரம், கோலாலம்பூர் ஏ.கணபதி, பினாங்கு சிதம்பரநாதன், சிங்கப்பூர் சீனிவாசன், குழந்தைசாமி, பந்தீங்வேலாயுதம், நடேசன், மூவார் மாரிமுத்து, அறந்தாங்கி சண்முகம், ஈப்போ காளிமுத்து, ஆகிய முழு நேர ஊழியர்களை

படிப்பகம்

www.padippakam.com



இயக்கத்திற்கு அளித்தது அச்சங்கமே ஆகும். இந்திய சிகையலங்காரிப்பவர்கள் சங்கமும், சீனத் தோழர்களின் காப்பிக் கடை ஊழியர்கள் சங்கமும் போராட்டங்களுக்குப் பேருதவி செய்திருக்கின்றன. அரசியல் போராட்டங்களில் அதிகம் பங்கெடுத்து கொண்டதால் அவர்கள் பின்னர் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர்.

தொழிற்சங்க இயக்கமே ஒரு சிரமமான பாதை, அதனை இயக்குவதற்குச் சிறந்த தந்திரமும், துடிதுடிப்பும், மனஉறுதியும் சகிப்புத் தன்மையும் வேண்டும் என்பது உணர்ந்தவர்கள் அறிந்த ஒன்று. குறிப்பாக வர்க்கப் போராட்டத்தில் எதிரியைப் புரிந்து கொள்வது, அவனது போராட்ட அணுகுமுறையினைப் புரிந்து கொள்வது, அவ்வடிவத்தினை உடைப்பது, அதனை உடைப்பதற்கான திறமைகளையும் வலிமையினையும் பெற்றிருப்பது தொழிலாளிகளின் குடும்பத் தலைவனாக இருப்பது, அவர்களை அமைப்பு ரீதியாக வளர்ப்பது, அரசியல் மற்றும் தொழிலாளர் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக இருப்பது - போன்ற இயல்புகள் தொழிற்சங்க இயக்க நடத்துநருக்கு இன்றியமையாததாகும். அப்பேரியல்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்த தீரர் கணபதியவர்கள் சிங்கப்பூர் - மலேயா தொழிற்சங்கங்களுக்குத் தலைமை தாங்கியது ஒரு பெருஞ்சிறப்பே ஆகும். எதிரியைத் தாக்குவதிலும் சரி - தாக்குதலை முறியடிப்பதிலும் சரி - கணபதி ஒரு சிறந்த தளபதி ஆவார்.

மலேயாவில் அக்காலங்களில் தமிழர்கள் மிகவும் வைதீகர்களாக வாழ்ந்து கொண்டிருந்தனர். இதற்கு எதிர் மாறாக ஒரு மாபெரும் கூட்டம் அன்னிய கலாச்சாரத்திற்கு அடிமைப்பட்டு, வாழ்ந்து கொண்டிருந்தது. ஒரு சிறு கூட்டம் தங்களை மேல் நாட்டுக்காரர்களாகவே மாற்றிக் கொண்டது. மலாய் அல்லது

படிப்பகம்

www.padippakam.com



ஆங்கிலம் பேசுவது நாகரிகமானது. அப்படியே தாராள மனப்பான்மையோடு தமிழ் பேசினாலும் லகர, ரகர பேதங்களுடன் பேசுவது கௌரவமாகக் கொள்ளப்பட்டது. ஒரு இனத்தை அழிக்க வேண்டுமெனில் அதன் மொழியை அழிக்க முயல் என்றான் இப்பன்ஸ். ஆனால் தமிழ் மொழியை அழித்திட - இரண்டாம் தரமாக்க வேறு எவரும் தேவையில்லை, தமிழனே போதும் என்ற நிலை இருந்த போது தான் தீரர் கணபதியவர்கள் மலேயாத் தமிழர்கள் ஆங்கிலம் மற்றும் ஆரிய மாயைகளுக்கு அடிபணிந்து விடாத நிலையை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். கணபதி ஒரு மாறுபட்ட மனிதர். இந்திய தேசியத்தையும், திராவிடத் துணை தேசியத்தையும் உலக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைபேணும் கம்யூனிஸத்தையும் தமதாக்கிக் கொண்டார். தமிழகப் பகுத்தறிவு இயக்கம் தமிழ்பற்றினையும் மா.வே.சிங்கார வேலனாரின் நூல்கள் மார்க்ஸி லெனினிய கண்ணோட்டத்தினையும் அவருக்கு அளித்தது.

**துறைமுகத் தொழிற் சங்கம் :-** துறைமுகத் தொழிலாளர்கள் உலகின் எல்லாக் கண்டங்களிலும் உலாவியவர்கள் ஆவர். அவர்கள் தொழிலோ கடினமானதாயினும் சிறப்பானது; உலகளாவியது. அவர்களின் போராட்டமும் தனித்தன்மை வாய்ந்தது. உலகத் துறைமுகத் தொழிலாளர் சங்கங்களுள் சிங்கப்பூர் துறைமுகத் தொழிலாளர் சங்கம் புகழ் பெற்ற ஒன்றாகும். துறைமுகத் தொழிலாளர் சங்கம் தனது நீண்ட நாளைய போராட்டத்தினை வர்க்க கண்ணோட்டத்துடன் நடத்தி வெற்றி கண்ட புகழ் மிகு சங்கம் ஆகும். மலேயா பிரிட்டீஷ் அரசும் - ரௌடிகளும் ஒன்று சேர்ந்து எதிர்த்தும் கூட அவர்களை முறியடித்த பெருமை கணபதியையும் அவர்தம் தோழர்களான பட்டுராசன், வீரசேனன், இரணியன், கிருஷ்ணசாமி, டாக்டர் நாகை ராசமாணிக்கம், சமரசன், மேகநாதன், துறையன், கண்டியர் ஆகியோர்களையே சாரும். டாக்டர் நாகை ராசமாணிக்கம் சிங்கப்பூரின் 41 தமிழ்ப் பள்ளிக்

படிப்பகம்

www.padippakam.com



கூடங்களின் ஆசிரியர் குழுவின் தலைவராக இருந்தவர். அத்தகைய ஆசிரியர் ராச மாணிக்கம் சிங்கப்பூரில் கேங்ஸ்டர்களை ஒடுக்குவதில் சிறப்பாகச் செயல் பட்டவர் ஆவார். ரௌடிகள் கூட்டத்தினைக் கலங்கடித்து அவர்களைப் பணிய வைத்து, நிர்வாகத்திடமிருந்து வேலை நிரந்தரம், மதிய உணவு, இலாப ஊதியம், இரட்டைக் கூலி கூடுதல் கால வேலை ஊதியம் போன்ற வெற்றிகளைத் தொழிலாள வர்க்கம் ஈட்டியது. அரசினாலேயே கட்டுப்படுத்த இயலாத ரௌடிகள் சாம்ராஜ்யத்தை, சிங்கப்பூரில் அடியோடு இடித்துத் தரைமட்டமாக்கியவர்கள் கணபதியும் - துறைமுகச் செந்தொண்டர் படையுமாகும். துறைமுகத் தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களின் கொரில்லாப் போராட்டங்களின் மூலம் அரசையே திகைக்க வைத்தனர். தொழிலாளர்களிடையே வர்க்க உணர்வைக் கொழுந்து விட்டெரிய செய்தது தியாகி கணபதியவர்களின் தலைமையே ஆகும். ரௌடிகளை கணபதி நடத்திய விதம் புகழ் மிக்கது. கைது செய்யப்பட்ட ரௌடிகளுக்கு தவறுக்கேற்ற தண்டனை வழங்கப்பட்டது. அல்லது அவர்கள் மனம் திருந்திப் பழைய வாழ்க்கையை வெறுத்துப் புதிய மனிதர்களாக , தொழிலாளர் போராட்டங்களுக்கு உதவியாக இருக்கவைப்பது என்ற அணுகுமுறையைப் பின்பற்றிப் பெரும்பாலான ரௌடிகளை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்குத் தொண்டர் படையாய்ப் பயன்படுத்தினார் கணபதி.

**மலேயாவில் மேதினம்** :- மாமனிதர் குருதேவன் கி.பி.1930-களில் மலாய் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் அமைப்பாளராகத் திகழ்ந்தவர். அவருடன் அன்று உடன் பணியாற்றியவர்கள் - ஏன்? அவரின் தோழமைக்குள்ளே பணியாற்றியவர்கள் பலர், மலேயாவின் பிற்போக்குவாதிகளிடம் காலப்போக்கில் சமரசம் செய்து கொண்டவர்கள். அவர்கள் கொள்கைப் பயணத்தின் வீச்சினை விலக்கிவிட்டு வாழ்க்கை

படிப்பகம்

www.padippakam.com



வாகனத்தை அதிவேகமாக ஓட்டிக் கொண்டு சென்றவர்கள். ஆனால் மலேயா குருதேவன், மலேசியா பழநி, வீரவர்மன், டாக்டர் ராசமாணிக்கம், பொறைக்கலம் போன்ற தோழர்கள் கொள்கையை உயர்த்திப் பிடித்த கோமான்கள். இன்று வாழ்க்கையை வழியிலே தொலைத்து விட்டார்கள். இருப்பினும் இந்த மாத்தமிழர்களின் தியாகத்தில்தான் இன்றைய மலேயா சிங்கப்பூர் நாடுகள் புகழ் பெற விளங்குகின்றன. அது அனைத்துத் தமிழர்களுக்கும் பெருமை ஆகும். வாழ்வில் வறுமையும் - வரலாற்றில் செழுமையும் பொதுவாழ்க்கை நாணயத்தின் இரு சமப்பக்கங்களாயிற்றே! அதனினும் தோழர் குருதேவன் செய்த தியாகங்களும் - அடைந்த இன்னல்களும் அளவிடற்கரியது.

அத்தகைய சிறப்பு மிக்க குருதேவன் குழுவும், ஆறுமுகம் குழுவும், கணபதி குழுவும் இணைந்து இந்துஸ்தான் ரிபப்ளிக் படையாகி சிங்கப்பூரில் மேதினத்தைக் கொண்டாடியது. அன்றைய மலேசியா அரசு கம்யூனிஸ்டு கட்சியையும் - மேதின விழாவினையும் தடை செய்திருந்தது. கம்யூனிஸ்டு கட்சியினைச் சட்ட விரோத அமைப்பாகவும் - மேதின விழாவினைச் சட்ட விரோத நிகழ்ச்சியாகவும், அறிவித்திருந்தது. அத்தகைய சூழ்நிலையில்தான் சிங்கப்பூர் முழுவதும் இரவோடு இரவாக, சுவரொட்டிகள், கையெழுத்துப் பிரதிகள் எங்கும் ஒட்டப்பட்டன. செங்கொடிகள் ஆங்காங்கே உயர்த்தப்பட்டன. சிங்கப்பூரின் பெரிய அதிகாரியின் வீட்டு முன்னர் பெரிய செங்கொடியினைத் தோழர்கள் குருதேவன், வீரபாகு, ஆறுமுகம், அப்பாதுரை, கணபதி, சோட்டாக்ஸ் மாரியப்பன் ஆகியோர் ஏற்றி விட்டனர். ஏகாதிபத்தியத்திற்கு அதிர்ச்சி - மக்களுக்கோ ஆனந்தம். இதற்கிடையில் மேதின நிகழ்ச்சிக்கு வெளிநாட்டு கம்யூனிஸ்டுகள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். ஸ்டேட் செட்டில்மென்ட் எக்ஸ்பிரஸ் போன்ற

படிப்பகம்

www.padippakam.com



ஏடுகள் அச்செய்தியினை வெளியிட்டு விளம்பரப்படுத்தின. அரசு சுவரொட்டிகளை அகற்றியது. உடனே சிலமணி நேரங்களில் மீண்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. செங்கொடிகள் ஏற்றப்பட்டன. மீண்டும் அரசு அதனை அகற்றியது. மீண்டும் தோழர்கள் சுவரொட்டிகள் ஒட்டினர். செங்கொடிகள் ஏற்றினர். அரசின் இந்தக் கேவலத்தனமான செய்கையைப் பல கட்சிகள் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டன. இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் அரசின் இச்செயலைக் கண்டித்தது. கி.பி. 1932-ல் பொது மக்களுக்கு சுத்தி அரிவாள் கொடி அறிமுகப்படுத்தப்பட்டு உற்சாகப் படுத்தப்பட்டனர்.

இவையனைத்திலும் தலைமை வகித்தவர் கணபதி என்ற பொருள் முதல்வாதியே ஆவார்.

படிப்பகம்

www.padippakam.com

# 9. தீண்டாமை கொடுமை ஒழித்தவன் கணபதி

**தீண்டாமை :** இந்தியாவின் கொடுமையான வைதீக வழக்கமான தீண்டாமை மலேயாவிலும் நிலவியது. கடல் கடந்த தமிழனிடையே தீண்டாமைப்பேய் ஊடுருவியிருந்தது. மலேயாவின் தேநீர்க் கடைகளில் உயர்சாதியினருடன் சேர்ந்து ஆதி திராவிடர்கள் தேநீர் அருந்த இயலாது. மீறினால் சாதியத் தாக்குதல்கள் கடும் தழும்புகளாகும். தேநீர்க் கடை உரிமையாளர்கள் மிரட்டப்பட்டனர். அதன் பின்னால் உயர் சாதியினருக்கு, தீண்டத்தகாதாருக்கு இணையாகத் தேநீர் வழங்கப்படாத நிலை உருவாக்கப்பட்டது.

அவர்கள் சாப்பிட்ட கிளாஸில் நாங்கள் சாப்பிட மாட்டோம் என்று போராட்டங்கள் நிகழ்ந்தன. உயர் சாதிக்காரர்களுக்குக் கோப்பைகளில் தேநீர் காப்பி வழங்கப்பட்டது; காலனிவாசிகளுக்கு தகரடப்பாவில் தேநீர் வழங்கப்பட்டது. அவர்கள் நாற்காலியில் அமர்ந்து தேநீர் அருந்தலாம். தாழ்த்தப்பட்ட மக்களான காலனி வாசிகளுக்குத் தகரடப்பாவில் தேநீர் வழங்கப்படும் போதெல்லாம் டின்னில் பால் காலியான பிறகு - தகரடப்பா கிடைக்கும் - அதில் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தேநீர் அருந்த வேண்டும். அதுவும் நின்று கொண்டே அருந்தவேண்டும். அமர்ந்து அருந்தக் கூடாது. இந்தக் கொடுமையை ஒழிக்க அரசும்- காவல்துறையும் சமரசம் செய்தும் கொடுமை ஒழியாது - மலேயாவின் பல மாநிலங்களுக்கும் பரவிவிட்டன. இக்கொடுமையை ஒழிப்பதில் கணபதியும் - அவருடன் சீனச் சமூகமும் - பெரிதும் பாடுபட்டன. கி.பி.1936-38ல் மலேயாவில் கணபதி தலைமையில் தீண்டாமை இயக்கம் உச்சக் கட்டத்தை அடைந்தது. தோழர்கள் எம்.ஆர் குருதேவன், ஜீவானந்தம், ராமசாமி, ரெங்கசாமி, சண்முகம், மயில்ராவணன், ராமு,பதி, முனுசாமி கலிய பெருமாள், வைத்தியலிங்கம், ஆகியோர் முன்னணி களவீரர்களாகத் திகழ்ந்தனர். மலாயாவில் ஆதி திராவிடர் சங்கம் கஞ்சமலைமுர்த்தி, பெருமாள், வேலு, கங்காச்சலம், லட்சுமணன், சக்திமோகன் ஆகியோர்களால் அமைக்கப்பட்டது

www.padippakam.com



பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் கூலி விவசாயிகளாகத் திகழ்ந்தனர். ஆகவே பெரும்பாலான காலனிவாசிகள் ஆதிதிராவிடர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். ஆயினும், மலேயாவில் தீண்டாமையை அறவே ஒழித்தவர் தீரர் கணபதியாவார். கணபதியின் பங்களிப்பே முதன்மையாகத் திகழ்ந்தது. ஆதி திராவிடர்களை ஒன்றாக அழைத்துச் சென்று காப்பிக் கடைகளில் காப்பி குடிக்க வைத்து தானும் அருந்துவார். சாதீயப் போராட்டத்தில் உயிருக்கு அஞ்சாமல் கணபதியும் தோழர்களும் போராடினார்கள். சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் மலேயா கிளையில் அய்லாம் எனும் சீன தேசிய இனத்தின் தோட்டத் தொழிலாளர்கள் இருந்தனர். அய்லாம் சீனாவின் ஒரு சிறு தீவு என்று கூறப்படுகின்றது. அந்த அய்லாம் சீன மக்களே மலாயாவில் பெரும்பாலும் காப்பிகடை வைத்திருந்தவர்கள் ஆவர். அவர்களின் ஒத்துழைப்பினைக் கணபதி பெற்று காப்பிக் கடைகளைத் தன் பக்கம் இழுத்துத் தீண்டாமையை ஒழித்தார். மலேயாவின் பிற இன மக்களும் பழகிக் கொண்ட தீண்டாமையை, பிற இன மக்களின் ஒத்துழைப்போடுதான் முறியடித்தார். தீண்டாமைப் பிரச்சினையை எப்போதும் பிற இன சமுதாய உட்பிரிவு மக்களின் முற்போக்குச் சக்திகளை இணைத்துக் கொண்டே முற்றிலும் ஒழிக்கும் போராட்டத்தினை வெற்றி பெறச் செய்ய இயலும். இந்தியாவின் கொடுமையான வைதீக வழக்கத்தினை மலேயாவில் கணபதி ஒழித்தார். இந்திய சமுதாயத்தின் நாகரிகப் பின்னடைவான அவ்வழக்கத்தினை மலேயாவில் இறக்குமதி செய்த கூட்டம் புன்மைத் தவளைகளாய்க் கூக்குரல் எழுப்பினாலும் அதனை சீன-மலாய் மக்களின் துணையோடு எதிர்த்து, முறியடித்து வெற்றிக் கொடி நாட்டினார் கணபதி. சீனர்கள் அதனை எதிர்ப்பதில் அணி வகுத்து நின்றனர். இன்று சென்னைத் தாம்பரத்தில் தியாகி விசுவநாத தாஸ் மன்றம் அமைத்துக் கணபதியின் பிறந்த நாளைக் கொண்டாடிவரும் முதியவர் மலேசியா பழநி அவர்கள் அக்காலத்தில் மலேயாவில் தனது சிகையலங்கரிக்கும் கடையின் வெளியே இங்கே தீண்டத்தகாதோருக்கு சிகையலங்காரம் செய்யப்படும் என அறிவிப்பு பலகையினைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்திருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான தோழர் கே.டி.கே. தங்கமணியும், இன்று விளையாட்டுத் துறையில் இந்தியாவுக்குச் சிறப்புப் பெயர் ஈட்டித் தரும் திரு.சிவந்தி ஆதித்தனாரின் தந்தையான சி.பா. ஆதித்தனாரும், சிங்கப்பூரில் பெரும் பணக்காரராய் இருந்த திரு. இராமசாமி நாடாரின் இரு பெண்மக்களை மணந்தனர். இரண்டு திருமணங்களும் சிங்கப்பூர் சிலிங்கி ரோடு, பப்பலோ தெருவில் ஒரே நாளில் ஒரே மேடையில் நடைபெற்றன. தீரர் மலேயா கணபதியவர்களும். தோழர் குருதேவனும் அத் திருமணநிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

தோழர் கே.டி.கே அவர்கள் பல்வேறு பிரச்சாரக் கூட்டங்களை முடித்துக் கொண்டு இந்தியாவுக்குப் பயணிக்க சிங்கப்பூர் துறைமுகத்தில் கப்பலில் ஏற முனைந்த நேரத்தில் அவர் முன்னே நான்கு ஆயுதம் தாங்கிய தோழர்கள் செவ்வணக்கம் செலுத்தி விடை பெற அன்போடு அனுமதி கேட்டனர். ஒன்றும் புரிந்து கொள்ள இயலாத நிலையில் தோழர் கே.டி.கே அவர்கள் செவ்வணக்கத்தினை ஏற்றுக் கொண்டு, 'நீங்கள் யார்?' எனக் கேட்க அவர்கள், 'தங்களின் பாதுகாப்புப் பணிக்காக மலாயா கம்யூனிஸ்டு கட்சி நியமித்த கொரில்லாக்கள். நாங்கள் தற்போது தங்களிடமிருந்து விடை பெறுகின்றோம்' என்றனர். வியந்து நின்ற தோழர் கே.டி.கே. அவ்விளம் கொரில்லாக்களிடம் கை குலுக்கிப் பிரியா விடை பெற்றார். கணபதியின் பணிகள் ஒவ்வொன்றிலும் கடமையும் திறமையும் இயக்க அனுபவமும் வீரமும் கொப்பளித்து நின்றன.

**ஓராங் ஊத்தான் – ராஜா ஊத்தான் :–** (ஓராங் ஊத்தான் என்றால் காட்டு மனிதர்கள்) ராசா ஊத்தாங் என்றால் காட்டு ராஜாக்கள் என்று மலாய் மொழியில் பொருள். யார் அந்த பெருமைக்குரிய காட்டு ராசாக்கள்? மலாய் நாட்டு விடுதலைக்காகப்

படிப்பகம்

www.padippakam.com



பச்சை உடையணிந்து போரிட்ட கம்யூனிஸ்டு கொரில்லாக்களே காட்டுராசாக்களாகத் திகழ்ந்தனர். மழைக்காலங்களில் கடும் மழையில் நனைந்தும் கோடைக் காலங்களில் புதர்கள் - அடர்ந்த மரங்களின் நிழல்களிலும் குகைகளிலும் காலம் தள்ளிக் கொண்டு குடி தண்ணிருக்காகப் பல மைல்கள் தூரம் கடந்து - அலைந்து - புகை மூட்டம் வெளிக் கிளம்பாமல் உணவு சமைத்து உண்டு காட்டு விலங்குகளிடமிருந்தும் விஷப்பூச்சிகளிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொண்டு நாட்டு விலங்குகளிடமிருந்து மக்களைக் கரை சேர்க்கப் போரிட்டவர்கள் ராஜா ஊத்தாங் ஆவர். காலம் அவர்களுக்களித்த பரிசு வயோதிகம். இந்தியாவில் இன்று அவர்கள் வயோதிகமும் வறுமையும் நிறைந்த போராட்ட வீரர்கள். மலேயா அவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்ததுண்டா?

என் நியாயமான கேள்வியை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# 10. மலேயாவின் மக்கள் சனநாயகக் கழகம்

**"ஜனநாயகம்"** ஆம். இந்த உயரிய உலகச் சொல் இன்று போலித்தனமாக்கப்பட்டிருக்கின்றது. இன்று உலகம் சரியான திசையில் முன்னேறியதை விட, சரியற்ற பாதையில் வேகமாக வளர்ந்துள்ளது. ஆகவே முன்னேற்றத்தின் நிகரபலன் சுழியமாகும். உண்மையும் போலியும் ஒன்றாகச் சந்தைக்கு வரும் நவீன உலகம் இது. அதேபோன்று ஜனநாயகம் என்று அரும்பியதோ அன்றே போலி ஜனநாயகம் என்ற முள்ளும் அரும்பியதோ, என்னவோ? இது ரோஜாவைக் காக்கும் முள் அன்று; ரோசாவையே தாக்கும் முள் ஆகும். இன்று ஜனநாயகம் என்பது அனைவராலும் பேசப்படுகின்றது. ஆனாலும் நம்மைப் பொருத்த வரையில் ஜனநாயகம் என்பது மக்கள் ஜனநாயகமே ஆகும். மக்கள் என்பது பெரும்பான்மைப் பாட்டாளி மக்களே ஆகும். அத்தகையே பொருள் பொதிந்த பாதையில் மக்கள் ஜனநாயகக் கழகம் மலேயா மக்களிடத்தில் - குறிப்பாக மலேயா இளைஞர்கள் மத்தியில் - பாராட்டுக்குரிய இயக்கமாகக் திகழ்ந்தது.

மக்கள் ஜனநாயகம், மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளாவன: (அ) சங்கம் அமைக்கும் உரிமை (ஆ) பேச்சுரிமை (இ) கூட்டம் நடத்தும் உரிமை (ஈ) தேர்தலில் நிற்கும் தடையற்ற உரிமை (உ) அனைவருக்கும் வாக்குரிமை (ஊ) ஆளும் உரிமை போன்ற முதன்மையுரிமைகளும் இதர உரிமைகளும் ஆகும். இத்தகைய மக்கள் ஜனநாயக உரிமைகளின் தளத்தில் தோன்றுபவையே ஜனநாயக இயக்கங்கள் இத்தகைய உரிமைகள் வேண்டி - உரிமைகாக்கப் போராடப் பல்வேறு ஜனநாயக அமைப்புகள் பிறக்கின்றது. இவ்வுயரிய கொள்கையினடிப்படையில் காலனி நாடுகளின் விடுதலைப் போராட்டம் எனும் மக்கள் போராட்டம் ஆசிய நாடுகளான சீனா, மலேயா, இந்தியா, இந்தோனேஷியா, மியான்மர் என்றழைக்கப்படும் பர்மா, இலங்கை

படிப்பகம்

www.padippakam.com



ஆகிய நாடுகளில் தோன்றியது. மேலும் காலனி நாடுகளின் விடுதலைக்கு மக்கள் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்பது ஓர் இன்றியமையாத அடிப்படை ஆகும். மக்களைத் திரட்டவே இத்தகைய அமைப்புகள் தோன்றும். அதனைப் பின்பற்றி மலாயாவில் அமைக்கப்பட்டதே வாலிப ஜனநாயகக் கழகம். இது ஜனநாயகத்தை வளர்ப்பதில் முன்னணியிலிருந்தது. இவ்வமைப்பில் ஆண் பெண் இரு பாலரும் பங்கு பெற்றுத் தளம் விரிந்து காணப்பட்டது. அது ஒரு பாட்டாளி வர்க்கக் குண இயல்பு படைத்த அமைப்பாக இருந்தது. அதில் தோழர்கள் வீரசேனன், வீரபாகு, இராமசாமி, டாக்டர் ராஜமாணிக்கம், சுந்தரராஜன் ஆகியோர்கள் முன்னணியில் இருந்து வழி நடத்திச் சென்றனர். தொழிற்சங்க சம்மேளனத்தைக் கண்டு எந்த அளவுக்கு அரசும், சுரண்டும் வர்க்கமும் அதிர்ச்சியடைந்திருந்ததோ அந்த அளவுக்கு வாலிபர் ஜனநாயக கழகத்தைக் கண்டும் அரசும் முதலாளித்துவ அமைப்புகளும் அதிர்ச்சியடைந்திருந்தன.

**மாணவர் கழகம் :-** மாணவர் கழகம் பல பிரிவுகளாக நின்று மூன்று வயதுக் குழந்தை முதல் கல்லூரி மாணவர் வரையில் அனைவரையும் தம்முள் அடக்கிக்கொண்டது. சிறிய - பெரிய பள்ளிக் கூடங்களில் எல்லாம் மாணவர் அமைப்புகளும் பெற்றோர் அமைப்புகளும் கட்டப்பட்டன. பெற்றோர் அமைப்பு ஓர் அரசியல் அமைப்பு என்றால் மிகையாகாது. உயர் மாணவ மாணவியர்க்குத் தொண்டர் படைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மூன்று வயதுக் குழந்தைகளிலிருந்து ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வினை இவ்வமைப்பு நல்கியது. மாணவர்களின் பல்வேறு தரப்பட்ட வினாக்களுக்கும் ஆசிரியர்கள் பொருத்தமாக மாணவர்களின் மனநிறைவுக்கு ஏற்பப் பதிலளிப்பர். அவர்களின் சுய உணர்வினைத் தூண்டி விடுவதே கல்வி எனும் கொள்கையாக்கப்பட்டது. மாணவர்களின் சாதாரணக் கல்வியை விட அரசியல் கல்வி அவர்களைத் துடிப்புள்ள மாணவர்களாக்கும் என்பது தோழர்கள் கண்ட ஆய்வு உண்மை

படிப்பகம்

www.padippakam.com



(அரசியல் என்ற தனிப்பாடத்தினை விட வரலாற்றில் அரசியலைப் போதித்து விட முடியும் என்பது அனுபவம்.) குறிப்பாக மாணவர் இயக்கம் மக்கள் இயக்கத்துக்குத் துணை நிற்பதாக அமைய வேண்டும். இவ்வமைப்பு துவரங்குறிச்சி சோமுவின் பொறுப்பிலிருந்தது. தோழர்கள் புலவர் சின்னப்பதாஸ், மயில் ராவணன், இராமகிருஷ்ணன் ஆகியோர் பெரும் பணியாற்றினர்.

**பெண்கள் அமைப்பு :-** உலகில் சரிபாதி பெண்கள். ஆனால் பெண் என்பவள் ஆணாதிக்கம், சமூக ஆதிக்கம், மத ஆதிக்கம் இன்னும், இதுபோன்ற பல்வேறு ஆதிக்கங்களினால் அடிமைப் படுத்தப்பட்டிருக்கின்றாள். வர்க்க விடுதலையின் துணைக் கூறுகள். பெண் விடுதலை, சாதீயத் தளைகளிலிருந்து விடுதலை, மத ஆதிக்கங்களிலிருந்து விடுதலை போன்றவைகள் ஆகும். ஆனால் இவைகளனைத்தும் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் துணைக் கூறுகள். இதற்காகவே பிரதான ஆயுதப் போராட்டத்தை நடத்துவதென்பது வர்க்க போராட்டத்தினின்று வழி தவறச் செய்துவிடும். சாதீய விடுதலைக்காகவோ, மத விடுதலைக்காகவோ, ஆணாதிக்க விடுதலைக்காகவோ ஆயுதத்தைத் தூக்குவதென்பது தவறான வழிகாட்டுதலாக அமைந்துவிடும். இன்னும் குறிப்பாக எடுத்துரைத்தால் அது மக்கள் ஜனநாயகப் புரட்சியினை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகளாகும். அதே நேரத்தில் தேசிய இனங்கள் தங்கள் விடுதலைக்காகப் போரிடுமானால் அது ஏற்கத் தக்கதே. பெண் விடுதலை, சாதீய விடுதலை, மத ஆதிக்க விடுதலை, பொருளாதார விடுதலை, சமூக விடுதலை ஆகிய அனைத்துமே மக்கள் ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பின் நடைமுறைகளாகி நன்மை பயக்கும் என்பதுதான் உண்மை.

ஆணுக்குச் சரிநிகராக வாழும் உரிமைபடைத்த பெண்ணே இயற்கையின் இன்றியமையாத படைப்பாகும். அத்தகைய பெண்களின் மேம்பாட்டுக்காகவும் விடுதலைக்காகவும் மகளிர் ஒற்றுமைக்காகவும் மலேயாவில் மகளிர் இயக்கம் அரும்பியது

படிப்பகம்

www.padippakam.com



மகளிர் இயக்கத்தில் கணபதி அவர்களினால் அரசியலில் ஈடுபடுத்தப்பட்டு ஒளிவீசிய ஒப்பற்ற பெண்மணிகள் பலராவர். தாமரைக்கண்ணி அம்மையார், திலகவதி அம்மையார், மாயூரம் மாரி அம்மையார், ராஜாமணி அம்மையார், முத்துலஷ்மி அம்மையார், தமிழ்முல்லை அம்மையார், அமுதவல்லி அம்மையார் போன்ற வீரப்பெண்மணிகள் மகளிர் இயக்க மாமணிகளாய்த் திகழ்ந்தவர்கள். அவர்களுள் மாயூரம் மாரி அம்மையார் அவர்களும், ராஜாமணி அம்மையார் அவர்களும் ஐ.என்.ஏவின் ஜான்சிராணி படையினில் பணியாற்றியவர்கள். மகளிர் இயக்கம் கணபதி அவர்களால் விரிவுபடுத்தப்பட்டது. தோழர் வீரவர்மனின் சகோதரியார், தமிழ் முல்லை அம்மையார்தான், மகளிர் அமைப்பின் தலைவி ஆவார். மகளிர் அமைப்பு மலேயா மாதர் சம்மேளனத்தின் பகுதியாக விளங்கியது. அகில மலேயா மாதர் சம்மேளனத்தின் வீராங்கனைகள் மலேயாவின் போராட்டங்களில் வீராவேசத்துடன் உயரிய உணர்வோடு பங்கெடுத்தார்கள், அவர்கள் கலை இலக்கியத் துறையிலும் தங்கள் பங்கினை மறக்கவில்லை. மகளிர் உரிமைகளுக்காக எத்தியாகமும் செய்யத் தயார் நிலையிலிருந்தது மகளிர் அமைப்பின் மாண்பு ஆகும். மலேயாவின் பெண்கள் மக்கள் ஜனநாயகப் புரட்சியிலும், ஐ.என்.ஏ ஜான்சிராணி படையிலும் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் ஆவர். போராட்டங்களில் ஈடுபட்ட இம்மூன்று தேசிய இன மாதர்கள் மலேயாவின் பொதுக் கூட்டங்களிலும், தொழிலாளர் கூட்டங்களிலும் மாநாடுகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளிலும் புரட்சி கீதங்கள் பாடிய புதுமைக் குயில்களாகத் திகழ்ந்தனர். நிகழ்ச்சிகளில் இசைபாடிய இக்குயில்கள் போராட்டங்களில் கொள்கை முழக்கமிடும் பெண் புலிகளாகவும் திகழ்ந்தார்கள். ஊர்வலங்களில் சீருடையணிந்து மாதர் ஜனநாயகக் கொடிதனைக் கம்பீரமாக ஏந்தி மகளிர் அணி வகுத்து வந்தது

படிப்பகம்

www.padippakam.com



அறிவுக்கு விருந்தளித்த காட்சியாகும், மலேயா விடுதலைப் போராட்டத்திலும், ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்திலும் அகில மலேயா மாதர் சம்மேளன மாமணிகள் பெரும்பங்கு வகித்தனர். பெண் விடுதலையும், பெண் உரிமையும் கணபதியவர்களின் முழக்கமாகத் திகழ்ந்ததுடன் நடைமுறையாகவும் நிலவியது. இம்மாதர் அமைப்பின் பொறுப்பாளர்களாகத் தோழர்கள் குருதேவனும், கணபதியும் செயல்பட்டனர்.

ஆர்.எச்.நாதன், ஒய்.கே.மேனன், பொன்னம்பலம் ஆகியோர் மலேயா கோலாலம்பூர் பகுதித் தோட்ட வளாகங்களில் (Estates) கி.பி. 1938 காலத்தில் கோலாலம்பூர் ரப்பர் தோட்டத் தொழிலாளர் போராட்டத்தினை ஏற்படுத்தினர். அதனைக் காங்கிரஸ் போராட்டம் என்றும் வர்ணிப்பதுண்டு. ஆனால் அது ஒரு பொருளாதாரப் போராட்டமே. அப்போது இந்தியாவில் நிலவிய காங்கிரஸ் இயக்கப் போராட்டத்தின் வீச்சு மலேயாவிலும் பிரதிபலித்ததால் அப்போராட்டம் காங்கிரஸ் போராட்டம் என வர்ணிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் அவை மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் போராட்டங்களே ஆகும். ரப்பர் தோட்டத் தொழிலாளர் போராட்டமும், நிலக்கரி. ஈயச்சுரங்கத் தொழிலாளர் போராட்டமும் மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் செயல்பாடுகளே ஆகும். அப்போராட்டங்களின் முன்னணியினரான தோழர்கள் ஆர்.எச்.நாதன், ஒய்.கே.மேனன், கணபதி, வீரசேனன், குருதேவன், வீரபாகு, ஜெயபாரதி ஆகியோர்களின் கலந்துரையாடல்களின் விளைவே மேற்கூறிய போராட்டங்களின் வழிமுறைகள் ஆகும். தோழர் ஆர்.எச்.நாதன் நாடு கடத்தப்பட்ட பிறகும் சில காலம் போராட்டங்கள் நடந்தன. ஒய்.கே. மேனன் ஆங்கிலேயர் போலவே தோற்றம் கொண்டவர். அவரின் உருவம், நடை, உடை, பண்பாடு ஆகிய யாவுமே ஆங்கிலேயர் போலவே காணப்படும். அப்போராட்டத்தின் விளைவாக இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட ஹலாசிய நாதன் எனப்படும் ஆர்.எச். நாதன் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவராகச் செயல்பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



அப்போராட்டமே அரசின் கண்காணிப்பு கணபதியின் மீது விழக் காரணமானது. கணபதியைப் போன்றே அவர்தம் தோழர்கள் அமுல், சீ.வி. குப்புசாமி, ஆறுமுகம், குருதேவன், சிங்காரவேல், ஆலங்குடி ஜெயபாரதி ஆகியோர்களும் அரசால் கண்காணிக்கப்பட்டனர். தோழர் ஆர். எச். நாதன் நாடு கடத்தப்பட்ட பின்னரே அப்போராட்டம் காங்கிரஸ் போராட்டம் என்ற பெயர் பெற்றது.

**இளைஞர்களுக்குக் கணபதியின் வேண்டுகோள் :-** இளைய சமுதாயம் என்பது புதிய ஜனநாயகக் கழகத்தையும் ஜனநாயக வாலிபர் கழகத்தையும் உள்ளடக்கியது. வீரர்கள், வீராங்கனைகள் இதன் உறுப்பினர்களாவர். அச்சம் என்பதே அறியாத - சுறுசுறுப்பான - துணிச்சல்மிக்க இளைய சமுதாயத்தின் ஒற்றுமையை என்னவென்று புகழ்வது ! இளைஞர்களை அசட்டை செய்யாமல் அரவணைத்துக் கொண்டவர் கணபதியாவார். உலகின் புரட்சிகளையெல்லாம் இளைய சமுதாயமே தன் தோள்களில் தாங்கியது. புரட்சிகளின் மையம் இளைய சமுதாயத்தினைச் சார்ந்ததாக இருப்பினும் - இளைய சமுதாயம் தலைமைக்கு ஆசை கொண்டு அலைந்ததில்லை. தியாகத்திற்குத் தன்னை ஆளாக்கிக் கொள்வதுதான் இன்றைய இளைஞர்களின் இன்றியமையாத பண்பு ஆகும். இதனைப் பின்பற்றிய அந்நாளில் மலேயா இளைஞர் சமுதாயம் மலேயாவின் விடுதலைப் போராட்டத்தில் வீரமிக்க தியாகங்களை ஏற்றுக் கொண்டது. ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தில் நான்கு ஆண்டு காலம் நெருப்பாற்றினிலே நீந்தியவர்கள் - புதிய ஜனநாயக இயக்கத்தின் சின்னமான மூன்று நட்சத்திரக் கொடியை உயர்த்திப் பிடித்து முழக்கமிட்டவர்கள் மலேயாவின் இளைய சமுதாயத்தினர் ஆவர். இத்தகைய இளைஞர் எழுச்சியின் உந்து சக்தி கணபதியும் - குருதேவனும் ஆவார்கள்.

**கணபதியின் கடமைகள் :-** கணபதியின் கடமை பன்முகப் பட்டது. கட்சிக்கு ஆற்ற வேண்டிய கடமை விடுதலைப்படையின் கடமை. விடுதலைக்கான மில்சியா படையின் கடமை. மில்சியா

படிப்பகம்

www.padippakam.com



என்பது இராணுவமாகவும் - மக்களாகவும் செயல்படக்கூடிய படையாகும். பொதுமைப்படுத்தினால் மலேயாவின் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் கணபதியின் கரங்களில் திகழ்ந்தன. கணபதி விடுதலை இயக்கத்தின் வெற்றிக்காக இடையறாது போராடினார். இயக்கத்தின் முன்னேற்றத்திற்கான கவனத்தைச் செலுத்தினார். தோழர்களின் இன்ப - துன்பங்களில் பங்கேற்றார். தோழர்கள் சுட்டிக்காட்டும் குறைபாடுகளைக் களைந்து கொண்டு புதிய உத்வேகத்தோடு செயல்பட்டார் தமது பலவீனங்கள் தைரியமாகச் சுட்டிக் காட்டப் பெற்றபோது அதனை ஏற்றுக் கொண்டார். அமைப்புகளில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டுபிடித்து அதனைத் திருத்த முயற்சித்தார். ஒரு புரட்சிகர மனிதனுக்கு இருக்க வேண்டிய உண்மை, நேர்மை, துணிவு, தியாகம் போன்ற எல்லாப் பண்புகளின் இருப்பிடமாய்த் திகழ்ந்தார். புரட்சிக்கான எவ்விதத் தியாகத்தையும் ஏற்கத் தயாராக இருந்தார்.

**கணபதியவர்களின் எழுச்சியுரைகள் :-** விடுதலை வீரர் கணபதியவர்களின் பேச்சுகள் மக்கள் மத்தியில் எழுச்சியை உருவாக்க வல்லவையாகத் திகழ்ந்தவை. எரிமலைக் குழம்பு தடவிய கணபதியின் எழுச்சியுரைகள் எத்துணை எத்துணையோ! அவர் எழுச்சியுரையாற்றும் புகைப்படம் ஒன்று ஆஸ்திரேலியாவின் குயிஸ்லாந்து பல்கலைக் கழக வெளியீடான திரு.மைக்கேல் ஸ்டென்ஸன் அவர்களின் மலேயாவின் வர்க்கம் - இனம் - காலனியாதிக்கம் (Class, Race and Colonialism in West Malaysia) என்னும் நூலில் (105வது பக்கம் புகைப்பட இணைப்புகளில்) மிகச் சிறப்பாகக் காணப்படுகின்றது. அவ்வாறே கி.பி.1946 ஆகஸ்டு மாதத்தில் ஃபேரர்பூங்காவில் சிங்கப்பூரில் நடைபெற்ற சிங்கப்பூர் பொது தொழிலாளர் பேரணியில் தோழர் பி.வீரசேனன் எழுச்சியுரையாற்றும் காட்சியும் புகைப்படமாகக் காணப்படுகின்றது. மேலும் மலேயா கம்யூனிஸ்டு கட்சியின்

படிப்பகம்

www.padippakam.com



செயலாளராகத் திகழ்ந்த தோழர் ஆர். பாலன் அவர்களது படமும் வரலாறும் கூட ஆஸ்திரேலியா பல்கலைக் கழக வெளியீட்டில் வெளிவந்துள்ளது.

*எழுச்சியுரை* : "ஆர்வமிக்க புரட்சிகர நோக்கங்களால் தூண்டப்பட்டுள்ள மலேயா மக்களே! உங்களின் கடந்த கால நடவடிக்கைகளைக் கவனித்து, தங்களின் பால் அளவு கடந்த நம்பிக்கையினை நாங்கள் வைத்திருக்கின்றோம். ஏனென்றால் நீங்கள் பாசிச எதிர்ப்பு இயக்கத்தை நடத்தப் பெரிதும் உதவி செய்தது மட்டுமல்லாமல், நீங்களே நேரடியாய்ப் பங்கு பெற்றுத் துணிகரமாகப் போராடி மலேயா மக்களின் துணிவு, செயல் வீரத்தினை உலகத்தின் உச்சி முகட்டில் கொண்டு நிறுத்தியிருக்கின்றீர்கள். இன்னல்களையும் அபாயத்தை யும் நீங்கள் பொருட்படுத்தியதேயில்லை. அதுவே புரட்சிகர நோக்கங்களாகிய உங்களின் புரட்சிக்கான போர்க்குணங்களைப் பிரதிபலிக்கின்றது. நேற்று உங்களுக்குப் புகழ் கிட்டியது. இன்று அதிகரித்திருக்கின்றது. நாளை நீங்கள் மக்கள் ஜனநாயகக் குடியரசினை அமைத்த பிறகு அது மேலும் உயரும். ஏகாதிபத்தியமானது தனது கடந்த காலப் போராட்டங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு நினைத்துப் பார்த்து அது தனது பாதையை மாற்றிக் கொள்ளவில்லை. அது மாற்றிக் கொள்ளாது. ஆனால் அது விரைந்து வரும் புரட்சிச் சுவாலையில் கருகி அழிந்து விடும். பாட்டாளி மக்களின் கோபத்தீயின் முன்பு எதுவுமே எதிர்த்து நிற்க முடியாது. ஏனென்றால் நடக்கவிருப்பது வர்க்கப் புரட்சி. இன்றைய புரட்சியாளர் எவரும் வறட்டுத் தத்துவ ஞானிகளல்ல. அவர்கள் ஏகாதிபத்திய குடியேற்ற நாட்டு அரசினைத் தகர்த்து எறியக்கூடிய புரட்சிகர வீரப்படைகளையும் செந்தளங்களையும் அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மார்க்ஸிய - லெனினிய சித்தாந்தத்தைப் பயன்படுத்திப் போராடும் புரட்சிகர - மலேயா விடுதலைப் போராளி மலேயாவை மக்கள் மலேயாவாக மாற்றி விடுவார்கள். நோக்கர்களாகிய உங்களின் உதவியைக் கொண்டு" என்று தோழர் கணபதியவர்கள் புரட்சிகர எழுச்சியுரைகளை முழங்கி மக்களுக்கு அறை கூவல் விடுப்பார்

படிப்பகம்

www.padippakam.com

# 11. மாவீரர்கள் நேதாஜி - கணபதி - எம்.ஆர். குருதேவன் சந்திப்பு

இன்று இந்தியா முழுவதும் மாவீரன் நேதாஜியின் பிறந்த நாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஐக்கிய முன்னணியின் அரசும் - காங்கிரஸ் - கம்யூனிஸ்டு கட்சிகளும் இந்தியாவின் ஐ.என்.ஏ தியாகிகளும் நேதாஜியின் பிறந்த நாளினைப் பெரும் அளவில் இவ்வாண்டு கொண்டாடின. இந்திய சுதந்திர வரலாற்றில் நேதாஜியின் வீரப்பங்கு அங்கீகரிக்கப்பட்டது என இறும்பூது அடையலாம். அதேபோன்று இந்திய சுதந்திரத்தின் தியாகிகள் பகத்சிங், இராசகுரு, குருதேவ், மலேயாவில் இந்திய நலனுக்காக உயிர் துறந்த மாவீரன் கணபதி ஆகியோரின் வீர வரலாற்றுப் பங்கும் அங்கீகரிக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஜெர்மனியில் நேதாஜி எனும் நூல் - சிறந்த நூலாசிரியரான என்.ஜி. கேம்புள்ளே (N.G.Campulley) அவர்களால் எழுதப்பட்டது. அந்நூலில் கேம்புள்ளே, இந்திய சுதந்திரத்தின் மூலமானவர்கள் காந்திஜி - அவருக்கடுத்து மாவீரன் நேதாஜி என்று கூறி மற்றவர்கள் அனைவரும் இவ்வரிசையின் பின்னரே நிற்கின்றார்கள் என்கின்றார்.

இந்தியாவின் தீவிர பிரிட்டிஷ் எதிர்ப்பாளராக உலகம் முழுவதும் உணரப்பட்டவர் மாவீரர் நேதாஜியே ஆவார். நேதாஜி எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தத் துடித்துக் கொண்டிருந்தார். இந்திய தீவிரவாத சுதந்திரப் போராட்டத்தின் தலைவரான பால கங்காதர திலகரின் கேம்பிரிட்ஜ் வீர உரைதான் நேதாஜியினை சுதந்திரப் போராட்டத்திற்கு கொண்டு வந்தது. நேதாஜி அவருடைய நூலான **இந்திய போராட்டம்** என்ற நூலில் தான் ஒரு மாவீரனாக உருவானதற்கு தேஷ்பந்து சித்தரஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com



தாஸ் அவர்களும் ஆரம்பக் கல்வியளித்த ஆசிரியர் பெனி மாதவ் தாஸ் அவர்களும் காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார். இடதுச் சாரிக் கருத்துடைய சுதந்திரச் சிந்தனையாளர் மாவீரன் நேதாஜி என்பதே சரியான கூற்றாகும். நேதாஜியின் போர்க் கணிப்புகள் - மிக - மிக அற்புதமானவை. இரண்டாம் உலகப் போரின் பெர்லின் - ரோம் - டோக்யோ முத்தரப்பு உடன்படிக்கையின் சிற்பிகளுள் ஒருவரான ஜெனரல் ஒஷிமா மாவீரன் நேதாஜியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"நான் என் வாழ்க்கையில் பல்வேறு ஆசிய - ஐரோப்பிய - அமெரிக்க ராச தந்திரிகளைச் சந்தித்துள்ளேன். ஆனால் இதுவரையில் நேதாஜி போன்ற தனித்திறமை மிக்க ஒருவரைச் சந்தித்ததில்லை". ஹிட்லர் போர்க் காலங்களிலும் நேதாஜிக்கு அளித்திருந்த சுதந்திரம் அளப்பரிய ஒன்று ஆகும். ஹிட்லரின் நட்பு நாடுகளில் ஒன்றான ஹங்கேரியின் தந்திரியொருவர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைவிட - எங்களை விட நேதாஜி அதிக உரிமையினையும் - சுதந்திரத்தினையும் பெர்லினில் பெற்றுள்ளது வியப்பளிக்கின்றது என்று ஒரு முறை குறிப்பிட்டார். உலகிலேயே நார்த்திக் இனம் தான் உயர்ந்தது எனக் கருதியிருந்த ஜெர்மனியின் ஹிட்லர் தனது மெயின் கெம்ப் (Mein Kemp) நூலில் தான் அதுவரையில் இந்தியர்களைப் பற்றிய ஏதும் அறியாது எழுதியிருந்ததாகவும் இந்தியாவைப் பற்றிய தகுதியற்ற வாசகங்களை நேதாஜியின் சந்திப்புக்குப் பிறகு நீக்கிவிட உத்திரவிட்டார் என்பதும் நேதாஜிக்கு மட்டுமல்ல, அனைத்து இந்தியர்களுக்கும் பெருமையாகும். அத்தகைய இரும்பு மனிதர் நேதாஜி அவர்களால் கி.பி. 1941-ல் ஜெர்மன் அரசு செலவில் - 1200 பவுண்டுகள் மாத மான்யத்துடன் சுதந்திர இந்திய அரசு நிறுவப்பெற்றது. ஆசாத் ஹிந்து பௌஜ் கி.பி.1941-ல் டிசம்பர்த் திங்களில் பதினைந்தே நபர்களுடன் துவக்கப்பட்டது.

www.padippakam.com



அடுத்த ஆண்டான கி.பி.1942-ல் நான்கு பட்டாலியனாக வளர்ந்தது. ஐ.என்.ஏ.வின் கொடி பாயும் புலியாகும். உடன் ஆசாத் ஹிந்து பௌஜ் என்று பொறிக்கப்பட்டிருக்கும். கி.பி.1942-ல் படைவீரர்களுக்கு ஜெர்மன் அரசே நேரடியாக ஊதியம் அளிக்கப்படும் நிலைக்கு ஐ.என்.ஏவின் படைகளும் - செலவினங்களும் உயர்ந்தன - படை விரிவடைந்தது. ஆசாத் - ஹிந்து - பௌஜின் சுப்ரீம் கம்மாண்டராக ஹிட்லர் பொறுப்பேற்றார். படை உறுதி மொழிகள் ஜெர்மன் மொழியில் ஏற்கப்பட்டன. இந்நிலையில் பிரிட்டிஷ் படைகளைப் போரில் வென்று ஜப்பான் மலேயா - பர்மா சிங்கப்பூர் பகுதிகளை தன் கையில் கொண்டு வந்தது. எப்போதுமே நேதாஜி ஜப்பான் அரசுடன் மிக நெருக்கமானவராகத் திகழ்ந்தார். இந்தியாவை விட்டு வெளியேறும் போது கூட அவர் ஜப்பான் சென்றிருக்க வேண்டும். ஆனால் ஹிட்லரை முதலில் தன் வழிக்குக் கொண்டு வர நினைத்தே பெர்லின் சென்றார். ஜப்பானின் ஆதரவும் அன்பும் என்றும் தனக்குண்டு - எனினும் ஹிட்லர் ஒரு கடும் பாறை உள்ளம் கொண்டவர். அவரைச் சரிசெய்த பிறகே தன் எண்ணம் ஜப்பானின் ஒத்துழைப்புடன் எளிதாக நிறைவேறும் என நம்பிக்கை கொண்டே முதலில் பெர்லினைச் சென்றடைந்தார். மேலும் எப்போதும் போல் ரோமுடனும் நெருக்கமாகவே திகழ்ந்தார்.

ஓர் நாள் பெர்லினிலிருந்த நேதாஜிக்கு ஜப்பானிலிருந்து ஒரு முக்கியமான தகவல் வந்தது. ஜப்பானால் சிறைப் பிடிக்கப்பட்ட பர்மிய மலேய் படைப் பிரிவுகள் ஒன்று சேர்ந்து இந்திய விடுதலைக்காகப் போராடத் தயாராக இருப்பதாகவும் - அப்படைகள் ராஸ் பிகாரி போஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளதென்றும் -ராஸ் பிகாரி போஸீக்கு மிகவும் வயதாகி விட்டபடியால் நேதாஜி அப்படைகளைத் தலைமையேற்று நடத்த வேண்டும் என்று ராஸ் பிகாரி போஸ் விரும்புவதாகவும் அத்தகவல் அறிவித்தது. அதுமுதல் நேதாஜி உடல் பெரிலினிலும் உள்ளம் தூரகிழக்கு நாடுகளிலும் என வாழ்ந்தார். ஆனால் அவரைச் சிங்கப்பூருக்கு அழைத்து வருவதில் பல சிக்கல்கள் நிலவின.

படிப்பகம்

www.padippakam.com



ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென் கோடியான நன்னம்பிக்கை முனை வரை அம்மாவீரனைச் சுமந்து வருவதாகவும் நன்னம்பிக்கை முனையிலிருந்து ஜப்பானின் நீர்மூழ்கிக் கப்பல் அவரைப் பெற்றுக் கொண்டு சிங்கப்பூருக்கு அழைத்து வருவதாகவும் இரு நாட்டுக் கப்பற்படை அதிகாரிகளும் முடிவு செய்து - பாதுகாப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தித் திட்டமிட்டனர். இரண்டு மாவீரர்கள் இணையும் நிகழ்ச்சிக்காகக் காலம் காத்திருந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலமான அக்காலத்தில் பெர்லினிலிருந்து சிங்கப்பூருக்கு நேரடியாக விமானங்களை இயக்க வசதியிருந்தாலும் மாவீரன் நேதாஜியினைச் சுமந்து வரும் விமானம் பல பிரிட்டிஷ் காலனிப் பிரதேசங்களை கடந்து பயணிக்க வேண்டியிருந்ததால் விமானப் பயணம் பாதுகாப்பற்றது என இரு நாட்டு ராணுவ வல்லுனர்களும் முடிவு செய்தனர். அதனால் நீர்மூழ்கிக் கப்பல் பயணமே சிறந்தது என முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறே நேதாஜி அவர்கள் சிங்கப்பூர் வந்தடைந்தார். சிங்கப்பூரின் கெத்தே தியேட்டரில் அவரை மலேயா - சிங்கப்பூர் தமிழ் மாவீரர்களுக்கு அடையாளம் காட்டியவர் மலேயாவின் மறக்குடி மாவீரர்களுக்கு நேதாஜியவர்களை அடையாளம் காட்டியவர் தோழர் எம்.ஆர்.குருதேவன் ஆவார்.

படிப்பகம்

www.padippakam.com

## சிங்கப்பூரில் நேதாஜி

சிங்கப்பூரின் திரையரங்குகளிலேயே மிகப் பெரியது கெத்தே தியேட்டராகும். அன்று நேதாஜி கெத்தே தியேட்டரில் தோன்றுவதாக இருந்தது. ஜப்பானிய அரசு சில சமயங்களில் சிலரைப்போல் வேறு சிலரை ஒப்பனை செய்து - நடிக்க வைத்து மக்களை ஏமாற்றும் குணவியல்போடு அக்காலங்களில் நடந்து கொண்டமையால் நேதாஜி அவர்களைப் போல் வேறு எவரையும் கொண்டு நடிக்க வைத்துத் தாங்கள் ஏமாற்றப் படுவோமோ என்று அனைவருக்கும் ஐயம் ஏற்பட்டிருந்ததது. மேலும் நேதாஜி அவர்கள் எவராலும் அழைக்கப்பெற்று சிங்கப்பூருக்கு வரவில்லை. ஜப்பானிய அரசின் தகவல் மூலமே தன்னிச்சையாகத் தூர கிழக்கு நாடான சிங்கப்பூருக்கு வருகை புரிந்தார். நேதாஜியின் வருகையை ஜப்பானிய அரசே அறிவித்திருந்தது. அதனால் ஏற்பட்டதே மக்களின் சந்தேகம் ஆகும். அந்நிலையில் நேதாஜி அவர்களை அடையாளம் காட்ட வேண்டிய பொறுப்பு தோழர் குரு தேவனிடம் விடப்பட்டது. உண்மையா - ஒப்பனையா என ஆராய்ந்தறியும் பொறுப்பும் தோழர் குருதேவனிடம் அளிக்கப்பட்டது. அன்று சிங்கப்பூர் கெத்தே தியேட்டரே மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. மாவீரன் நேதாஜி அவர்கள் மேடையில் தோன்றினார். அவருக்கு நேர் எதிரில் - முதல்வரிசையில் தோழர் குருதேவன் அமர்ந்திருந்தார். உலகின் மாவீரர்களில் ஒருவரான நேதாஜி அரங்கில் தோன்றி அறிமுகம் செய்யப்பட்டும் கூட்டத்தினர் மௌனமாக இருந்ததைக் கண்டு நேதாஜியே சில கணம் திகைத்தார். பின் சில நிமிடங்களுக்குப் பிறகு முன் வரிசையிலிருந்த தோழர் குருதேவன் முதலில் கை தட்டத் துவங்கப் பின் அரங்கமே கைத்தட்டல்களால் அதிர்ந்தது. அப்பெரிய தியேட்டரில் கரகோஷம் அடங்கப் பல நிமிடங்களானது. பின் மக்கள் கூட்டம் தாம் கொண்டு வந்திருந்த மாலைகளை வரிசையாய் அணிவகுத்து நின்று நேதாஜிக்கு அணிவித்துத் தங்களின் பேரன்பினைப் பகிர்ந்து கொண்டனர். மக்களின் ஆரவாரமும் புத்துணர்ச்சியும் மெய் மறக்கச்

படிப்பகம்

www.padippakam.com



செய்தது. இந்தியர்கள் - தமிழர்கள் மத்தியில் தாயகம் இந்தியா வெகு விரைவில் சுதந்திரம் அடைந்து விடும் என்ற புதிய நம்பிக்கை ஒளிவிட்டது.

ஐ.என்.ஏவின் முக்கியத்துவம் :- உலக வரலாற்றில் காலனியாதிக்கத்திற்கு எதிராகத் துவங்கப்பட்ட முதல் பெரும் படை ஐ.என்.ஏ ஆகும். ஆயினும் தீரர் செண்பகராமன் நேதாஜியின் முன்னோடி என்பதில் ஐயமில்லை. இந்திய நேஷனல். ஆர்மி எனும் முதல் படையினை உருவாக்கியவர் தமிழர் செண்பகராமன் ஆவார். ஆயினும் பெருத்த வீச்சிலமைந்து பெரும் பரபரப்பை உருவாக்கியது - மாவீரன் நேதாஜியின் ஐ.என்.ஏ படையே ஆகும். உலகத் தேசியப் போராட்ட வரலாற்றில் நேதாஜியின் படை முன்னணிப் படையாக மட்டுமல்லாமல் உலக முக்கியத்துவம் பெற்றதாக அமைந்திருந்தது. பல்வேறு குடியேற்ற நாடுகளில் - காலனிமக்கள் தாங்களும் அவ்வாறான தேசியப் படையினை ஏன் உருவாக்கக் கூடாது என்ற சிந்தனையைத் தொடங்கி வைக்க - ஏகாதிபத்தியங்கள் பெரிதும் கவலையோடு - நேதாஜியை முக்கியமான எதிரியாகக் கருதி நடவடிக்கைகளைத் துவக்கி வைத்தது. பிற குடியேற்ற நாட்டு மக்களின் சுதந்திர எண்ணத்தினைத் தூண்டிவிட்ட படை ஐ.என்.ஏ ஆகும். ஐ.என்.ஏவின் தியாக நடவடிக்கைகள் எங்கே உலகளாவிய அளவில் உருவாகி விடுமோ என்று ஏகாதிபத்தியர்கள் அதிர்ச்சியடைந்து ஐ.என்.ஏ தளபதி நேதாஜியை கவனிக்கத் துவங்கின. இந்திய மக்கள் உள் நாட்டிலும், அயல் நாடுகளிலும் இனிய சுதந்திர எண்ண அலைகளில் நீந்தத் துவங்கினர். அத்தகைய உயரிய பணியில் தீரர் கணபதி அவர்களோடு தோளோடு தோள் நின்று போராடியவர்கள் வீரசேனன், கேப்டன் கே.எஸ்.நாதன், சுதர்மன், வீரபாகு, வீரவர்மன், டாக்டர் நாகை ராசமாணிக்கம், நல்லதம்பி, ராமசாமி, புஷ்பராசு, செயபாரதி, சோமசேகரன், இரணியன் போன்றவர்கள் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com

## மாவீரர்கள் நேதாஜியும் - கணபதியும் - குருதேவனும் சந்தித்தனர்

இந்தியப் புரட்சியாளர்களின் வரிசையில் முன்னணியில் வைத்தெண்ணப்படுபவர் தியாகி மாவீரன் சந்திரசேகர ஆசாத் ஆவார். எங்கும் தனியாகவே பயணம் செய்யும் மாவீரன் அவராவார். அவர்க்கடுத்து மாவீரன் நேதாஜி மிகக் குறுகிய காலத்தில் ராஸ் பிகாரி போஷின் இந்திய சுதந்திர லீகினைப் பயன்படுத்தி - மலேயா சிங்கப்பூர் - பர்மா தூர கிழக்கு நாடுகளில் ஒரு மாபெரும் படையைத் திரட்டியவர். நேதாஜிக்கு மாவீரன் கணபதியினைப் பற்றி, அவரது இளைஞர் படையினைப்பற்றி எப்படி விவரங்கள் கிடைத்தன எனத் தெரியவில்லை. எனது ஊகப்படி மாவீரன் கணபதியின் ஆயுதப்படையினைப் பற்றி மிக்க திறமை வாய்ந்த ஜப்பானிய மலேயா அரசு மிகச்சரியாகக் கணித்து நேதாஜிக்கு தகவல் அளித்திருக்க வேண்டும். வேறு வழியில் கருதினால் அன்று வழக்கறிஞர் கோகோ தலைமையிலான - காங்கிரஸ் பற்றுடைய இந்திய இளைஞர் கழகம் மற்றும் காங்கிரஸ் பற்றாளர்கள் நேதாஜியிடம் மாவீரன் கணபதி மாவீரன் குருதேவன் ஆகியோரின் ஆயுதம் தாங்கிய கொரில்லா படையின் ஒத்துழைப்பில்லாமல் மலேயாவிலும், சிங்கப்பூரிலும் எதையும் செய்து விட இயலாது என நேதாஜிக்கு உணர்த்தி யிருப்பார்கள். இவை யிரண்டில் ஜப்பானிய மலேயா அரசே நேதாஜியின் எண்ணம் நிறைவேற மாவீரன் கணபதியின் படை மிக மிக அவசியம் என்று நேதாஜிக்கு உணர்த்தியிருக்க வேண்டும் மலேயாவின் ஆயுதப் படையான கணபதியின் படை தவிர்த்த நேதாஜியின் எந்த முயற்சிகளும் மலேயாவில் நிறைவேற வாய்ப்புகளே இல்லை என்பது உண்மை. இந்நிலையே இரண்டு மாவீரர்களை இணைத்துச் சரித்திரம் படைத்தது. கணபதியைத் தவிர்த்து சிங்கப்பூரில் ஐ.என்.ஏ உருவாக இயலாது. அந்நிலையில் மாவீரன் நேதாஜி மாவீரன் கணபதியை சந்திக்க ஏற்பாடுகள் செய்யும்படி உத்ரவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



நேதாஜியோடு காங்கிரஸ் சார்பு இந்திய இளைஞர் கழகமும் கணபதியின் இந்திய இளைஞர் சங்கமும் - ஜெர்மனியின் ராணுவ அதிகாரிகளும் தோழர்கள் எம்.ஆர் குருதேவன், இளங்கோ, வீரசேனன், வீரபாகு, நாதன், வீரவர்மன், எம்.ஆர்.கோபால், காங்கிரஸ் கட்சியின் சேதுப்பிள்ளை ஆகியோரடங்கிய கூட்டம் ஒரு நாள் முழுக்க நடந்தன. விவாதங்கள் விரிவாக நடைபெற்றன. நேதாஜி முடிவாக தனது கேள்வியைப் பின் வருமாறு எழுப்பினார் :

இந்திய தேசாபிமானிகளே! நீங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியை சார்ந்தவர்கள் என்பதை நான் அறிவேன். ஆயினும் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு உங்கள் உதவி தேவைப்படுகின்றது. நீங்கள் ஒப்புதல் அளித்தால் மிக எளிதாகப் போராட்டத்தினை துவக்க இயலும்" என்று கம்பீரமாக அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

அதற்குக் கணபதியளித்த பதில், "நாங்கள் கம்யூனிஸ்டுகள் தான்; ஆனால் நாங்கள் தேசத்தின் விரோதிகள் அல்லர். சர்வ தேசிய கண்ணோட்டத்துடன் தேசியத்தை அழைத்துச் செல்வோம். ஆகவே நாங்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு என்றுமே பின் வாங்கிய தில்லை. நாங்கள் தயார்," என்றதும் அவையில் கரகோஷம் எழுந்தது. நேதாஜியே கைத்தட்டி - கணபதியை. கை குலுக்கிப் பாராட்டினார்.

**இராணுவ ஆசிரியர் பள்ளியில் கணபதி :-** இராணுவ ஆசிரியர் பள்ளியில் கணபதியின் தோழர்கள் மட்டும் 180- பேர் துவக்குத்தில் கலந்து கொண்டனர். அதில் பெண்களும் அடங்குவர் துவக்கத்தில் இந்திய வரலாற்று ஆய்வுப் பயிற்சி நடந்தது. அதில் கணபதி முதலிடத்தினைப் பெற்றார். பின்னர் இராணுவ ஆசிரியர் பயிற்சியிலும் தேர்வு பெற்று இராணுவப் பயிற்சியாளராகவும் வரலாற்று ஆசிரியராகவும் செயல்பட்டார். மற்றும் பல்வேறு பதவிகளுக்கு மாற்றப்பட்டார். மலேயாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று மக்களைத் திரட்டினார். அவர்தம் தோழர்கள் வீரசேனன், டாக்டர் நாகை ராசமாணிக்கம் ஆகியோர் பிரச்சாரப்பகுதியின் பொறுப்பினையேற்றிருந்தனர் தோழர் வீரபாகு

படிப்பகம்

www.padippakam.com



கடற்படையின் ரகசிய அமைப்பாளராகச் செயல்பட்டார். தோழர் செயபாரதி பயிற்சி ஆசிரியராகவும், திரு.ராசகோபால் அதிகாரியாகவும், கே.எஸ்.நாதன் இரண்டாம் நிலை லெப்டினன்ட் ஆகவும், வீரவர்மன் ராணுவத் தரைப்படைப் பிரிவிலும், தோழர்கள் எம்.ஆர்.கோபால், எம்.ஆர் குருதேவன் ஆகியோர் இராணுவ ஆளெடுப்பு அதிகாரியாகவும் சிறப்பாகப் பணியாற்றினர்.

**இராணுவத்தில் குழப்பம் கணபதிக்கு தண்டனையா!**

இம்பால் முனையில் ஐ.என்.ஏ படைகள் போரிட்ட போது - சரியான போராட்ட காலத்தில் ஐ.என்.ஏ ராணுவத்திற்கும், ஜப்பான் படையினருக்கும் இடையே சலசலப்புகள் ஏற்பட்டன. இந்திய மண்ணில் ஜப்பானியக் கொடி பறக்கவிடப்படுவதைக் கணபதி உள்ளிட்ட ஐ.என்.ஏ படைப்பிரிவு தீவிரமாக எதிர்த்தது. அதே சமயம் பிரிட்டிஷ் இராணுவத்திலிருந்து சுதந்திர படையினில் வந்து சேர்ந்த பழைய படைப் பிரிவுக்கும் - புதிய படை பிரிவுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றின. பழைய படைபிரிவில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் - புதிய படைப்பிரிவில் கணபதி உள்ளிட்ட தமிழர்களும் இருந்தனர். ஐ.என்.ஏவில்பெரும்பாலான தமிழர்கள் கணபதியைப் பின்பற்றினர். அதன் காரணமாகக் கணபதி உள்ளிட்ட 120 தமிழர்கள் மீது துரோகிகள் என குற்றஞ்சாட்டப்பட்டுப் பழிவாங்க முயற்சிகள் நடந்தன. கணபதிக்கு மரண தண்டனையளிக்க கணபதி படைகளுக்கிடையே கலகம் செய்ததாகப் பழி சுமத்தப்பட்டது. இராணுவ விசாரணை நடைபெற்றது. அச்சமயம் நேதாஜி தாய்லாந்துக்கு வருகை புரிந்திருந்தார். தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கில் லெப்டினன் கர்ணல் கே.எஸ்.நாதன் நேதாஜியிடம் கணபதியின் மீதான விசாரணை குறித்த தகவலைத் தெரிவித்தார். படைகளுக்குள் கலகம் செய்யத் தூண்டிவிடக் கணபதி முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டானதால் கணபதியைச் சந்திக்க தான் விரும்பவில்லையென்று நேதாஜி தெரிவித்தார் எனினும் நேதாஜி அவர்கள் கணபதியின் துடிப்பும் - வேகமும் அவர் கலகம் செய்திருக்க மாட்டார் - உரிமை பிரச்சினைகளைக் கிளப்பியிருப்பார்

படிப்பகம்

www.padippakam.com



என்று உள்ளுணர்ந்து விசாரணை களத்துக்கு வந்திருந்து - ராணுவ விசாரணை அறையின் அடுத்த அறையில் அமர்ந்து விசாரணையை மிகக் கவனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். தீரர் கணபதியின் வாதங்கள் பழைய பிரிட்டிஷ் தளபதிகளுக்கு இருந்த பதவிவெறி, அதிகாரப் போக்கு, புதியபடை வீரர்களை அலட்சியப்படுத்தும் போக்கு, எப்படியாவது பிரிட்டிஷ் வெற்றி பெற வேண்டும் என்ற அவர்களது நப்பாசை போன்றவற்றையெல்லாம் எதிர்த்து நடத்திய போராட்டம் தான் கணபதி நடத்திய போராட்டம் என்பதையுணர்ந்து மதியூகியான நேதாஜி கணபதியை வரவழைத்துச் சந்தித்துப் பல விவரங்களைக் கேட்டறிந்து கொண்டு, அவர் மேல் சுமத்தப்பட்ட அனைத்து குற்றச் சாட்டுக்களையும் திரும்பப் பெற ஆணையிட்டதுடன் கணபதியைப் பாராட்டி விட்டு இம்பால் படைத்தளம் சென்றார். இந்நிகழ்ச்சியின் மூலம் தீயிலிடப்பட்ட சொக்கத் தங்கமாகக் கணபதி மிளிர்ந்தார். கணபதியின் புகழ் ஐ.என்.ஏ ராணுவ வீரர்களிடையே மேலும் பரவியது. எவருக்கும் அஞ்சாத சுத்த வீரனாய் கணபதி மிளிர்ந்தார். கணபதியும் அவர்தம் தோழர்களும் பெரும் புகழ் அடைந்தனர். பின்னர் ஹிட்லரின் வீழ்ச்சி ஜப்பானைப் பலவீனப் படுத்தியது. இந்தியாவில் ஐ.என்.ஏ படைகளால் முன்னேற இயலாமல் போனது. மலாயாவில் கணபதியின் படை ஜப்பானியர்களின் கொடும் போக்கினால் ஜப்பானிய எதிர்ப்புப் படையானது. கி.பி.1945-ல் அமெரிக்கா ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டுகளை வீசி அதற்கு முன்னர் உலகம் கண்டிராத பேரழிவினை உருவாக்கியதால் ஜப்பானியப் படைகள் நிலை குலைந்தன. நேதாஜி ஆங்காங்கே ஐ.என்.ஏ படைகளைக் கலைத்துவிடும்படியும் படை வீரர்களுக்கு வேண்டிய பண உதவியினை அளித்து அனுப்பும்படி ஆணையிட்டார். அந்நிலையில் எவரும் எதிர்பாராத அதிர்ச்சி தரத்தக்க நேதாஜியின் மறைவு படைகளை ஸ்தம்பிக்க வைத்தது. ஐ.என்.ஏ வரலாற்றுப் படையாக மாறியது. கணபதி நேதாஜியின் மனதைக் கவர்ந்த மாவீரன் ஆவார்.

படிப்பகம்

www.padippakam.com

# 12. தோழன் எப்போதும் தோழனே

கம்யூனிஸ்டுகள் எங்கிருந்தாலும் - எவ்வடிவத்திலிருப்பினும் உலகம் முழுவதும் ஒரே விதமாகச் சிந்திக்கின்றார்கள். செயல்படுகின்றார்கள் என்பது முதலாளித்துவ உலகம் வியக்கும் ஓர் கூற்றாகும். அதே போன்று இடதுசாரிச் சிந்தனையாளர்களும் எங்கிருந்தாலும் எவ்வடிவம் மேற்கொண்டாலும் ஒரே விதமாகச் சிந்திப்பார்கள் செயல்படுவார்கள். ஆதிக்கமும் அடக்குமுறைகளும் எங்கெங்கெல்லாம் தோன்றுகின்றதோ அவைகளை எதிர்த்துக் குரல் கொடுத்து இயக்கம் அமைத்துப் போராட வேண்டிய கடமை கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு. அதன்படியே மலாய் கம்யூனிஸ்டு கட்சியின் முன்னணியாளர்களான தோழர்கள் கணபதியும் - குருதேவனும் மாவீரன் நேதாஜியவர்கள் தேச விடுதலைக்காக அழைத்தபோது ஐ.என்.ஏ படைதனில் தோழர் களோடு இணைந்து போராடினார்கள்.

சுதந்திரப் போராட்டமாயினும் சரி வேறு எந்த வகையான போராட்டங்களாக இருப்பினும் சரி தாய் நாட்டு மக்கள் எடுக்கும் போராட்ட நிலையும் - உலகின் பிறபாகங்களில் வம்சாவளி வழி மக்கள் எடுக்கின்ற நிலையும் மாறுபட்டு அமைந்து விடுகின்றன. தாயகப் போராட்டததினை விட வீறுகொண்ட மக்கள், வம்சாவளி வழி மக்கள். இவ்வேறுபாடு நிலவியல் நிர்பந்தங்களும் தாயகத்தின் கூட்டுச் சமூக அல்லது பல்வகைக் கலப்பினச் சமூகத் தன்மை (Composite Society or Pluralistic nature of Society) இறுகிய வடிவமைப்பு - அகக்கட்டுமானம் - நெகிழ்தன்மை ஆகியவற்றைப் பொருத்ததாக அமைந்து விடுகின்றது. இந்திய விடுதலைப் போருக்காக உலக வீரன் நேதாஜியின் தலைமையில் உலக இந்தியர்களைத் திரட்டி இந்திய எல்லையைத் தொட்டு விட இயன்றது. ஆனால் தாயக இந்தியாவின் போராட்ட நிலை வேறு விதமாக மகாத்மா காந்தியடிகள் தலைமையில் அமைந்திருந்தது.

www.padippakam.com



நேதாஜியவர்கள் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தினை எதிர்க்க ஜெர்மன் - ஜப்பான் போன்ற நாடுகளின் கூட்டமைப்பில் களம் கண்டார். இங்கே காந்தியடிகளிடம் ஓர்முறை இந்திய விடுதலைக்கு பிரிட்டிஷ் பேரரசினை எதிர்க்கப்பிற நாடுகளின் ஆதரவினை ஏன் நடக்கூடாது என வினவியமைக்கு "Known Devil is better than Unknown Angel என்றார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் முழுச் சக்தியாகக் காந்தியடிகளின் தலைமை திகழ்ந்தது. இந்திய கம்யூனிஸ்டு கட்சி இந்தியக் கட்டுமானத்தில் அமைந்து விளங்கியது. மகாத்மா காந்தியடிகளின் போராட்ட அணுகு முறையில் -அஃதாவது ஒத்துழையாமை இயக்கத்தினைத் துவக்குவது, போராட்டத்தின் உச்சக் கட்டமாக வன்முறை சிறிய அளவில் நிகழ்ந்தவுடன் - வன்முறையைக் காரணம் காட்டிப் போராட்டத்தினை நிறுத்துவது - போன்ற போராட்ட அணுகுமுறைகளில் மன உளைச்சலுக்கு உள்ளான இளைஞர்களே - கி.பி. 1917 ருஷ்ய புரட்சியின் மாண்புகளை மனதில் எரியவிட்டு இந்திய கம்யூனிஸ்டு கட்சியினை கி.பி. 1925-ல் டிசம்பர் திங்கள் 26-ம் நாள் துவக்கினர். ஆயினும் பிரதானமாகத் தேச விடுதலையும் - சமூக விடுதலையும் நோக்கங்களாகத் திகழ்ந்தன.

பிரதான தேச விடுதலையின் போராட்டப் பெரு வடிவத்தினுள் இந்திய கம்யூனிஸ்டுகளின் விடுதலைப் போராட்ட வழிகள் அமைந்து காணப்பட்டன.

மலேயாவின் மலாய் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவினை மாவீரன் நேதாஜி வெளிப்படையாக இந்திய சுதந்திரத்துக்காக கோருகின்றார். தூர கிழக்கு நாடுகளின் ஏதுவான நிலையினை நேதாஜியவர்களுக்கு நகலாக அளித்தே - நேதாஜி சிங்கப்பூர் வந்தடைந்தார். ஜெர்மன் - ஜப்பான் இருநாட்டுக் கடற்படைகளின் உதவியுடன் சிங்கப்பூர் வந்திறங்கினார். இந்நிலையில் ஜப்பான் - சிங்கப்பூர் காங்கிரஸ் பிரமுகர்களும் அளித்த தகவல்களினடிப் படையிலேயே மலாயாவின் வலிமை வாய்ந்த கொரில்லா -

படிப்பகம்

www.padippakam.com



தலைவனான கணபதியின் கம்யூனிஸ்ட் படையினைத் தவிர்த்து மலேயாவில் இந்திய தேசிய படையினை கட்டமைக்க இயலாதென அறிந்து - "தோழர்களே நீங்களே கம்யூனிஸ்டுகள் என்று அறிவேன். இந்திய விடுதலைக்காக எனக்குத் தோள் கொடுங்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினை மாற்றிக் காட்டுவோம்" என முழங்கினார். ஆயுதப் புரட்சியாளர்களான கணபதி குருதேவன் - தோழர்கள் - தேச விடுதலைக்காக - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினைத் தகர்க்க நேதாஜியவர்கள் ஆயுதப் போராட்ட பலத்தினைக் கோரும்போது மறுத்திடத்தான் இயலுமா?

நாங்கள் கம்யூனிஸ்டுகள் தான் ஆனால் தேச விடுதலைப் போராட்டத்துக்குச் சளைத்தவர்கள் அல்ல. என கணபதி முழங்கினார். வெளிப்படையான கோரிக்கை - வெளிப்படையான ஏற்பு மாவீரன் கணபதியின் படை இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்தது. ஆயினும் இந்தியாவின் இம்பால் முனையில் இந்திய மண்ணில் ஜப்பானிய கொடி பறக்க விடப்படுவதை கணபதி உள்ளிட்ட ஐ.என்.ஏ படை தீரத்துடன் எதிர்த்தது.

ஒரு கம்யூனிஸ்டு எந்த வடிவம் எடுத்தாலும் அவன் கம்யூனிஸ்டே!

படிப்பகம்

www.padippakam.com

# 13. ஜப்பானியர்கள் பிடியில் மலேயா

உலகம் இரண்டு கொடுமையான பெரும் போர்களைக் கண்ட தழும்புக்கு சொந்தமானது. ஒன்று முதல் உலகப் பெரும் போர் கி.பி.1914 முதல் கி.பி.1918 வரையிலான பெரும் போர். இரண்டாவது உலகப் பெரும் போர் கி.பி.1939 முதல் கி.பி.1945 வரை உலகைக் குலுக்கியது. மூன்றாம் உலகப் போர் வருமா - வராதா என்று சிலர் தங்கள் மூளையைக் குழப்பிக் கொண்டு கருத்தரங்கம் நடத்தி வருகின்றார்கள். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளான இந்நாட்களில் உலகம் முழுவதும் தொடர்ச்சியான பெரும்போர் இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் நடைபெற்றுக் கொண்டு வருவது விரிவான - பரவலான தொடர்ச்சியான மூன்றாம் உலகப் போராகும். இவ்வாறு எழுதுவதன் காரணமாக ஒடுக்கப்பட்ட இனங்களின் ஒடுக்கப்படுகின்ற இனங்களின் நியாயமான போராட்டங்களை எவரும் எதிர்த்திட இயலாது. எவ்விதக் காரணமுமின்றி மதம், சாதி, ஓர் இனம் பிரிதொரு இனத்தினை அடக்கியாளும் அவா ஆகியவைகளின் விளைவான நேரடி, மறைமுகப் பொருளாதாரத் தடைகள், உயிர் இழப்புகள். பட்டினிச் சாவுகள், உருவாக்கப்பட்ட வறுமை ஆகிய வல்லரசுகளின் மூன்றாம் உலக நாடுகளின் மீதான தாக்குதலைத்தான் மூன்றாம் உலகப் பெரும் போர் என்று குறிப்பிடுகின்றேன். வேறு வழியின்றி வல்லரசுகளை எதிர்க்கின்ற துணிவுமின்றி இதில் வாழப் பழகிக் கொண்டது உலகம் இந்த மூன்றாம் உலகப் பெரும் போர் நிகழ்த்தி வரும் மரணங்களின் எண்ணிக்கை - முதல் மற்றும் இரண்டாம் உல்கப் பெரும் போர்களின் உயிர் இழப்பைக் காட்டிலும் அதிகமாக இருக்கும்.

கி.பி.1936 முதல் 1945 வரையில் உலகைக் குலுக்கிய இரண்டாம் உலகப் பெரும் போர் பாதிக்காத நாடுகளே இல்லையெனலாம் உலகின் பெரும் பான்மையான நாடுகள் இதனால் பாதிக்கப்பட்டன. ஜப்பானிய பெருநகரங்களான ஹிரோஷிமா - நாகசாகி

படிப்பகம்

www.padippakam.com



அணுகுண்டு வீச்சு இலட்சக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கியது. பல லட்சக்கணக்கான ஊனமுற்றோர்களை உருவாக்கியது அக்கொடும் குண்டுவீச்சு. மாபெரும் ஜப்பானிய கட்டடங்களைக் கண நேரத்தில் சிட்டுக்கட்டுகளாய் உதிர்த்தன. மேற் குறிப்பிட்ட இரு நகரங்களிலும் சில பகுதிகளில் இப்போது பிறக்கின்ற குழந்தைகளுக்கும் அணுக்கதிர் வீச்சுப் பாதிப்புகள் உள்ளதாக ஜப்பானிய செய்திகள் கூறுகின்றன. அத்தகைய ஜப்பான் அரசும் ராணுவமும் இரண்டாம் உலகப் போரின் போது பிற இன தேச வீரர்களை, தாங்கள் போரின் போது கைப்பற்றிய பகுதி வாழ் மக்களை நடத்திய விதம் கொடுமையானது. விரல்களை வெட்டி எறிதல், ஊனப்படுத்துல் போன்ற கொடுமையான தண்டனைகளுக்குப் பொதுமக்கள் ஆளானார்கள். பர்மாவை ஜப்பான் பிடித்திருந்த சிலகாலம் பர்மிய மக்களை மீண்டும் பிரிட்டிஷ் எப்போது வெல்லுமோ என்று ஆதங்கப்படவைத்தது. அதேபோன்று மலேயாவிலும் ஜப்பானியர்கள் ஆட்சி நடத்தியவிதம் பிரிட்டீஷ் மேலாண்மையே பரவாயில்லை என்று பொதுமக்கள் நினைக்குமளவுக்கு பாசிசம் தலை விரித்தாடியது. பிரிட்டிஷ் மேலாண்மையில் காலனி நாடுகளாய் இருந்த ஒரே காரணத்தினால் காலனி நாடுகளான இந்தியா மலேயா பர்மா போன்ற நாடுகள் உலகப் போரினில் ஈடுபடுத்தப் பட்டன. பாசிச ஜப்பானிய அரசு மலேயாவைக் கைப்பற்றியதும் உரிய ஆட்சி முறை அமலானது கொடுஞ்சுவர்களுடன் கூடிய பாசிச மரணக் கயிறாக ஜப்பானிய ராணுவ அரசு திகழ்ந்தது. ஜப்பானிய ராணுவ அரசால் கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்ட தலைவர்கள் பலர். திருமங்கலக்கோட்டை ஆறுமுகம், எனும் கம்யூனிஸ்டு தலைவர் கொல்லப்பட்டார். ஊதியமேயில்லாத உழைப்புக்குக் கட்டாயப் படுத்தப்பட்டு உழைப்பு உறிஞ்சப்பட்டது. மக்கள் பிழிந்தெடுக்கப் பட்டனர். உணவுத் தட்டுப்பாடு, உடைத்தட்டுப்பாடு என வாடிய மக்கள் சிந்திய உதிரத்திற்கும், கண்ணீருக்கும் தட்டுப்பாடே இல்லை கட்டாய ஜப்பான் மொழிக் கல்வி, கட்டாய ஜப்பான் நாகரிகம் கடைப்பிடித்தல் எனப் பாசிசத் தாக்குதல்கள் உச்சக்கட்டத்தில் நிலவின. அடிஉதை, அடிக்கப்படும் போது அசைந்தால் மரணஅடி இவைகள் ஜப்பானிய ராணுவத்தின் சிறப்பம்சங்களாகத் திகழ்ந்தன.

படிப்பகம்

www.padippakam.com



வெள்ளைக்கார முதலாளிக்கு உழைத்த தொழிலாளர்கள் இப்போது ஜப்பானிய எஜமானர்கள் அளிக்கும் இரண்டு படி அரிசிக்காக உழைக்க வேண்டியதாயிற்று. உழைப்பவர்களுக்கு ஊதியம் அளிக்க மறுத்தது. ஜப்பானியர்கள் உணவுப் பொருட்களைக் கூலியாக அளந்து கொடுத்தனர். உயிர் இருக்குமளவுக்கே உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. உணவுக்கும் உடைக்கும் மக்கள் ஆலாய்ப் பறந்தார்கள் பசியும் பட்டினிச் சாவும் தலைவிரித்தாடியது. பெண்களின் நிலை கவலைக்கிடமானது.

அடக்கு முறைகளும், அக்கிரமங்களும் எத் திசையிலிருந்து புறப்பட்டுப் புயலாகத் தாக்கினாலும் அதனை எதிர்த்துப் போராடி அழிக்கும் வல்லமை படைத்த இலட்சியக் காளைகளின் பாசறை கம்யூனிஸ்ட் கட்சி ஆகும். ஜப்பானிய அடக்கு முறை ஆட்சியை எதிர்க்க வேண்டிய (பொறுப்பினைக்) கணபதி ஏற்றார். அடிமைப் புழுக்களையும் போர்ப் பரணிப் பாடச் செய்யும் புரட்சி தளபதியல்லவா மாவீரன் கணபதி! விளைவு ஜப்பானிய எதிர்ப்பியக்க படையாகக் கணபதியின் படை மாற்றமடைந்தது. கணபதியின் பலம் கண்டு ஜப்பானிய ராணுவ அரசே துணுக்குற்றது. மலாய் மக்கள் ஜப்பானிய அடக்கு முறைகளைக் கண்டு வாயடைத்துப் போனபோது கணபதி மீண்டும் போர்க் கவசமணிந்தார். உலகமே ஒரு அநியாயத்தைக் கண்டு வாயடைத்து நின்றாலும் ஓர் கம்யூனிஸ்டு கிளர்ந்தெழுவான். அவனால் செயலிழந்து நிற்க இயலாது. மேலும் ஜப்பானும் அதன் உறவு நாடுகளும் கம்யூனிஸ விரோதிகளாய்த் திகழ்ந்தவை. கணபதியும் தோழர்களும் நேதாஜியின் படைதனில் இந்திய விடுதலைக்காகச் சேர்ந்தனரே தவிர ஜப்பான் ஆக்கிரமிப்புக்காக அல்ல. காலம் கணபதிக்கு ஜப்பானிய எதிர்ப்புப் படையெனும் ஆயுதப் படையைத்

படிப்பகம்

www.padippakam.com



தோற்றுவிக்கக் கட்டளையிட்டது. மலாய் கம்யூனிஸ்டு கட்சி அதன் தலைமையேற்றது. கம்யூனிஸ்டு கட்சியின் தலைமையென்பதால் கம்யூனிஸ்டுகள் அனைவரும் ஜப்பானை எதிர்க்க ஒன்று சேர்ந்தனர் ஜப்பானிய எதிர்ப்புப் படை நிலைத்த நீடித்த சக்தியாகத் திகழ்ந்தது. கணபதியவர்களின் வாழ்நாளில் அவர் இல்லாத முற்போக்கு இடதுசாரி இயக்கங்களே இல்லையெனலாம்.

சிங்கப்பூரில் குண்டுவீச்சு ஐ.பி.டி அமைப்பு :- சிங்கப்பூர் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்டது. சிங்கப்பூர் ஒரு தலை சிறந்த நகரமாகத் திகழ்ந்ததால் அது எதிரிகளின் இலக்காகியது. குண்டு வீச்சினால் மக்கள் பாதிக்கப்பட்டனர். பொது மக்களின் பாதுகாப்புச் சேவைக்காக - உயிர்காக்க சிங்கப்பூரிலும் மலேயாவிலும் இந்தியன் பாசிட்டிவ் டிபன்ஸ் (Indian Positiv Defence) என்ற அமைப்பு உருவானது. அவ்வமைப்புத்தான் குண்டுவீச்சினால் பாதிக்கப் பட்டோரின் ஆரம்ப சிகிச்சை முகாம் ஆகும். அம்முகாமின் பொறுப்புகள், அடிபட்டவர்களுக்கு உடனடியாகத் தற்காலிகக் கட்டுகளை கட்டுவது அவர்களை சுமந்து சென்று அவசர உதவி ஊர்தியில் (ஆம்புலன்ஸில்) ஏற்றுவது, மருத்துவமனைக்குக் கொண்டு செல்வது, ஆகியவை ஆகும். அப்பணிகள் சாதாரணமானவையாகத் தோன்றினாலும் களத்தில் பணியாற்றும் போதுதான் அதன் முக்கியத்துவமும் - அப்பணிக்கு அதிக மன உறுதியும் அவசியம் என்பதும் புரியவரும். ஒரு புறம் துப்பாக்கிகள் குண்டு மழை பொழிய பீரங்கிகள் கோபத்துடன் சிரிக்க - விமானப்படை குண்டுகளை வீசப் போர் மேகங்களுக்கிடையே மின்னல் போல் சுறுசுறுப்பாக பணியாற்ற வேண்டும். கடுமையான மன உறுதி விரைந்து பணியாற்ற வேண்டிய கடமை, மறுபுறம் தொண்டுணர்வோடு நாட்டுப்பற்றோடு - இயக்க உணர்வோடு தாம் ஆற்றுகின்ற பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பெரும் பொறுப்பு ஆகிய அனைத்தும் போரினைவிட அதி முக்கியத்துவம் பெற்றதாக ஐபிடியினை உருவாக்கியது. ஐபிடியின் அனைத்து அலுவலகங்களுக்கும் முழுப் பொறுப்பு வகித்தவர்

படிப்பகம்

www.padippakam.com



கணபதியாவார். குருதி பொங்கி வழியும் சிதைந்த உடல்கள் - நைந்து போன சதைப் பிண்டங்கள் - எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கும் குறையுடல்கள், வீழ்ந்து கிடக்கும் மரண அணி வகுப்புகள், உடலின் கிழிந்த பாகங்கள் வெளியே தெரிய மரண ஓலமிடும் காயப்பட்டவர்கள், போர்த் தீயில் கருகிய சந்தன மரக்காடாய்ச் சரித்திரம் புகழ் வீரர்களின் உடல்கள் - சூறாவளியில் துவைக்கப்பட்ட கலங்கிய காடு போன்று -அடிபட்டு - குண்டடிப்பட்டு - குறையுடல்களின் வேதனை சூழ் காட்சி - அத்தகைய சூழ்நிலையில் பணியாற்றிய சிறப்பான அமைப்பான ஐ.பி.டியினைப் பாராட்டாமலிருக்க இயலாது. போர்ப் பணித் தளபதி பிணி நீக்கும் புனிதப் பணியில் ஈடுபாடு மாமனிதனின் மகுடத்தில் மற்றுமொரு சிறப்பு. அதனால் தான் இந்நூலின் முன் பகுதியில் **"கணபதியவர்களுக்குப் பல முகங்கள்"** என்று குறிப்பிட்டுள்ளேன். ஐ.பி.டியின் அலுவலகங்கள் இருபத்தி நான்கு மணி நேரமும் சுறுசுறுப்போடு பணியாற்றியன. அதில் ஷிப்டு முறை எனப்படும் மாற்று முறையில் கணபதியும் தோழர்களும் செயல்பட்டனர். மரணத்தின் ஒத்திகையாம் மனித உறக்கத்தினைப் புறக்கணித்துப் பணியாற்றியது கணபதியின் சமூக சேவைப்படைத் துஞ்சாது பணியாற்றிய கனிவு நிலா கணபதி ஓயாமல் உழைக்கும் உலா வரும் சூரியன் - கணபதி ஐ.பி.டி அமைப்பின் தொண்டர்களுக்கு இராணுவ முறையில் பதவிகள் அளிக்கப் பட்டிருந்தன. தளபதி கணபதி மற்றும் எம்.ஆர். குருதேவன், எம்.ஆர்.கோபால், கமலப்பன், எம்.ஆர். சற்குணம் ஆகியோர் மூன்று நட்சத்திர அதிகாரிகளாய்ப் பணியாற்றினர். மனித நேயத்திற்கு மொழியோ - மதமோ - இனமோ - நாடுகளோ தடை போடவியலாது. எதிரிகளை அழித்தொழிப்பதில் புலியாக திகழ வேண்டிய வீரன் மனித நேயத்தில் மலராகச் சிரிக்க வேண்டும் மனித நேயத்தில் மேகமாகி நின்று பணிபுரிபவன் எதிரிகளை அழித் தொழிப்பதில் புலியாகிச் சீற வேண்டும். தற்காப்பு என்பது ஒரு வீரனின் உச்சி நேர நிழல் - சுயமரியாதை வீரனின் மார்புக் கவசம். தாய்மொழியும் - தாய் நாடும் ஒரு வீரனின் இரு கண்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுவது வீரனின் உயிர் மூச்சு மனிதன் தன்னைச் சுற்றிப் பல அரண்களை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் மனித நேய மனிதர்களின் புனித இதயம் எல்லைகளைக் கடந்து எழக்கூடியது. நியாயத்தை நிலைநாட்டத் துடிக்கும் வீரனுக்கு - வீரர்களைப் பலப்படுத்த நினைக்கும் வீரனுக்கு பாக் நீரிணைப்பும் ஒரு சிறு வாய்க்காலே. மக்மகான் எல்லைக்கோடும் சிறு கிறுக்கலே ஆகும். மனித நேயத்திற்குக் கடல்களும் சிறு வாய்க்கால்களே. மலைகளும் தலைவணங்கும் மலர்களே! கணபதியின் தலைமையிலான ஐ.பி.டி மலாயாவின் அனைத்துச் சமூகங்களிடமும் உன்னத மதிப்பை ஈட்டியது.

www.padippakam.com

# 14. ஜப்பானியர்கள் பின்வாங்கிய பிறகு

**மலாய்க் கம்யூனிஸ்டு கட்சிப் புனரமைப்பு :-** மலாயாவில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் ஐ.என்.ஏ கலைப்பு போன்றவைகளால் மலாய் கம்யூனிஸ்டு கட்சி புனரமைக்கப்பட்டது. ஐ.என்.ஏ படைக்குச் சென்ற இந்தியர்கள் மலாய் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் திரும்பினார்கள். மலாய் சீன - இந்திய தேசிய இனங்களை ஒருங்கிணைத்த விரிவான மலாய் கம்யூனிஸ்டுக் கட்சி ஈடு இணையற்ற பேரியக்கமாக நிமிர்ந்து நின்றது. மத்திய கம்யூனிஸ்டு கட்சியில் மூன்று தேசிய இனங்களுக்கும் மூன்று மத்திய கமிட்டிகளிருந்தன. இந்திய மத்திய கமிட்டியில் பொதுச் செயலாளர் ஆர்.பாலன், எம்.ஆர்.குருதேவன், எஸ்.ஏ.கணபதி, ஆர். முருகையா, என்.வீரவர்மன், கோ.வி. பாரதி மோகன், எஸ்.எம்.நாயர் ஆகியோர் செயல்பட்டனர். அகில மலாயாவின் வேலையைத் திட்டமிட்டுச் செயல்படும் எல்லா இடங்களிலும் கட்சியை அமைக்கும் ஸ்தாபனப் பொறுப்பை எம்.ஆர்.குருதேவன் கவனித்தார். மூன்று தேசிய இனங்களின் மத்திய கமிட்டிகளை இணைத்துத்தான் பொது மத்திய கமிட்டி செயல்பட்டது.

**இரட்டையாட்சி :-** இரண்டாம் உலகப்பெரும் போருக்குப் பின்பு முறையாக மீண்டும் மலேயாவில் பிரிட்டீஷ் ராணுவ ஆட்சியேற்பட்டது. மீண்டும் பொறுப்புக்கு வந்திருந்தாலும் அரசு, போர்க் குணம் கொண்ட அனுபவமிக்க கம்யூனிஸப் படைகளை எதிர்க்கும் வலுவிழந்து காணப்பட்டது. காரணம் கம்யூனிஸ்டு படைகள் ஜப்பானியர்களின் எதிர்ப்புப் படையாகவும் ஐ.என்.ஏவின் திறமைமிக்க படையாகவும் செயல்பட்டதால் அனுபவங்கள் மிக்கதாக விளங்கியது. நாடெங்கும் செங்கொடிகள் பறந்தன. செம்படை நாடு முழுவதும் உலா வந்தது. பிரிட்டிஷ் அரசு மலேயா கம்யூனிஸப் படைகளின் அதிகாரத்தினைக் குறைக்க எடுத்த எம்முயற்சியும் வெற்றி பெறவில்லை. நகர்ப்புறங்களில் பிரிட்டீஷ்

படிப்பகம்

www.padippakam.com



ஆட்சி கிராமப்புறங்களில் கம்யூனிஸ்டு மக்களாட்சி, சில மாதங்களில் இரவில் கம்யூனிஸ ஆட்சி, பகலில் பிரிட்டீஷ் ஆட்சி என்று இருந்த நிலையில் சிலரின் துரோகச் செயல்களால் கம்யூனிஸ்டு ஆட்சி நிலைக்க இயலாமல் போனது. எனினும் செம்படைகள் துரோகிகளை வியட்நாம் வரை துரத்திச் சென்று சுட்டு வீழ்த்தித் திரும்பின. இத்தகைய முரண்பாடுகளைப் பயன்படுத்தி அக்காலத்தில் தொழிற்சங்க இயக்கங்கள் மலேயாவில் விரிவு படுத்தப் பட்டன. ஏராளமான தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டன. இதில் கணபதியவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொழிலாளர் துறையைப் பயன்படுத்திப் பல தொழிற்சங்கங்களை வளர்த்தெடுத்தார். தனது தோழர்களையும் பழைய ஐ.என்.ஏ வீரர்களையும் இணைத்துத் தொழிற்சங்கப் பணிகளுக்குப் பயன்படுத்தினார். தொழிலாளர் களுக்கும் அரசுக்கும், தொழிலாளர்களுக்கும் தோட்ட முதலாளிகளுக்கும் இடையே நிலவிய முரண்பாடுகளை கூர்மைபடுத்தி பலவீறு கொண்ட தொழிலாளர் போராட்டங்களின் மூலம் தொழிற்சங்கங்களை விரிவுபடுத்தினர். அவர்களுக்கு வர்க்கப் போராட்ட சரித்திரங்களைப் போதித்தார். ஏகாதிபத்தியங்களின் ஏமாற்றுத் தந்திரங்களை அம்பலப்படுத்தினர். கணபதியவர்களின் அறிவு - அனுபவம் அவரையே மூன்று தேசிய இனங்களின் வர்க்கத் தலைவனாக உயர்த்தியது. தோழர் ஆர். பாலன், கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்தியப் பகுதிச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் முருகையா சிறப்பு மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர்கள் அழகேசன், கிருஷ்ணமூர்த்தி, சுதர்மன், சோமு, ஆர்.மோகன், முருகையா, பாரதிமோகன், கே.எஸ்.நாதன் போன்றவர்களும் தொழிற் சங்கத் தலைவர்களாக உயர்ந்தனர். அதன் விளைவாக மலேயா தொழிற் சங்க சம்மேளனம் உருவாக எளிதானது.

படிப்பகம்

www.padippakam.com



**துணையாகவும், சிறப்பாகவும் செயலாற்றிய பிற தொழிற் சங்கங்களும் தோழர்களும் :**

*(1) நகரசுத்தி தொழிலாளர் சங்கம் - தலைமை சீனிவாசன், மற்றும் தோழர்கள் சுவாமிநாதன், சுந்தர்ராஜன், சின்னதம்பி.*

*(2) பொதுப்பணித்துறைத் தொழிலாளர் சங்கம் - தலைமை முத்தைய்யா, மற்றும் தோழர் கருப்பைய்யா.*

*(3) துறைமுகத் தொழிற்சங்கத் தோழர்கள் கிருஷ்ணசாமி, சமரசன்.*

*(4) ஆர்.ஏ.எப் விமானத் தொழிலாளர் சங்கம் - தலைமை வீரசிம்மன், மூக்கைய்யா*

*(5) சுருட்டுத் தொழிலாளர் சங்கம் - தோழர்கள் சீர்காழி மேகநாதன், அமீது.*

*(6) எண்ணெய்த் தொழிலாளர் சங்கம் - தலைவர் தங்கவேலு, மற்றும் ஆலங்கோட்டை ரங்கராசன்.*

*(7) புட்டோ தொழிற்சங்கம் - தலைமை கருப்பைய்யா*

*(8) திம்மினீஷ் தொழிற்சங்கம் - தோழர்கள் கே.ராமசாமி, தேவகிருபை*

*(9) செங்கல் தொழிலாளர் சங்கம் - வி.கே.ஜீவானந்தம்*

*(10) லேமினெட் தொழிலாளர் சங்கம் - மயில்ராவணன்.*

*(11) ஜீமாஸ் தொழிற்சங்கம் - வீராசாமி*

*(12) பொது தொழிலாளர் சங்கம் - சோமசுந்தரம்*

*(13) டிராம்வே தொழிலாளர் சங்கம் - என்.ஆர்.சாமி, பெரிய கணபதி*

*(14) தபால்தந்தி சங்கம் - வீரசேனன்*

*(15) (பத்து) ஆராஸ் தொழிற்சங்கம் - அந்தோணிசாமி, கருப்பைய்யா, மோகன்*

*(16) ரப்பர் தொழிற்சங்கம் - கிருஷ்ணமூர்த்தி, குணசேகரன், எஸ்.எம்.ராமசாமி*

படிப்பகம்

www.padippakam.com



(17) கட்டிப்படை தொழிலாளர் சங்கம்

(18) இரும்புத் தொழிலாளர் சங்கம் - வீரவர்மன், துளசி, வீரசேனன்.

(19) மருத்துவமனை தொழிலாளர் சங்கம், - சோமசேகரன், மதிவாணன், இராசகோபால்

(20) ஓட்டுநர் சங்கம் எஸ்.ஆர் சாமி, கோபால், கோவிந்தசாமி

(21) முக அழகுத் தொழில் தொழிலாளர் சங்கம் - மதிவாணன், ராசகோபாலன், இளங்கோவன்

(22) பூமாலைத் தொழிலாளர் சங்கம் - இராமைய்யா

(23) ஆசிரியர் சங்கம் - இராராசமாணிக்கம், செல்லைய்யா மற்றும் பல தோழர்கள்

மேற்கண்ட சங்கங்கள் மலேயாவிலும் - சிங்கப்பூரிலும் பாட்டாளிகளை ஆர்த்தெழச் செய்தன.

**பத்து ஆராஸ் போராட்டம் :-** கி.பி.1943-ல் மலாயாவில் நடைபெற்ற பத்து ஆராஸ் போராட்டம் மலாய அரசையே திகைக்க வைத்தது. பத்து ஆராஸ் என்பது நிலக்கரிச் சுரங்கம் எனப் பொருள்படும். நிலக்கரிச் சுரங்கப் பகுதியின் மூன்று தேசிய இனத் தொழிலாளர்களும் கம்யூனிஸப் பற்றுடையவர்கள். ஆயுதப் படைகளும் அங்குண்டு ; கொரில்லாத் தாக்குதல் பயிற்சியும் உண்டு. அத்தகைய சூழ்நிலையில் சுமார் 14,000 தொழிலாளர்கள் 45 நாட்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்தம் செய்தனர். கம்யூனிஸக் கொரில்லாப் படைகள் நவீன ஆயுதங்களைக் கொண்டிருந்ததன் காரணமாக மோதலுக்குப் பயந்து அரசுப்படைத் தாக்குதலைத் துவக்காமல் தயங்கி நின்றது. பணம், பதவி, பட்டத்தின் மூலம் வெற்றி பெற நினைத்த அரசு இறுதியில் தோல்வியைத் தழுவியது. 45 நாட்கள் தொடர்ச்சியான போராட்டத்திற்குப் பிறகு பல கோரிக்கைகளை இயக்கம் வென்றெடுத்தது. அவ்வெற்றிக்கு முழுப் பங்களித்தவர்கள் தோழர்கள் ராமதாசு என்ற பாப்பாநாடு

படிப்பகம்

www.padippakam.com



அந்தோணி சாமியும், கணபதியவர்களும் ஆவார். மற்றும் அவர்களிடமிருந்து சிறப்பித்தவர்கள் தோழர்கள் பி.அழகன், சகோதரர்கள், டி.கே.குருப் எஸ்.எம்.ராமசாமி சுப்பைய்யா, காதர், குணசேகரன், மணியன் மற்றும் பலர் இவ்விடுதலைப் போராட்டத்தின் துடிப்பு உலகம் முழுவதும் பரவியது. உலகமக்களின் கவனத்தை ஈர்த்தது.

**வெள்ளை அறிக்கை :-** மலேய அரசு வெளியிட்ட நிலவுடைமைக் கொள்கையே வெள்ளை அறிக்கையாகும். மலேய அரசு தனது நில அறிக்கை, மக்களின் சுகவாழ்விற்கும், வளமைக்கும், சுதந்திரத்திற்கும், சனநாயகத்திற்கும் வழிவகுக்கும் அறிக்கையென தன்னைத்தானே புகழ்ந்து கொண்டது. ஆனால் அவ்வறிக்கை மலாய் மக்களைப் பழைய கால முறைப்படி அடிமைப்படுத்தவும், சுரண்டவும், நசுக்கவும் அரசின் அதிகாரத்தினைத் தந்திரமாக வலுப்படுத்தவும் கூடிய அறிக்கையாக இருந்தது. அதனைப் புரிந்து கொள்ள இயலாத மக்களும் பிற்போக்கு அரசியல்வாதிகளும் அதனை வரவேற்றனர். ஆனால் முற்போக்குவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் தொழிற்சங்க இயக்கங்களும் அதனைக் கடுமையாக எதிர்த்தன. அதன் விளைவாக மலேயாவில் எழுந்ததே ஐக்கிய முன்னணி ஆகும். **"ஐக்கிய முன்னணி"** வெள்ளை அறிக்கையை எதிர்த்து **"நீல அறிக்கை"**யை அறிவித்தது. அதுவே மலேயா போராட்டத்தின் யுத்தப் பிரகடனமாக அமைந்தது.

**ஐக்கிய முன்னணி :-** மலேயாவின் தேசிய இன இயக்கங்கள் மூன்றும் ஒன்று சேர்ந்த அமைப்புகள் பல உண்டு. அதேசமயம் தனித்தனியான அமைப்புகளும் உண்டு. சுயேச்சையான போராட்டங்கள் நடைபெறினும், அனைத்துப் போராட்ட முயற்சிகளையும் ஒன்றிணைத்த போராட்டங்களும் காலத்தின் கட்டாயமாய்த் திகழ்ந்தன. எனவே மலேயா கணபதி, கணபதியைப் போன்றே செல்வாக்கு மிகுந்து விளங்கிய டான்செனலாக், சம்சுதீன் ஆகியோர் இணைந்து மலேயாவின் மூன்று தேசிய இனப் போராடும்

படிப்பகம்

www.padippakam.com



அமைப்புகளை ஒன்றிணைத்து ஐக்கிய முன்னணியினை அமைத்தனர். அவ்வமைப்பின் தலைவர் டான் சென்லாக் ஆவார். ஐக்கிய முன்னணி மலேயா அரசின் வெள்ளை அறிக்கையைப் பகுதி பகுதியாகப் பிரித்து மக்கள் மத்தியில் விமர்சனம் செய்து அரசின் வெள்ளை அறிக்கையை அம்பலப்படுத்தியது. கணபதி மிகக்கோபாவேசமாக உரையாற்றினார். ஜப்பானியர்களின் குண்டு வீச்சின் போது மலாய் மக்களை அகதிகளைப் போல் விட்டு விட்டுப் போன பிரிட்டிஷ் அரசு என அரசினைக் கணபதி குற்றச்சாட்டினார். கணபதியின் தலைமையில் முன்னாள் ஐ.என்.ஏ வீரர்கள், ஜப்பானிய எதிர்ப்புப் படைகள், மக்கள் கூட்டு நடவடிக்கை கமிட்டி, பாட்டாளிகள் ஆகியோர் அணிவகுத்து நின்றனர். எப்படியும் அறிக்கையை நடைமுறைப் படுத்த அரசும், அதனையெதிர்த்துச் சிம்மக் குரலாய் கணபதியும் அவர்தம் தோழர்களும் பலப்பரிட்சைக்கு தயாராகினர். வெள்ளை அறிக்கையினை எதிர்த்து கணபதியும் தோழர்களும் பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தனர். மலாய், சீன, ஆங்கில, கம்யூனிஸ செய்தித் தாள்களும், வாலிபசக்தி, சனநாயகம், முன்னணி, பாட்டாளிமுரசு போன்ற தமிழேடுகளும், அரசின் வெள்ளை அறிக்கையை அம்பலப்படுத்தியதுடன், அதற்கெதிரான பாட்டாளி வர்க்கப் போராட்டச் செய்திகளையும், மக்கள் எழுச்சியையும், கணபதியின் போராட்டப் பணிகளையும் செய்திகளாக வெளியிட்டுத் தொண்டாற்றியன.

படிப்பகம்

www.padippakam.com

# 15. சிங்கப்பூரில் ஐ.என்.ஏ. சின்னம்

சிங்கப்பூரின் கடற்கரை ஓரத்தில் நகராட்சித் திடலில் ஐ.என்.ஏ தியாகிகள் நினைவுச் சின்னம் தோழர்கள் தீரன் கணபதி மற்றும் வீரசேனன் தலைமையில் உருவாக்கப்பட்டு கம்பீரமாக தியாகிகளின் தியாகத்தினை உயர்த்திப் பிடித்து கொண்டிருந்தது. மலேயாவில் ஜப்பானியர்கள் சரணடைந்த பிறகு மீண்டும் பிரிட்டிஷ் காலனி அரசு தோன்றிப் பின்னர் அம்மாபெரும் ஐ.என்.ஏ தியாகச்சின்னம் தகர்க்கப்பட்டது. அதனைக்கண்டு இந்தியர்கள் அரசியல் வேறுபாடுகளின்றிக் கொதிப்படைந்தனர். அதனைத் தொடர்ந்து நேதாஜியின் நினைவு நாளன்று இரவோடு இரவாக ஓர் நினைவுச் சின்னத்தினை தோழர்கள் கணபதி- குருதேவன் - வீரசேனன் ஆகியோர் நிறுவினர். அதனை அகற்றும் உறுதிப்பாடு காலனி அரசுக்கு அவசரச்சட்டம் காலம் வரையில் வரவில்லை.

## 15(அ). மரணரயில்வே

மரணரயில்வேயா அது என்னவென்று வியக்க வைக்கின்றதல்லவா! சயாம் - மலேயா ரயில்பாதை அக்காலத்தில் புதிதாக செப்பனிடப்பட்டது. அவ்வேலைகளுக்காக மலேயாவிலிருந்து தொழிலாளிகள் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்படுவார்கள். சென்றவர்கள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையே கிடையாது. அங்கு வேலைக்கு அழைத்து செல்லப்பட்டவர்களுக்கு சரியான உணவோ - உடையோ இருப்பிடமோ - மருத்துவ வசதியோ கிடையாது. அப்பகுதி ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் உயிரைப் பலிக் கொண்ட பகுதி. அங்கே தொழிலாளிகளுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டால் நிர்வாகமே அவர்களை ஊசிபோட்டுக் கொன்று விடும் (கடுமையான உடல் நிலையில் பாதிக்கப்பட்டு துடிக்கின்ற நிலையில் காப்பாற்ற வழியில்லாத நிலையில் ஊசிபோட்டுக் கொல்லப்படுவதற்கு ஆங்கிலத்தில் Mercy Killing என்று பெயர்) அத்தகைய மரண ரயில்வேயிலிருந்து எதிர்த்து தப்பித்து வந்த பெருமைக்குரியவர் ஐ.மாதவன் ஆவார். இவர் தியாகி கிருஷ்ணனின் உடன்பிறந்த சகோதரராவார். சகோதரர்கள் இருவருமே பாலர் சேனையில் செயல்பட்டவர்கள். பாலர் சேனையின் தலைவர் ஜெயபாரதி ஆவார். தியாகி கிருஷ்ணன் கிஸப்வாலி எஸ்டேப், ஸிலிம் லிவர் பகுதிகளில் தொழிலாளர் போராட்டங்களை இயக்கியவர். மரண ரயில்வே விசாரணை கமிஷனுக்கு நேதாஜி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் தோழர் கே.எஸ். நாதன் ஆவார்.

படிப்பகம்

www.padippakam.com

## 16. அகில மலேயா பொதுத் தொழிலாளர் சங்கம்

சிறந்த சிந்தனையாளர்களான தோழர் எம்.ஆர்.குருதேவனும், எஸ்.ஏ.கணபதியும் முதலில் மலேயாவை மன்றங்கள் நிறைந்த மாமன்றமாக்கினர். பின்னர் மக்களின் பாசமழையில் - அன்பு வளையத்தில்

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற குறளுக்கேற்ப இணைந்து வாழ்ந்தனர்.

செஞ்சீனச் சிற்பி மாவோ, "மக்கள் தடாகம் போன்றவர்கள் பொது வாழ்வின் இலட்சியவாதிகள் மக்கள் தடாகத்தில் மீன்களாகத் திளைத்து வாழ வேண்டும். மக்களைப் பிரிந்து அரசியல் நடத்துவது - தடாகத்தை பிரிந்து மீன்கள் வாழ முற்படுவது போன்றதாகும்" என்ற பொருளில் போராளிகளின் நிலைபாட்டினை விவரிப்பது போல் - தோழர் எம்.ஆர் குருதேவனும்-தீரர் கணபதியும் மலேயாவில் எண்ணிறந்த சிறு-பெரு தொழிற்சங்கங்களை அமைத்தனர். இந்நிலையில் மலேயாவில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கிளையான மலேயா கம்யூனிஸ்டு கட்சி கி.பி.1925-ல் துவக்கப்பட்டு - சீனர்களும் பெரிய அளவில் அணி திரண்டனர். தோழர் குருதேவன் இந்திய கம்யூனிஸ்டுகளில் முதன்மையானவர். அவர் இயக்கத்தில் கணபதியும் பிற தோழர்களும் திகழ்ந்தனர். மலாய் மக்களும் - பிற இன மக்களும் கூட கணபதியின் பின்னர் அணிவகுத்தனர்.

இந் நிலையில்தான் மலேயா, சிங்கப்பூரின் - ஏன் உலகின் மாபெரும் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்திற்கு இணையாக பான்-மலேயன் தொழிற்சங்கங்கள் சம்மேளனம் உருவானது. இது ஆங்கிலத்தில் சுருக்கமாக PMFTU என்றழைக்கப்பட்டது. இதில் உறுப்புச் சங்கங்களாயிருந்த அனைத்து சங்கங்களும் பதிவாளரிடம்

படிப்பகம்

www.padippakam.com



பதியப் பெற்ற சங்கங்கள் ஆகும். வளமிக்க மலாய் நாட்டின் தலைநகரான கோலாலம்பூரின் மையப்பகுதியான அம்பாங் பகுதியில் மிக உயர்ந்த கட்டிடத்தின் முகப்பில் (PAN MALAYAN FEDERATION OF TRADE UNIONS. அகில மலேயா தொழிலாளர் சம்மேளனம் என்ற கம்பீரமான பெயர்ப் பலகை ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவ்வமைப்பின்படி ஐரோப்பாவின் - பாரிஸ் நகரத்தை மையமாகக் கொண்டு செயல்பட்ட உலகத் தொழிற்சங்க மாமன்றத்துத் World Federation of Trade Unions (WFTU) தொடர்புடன் செயல்பட்டது. இது மலேயா அரசின் எரிச்சலையும் ஆத்திரத்தினையும் அச்சத்தையும் அதிகரித்தது. அவ்வமைப்புத் தொழிலாளர் மாமன்றமாக மட்டுமல்லாது மலாய்த் தேசிய இனங்களின் இணையமாக ஒளிவீசியது. தொழிலாளர்களின் பாதுகாவலனாகவும் - வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றுப் படைப்பாகாவும் விளங்கிய மாமன்றம் முதலாளித்துவத்தின் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்தது. ஆசிய - உலகத் தொழிற் சங்க இயக்கங்களின் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. அரசு தாக்குதல்களுக் கிணையாக மறு தாக்குதல் தொடுக்கும் வல்லமை உடையதாக விரிவுபடுத்தப்பட்டது. மற்றும் சீன - மலாய் இனத் தலைவர்களான தோழர்கள் யாப்-சீலிம், லூச்சிங், யாப் - மென்-ஷீன், அப்துல்லா சி.டி., சம்சுதீன், சி.டி.நூர்முகமது ஆகியோரது இணக்கத் தலைமையில் சிறப்புற்றது. அத்தகைய ஐக்கிய தலைமை பெற்றிருந்த அகில மலேயா தொழிற்சங்க சம்மேளனமும் மலாயா ஐக்கிய முன்னணியும் மலாய் கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்து நடத்திய போராட்டம்தான் மலாயா விடுதலைப் போராட்டம் ஆகும். அது ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சி ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் பல போராட்டங்கள் இறுதியில் நாட்டின் விடுதலைப் போராட்டத்தைச் சென்றடையும் எனும் வரலாற்று உண்மை மலேயாவில் மெய்ப்பிக்கப் பட்டது. சோவியத் வழியில் மலர்ந்து கொண்டிருந்த காலை - மலேயா அரசு கி.பி. 1948-ல் ஜூன் 13ம் நாள், சுமார் மூன்று லட்சம் உறுதியான தொழிலாளிகளைக் கொண்டமைந்த அகில மலேயா தொழிற் சங்கங்களின் மாமன்றத்தினைத் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்தது. உடனடியாகக் காலனி அலுவலகம் மலேயா சனநாயக வாதிகள் மீதான போரினைத் துவக்கியது. முப்படைகள் தாக்குதல்களைத் துவக்கின. காவல்துறையும் தாக்குதல்களை முப்படையுடன்

படிப்பகம்

www.padippakam.com



இணைத்துக் கொண்டது. அரசு அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனம் ஓர் பதிவு பெறாத அமைப்பு என்ற சிறு காரணத்தைக் காட்டி அமைப்பினைத் தடை செய்து விட்டு உடனடியாகச் சுதந்திர தொழிற் சங்கங்களை அழிக்கும் முப்படைத்தாக்குதலை விரைவுபடுத்தியது. உலகின் முதற் தொழிற் சங்க மாமன்றத்தினை அழிக்க மலாய் அரசுக்குத் துணையாக உலக முதலாளிகள் அணிவகுத்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். பலநூறு பேர் சுட்டு கொல்லப்பட்டு மறைக்கப்பட்டனர். ஜொகூர் ரப்பர் தொழிலாளிகளின் சங்கத் தலைவர் தோழர் டான்கேன் சுட்டுக் கொல்லப் பட்டார். வனப்பிரதேசத் தொழிலாளர் குடியிருப்புகளின் மீதும் - கிராமங்கள் மீதும் அரசு விமானப்படை குண்டுகளைப் பொழிந்தது. மக்கள் மீது ஏவுகணைகள் வீசப்பட்டன. மலேயாவின் பிரிட்டிஷ் அதிகாரிகள், "ஜோகூர், ரெங்கம் பகுதியில் தவறுதலாக ஒரு சீன இளைஞனும் அவனுடைய தாயாரும் நடவடிக்கைகளில் கொல்லப்பட்டதாக அறிவித்தனர்" எனினும் அரசின் நடவடிக்கைகளில் ஏராளமான பொது மக்கள் - அப்பாவிகள் பலியாகினர்.

தடை செய்யப்படுவதற்கு முன்னால் அகில மலாயா தொழிற் சங்கங்களின் மாமன்றம் மலாயாவின் 91 சதவீத சட்டப்படியாகப் பதிவு பெற்ற சங்கங்கள் ஆகும். ஏற்கனவே பதியப் பெற்ற சங்கங்களின் கூட்டமைவு அமைப்பானதால் அகில மலேயா தொழிற்சங்க மாமன்றத்தினைப் பதிவுசெய்து கொள்ள வேண்டிய அவசிய மில்லையென அரசுக்குக் கூட்டமைப்பு பல முறை தெரிவித்துள்ளது. பொது மக்களின் கருத்தும் ஆதரவும் அகில மலேயா தொழிற்சங்க கூட்டமைவின் கருத்துக்கே வலிமை சேர்த்தது.

மலேயா அரசின் கோபமானது தொழிற்சங்க அடிப்படையில் அரசியல் நடத்துகின்றார்கள்; தொழிற்சங்க நிதியினை அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற விதியினை தொழிற் சங்கக் கூட்டமைப்பு மீறுகின்றது என்பதாகும். அரசின் குற்றச்சாட்டு தொழிற்சங்கப் பதிவாளரே முழுமையாக நடவடிக்கை எடுத்துச் சரி செய்யும் அதிகாரத்தினுள் இது நிலவுகின்றது. அதற்கு அரசே நேரடி நடவடிக்கையும் - தாக்குதல்களும் தொடுக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டிய அவசியமில்லை. கி.பி.1946-ல் தொழிற்சங்க கூட்டமைப்பு உலகத் தொழிற்சங்கக் கூட்டமைப்புடன் (When P.M.F.T.U Affiliated to W.F.T.U. Paris) இணைந்த போதும், அரசு தொழிற்சங்கக் கூட்டமைப்பு மலேயாவின் சட்ட விதிகளுக்குட்பட்டது தான். உலகத் தொழிற்சங்க கூட்டமைப்பில் இணைவதினால் மலேயாவின் சட்ட விதிகளுக்கு அப்பாற்பட்டது என்பது அல்ல என்ற நிலையைக் கடைப்பிடித்தது. நிலைமை மேலும் சிக்கலாகாமலிருக்க அரசு ஆட்சியியல் பணியாளர்கள் தங்கள் தொழில் சார்ந்த சங்கங்களைத் தவிர வேறு சங்கங்களிலோ - இணையங்களிலோ இணையக் கூடாதென ஆணை பிறப்பித்தது. இது முழுக்க முழுக்க பிரிட்டனின் நிலையாகும். கிரேட் பிரிட்டனிலும் அன்றைய நிலவரப்படி தொழில் மற்றும் ஆட்சித் துறைப் பணியாளர்கள் சங்கங்கள் TUC (Trade Union Congress) யுடன் இணைவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதே நிலை மலாயாவிலும் உருவாக்கப்பட்டது. மேலும் அரசு போலி தொழிற்சங்க அமைப்புகளை உதிரிகளைக் கொண்டு மஞ்சள் தொழிற் சங்கங்களாக உருவாக்கியது. ஆயினும் 91 சதவீதம் உண்மையான தொழிற் சங்கங்கள் அகில மலாயா தொழிற்சங்க கூட்டமைப்பினுள்தானிருந்தன. கூட்டமைப்புக் கெதிரான நடவடிக்கைகள் - தாக்குதல்கள் - சுமார் மூன்று வருடங்கள் தொடர்ந்தன. மலேயாவின் வரலாறு கணபதி உள்ளிட்ட பல தியாகிகளின் குருதியால் எழுதப்பட்டது. ஆயிரக் கணக்கான தொழிற்சங்கத் தலைவர்கள் தோழர்கள் அப்பாவிகள் நாடு கடத்தப் பட்டனர். மலாய் இந்தியர்களின் நெம்பர் ஒன் கம்யூனிஸ்டுத் தோழர் எம்.ஆர் குருதேவன் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். மலேயா கணபதியை இயக்கியவர் தோழர் எம்.ஆர். குருதேவன் என்பதற்கான ஆதாரமாக மலேயாவின் தளபதி ஹென்றி கர்னி சிங்கப்பூர் ஆளுநருக்கு அனுப்பிய தொலைச் செய்தி (Telegrame) நகல் அருகினில் படமாகத் தரப்பட்டுள்ளது. (அதில்

படிப்பகம்

www.padippakam.com



எண் 3 ஐ நோக்கவும்) மலாய் அரசு போராடும் கம்யூனிஸ்டுகளைத் தொழிலாளிகளைக் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் என அவதூறாகப் பிரச்சாரம் செய்தது. அப்பொய்ப் பிரச்சாரம் மலேயா மக்களால் நிராகரிக்கப்படவே வேறுவழியின்றி அரசு அகில மலேயா தொழிற்சங்க மாமன்றத்தினை முடக்க - தேவைப்பட்டால் அரசு பயங்கவாதத்துடன் தொழிலாளர் தலைவர்களைச் செயலிழக்கச் செய்ய அவசர அவசரமாக அவசர காலச் சட்டத்தினை இயற்றித் தாக்குதலைத் துவக்கியது. அகில மலாயா பொதுத் தொழிற்சங்க சம்மேளனத்தை சட்ட விரோத அமைப்பாக அறிவித்து, அதனுடன் தொடர்பு கொண்டுள்ள அனைத்துப் பதியப்பெற்ற சங்கங்களும் சட்ட விரோதமானவை என அறிவிக்கப்பட்டு அவ்வமைப்புகள் கலைக்கப்பட வேண்டும் அமைப்பின் தலைவர்கள் பதவி விலக வேண்டும் அல்லது கைதாக வேண்டும் என அறிவித்தது. அதனைத் தொழிற்சங்கத் தலைவர்களும் இயக்கத்தினரும் புறக்கணிக்கவே அரசு கைதுப் படலத்தினையும் வீரமான தொழிலாளிகளைச் சுட்டுக் கொல்லும் கோழைத்தனத்திலும் இறங்கியது.

அரசு தனது ராணுவ நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் நியாயப்படுத்த தொழிற்சங்க அமைப்பினரைப் பயங்கரவாதிகளாகக் கொலைகாரர்களாக - கொள்ளைக்காரர்களாகச் சித்திரிக்க முற்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்களைத் தனிப்பட்ட சில கொலைகளுடன் இணைத்தும் தோல்வி கண்டது. அரசு உண்மையான தொழிற்சங்க இயக்கத்துக்கெதிரான நடவடிக்கைகளை கி.பி. 1946 -லிருந்தே வெளிப்படையாகத் துவக்கி விட்டதால் மக்கள் மத்தியில் அரசின் பொய்ப் பிரச்சாரங்கள் எடுபடவில்லை.

**பொருளாதாரக் காரணங்கள்:-** அரசின் அடக்குமுறைக்குப் பல பொருளாதாரக் காரணங்களிருந்தன. ஒரு புறம் பொருளாதார நெருக்கடி - மறு புறம் தொழிற்சங்கக் கூட்டமைப்பு - அதற்குரிய தொடர்ச்சியாக வீராவேசத்துடன் போர் புரிந்து தொழிலாளிகளின்

படிப்பகம்

www.padippakam.com



கோரிக்கைகளுக்காக நடவடிக்கைகள் எடுக்கின்ற நிலை. கூட்டமைப்பு தெள்ளத் தெளிவாக தங்களது கோரிக்கைகளான குறைந்தபட்ச அடிப்படைக் கூலி, தகுந்த வாழ்விடங்கள், இலவச மருத்துவச் சலுகை, போதிய உணவுப் பொருள் வினியோகம் ஆகியவற்றினைத் தொழிலாளிகளுக்குப் பெற்றுத்தரப் போராட்டங்கள் நடத்துவோம் என அறிவித்து விட்டது. அரசோ அவைகளை நிறைவேற்றித் தரும் நிலையில் இல்லை. அரசு கி.பி. 1940-ல் தொழிலாளிகளுக்கு வழங்கிய உணவுப் பொருள் வினியோக அளவையில் மூன்றில் ஒரு பகுதியைத்தான் கி.பி. 1946 லிருந்து வழங்கியது. இதனால் மலேயாவின் மக்கள் வறுமையின் பிடியில் துயரத்தில் சுழன்று கொண்டிருந்தனர். விளைவாகப் போதிய சராசரி உணவுக்காக மலேயாவின் மக்கள் தாங்கள் செலவழித்த தொகையைப் போல் ஒன்பது மடங்கு அதிக விலையினை அளித்து உணவுப் பொருள்களைப் பெற வேண்டிய நிலை - ஆனால் கூலி உயர்வோ நூறு சதவீதத்தினைத் தாண்டவில்லை. இந்நெருக்கடியான நிலையை நாட்டு நலனோடு தீர்க்க அரசு நினையாமல் முதலாளிகளைப் பாதுகாக்கும் போக்கோடு ஊதிய இறுக்க கொள்கைகளை (Wage Freeze measures) நடைமுறைப்படுத்த துவங்கியது. முதலாளிகள் (Tin) தகரம் மற்றும் இரப்பர் (Rubber) விலையை உயர்த்தித் தொழிலாளிகளின் சில கோரிக்கைகளை நிறைவேற்றினாலும் பன்னாட்டுத் தகரம் மற்றும் ரப்பர் சந்தையில் தொடர்ச்சியான அமெரிக்கப் போட்டியின் காரணமாகத் தனது முற்றுரிமைச் சந்தை (Monopoly) தகர்க்கப்படும் நிலையைக் கண்டது. விளைவு தொழிலாளர் முதலாளிகள் முரண்பாடு. அது தொழிலாளிகளுக்கும் அரசுக்குமான மோதல் நிலையாக உருவெடுத்து அரசு தொழிற்சங்க இயக்கங்களை முதலாளிகளுக்குச் சாதகமாக அழிக்கும் பணியில் தாக்குதலை துவக்கியது.

படிப்பகம்

www.padippakam.com

# 17. மலேயா பொது வேலை நிறுத்தம் - அவசரச்சட்டம்

உலக வரலாற்றில் தேசபக்தர்கள் எனும் சொல் இன்னமும் தெளிவாக வரையறுக்கப்படவில்லையெனவே தோன்றுகின்றது.

"The Patriot" (தேசபக்தன்) எனும் ஆங்கிலக் கவிதை ஒன்றை இராபர்ட் ப்ரவுனில் இயற்றியது. அதில் தேச பக்தன் குமுறலைக் காணலாம்.

"கடந்த ஆண்டு
இதே வீதியில் எனக்கு ராச மரியாதைகள்
என் பாதை முழுவதும்
எங்கெங்கு நோக்கினும் மக்கள் கூட்டம்
மாடங்களில் எல்லாம் மக்கள் திரட்சி
மரங்கள் கூட எனைக் காண விருப்புடன்
மனித மகுடங்களை அணிந்து கொண்டது
நான் செல்லும் வழித்தடங்கள்
மிரட்டல் மலராடை போர்த்திக் கொண்டன
இன்று! இன்று!
என் முன்னே
வெறிச்சோடிய வீதிகளின் காட்சி
தங்களுக்கே சுமையான உடல்களை
இழுத்து கொண்டு வந்து சன்னல்களில்
உற்றுப் பார்க்கும் ஊனமுற்றவர்கள்
.......
என் நெற்றியில் ஊறிவரும் உணர்வு
குருதி வழிவதை உணர்த்துகின்றது

www.padippakam.com



நான் ஆற்றிய செயல்கள்
பாதகமானதெனக் கருதியவர்கள் எனைக்
கல்லாலடித்ததன் பாதிப்புகள் அவைகள்
ஆம் . . . . . . .
கொலைக்களத்துக்கு விருந்தாக இழுத்துச் செல்லப்படும்
மனிதன் நான்
மக்கள் கூட்டம் நிரம்பி வழிகின்றதாம்
கொலைக்களத்தில்!
வீடுகளை மறந்து மானிடச் சமுதாயம்
கொலைபடப் போகும் எனைக்காண
நிரம்பி வழிகின்றதாம் - கொலைக் களத்தில்!
ஆம் - கொலைக்களத்தில்!
மக்கள் தீர்ப்பு மயங்கி விடலாம்
நான் சரியானவன்
நான் சரியானவன்

. . . . . . . .

ஒரு தேசபக்தன் தேசத் துரோகியாகக் கருதப்பட்டதைப் படம் பிடித்துக் காட்டும் பாங்கான கவிதை. யார் தேசத் பக்தர்கள்? யார் தேசத் துரோகிகள்? ஏகாதிபத்திய அரசுகளில் இன்றைய தேச பக்தர்கள் நாளைய துரோகிகள். இன்றைய துரோகிகள் நாளைய சனநாயகக் காவலர்கள். இந்த நோய் இன்று உலகம் முழுவதும் பரவிவிட்டது. சோவியத் யூனியனையே உருவாக்கி உலகிற்குப் பாட்டாளி வர்க்க ஆட்சியையளித்த மாவீரன் லெனினின் சிலை அண்மையில் சோவியத் ருஷ்யாவிலேயே உடைக்கப்பட்டது. செஞ்சீனச் சிற்பி மா.சே.துங் அண்மையில் சீனாவிலே இருட்டடிப்பு செய்யப்பட்டார். பாகிஸ்தானின் சனநாயக காவலர் என்றழைக்கப்பட்ட பூட்டோ-உலகின் வேண்டுகோளுக்கு மாறாக தூக்கிலிடப்பட்டார். வங்க தேசத்தின் விடுதலைச் சிற்பி முஜிபுர் ரகுமான் வங்கத்திலேயே படுகொலை செய்யப்பட்டார். காங்கோவில் லுமும்பா, ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா என நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் தேசத் தியாகிகள் யார்? என்ற வினாவுக்குப் பதில்

www.padippakam.com



(அ) பாட்டாளி வர்க்க நலனுக்காக நடத்தப்பெற்ற எழுச்சிப் போராட்டங்களில் மடிந்தவர்கள் தேசத் தியாகிகள்.

(ஆ) ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்பவன் தேசபக்தன்.

(இ) தீண்டாமை, நிறவெறி, மொழிவெறி, இனவெறி ஆகிய சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுபவன் தேசபக்தன். அதனை நிலை நிறுத்த முயல்பவன் தேசத் துரோகி.

(ஈ) தேசிய இனங்களின் உரிமைக்காகப் போராடுபவன் தேசபக்தன். அதனை நசுக்க முயல்பவன் தேசத் துரோகி.

(உ) அரசியல் - சமூக - பொருளாதார விடுதலைக்காகப் பாடுபடுபவர், மக்கள் அரசுகளுக்கு, மக்கள் சித்தாந்த அரசுகளுக்கு மாவீரர்கள். செண்பக ராமன், நேதாஜி, பகத்சிங், சுகதேவ், இராசகுரு, மலாயா கணபதி, வீரசிம்மன் போன்றவர்களே முதன்மைத் தியாகிகள். சமதர்மத்தை நிலை நாட்ட உடல் - பொருள் - ஆவிதனை அளிக்க வல்ல துணிவு கொண்டவர்களே தேச பக்தர்கள். இதில் எவ்விதக் கருத்து மாற்றத்திற்கும் இடமில்லை. அத்தகைய போலியான அடிப் படைகளின் மீதுதான் மலேயாவின் அவசரச் சட்டங்கள் அணிவகுத்தன. மலேயாவின் பொது வேலை நிறுத்தத்தின் மாபெரும் வெற்றியைக் கண்ட அரசு அவசர காலச் சட்டத்தினை இயற்றியது.

அவசர காலச் சட்டம் அரசுக்கும் அதிகாரிகளுக்கும் அதிக, ஏன் இமாலய அதிகாரத்தினை வழங்கும். அவ்வதிகாரத்தினைக் கொண்டு அதிகார வர்க்கம் உரிமைகளுக்காகப் போராடுபவர்களை முதலில் பழிவாங்கிடக் கள்குடித்த குரங்கினைப் போலப் பாயும். இந்திய வரலாற்றில் கி.பி.1976ல் அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது இந்திய சனநாயகத்தின் இருண்டகால மாகும். "இம்" என்றால் சிறைவாசம், "ஏன்" என்றால் வனவாசம் என உரிமைகள் பறிக்கப்பட்டு அடக்கு முறைகள் உலாவந்த காலம். சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்றவர்கள் சிறைக் கொட்டடியில் முடக்கப்பட்ட சூழ்நிலை. தமிழகத்தில் தி.மு.க

படிப்பகம்

www.padippakam.com



பொறுப்பாளர்களில் ஒருவரான மு.க.ஸ்டாலினை சிறைக் காவலர்கள் கொடூரமாகத் தாக்கியதைத் தட்டிக் கேட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிட்டி பாபு சிறையில் மரண அடியில் மாண்ட கொடுமை நிகழ்ந்தது. தி.மு.க வின் மூத்த பொறுப்பாளர்களில் ஒருவரான ஆற்காடு வீராசாமி சிறை தாக்குதலில் செவித் திறனை இழந்த நிலைமை; முரசொலி மாறன் கடுமையாகப் பாதிக்கப்பட்டு சன்னி கண்ட நிலைமை; திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி உட்படத் திராவிடர்கழகத் தோழர்களுக்கும் மார்க்சிய கட்சித் தோழர்களுக்கும் வெஞ்சிறை; தியாகி நெல்லை ஜெபமணிக்கு கொடூர அடிகள் அவசரநிலையென்றாலே உலகில் அத்து மீறல்கள் என்று பொருள். அன்றைய முதலமைச்சரான கருணாநிதியின் இல்லத்திலேயே அதிகாரிகளின் அத்துமீறல்கள். அதுவும் அநாகரிகங்களோடு. பின்னர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களே நடைபெற்ற அத்து மீறல்களுக்கு வருத்தம் தெரிவித்தார். இந்திய வாசகர்களுக்கு கி.பி.1976-ஐ சிறிது நினைவூட்டினாலேயே மலாயாவின் அவசர காலச் சட்டத்தில் தமிழர்கள் சீனர்கள் மலாய் மற்றும் அனைத்து மக்களும் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

மலேயாவின் அவசர சட்டத்தின் மூலம் எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்யலாம் என்பதையுணர்ந்த கணபதியும் அவர்தம் தோழர்களும் அணிகளும் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு கொரில்லாப் போராட்டத்தினைத் துவக்கினர். மலாயாவின் மூன்று தேசி இனத் தலைவர்களும் தலைமறைவாயினர். தூரத்துக் கிராமங்களையும்- கட்சியின் செல்வாக்கு மிக்க காடு மலைக் கிராமம் போன்ற பகுதிகளையும் தளமாகக் கொண்டு போரிடுவது என்றும் பகுதியிலிருந்து முழுமையை வெற்றி கொள்வது என்று முடிவுகள் எடுக்கப்பட்டு கொரில்லாப் போராட்டம் துவங்கியது. முதல் அணியாகத் தோழர்கள் எம்.ஆர். குருதேவன், கணபதி, வீரவர்மன், வீரசேனன், சாம்பசிவம் போன்ற தோழர்கள் உடனடி தலைமறைவாயினர். அகில மலேயா முழுவதும் இந்நிலை காணப்பட்டது.

போராட்டங்கள் வர்க்க சமரசமற்ற போராட்டங்களாகவே வெடித்தன. "Power flows out from the barrels of gun" அதாவது

www.padippakam.com



அரசியல் அதிகாரம் துப்பாக்கி குழலிலிருந்தே பிறக்கின்றது என்ற மாவோவின் வழியில் மலர்ந்த மக்கள் போராட்டங்களாகத் திகழ்ந்தன. மக்கள் விரோதிகள் நிர்மூலப்படுத்தப்பட்டனர். மலேயாவின் விடுதலைப் போராட்டத்திற்கு அது ஒரு துவக்கமாகவும் வரலாற்று அடிப்படையாகவும் ஒரு தொடர்ச்சியாகவும் அமைந்தது என்றால் மிகையாகாது.

முன்னணித் தலைவர்கள் தலைமறைவானதால் அவசரச் சட்டத்தின்படி மலாயா முழுவதும் பல்லாயிரக் கணக்கானவர்களைக் அரசு கைது செய்தது. பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் ஒரே நாளில் கைது செய்யப்பட்டனர். "ஏன்? என்னைக் கைது செய்கின்றீர்கள்?" என்ற கேள்விக்கு அடி உதைகளே பதிலாயின. கைது செய்யக் கைதாணை இருக்கின்றதா எனக் கேட்டவர்கள் வாழ்வின் இருட்டில் வைக்கப்பட்டனர். அப்புதிய சட்டமே உங்களுக்காகத்தான் என வெறியோடு கூவி அதிகார வர்க்கம் போராட்ட வீரர்களை, தோழர்களை - பொது மக்களை அணி அணியாகக் கைதுச் செய்து அணு அணுவாகச் சித்திரவதை செய்தது. தேசத்தைக் கொடுமைகளால் சிங்காரித்து மகிழ்ந்தது மலேயா அரசு.

சுமார் பத்து நபர்களே அடைக்கப்பட வேண்டிய அறையினில் ஐம்பது நபர்களையடைத்து "கணபதி எங்கே?" என்று கேட்டுச் சித்ரவதை செய்தது. "கணபதி இருக்குமிடத்தைக் கூறினால் விடுதலை, இல்லையேல் மரணதண்டனை" என பயமுறுத்தியது. விசாரணை என்ற பெயரால் சித்திரவதைகளே நடைபெற்றது. அக்கொடுமைகளுக்கு சிறுவர்களோ - பெண்களோ - முதியவர் களோ கூடத் தப்ப இயலவில்லை. பெண்கள் அவமானப் படுத்தப்பட்டனர். கொலை வழக்குகள் கோலோச்சின. சதி வழக்குகள் சதிராடின. ஏதுமறியா அப்பாவிகள் சிறைக் கூடங்களுக்கு இரையாக்கப்பட்டனர். கம்யூனிஸ்டுகள் மட்டுமன்றி முற்போக்கு வாதிகள், சனநாயகவாதிகள், நடுநிலையமையாளர்கள் ஆகிய அனைவரும் தண்டனை பெற்றனர். அநியாயமாக அவதிக்குள்ளாயினர். சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்தியாவில்

படிப்பகம்

www.padippakam.com



கம்யூனிடுகளுக்கெதிராகட் புனையப் பெற்ற சதிவழக்கு, பெஷாவர் சதி வழக்குகள் போன்று மலேயா அரசு புரட்சியாளர்களை அழித்து விட வேண்டும் என்ற அடிப்படையில் செயல்பட்டது. இந்தியாவின் சதி வழக்குகள் தேசிய நீரோட்டத்திலிருந்து கம்யூனிஸ்டுகளைப் பிரித்து ஒழித்திடவே சோடிக்கப்பட்டன. மலேயாவின் புனைவு வழக்குகளோ அதிபயங்கரமானவை. தேசபக்தர்களைத் தேசத் துரோகிகள் என்று பட்டம் சூட்டிக் கைது செய்தது அடித்தது - ஏன் தூக்கு தண்டனை விதித்தது - நாடு கடத்தியது - பொருள்களைப் பறிமுதல் செய்தது ; மக்கள் முன்பு அவமானப்படுத்தியது - அநாகரிகங்களை அவசரச் சட்டத்தின் பேரில் அலங்கரித்து மகிழ்ந்தது.

## 18. புரட்சிப் படைகள் பதிலடி

***ஐக்கிய முன்னணியின் பேரணி :-*** அகில மலேயாத் தொழிலாளர் சம்மேளனம், ஐக்கிய முன்னணி சார்பாக ஒரு பெரிய பேரணியை நடத்திட அழைப்பு விடுத்தது. துவக்கத்தில் சிங்கப்பூர்க் கடற்கரையோரத்தில் வந்து குவிந்த மக்கள் திரளை அரசு சாதாரணமாய் நினைத்தது. நேரம் செல்லச் செல்ல மக்கள் கடல் திரண்டு நின்றது. அப்பேரணியின் பிரதிபலிப்பு தனக்கு ஆபத்தானது என்பதையுணர்ந்த அரசு திடீரென தனக்கு இருந்த சக்திகள் அனைத்தையும் திரட்டிக் கொண்டு வந்து பேரணியைச் சுற்றி வளைத்துக் கொண்டது. பேரணியை நடத்தக் கூடாது எனத் தடுத்தது. பேரணியினை எப்படியும் நடத்துவது என்பது கட்சியின் தீர்மானம் ஆகும். நடத்தவிடமாட்டோம் என அரசின் அதிகார வர்க்கம் துடித்து நின்றது. சுமார் நான்கு மணி நேரம் இரு தரப்பினரும் தத்தம் முடிவுகளை மாற்றிக் கொள்ளாமலிருந்தனர். பொதுமக்கள் என்ன நடக்குமோ என அஞ்சினர். மாற்று அரசியல்

www.padippakam.com



தலைவர்கள் எல்லாம் வந்து நின்று சமாதான முடிவுக்கு வரக்கோரினார்கள். அரசு மேலும் மேலும் படைகளைக் குவித்துக் கொண்டிருந்தது. அரசு ஆயுதத் தயாரிப்புகளோடு இருந்ததாலும் ஐக்கிய முன்னணி ஆயுதத் தயாரிப்புகளுடன் இல்லாதிருந்ததாலும், மேலும் பேரணி நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்கரையின் பின்னால் ஆழமிக்க கடலாக இருந்ததாலும் பேரணி போரணியாக மாறினால் பெருத்த மக்கள் சேதம் தவிர்க்க வியலாது ஏற்படும் என்பதாலும் எதிரிக்கு அதிகப் பாதிப்பு ஏற்பட இயலாத நிலையிலிருந்ததாலும் ஐக்கிய முன்னணியின் பேரணி தவிர்க்கப்பட்டது. எனினும் மலாயா முழுவதும் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டது. அறிவிக்கப்பட்ட நாளில் மலாயாவில் முழு கடையடைப்பும் வேலை நிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற்றன. மலேயா ஸ்தம்பித்தது. மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். போராளிகள் புதுப் பொலிவினைப் பெற்றனர்.

**மலேயாக் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை :-** இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின் மலேயாவின் நிலைமை எவ்வளவு சீர்கேடடைந்து நலிவுற்றிருந்தது என்பதை மலாய் கம்யூனிஸ்டு கட்சி மலாய் மக்களுக்கு விடுத்த வரலாற்று ஆவணத்தின் பகுதி மிகச் சிறப்பாகக் காட்டுகின்றது.

"கடந்த 4 மாதங்களில் மலாயாவில் மாபெரும் அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. பொருளாதார அடிப்படையில் கவனிப்போமாயின் எங்கும் வாழ்க்கை நிலை உயர்விற்காகக் கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. ஜனநாயக ஆட்சி முறைகளையும் வாழ்க்கை முன்னேற்றத்தினையும் பெற வேண்டிய பொது நோக்கத்தினைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் வாலிபர்களும் சிந்தனையாளர்களும் சுமார் 5 லட்சம் பேர் ஏகோபித்துப் பெற்றுள்ளனர். காலனிப் பிரதேச பொருளாதாரச் சுரண்டல், சமுதாய நிலைகளில் பட்டினி, பஞ்சம் போன்ற நெருக்கடிகள் பிரிட்டீஷ் ஆட்சியின் இயலாமையை மக்களுக்கு உணர்த்துகின்றன. ஆட்சியாளர்கள் மக்களை நேரடியாகக் கண்டிக்கின்றனர். இந்த நான்கு

படிப்பகம்

www.padippakam.com



மாத காலங்களில் மலேயா தொழிலாளர்கள் அதிகச் சம்பளம் வேண்டுமெனக் கேட்டவண்ணமாய் உள்ளனர். ஜப்பானிய எதிர்ப்பியக்கவாதிகள் கைது செய்யப்படுவதை அவர்கள் கண்டிக்கின்றனர். அவர்கள் பகிரங்கமாக சனநாயக அரசியல் இயக்கத்தினை உருவகப்படுத்துகின்றனர். அதன்மூலம் சர்வதேச சமூக ஐக்கிய முன்னணிக்குத் தூண்டுகோலாயுள்ளனர். இப்போராட்டங்களில் சீனர்களும் இந்தியர்களும் தான் அதிக முயற்சி எடுத்துத் கொண்டிருக்கின்றனர். மலேயாவின் சர்வ சமூக சனநாயக இயக்கத்தில் அவர்கள் மிகவும் பலம் பொருந்தியவர்களாகத் திகழ்கின்றனர். இவ்வாறாக மலேயாவின் புரட்சிகர இயக்கம் ஒரு புதிய நிலையை அடைந்துள்ளது. இதனால் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேகத்தை வளர்க்கும் சமூக விடுதலையுணர்ச்சி அதிகப்பட்டிருக்கிறது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு முறைகளை ஒழிக்க ஒற்றுமை ஏற்படி வேண்டுமென்று மலாயாப் பொது உடைமைக் கட்சி கேட்டுக் கொள்கின்றது.

மேற்கண்ட அறிக்கையை ஆய்வு செய்தால் அவ்வறிக்கை மலேயாப் பொதுவுடமைக் கட்சிக்கு மக்கள் சனநாயகப் புரட்சியை நடத்த முன்னுதவியாக இருந்தது என்பது புலப்படும். கம்யூனிஸ எதிரிகள் தாம் கம்யூனிஸ்டுகளைப் போராடத் தூண்டுகின்றார்கள் என்பது பொதுவுடமைப் பொது மொழி. எதிரிகள் நமது எதிர் மறை ஆசான்கள் என்பது மாவோவின் பொன் மொழி, ஆம் மலேயாவில் கம்யூனிஸத்தினை வளர்க்கும் அடக்குமுறையடிப் படைகளை எங்கெங்கும் கொடும் கரங்கள் கொண்டு பரப்பினர்.

யாவரையும் காரணமின்றி மலேயா அரசு கைது செய்தது. தொழிற் சங்க இயக்கத் தலைவர்களைக் கைது செய்தது. அப்பாவி மக்களை அரசியல் கைதிகளாக்கிக் கைது செய்தது.

மேகங்களின் அவசரச் சட்டத்தினால் சூரியன் சோர்ந்து விடுவதில்லை. அதேபோன்று ஏகாதிபத்தியங்களின் அவசரச் சட்டங்களினால் கம்யூனிஸ இயக்கங்கள் சோர்ந்து விடுவதில்லை அப்போதுதான் முன்னிலும் பலமாக அசுர வேகத்துடன் போராளிகள் செயல்படுவார்கள் மலேயாவின் அவசரச்

படிப்பகம்

www.padippakam.com



சட்டங்களினால் நிகழ்த்தப் பெற்ற கெடுபிடிகள் கொடுமைகள் ஏராளம் ஆகும். கணபதியும் தோழர்களும் தங்களை எந்த நிலைக்கும் தயார் படுத்திக் கொண்டனர். சனநாயகப் புகழாரம் சூட்டிக் கொள்ளும் மலேயா அரசு குடியேற்ற மக்களுக்கு உள்ள உரிமைகளைக் கூட அதுவரையில் அளிக்கவில்லை யென்பதை கணபதியும் தோழர்களும் அம்பலப்படுத்தினர். மலாயாவின் பாசிச அரசு தூக்கியெறியப்பட வேண்டும் என்றும் சுதந்திரமான மக்கள் சனநாயக அரசினை அமைப்பதன் மூலம் தான் மலேயா மக்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கும் என்றும் கணபதி முழங்கினார்.

இலட்சியங்களை நோக்கி நடைபோடும் போர்ப்பணியே போராட்டம் என்ற வார்த்தைக்குப் பொருளாகும். மனித நாகரிகத்தை நோக்கிய தவழ்தல் கூடப் போராட்டம் என்ற இலக்கணத்தில் பொருந்தியது. ஆனால் இரண்டுமே போராட்டத்தின் குறுகிய வரைவிலக்கணங்களே ஆகும். மக்கள் சனநாயகப் புரட்சியை நோக்கிய போராட்டங்களே உண்மையான வர்க்கப் போராட்டங்களாகும் என்பதே போராட்டப் பொன் விதியாகும். கணபதியின் தலைமையிலான மலேய விடுதலைப் போராட்டமோ இரு முனைகளை உள்ளடக்கியது. ஏன்? பெரும்பாலும் கொரில்லாப் போராட்டங்களே இரு கூர்முனைகளை உள்ளடங்கியது. துரோகத்தின் முனைகளை மழுங்கடித்துக் கொண்டே எதிரிகளின் கொட்டத்தை ஒடுக்குவது என்பது கொரில்லாப் போராட்டங்களின் தவிர்க்கவியலாத வரையறையாகும்.

சிறிய போராட்டங்கள் - பெரிய போராட்டங்கள் - கொரில்லா போராட்டங்கள் - கொரில்லாக் குழுப் போராட்டங்கள் - துரோகிகளைக் கண்டறிவது - கண்டிப்பது - மீறினால் தண்டிப்பது - எதிரிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்வது - நகர்ந்து செல்லும் உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும் தனதாக்கிக் கொள்வது எதிரிகளின் சொத்துக்களைத் தனதாக்கிக் கொள்வது - எதிரி தனது சொத்துக்களை ஆக்கிரமிக்கும் நிலையாயின் தம் சொத்துக்களைத் தாமே அழித்துவிட்டுப் பின் வாங்குவது எனப் பல்வேறு

படிப்பகம்

www.padippakam.com



போராட்டங்கள் மலேயாவை ஆக்கிரமித்தன. ஏராளமான ரப்பர் கிடங்குகள் தீக்கிரையாக்கப்பட்டன. இராணுவப் போக்குவரத்துச் செய்தி நிலையங்கள் தகர்க்கப்பட்டன. எதிரிகளின் இரவு நேர நடவடிக்கைகள் முடக்கப்பட்டன. இராணுவமும் - காவல் துறையும் தனித்தனியே செயல்பட இயலாது இரண்டும் இணைந்து கூட்டாகச் செயல்படத் துவங்கின. காவல்துறைக்குப் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டதைக் கண்டு மக்கள் நகைத்தனர். எந்நேரத்திலும் விடுதலைப் படைகள் தாக்கலாமென உணர்ந்த வெள்ளை முதலாளிகள் தங்கள் தேயிலைத் தோட்டங்களுக்குப் பாதுகாப்புப் படைகளை அமைத்து கொண்டனர். காவல்துறைப் படை, ராணுவப்படை, உதவிப்படை, அதிரடிப்படை, பாதுகாப்புப் படைகள் என்று எத்தனையோ பல்விதமான படைகள் இருந்தன எனினும் கணபதியின் விடுதலைப் படைகளை அவைகளால் கட்டுபடுத்த இயலவில்லை. விடுதலைப்படையின் திட்டங்கள் வெற்றி நடை போட்டன.

***அட்டர்னி ஜெனரல் மீதான வெற்றி :–*** கிழக்காசியாவின் மிகப் பெரிய தளபதியான ஹென்றி கர்ணே காவல் அமைப்புகளைக் கண்டறிய சுற்றுலா வந்தார். முன்னும் பின்னும் 20 கார்கள் ஆயுதங்களுடன் பாதுகாப்பாக வந்தும் அவரது காரை மட்டும் தாக்கி அட்டர்னி ஜெனரலைச் சுட்டுக் கொன்றது மக்கள் படை. அந்நிகழ்ச்சியில் பெரிதும் பங்களித்த சிறப்பு, தோழர் ராசகோபாலையே சாரும். அட்டர்னி ஜெனரலின் மரணம் அரசை அதிர்ச்சியடையச் செய்தது. மலேயா அரசு படைகளை விரிவுபடுத்தத் துவங்கியது. அயல் நாடுகளில் இருந்தெல்லாம் படைகள் இறக்கப்பட்டன. பிரிட்டீஷ் அரசு தனது ஆளுகைப் பிரதேசமான இந்தியாவின் கூர்க்காப் படை, ஆப்பிரிக்காவிலிருந்து மனிதர்களை உண்ணும் படை, காட்டுக்குள் சரளமாக சண்டை போடத் தெரிந்த மலைவாசிப் போர்ப்படை, ஆஸ்திரேலியாவின் முரட்டுப்படை, பர்மா, இலங்கை மற்றும் ஏராளமான வெளிநாட்டுப் படைகள் தாக்கத் துவங்கின. அரசின் செலவுகள் அதிகரித்தன. யுத்தத்தைக் காரணம் காட்டி மக்களிடம் பணத்தையும், பொருள்களையும் அரசு சுரண்டியது.

படிப்பகம்

www.padippakam.com



விளம்பரப் படுத்தாத கட்டாய ராணுவச்சேவை நடைமுறைப் படுத்தப்பட்டது. மலேயாத் தொழிலாளிகள் கட்டாயப் படுத்தப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். நிரபராதிகளைக் கைது செய்வது, அச்சுறுத்தி மக்களைப் பொய் சாட்சி சொல்ல வைப்பது என அரசு தனது அனைத்துப் பயங்கரவாதச் செயல்களிலும் பகிரங்கமாக இறங்கியது. பாசிசம் தலைவிரித்தாடியது.

அத்தகைய அடக்கு முறை சூழ்நிலையைத் தாக்குப் பிடித்து எதிர்த் தாக்குதல் நடத்த தோழர் கணபதியிடம் முழு ராணுவப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. கணபதியவர்கள் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். தனது கடமையை முழு வேகத்துடனும் தீவிரத்துடனும் செயல்படுத்தினார். கணபதிக்கு ஒரு மெய்க்காப்புப் படை உருவாக்கப்பட்டது. அது அவர் எங்கு சென்றாலும் அவருடனே சென்று பாதுகாப்புப் பணியை மேற்கொண்டது. படைகளில் ஓர் உயர் ஆய்வுக் குழு ஒன்றிருந்தது. அக்குழுவின் ஆய்வுக்குப் பிறகே கணபதி எவ்விடத்துக்கும் செல்வது வழக்கம். ஏற்கெனவே ஐ.என்.ஏ படையில் பெரிதும் பயிற்சி பெற்ற தோழர்கள் மேலும் பல பகுதிகளின் பொறுப்புகளைப் பெற்றிருந்தனர். குறிப்பாக வீரசேனன், வீரசோழன், மதிவாணன், ராசகோபால், வீரசிம்மன், புரட்சிப்பித்தன், இரணியன், மணியன், குணசேகரன், பெருமாள், கருப்பையா, கிருஷ்ணன் போன்ற தோழர்கள் புரட்சியின் சிகரத்தை எட்டினர்.

## புகழ்மிகு தோழர்கள் பிரிந்தனர்

## மாவீரர்கள் கணபதியும் - குருதேவனும் சந்தித்த கடைசிச் சந்திப்பு

கணபதியவர்கள் உருவத்தில் குள்ளமாக இருப்பினும் நடுத்தரமான உடற்கட்டும் நல்ல நிறமும் - பொலிவு சேர்க்கும் முகமும் கொண்டவர். அவரும் அவர்தம் இணை பிரியாத தோழரான குருதேவனும் கலந்து கொண்ட இறுதி நிகழ்ச்சி மலாயா கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி கூட்டமாகும். மறைபுலனில் நடத்தப்பெற்ற அக்கூட்டத்திற்கு

www.padippakam.com



மாவீரன் கணபதியவர்கள் ஓர் வெற்றிலை வியாபாரியாக வேடமிட்டு வந்து கலந்து கொண்டார். ஒரு கட்டம் போட்ட சிவப்பு லுங்கி - மஞ்சள் நிறச் சட்டை - கருப்புக் குல்லா - கைகளில் வெற்றிலைக் கூடை என தன்னுருவத்தினை மாற்றிக் கொண்டார் தோழர் குருதேவன் கேரள வியாபாரி போன்று லுங்கி - சட்டை - தலையில் ஒரு பெரிய துண்டினைக் கட்டிக் கொண்டு மாறு வேடத்துடன் கலந்து கொண்டார்.

பகைப்புலனில் மலாயா கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி கூட்டம் மூன்று நாட்கள் நடந்தது. சுற்றிலும் செம்படைகள் மாபெரும் தலைவர்கள் நடத்திய கூட்டத்தினைப் பாதுகாத்துப் போரிட்டு கொண்டிருந்தன. பெண் கொரில்லா படையினரும் பணியிலிருந்தனர். சுற்றிலும் துப்பாக்கி முழக்கங்கள் முழங்கி கொண்டிருக்க மத்திய கமிட்டி கூட்டம் நடைபெற்றது அக்கூட்டம் முடிந்த பின்னர் மாபெரும் தோழர்கள் காரில் பயணித்தனர் இடையில் கோலாலம்பூர் நகரத்தினைக் கடக்க வேண்டியிருந்ததால் காரினை அனுப்பிவிட்டு மீண்டும் புதிய வேடங்கள் புனைந்து கொண்டு பல மைல்கள் தூரம் நடந்தே சென்றனர். இணைபிரியாத தோழர்கள் இருவரும் அன்றோடு நிரந்தரமாகப் பிரியப் போகின்றோம் என்பதை உணர இயலாது பேசிக் கொண்டே சென்றனர். கோலாலம்பூர் நகரம் கடந்து ஈப்போசாலை வந்தது. அதற்கு மேல் நடந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லாததால் இரண்டு கார்கள் அவர்களையடைந்தன. அக்கார்கள் மலாய் கம்யூனிஸ்டு கட்சிக்குச் சொந்தமானது. கணபதி நிகழ விருக்கின்றதை உணராது “ரவாங்” பகுதிக்குப் பயணித்தார். அன்றோடு அக்கணத்தோடு கணபதியினைப் பிரிகின்றோம் என்பதை உணராத குருதேவன் “பந்திங்” பகுதிக்கு காரில் விரைந்தார். “தோழர் மீண்டும் காண்போம்” என்று குருதேவனைப் பிரிந்த கணபதி கைதாகி தூக்கிலிடப்பட்டார். தோழர் குருதேவன் காண இயலாமலே போனது.

படிப்பகம்

www.padippakam.com

## 19. புயலும் சிறை புகுமோ! சிறையிலும் பரணி பாடுமோ!

கணபதி என்ற பெயரே போர்க் குணத்தை மக்களுக்கு அளித்தது. கணபதி என்ற உச்சரிப்பு மக்களின் உணர்ச்சியினைத் தட்டி யெழுப்பியது. கணபதி என்ற திருப்பெயரை உச்சரித்த ஆதாரங்கள் ஒவ்வொன்றும் புரட்சியின் வாசல்களைத் திறந்து வைத்தன. கணபதி எனும் மக்கள் முழக்கம் பாட்டாளி மக்களின் ரத்தத்தில் ஓர் அர்த்தத்தைச் சேர்த்து எதிரிகளால் சிறைபடுத்தவியலா புயல் காற்றாய்த் திகழ்ந்தது. கணபதி மலேயாவில் மண்ணில் திரும்பிய திசைகளில் எல்லாம் மக்கள் போராட்டம் பூத்துக் குலுங்கியது. புதுயுகம் படைக்கும் போராட்டம் முழு வீச்சுடன் நடைபெற்றது. புரட்சித்தாயின் போர் மகனாய்ப் பிறந்த கணபதியை உயிருடன் பிடித்தோ அல்லது கொன்றோ, மக்கள் போராட்டத்தினை - ஒடுக்கவோ - கட்டுப் படுத்தவோ இயலும் என்றுணர்ந்த அன்றைய மலேயா பிரிட்டிஷ் அரசு புரட்சித் தலைவன் கணபதியைப் பிடிக்க அனைத்து சாதனங்களையும் முடுக்கிவிட்டது. இருப்பினும் மக்களின் போராட்ட உணர்வு வெள்ளமாய் வீறு கொள்ளும்போது அரசு அணைக்கட்டுகள் தகர்க்கப்படும். அரசு சாதனங்கள் அனைத்தும் சருகுகளாய் அழித்தொழிக்கப்படும். அதுவும் திட்டமிட்டுத் தளராது போராடும் நுண்ணறிவு மிக்க இலட்சிய வீரனாய் தடாகத்தின் நீருக்கேற்ற தாமரைகளாய் வடிவு கொள்ளும் தலைவர்கள் அமைந்து விடின் கடலையும் மக்கள் வெள்ளம் கைப்பற்றிப் பகிர்ந்தளிக்கும் வல்லமை படைத்ததாக மாறிவிடும். கணபதியும் அவரின் தோழர்களும் பம்பரம் போல் சுழன்று மக்கள் உரிமைப் போராட்டத் தீயினுக்கு சூரியனையே வார்த்து சூறாவளியாய்ச் சுழன்றார்கள். கணபதியின் முன் அரசுச் சாதனங்கள் செயல் வடிவம் இழந்தன. கணபதியின் போர்த்திறத்தில் பலமுறை தோல்வியுற்ற அரசு விரக்தியால் பதிலடியாக ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைச் சிறையிலிட்டுச் சித்திரவதைகள் செய்தது. மலேயாவின்

படிப்பகம்

www.padippakam.com



சிறைச்சாலைகள் நிரம்பிச் சிரித்திடவே பல புதிய கைதி முகாம்கள் எனும் திறந்த வெளிச் சிறைக் கூடங்கள் மலேயாவில் பிறந்தன. மலேயாவின் தமிழ்மக்கள் தாம் உழைத்த மண்ணிலேயே அகதிகளாய்க் குவிக்கப்பட்டு அவர்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் முகாம்களாய் உருவாகின. முகாம்களைச் சுற்றிலும் அரசுப் படைகள் குவிக்கப்பட்டன. எவ்வளவுதான் கூர்மையான முட்கம்பி வேலிகளாயினும் வர்க்க உணர்வு கொழுந்து விட்டெறிந்து அதுவே புரட்சித் தீயாய் மாறுகின்ற போது முட்களும் பொசுங்கிடும்! கற்களும் கரைந்திடும்!! அதுபோன்று மக்களின் உணர்வு முனைகளுக்கு முன்னால் முட்கம்பிகளின் முனைகள் மழுங்கிப் போயின. விடுதலைப்படை கைதி முகாம்களைத் தாக்கி மக்களையும் சில தோழர்களையும் விடுவித்தது. போராட்டத்தின் புயல் வீச்சினை உணர்ந்த அரசு மேலும் ராணுவத்தினை முகாம்களைச் சுற்றி அடுக்கியது. இரு தரப்பிலும் பாசறைகள் சுறுசுறுப்பாயின படைகள் பெருகின; போர் வடிவங்கள் மாற்றியமைக்கப்பட்டன. படைகளின் போர்க் குணம் பெரும் வீச்சுக்குத் தூண்டி விடப்பட்டது. விடுதலையுணர்வும், அடக்குமுறை வெறியும் அணி அணியாய்ப் போரிட்டன. உச்சக்கட்ட போர்ச் சூழ்நிலை மலேயாவைத் தழுவியது. அரசுத் தரப்பின் உளவு பிரிவு கணபதி குறிப்பிட்ட இடம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்ததை உளவறிந்தது. புரட்சிப்படைத் தலைவன் - விடுதலையின் வித்து - மாவீரன் கணபதி வரும் வழியில் அரசின் பெரும்படைகள் மறைந்து காத்திருந்தன. அரசின் முன் முயற்சி மிக ரகசியம் வாய்ந்ததாக இருந்தமையால் யதார்த்தமாகச் சென்ற கணபதி எதிரிகளின் நடுவில்-நூற்றுக்கணக்கான துப்பாக்கிகளின் நடுவில் ஒரு போர்ச் சூரியனை ஒத்துக் காணப்பட்டார். ஆயுதம் இருப்பினும் எதிர்த்து போராடுவதில் பயனில்லாததை உணர்ந்தான் அம்மாவீரன். போரிலே மடிந்து விடுவதைக் காட்டிலும் மக்கள் உணர்ச்சியைத் தூண்டும் விதையாகத் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்படுவதை விரும்பி இருக்கலாம்! எனினும், சிறு போராட்டம்! போராடியும் பயனில்லை - ஆம், ஓர் எரிமலை கைதானது. புயல் ஒன்று சிறைப்

படிப்பகம்

www.padippakam.com



பிடிக்கப்பட்டது. மாவீரன் கணபதி கைது செய்யப்பட்டார். மலேயா அரசின் அதி பாதுகாப்புத் தளமான மத்திய சிறைச் சாலையில் கணபதி சிறைப் படுத்தப்பட்டார்.

மக்களின் சுவாசமென விரவிக்கிடந்த கணபதி கைதான செய்தி காட்டுத் தீயென காற்றிலும் விரைந்து பரவியது. மக்களின் கடுங்கோபம் வன்முறையாக வடிவம் கொண்டது. ரப்பர் கிடங்குகள் கொளுத்தப் பட்டன. அரசுப் பேருந்துகள் மக்களின் கோபத்தீயில் பொசுங்கிப் போயின. வெள்ளைக்காரர்களின் கார்கள் வழிமறித்துத் தாக்கப்பட்டன. முதலாளிகள் அஞ்சி ஓடி ஒளிந்தனர். பிரிட்டிஷ் மலேயா அரசின் அலுவலகங்களின் முன் மக்கள் மறியல் செய்யத் துவங்கினர். ஆர்த்தெழுந்தது மக்கள் வெள்ளம். கொதித்து நின்று மலேயாவின் முப்புறக் கடல்களாலும் அணைக் கவியலா மக்கள் போராட்டம் கனன்று பரவியது. வெள்ளை முதலாளிகளும் - அரசு அதிகாரிகளும் தனியே செல்ல நடுங்கினர். தோட்ட முதலாளிகள் தோட்டங்களைக் கைவிட்டு நகர்ப்புறம் பறந்தோடினர். அவ்வாறு அவர்கள் செல்லும் போது அவர்களை வழி மறித்துக் கொரில்லாப் படை தாக்கியது. கணபதியின் படைகள் அரசு அதிகாரிகளை நடுங்கச் செய்தன. அரசுப் படைகள் அதிர்ந்து போயின. அரசுப் படைகள் மக்களை வேட்டையாடத் துவங்கின. கண்ணீர் புகைப் குண்டுகள் துப்பாக்கி சூடுகள் என அரசின் அடக்குமுறை கணபதிக்காகப் போராடிய மக்கள் மீது படர்ந்தது. வீரமிக்க இளைய சமுதாயம் தங்கள் தலைவரான கணபதியை விடுதலை செய்ய முழுமையான தியாகத்திற்குத் தயாராகினர். எங்கும் எழுச்சி! எங்கும் கிளர்ச்சி! தொழிலாளர்கள் தங்களின் தொழிலாளர் தலைவன் கணபதிக்காக வேலைக்குச் செல்ல மறுத்து மறியலில் ஈடுபட்டனர். அதிகாரிகளையும் துரோகிகளையும் கணபதியின் கொரில்லாப் படை தாக்கியது. தொழிற் சங்கங்கள் செயல்படாது முடக்க அரசு அவசர சட்டத்தினைப் பிரகடனப் படுத்தியது. அவசரச் சட்ட இருளில் சுதந்திரத் தொழிலாளிகளைக் கட்டாயப்படுத்தி வேலைக்கு இறக்க முயற்சித்தது. அரசால் தேசபக்தர்கள் தேச துரோகிகளாகப்

படிப்பகம்

www.padippakam.com



பிரகனப்படுத்தப்பட்டு வேட்டையாடப்பட்டனர். விடுதலை வீரன் - இளைய தலைமுறையில் இரும்புத் தலைவன் கணபதியைத் தேசத்துரோகி என அன்றைய மலேயா பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. புரட்சி மலர் ஒன்றினை **"முள்"** என்று பெயரிட்டு அழைத்துச் சுகம் கண்டது ஏகாதிபத்தியம். கணபதிக்கு ஆதரவாகச் செய்யப்படுகின்ற எச்செயலும் தேசத்துரோகச் செயல் என அறிவிக்கப்பட்டது பல்லாயிரம் தேச பக்தர்கள் தேசத் துரோகச் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். ஆயினும் மக்கள் கிளர்ச்சி தொடர்ந்து பரவியது. விடுதலைப்படைகள் தொடர்ந்து அரசு அலுவலகங்களைத் தாக்கிக் கொண்டிருந்தனர். விடுதலைப்படைகள் அதிரடித் தாக்குதல்களைத் தொடுத்துக் கொண்டிருந்தது. மக்கள் கிளர்ச்சியும் விடுதலை படைகளின் மின்னல் வேக தாக்குதல்களும் மலேய பிரிட்டிஷ் அரசினை வெகு வேகமாகக் கணபதியை தூக்கு கயிற்றுக்கு அனுப்பத் துரிதபடுத்தியது. தீரர் கணபதியவர்கள் ஆயுதம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தூக்கிலிடப்படுவார் என்று அரசுச் செய்தித்தாள் **"ஜனோபகாரி"** செய்தி வெளியிட்டது. அது மட்டுமல்லாமல் தன்னை ஜனநாயக அரசு என்று கூறிக் கொண்ட மலேயா அரசு அனைத்தும் ஜனநாயக நெறிப்படிநடக்கும் எனத் தன்னைத் தானே புகழ்ந்து கொண்டது. கட்டிளம் தலைவன் கணபதிக்காக உலகின் கோரிக்கைகள் ஆயிரம் திசைகளிலிருந்து மலேயாவைத் தாக்க துவங்கியன.

மக்கள் தலைவன் - பூத்து நின்ற புரட்சிக் குறிஞ்சி - மலேயாவின் தமிழ்த் தலைவன் கணபதி மலேய சிறையில் வெள்ளை அதிகாரிகளின் வெஞ்சிறையில் நெஞ்சு நிமிர்ந்து நின்ற செஞ்சுடர் மைந்தன்-சிறைக் கம்பிகளிடையே ஒரு தமிழர்களஞ்சியம் - சூழ்ச்சியாளர்களின் மத்தியிலே ஒரு சுதந்திர தீபம் - சுந்தரத் தமிழில் சொல்லெடுத்து உரையாற்றும் மாபெரும் விடுதலை விரும்பி-இரும்புக் கம்பிகளினிடையே மலேயாவின் மக்களின் விடுதலை கனவு இலட்சியத்தைக் கரை சேர்க்கும் ஈடு இணையற்ற போர்த் தளபதி இருட்டறையில்! உலகம் சிலிர்த்தது. உலகின்

படிப்பகம்

www.padippakam.com



கணைகள் சீறிப்பாய்ந்தன. மக்கள் கணபதி விடுதலை செய்யப்பட வேண்டும் என்று ஒட்டுமொத்தமாகக் குரல் எழுப்பினர். தொழிற்சங்கங்கள் தங்கள் தலைவன் கணபதி விடுதலை செய்யப்பட வேண்டும் என ஆர்ப்பரித்து நின்றன.

அரசியல் கட்சிகள் அனைத்தும் கணபதி விடுதலை செய்யப்பட வேண்டுகோள் விடுத்தன. மலேயாவின் மூன்று தேசிய இன அரசியல் கட்சிகளும் கூட்டாகக் கோரிக்கை விடுத்தன.

மலேயாவின் இந்தியப் பிரதிநிதி ஏ.வி.திவி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இந்திய அரசும் திவியின் கோரிக்கையை ஏற்பு செய்தது. இந்திய அரசியல் கட்சிகளும் வேண்டுகோள்களை விடுத்தன. அகில உலகத் தொழிற்சங்க சம்மேளனம் அழுத்தமான தீர்மானத்தை அனுப்பியது. அயல் நாடுகளின் சகோதர தொழிற்சங்கங்கள் மிக அழுத்தமான தீர்மானங்களை அனுப்பின.

அகில உலக ஜனநாயக சக்திகள் கணபதியை விடுதலை செய்ய விண்ணப்பித்துக் கொண்டன. சீனக் கம்யூனிஸ்டுகள் கணபதியை விடுதலை செய்ய வேண்டுகோள் விடுத்தனர். மலாயாவின் இந்திய அரசுப் பிரதிநிதி ஜான் ஏ.திவி கணபதியுடன் மிக நெருக்கமாகப் பழகியவர். அவர் கணபதியின் விடுதலைக்காக மலாயா அரசுடன் மிகத் தீவிரமாக வாதாடினார். சிறையிலிருந்த தமிழர் பெட்டகத்தினை - கணபதியைச் சந்தித்து ஆறுதல் கூறினார். சுதந்திர இந்திய அரசு கணபதியை எப்படியும் பாதுகாக்க வேண்டும் என்று போராடியது. கணபதியை எப்படியும் விடுதலை செய்திட இயலும் என அவர் நம்பி செயல்பட்ட பெருந்தகையாளர் திவி மறைந்த இந்தியப் பிரதமர் பண்டிதர் நேரு அவர்கள் கூட்டிய ஆசிய உறவு மாநாட்டில் கணபதி கலந்து கொண்டு மலேயாவின் விடுதலைக்காக மிக உருக்கமாக உரையாற்றி நேரு அவர்களின் மனதைக் கவர்ந்தவர் ஆவார். இது திவி அவர்களுக்குக் கணபதியை எப்படியும் காப்பாற்றி விட இயலும் என்ற நம்பிக்கையைத் தந்தது. ஆனால் முடிவு வேறுவிதமாக இருந்தது. ஆம். கணபதி தமிழனாயிற்றே.

படிப்பகம்

www.padippakam.com



தமிழர்கள் இன உணர்வு குறைந்தவர்கள். கணபதி என்ற தமிழனைக் காப்பாற்றத் தமிழ்நாடு துடித்தெழுந்ததா? தமிழர்கள் கணபதிக்காகக் கலங்கித் துடித்தனரா? தமிழக மக்கள் இளைய மாவீரன் கணபதிக்காகச் சங்க நாதம் செய்தனரா? தமிழகத் தெரு தோறும் மறியல் பூக்கள் மலர்ந்தனவா? இந்தியப் பாராளு மன்றத்தில் கணபதியின் உயிருக்காகத் தமிழர்கள் முழங்கினரா? இந்தியத் தலைநகரில் கண்டன முழக்கங்கள் எதிரொளித்ததா? உலகமே கலங்கும் அளவுக்குத் தமிழர்களின் உரிமைக் குரல் கணபதியின் குரலாக அறைகூவல் செய்ததா இல்லை, இல்லவே இல்லை தமிழன் இவன் மூவேந்தனாக இருந்த போதே முன்னூராயிரம் பிணக்குகளில் புழுத்துப் போனவன்!

## 20. தூக்கு மேடை

மரணம் அது என்ன? வாழ்க்கையின் நிரந்தர விடுமுறையா! ஏதோ சில எதிர்பார்ப்புகளுடன் கூடிய ஒரு புதிய பயணமா! அது ஓர் இயற்பியல் முற்றுப் புள்ளியா! வேதியியல் மாறு பொருளா! ஆனால் மனிதன் அந்த ஒன்றுக்குத்தான் அஞ்சுகின்றான். பிறக்கும் போது நமக்கு அச்சம் என்ற உணர்வு இல்லை. அச்சம் என்ற உணர்வோடு மனிதன் பிறப்பதுமில்லை. ஆனால் நாளடைவில் தோன்றுகின்ற - தோற்றுவிக்கப் படுகின்ற உணர்வுகளில் ஒன்றுதான் அச்சம். மனிதன் ஏன் மரணத்துக்கு அஞ்ச வேண்டும். எவராலும் தடுக்கவியலாதது மரணம். எவ்வளவு சிறப்பு வாய்ந்த மருத்துவராக இருப்பினும் தள்ளிப் போட இயலுமே தவிர தவிர்க்க முடியாத ஒன்று மரணம் - மரணத்தை வென்றவர்கள் எவரும் இல்லை. அமைதியின்றிப் பிறந்திருக்கலாம் ஆனால் அமைதியாகச் சாகத் தெரிய வேண்டும். அழுது கொண்டே பிறக்கின்ற மனிதனுக்குச் சிரித்துக் கொண்டே சாகத் தெரியவில்லை. ஆனால் சிரித்துக் கொண்டே மரணத்தை மலர்மாலையாக்கிக் கொண்டவர்கள் புகழாளர்கள். புன்னகைத்துக் கொண்டே வீரச்

படிப்பகம்

www.padippakam.com



சிங்கங்களாகத் தூக்கு மேடைக்குப் பீடு நடை போட்ட போர் வீரர்கள் பலர். அவர்கள் மாவீரர்கள். உலகத்தின் கழுத்தில் சூடப்பட்ட பூமாலைக்கு நிகரான புகழானவர்கள். அவர்கள் வரலாற்றுப் படைப்பாளர்கள். வரலாற்றினைப் படைத்தவர்கள் மட்டுமல்ல - அவர்களுக்குப் பின்னால் ஒரு வரலாறும் உயிர் வாழ்கின்றது. விஷக் கோப்பையே தன் முன் சிரித்த போதும் சாக்ரடீஸ் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. விஷமா அவனை முறித்தது? இல்லை! விஷத்தை அவன் முறித்தான். ஆம்-இன்றளவும் அவன் புகழ் உலகில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. சாக்ரடீஸ் வரிசை தொடர்கின்றது. அவன் வாரிசுகள் தொடர்ந்து வருகின்றனர்.

மானிடர்களே! நீங்கள் அல்ல - இவ்வுலகின் வாரிசுகள். எக்காலத்தும் கொள்கையை இம்மியும் விட்டுக் கொடுக்காது கொண்ட இலட்சியங்களுக்காகப் பூமேடையாகத் தூக்கு மேடையை முத்தமிட்டவர்களே இவ்வுலகின் வாரிசுகள். வீரபாண்டிய கட்ட பொம்மன் தலை நிமிர்ந்து விடுதலையுணர்வுக்காக உயிரினை விலையாகத் தூக்கு மேடைக்கு அளித்தான். அவன் வழியில் ஃபாதர் வெள்ளை சிவகெங்கை மருது சகோதரர்கள் தூக்கிலடப்பட்டார்கள். அவர்களே இவ்வுலகின் வாரிசுகள் மாவீரன் பகத்சிங் தன் வீரவுயிரை நாட்டு விடுதலைக்காகத் தூக்கு மேடையிலே தூக்கியெறிந்தானே அவனே இவ்வுலகின் வாரிசு. மலேயாவின் விடுதலைக்காக ஏன்? மூன்று நாட்டு விடுதலைக்காக தூக்கு மேடையைத் தழுவிய கணபதி இவ்வுலகின் வாரிசு.

எத்தனையோ குற்றவாளிகளின் உடலைச் சுமந்து சுமந்து களங்க மடைந்த தூக்கு மேடையே நீ கணபதியை - கட்ட பொம்மனை - பகத் சிங்கைத் தூக்கில் சுமந்து பெருமையைத் தேடிக் கொண்டாயா! இம்மண்ணில் வீரப்புதல்வர்களை மரணிக்கச் செய்ய நேர்ந்ததே என நீ வருந்தியதேயில்லையா! மாவீரன் கணபதியின் காலடிகளைத் தாங்கிய அச்சில கணங்களே

படிப்பகம்

www.padippakam.com



நீ வாழ்ந்ததாகப் பொருள் கொண்டாயா! தன் மண்ணுக்காகத் தலையையே கொடுக்கத் துணிந்த மாவீரன் கணபதியைச் சுட்டுக் கொன்றிருக்கலாமே! ஓஹோ! தாய்நாட்டு விடுதலைக்காகப் போராடியவனைத் தாய் மண்ணினின்று அப்புறப்படுத்திக் கொல்வதாகக் கொடும் நினைப்பா!

கொடிய மேடையின் சுருக்குக் கயிறே! நீ தலைகீழாகத் தொங்குகின்றாய். உன்னில் தொங்கவிடப்பட்ட மாவீரன் கணபதி இறந்தாலும் தலை நிமிர்ந்து பொலிவுடன் இறந்தான் பார்! சுருக்குக் கயிறே உன்னில் தொங்கிக் கொண்டிருப்பது எங்கள் விடுதலையின் கேள்விக் குறிகள் நாளைய பதில்கள். இன்றைய போராட்ட விளக்கங்கள் - நாளைய பொன்னாட்டின் அச்சாரங்கள்.

தூக்கு மேடையில் இன்னுயிரைத் தந்து மலேயாவின் விடுதலைக்குத் தூது சென்றதோ கணபதியின் புகழ். தூது சென்றாயோ தூயவனே! தூக்கில் தொங்கிய தூங்கா மணிவிளக்கே - தூக்கு மேடையே! நீதி தவறிய நியாயமற்ற மேடையே. தமிழ்த் தாயின் தலைசிறந்த புரட்சியாளனை முத்தமிடத் துடித்தாயோ! எங்கள் மாவீரனை வென்றுவிட்டதாக நினைப்போ? உணர்வு மத்துப் போன மர மேடையே! எங்கள் மாவீரர்களின் வீரம் ஒரு தொடர்கதை. உன்னால் எந்நாளும் வெல்ல இயலாத வெற்றிக் கதை. எங்கள் மாவீரனின் வீரத்தின் முன் தலை குனிந்தாயோ? ஃபாதர் வெள்ளை தங்கத்தின் தரமறியத் தெரியாதா தரங்கெட்ட மேடையே - எங்கள் சிங்கக் கணபதியின் வீரத்தின் முன் தலை தாழ்ந்தாயா? இல்லை பல குற்றவாளிகளின் உயிரினைச் சுமந்து களங்கத்தினை கணபதி துடைத்ததினால் தலை நிமிர்ந்தாயா!

முள்மேடையே! உயிருக்கு அஞ்சியஞ்சி வாழ்பவர்களுக்கு நீ ஒரு துயரமேடை! தன் இலட்சியத்துக்காக இன்னுயிரை உன்னிடத்தில் வீசி யெறிபவர்களுக்கே நீ ஒரு வழிப்பாதை. உன்னை மிதித்துக் கொண்டு வீரன் இலட்சியப் பாதையின் விடுதலை மேடைக்குச் செல்கின்றான். இலட்சியவாதியின் கொள்கைகளுக்குக் குறுக்கே நிற்கும் தடைகளில் நீயும் ஒன்று. உயிரைப் பறிக்க உன்னால்

படிப்பகம்

www.padippakam.com



# தியாகி மலேயா கணபதி



**கணபதி இன்று காலை புடு சிறையில் தூக்கிலிடப்பட்டார்**

[illegible]

**பிறப்பு 23-3-1915. இறப்பு 4-5-49.**

படிப்பகம்

www.padippakam.com



## INWARD TELEGRAM

TO THE SECRETARY OF STATE FOR THE COLONIES

COPY FOR REGISTRATION

Cypher O.T.P.

<u>FROM FEDERATION OF MALAYA</u> (Sir H. Gurney)

D. 17th December, 1949.
R. 17th " " 11.45 hrs.

18 DEC 1949

<u>IMMEDIATE</u>
No. 1350. Secret.

Addressed S. of S.

Repeated to Commissioner General No. 408.

Governor Singapore by bag.

130 - My immediately preceding telegram.

Following should not be released to the press.

Bandits carried out 27 attacks, of which 20 caused casualties, loss or damage.

Estimated six by gangs over 25, three by over ten and remainder under ten.

Pahang had nine, Negri Sembilan seven, Johore four and the rest evenly spread.

2. 19 bandits surrendered, of whom 16 were Malay. 11 bandits, three agents and 21 supporters captured.

3. Important courier was killed in North Selangor on 1st December. Documents captured on him mentioned following points:-

(i) Effort being made to link with South ~~(?)~~ and ~~(?)~~ North Selangor and West Pahang under one organisation.

(ii) Winning over Malays considered more important now than Chinese or Indians.

(iii) Unification of military and Min Yoen organisation in Selangor.

(iv) Loss of camps and equipment and disruption of communications.

(v) The arrest of Gurudevan the number one Indian Communist in the country.

படிப்பகம்

www.padippakam.com



இயலும் எங்கள் இலட்சியங்களை முறிக்க இந்த உலகில் எந்தச் சக்தியுமில்லை. வேண்டுமானால் கணபதியின் காலடியில் உயிர் வாழ்ந்து கொள். நீதி தவறிய நிலைகெட்ட மேடையே விலை மதிப்பற்ற கணபதியின் உயிரைக் கவர்ந்த கொலைகார மேடையே! எங்களின் புரட்சி உன்னைச் சுட்டெரிக்கும் நாள் பிறக்கும்'' என்று உலகத் தமிழர்கள், புரட்சியாளர்கள் கலங்கித் தவித்தனர்.

**தண்டனைக்கு முந்தைய நாள்** :-கோலாலம்பூர்ச் சிறைக் கம்பிகளுக்கிடையே ஒரு சிங்கத்தின் வாழ்வு இருந்து கொண்டிருந்தது. இரவு சென்று பொழுது புலர்ந்தால் உயிர்ப் பறவை தான் நேசித்த மண்ணை விட்டுப் போகப் போகின்றது. ஒரு போராட்டக்காரனின் வாழ்வு முடிந்து ஓர் வரலாறு பிறக்கப் போகின்றது. மாலைமங்கும் நேரத்தில் அரசு அதிகாரிகள் வந்தனர் உங்கள் இறுதி ஆசை என்ன? என்று கணபதியிடம் கேட்டனர். கணபதி அமைதியாகச் சில நொடிகள் கழித்துத் தீர்க்கமான பார்வையோடு அதிகாரிகளை நோக்கினார்.

**“மலேயாவின் சுதந்திரம்” எனப் பதிலளித்தார்**

அதிகாரிகள் வாயடைத்துப் போயினர். வந்த வழியே சென்றனர். இறுதியாக அவர் கேட்டது ஓர் பேனாவும் நோட்டுப் புத்தகமும் தான். அன்று இரவெல்லாம் எழுதியிருக்கின்றார். என்ன எழுதினாரோ? அது அரசால் வெளியிடப்படவில்லை. தன் இறுதி வரை தன்னோடு பயணம் செய்த தோழர் குருதேவனை நினைத்திருப்பார். சாகசக்காரத் தோழன் இரணியனை நினைத்திருப்பார். வெற்றிலை வியாபாரியாகத் தானும் தலைப்பாகையோடு குருதேவனும் எதிரிகளிடமிருந்து தப்பித்து வந்ததை நினைத்திருப்பார். மீண்டும் சந்திப்போம் எனக் கூறிவிட்டு குருதேவனைக் கடைசியாகப் பிரிந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்திருப்பார். புரட்சி வீரன் வீரசிம்மனை நினைத்துப் பார்த்திருப்பார். இந்த உயிர் எப்போதோ நேதாஜியின் ஐஎன்ஏ

படிப்பகம்

www.padippakam.com



படையில் கலகம் செய்தவன் என்று பறந்திருக்க வேண்டியது. அந்த மாபெரும் தலைவன் நேதாஜியின் மதியூகத்தால் தப்பித்து வாழ்ந்து அரசுக்கெதிராக பல்வேறு சாதனைகள் புரிந்து - மக்களுக்காகப் போராடி விடுதலை இலட்சியத்துக்கு இரையாகும் பெருமையடைந்தது என எண்ணி இறும்பூது அடைந்திருப்பார். தான் இன்னும் பழி வாங்கத் தவறிய அதிகார வர்க்கத்தினரை நினைத்திருப்பார். அதனைத் தன் தோழர்கள் முடிப்பார்கள் என்ற மனநிறைவை அடைந்திருப்பார். விடுதலை வேள்வியில் உயிர் வார்க்கின்றோம் - மீதியைத் தோழர் குருதேவன் பார்த்துக் கொள்வார் என்று நினைத்திருப்பார். புரட்சிகரப் பாடல்களைப் பிற சிறைத் தோழர்கள் கேட்குமளவுக்கு உரக்கப் பாடினார். பிற அறைகளுக் கெல்லாம் கேட்கும்படியாக - சிறைச்சாலை எதிரொலிக்கப் புரட்சிகர உரையாற்றியிருக்கின்றார். "தோழர்களே -நான் இன்று இரவு உயிர் வாழ்கின்றேன். நாளை புதிய பயணத்தின் - புகழ்ப் பயணத்தின் படிக் கட்டுகளில் நிற்கப் போகின்றேன். நாளை என் மரணம் மலரும் நாள். இந்த மண்ணை நேசித்து - இந்த மக்களை நேசித்து இறுதி மூச்சுவரை மக்களுக்காகப் போராடி மறையப்போகின்றேன். நாளை முதல் என் போராட்டப் பணிகள் உங்கள் கையிலே ஒப்படைக்கப்படுகின்றது. விடுதலைப் போராட்டத்தின் புரட்சிப் பயணத்தில் பொருள் பொதிந்த வாழ்வோடு மடிகின்றேன். ஆனால் எம் மண்ணின் சுதந்திர வேட்கை என்றும் மடியாது. என் மரணம் உங்களின் விடுதலைக்கு தூவப்படுகின்ற உரம். என் உயிர் மலேயாவின் விடுதலைக்காக விதைக்கப்படுகின்றதாக எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு போராட்ட வீரன் இறுதி வரையில் போராடினான். போராட்டப் பாதையிலே தூக்கிலிடப்பட்டான் என்ற பெருமையோடு இறக்கப் போகின்றேன். ஒரு கிளர்ச்சிக்காரன் தன் வாழ் நாள் முழுவதும் சமரசமின்றி மக்களுக்காகப் போராடிப் போராடி ஒரு கிளர்ச்சிக்காரானகவே மடிகின்ற பெருமை எனக்குக் கிடைத்துள்ளது. நீங்கள் வெளியே

படிப்பகம்

www.padippakam.com



செல்லுங்கள். ஏகாதிபத்தியத்தை விரட்டியடியுங்கள். வாழ்க புரட்சி வாழ்க மலேயா வாழ்க தமிழ்'' என உரையாற்றியிருப்பார். வெகுநேரம் மலேயாவினைப் பற்றியும் போராட்டத் தோழர்களைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருந்த வரை அவர் வாழ்நாளின் கடைசி இரவுத் தூக்கம் அனைத்து கொண்டது. மரணத்தைக் கொண்டு வரும் விடியலுக்கான நித்திரை நிறைவேறியது.

விடியல் விழிதிறந்தது பொழுது புலர்ந்தது. **கோலாலம்பூர் புடு சிறைத் தூக்கு மேடையில் கணபதி.**- தமிழ்த் தாயின் போராட்டப் புதல்வன் - புரட்சியின் பூபாளப் புத்திரன் மலேயாவின் மாண்புறு மாமேதை - நினைவுகளைச் சுமந்து கொண்டு இன்று வாழும் தோழர். குருதேவனின் வாழ்க்கைப் பெட்டகம் - மாவீரன் கணபதி தூக்குமேடையின் தியாகியானான். மக்கள் மாலை சூட்டி மகிழ்ந்த கணபதியின் கழுத்தினிலே சுருக்குக் கயிறு இறுகியது. தூக்குமேடைப் பணிதனை நிறைவேற்றி விட்டு அமைதியாக அதுவும் அழுது கொண்டிருந்தது. உலகத் தியாகி - மூன்று நாட்டு விடுதலையின் வீரர் உயிர் துறந்தார். வெள்ளைக்கார அரசு அவரின் சடலத்தை ஒப்படைக்க மறுத்து அதுவே புதைத்தது. புதைத்தாலும் ஆயிரம் கிளைகளோடு முளைப்பது தியாகம் ஒன்று தானே! கணபதி தூக்கிலிடப்பட்ட செய்தியை உலகச் செய்தித்தாள்கள் உரிய முக்கியத்துவத்துடன் வெளியிட்டன. தினமணி நாளிதழின் செய்தி பின்வருமாறு **"தினமணி"**

"ஸ்ரீகணபதி தூக்கிலிடப்பட்டார்'' என்ற தலைப்புடன் செய்தி தொடர்கின்றது. "மலேயா தொழிற்சங்க சம்மேளன மாஜித் தலைவர் கணபதி சிங்கப்பூர் - மே 4 அகில மலேயா தொழிற்சங்கங்கள் சம்மேளன மாஜித் தலைவர் ஸ்ரீ எஸ்.ஆர். கணபதி இன்று காலை கோலாலம்பூரில் தூக்கிலிடப்பட்டார். அவசரகாலச் சட்டப் பிரகாரம் மலேயாவில் மரண தண்டனை விதிக்கப் பெற்ற முதல் இந்தியர் இவர்தான்.''

படிப்பகம்

www.padippakam.com

# 21. தாய்த்தமிழகத்தின் துடிப்பு

மலேயாவில் - கடல்கடந்து சென்ற தமிழர் தம் கலங்கரை விளக்கமாம் மாவீரன் கணபதி தூக்கிலிடப்படுவார் என்ற செய்தி உலகையே குலுக்கியது. ஊர் கூடி அழுதாலும் - பார்போற்றி அழுதாலும் ஈன்ற தாய் அவளின் மௌன அழுகை - ஆம் அது தான் இறவா இலக்கியம். 1920-ல் 'ரஜீலா' கப்பலில் சிறு வயதில் மலேயா சென்ற தம்பிக் கோட்டை கணபதி - மூன்று நாட்டு விடுதலைக்காகத் தம் மூச்சை நல்கும் காளை, தமிழ்த் தாய்-தாய்த் தமிழகம் தரையிலிட்ட புழுவாகத் துடிக்கும் நிலை கண்டதா - இல்லை - அனலில் உரசிய பஞ்சாகப் பற்றி எரிந்தா தமிழகம்? மீண்டும் எழுதுகின்றேன். இவன் கங்கை கொண்டவனாம். கடாரம் வென்றவனாம் - கடற்படை நடத்தித் தம் முகவரியினை தூர கிழக்கு நாடுகளில் எல்லாம் செம்மையாகச் செதுக்கியவனாம் - இவன் எரித்திரியாவுக்கும் - யவனத்துக்கும் - ரோமாபுரிக்கும் வாணிகம் செய்தவனாம் - வழிகாட்டியவனாம். வரலாறு தமிழனை வானளவு புகழ்ந்தாலும் ஏற்க இயலாது, இவன் தமிழ்த் தாய் தன் வாயளவு புகழ்வதற்குக் கூட வழி வைக்காதவன். கணபதி தூக்கிலிடப்படும் செய்தி தாய்த் தமிழகத்தில் எத்தகைய பாதிப்பினை உருவாக்கியது. அதற்கு நமக்குக் கிடைத்த ஒரே ஆவணம் கலைஞர் அவர்கள் எழுதிய "கயிற்றில் தொங்கிய கணபதி" சிறு நூலே ஆகும். மலேயா கணபதி அவர்கள் தூக்கிலிடப் பட்ட காலத்தில் இந்தியா முழுவதும் கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப் பட்டு இருந்தது. பல கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர்கள் தலைமறைவாக இயக்கப் பணியை நடத்திக்

www.padippakam.com



கொண்டிருந்தனர். "ஜன சக்தி" மறை சுற்றோட்ட இயக்க இதழாக இருந்தாலும், தடைசெய்யப்பட்ட நிலையில் பல தோழர்கள் வெகு ஜன அமைப்புகளின் வடிவங்களாக உருமாற்றம் பெற்று இயக்க பணிதனை ஆற்றிக் கொண்டிருந்ததாலும் கணபதி தூக்கிலிடுதல் தொடர்பான அதிகாரப் பூர்வ எழுத்தாவணங்கள் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கிடைக்கவில்லை. இருப்பினும் இன்றைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களைத் தோழர் டாக்டர். ராஜமாணிக்கம் மற்றும் மாதவரம் தோழர் மா.ஜோ. டில்லி ஆகியோரின் உதவியுடன் சந்தித்து தகவல்கள் சேகரிக்கப்பட்ட பொழுது கட்சியின் பெயரில் இல்லாமல் தனியாகத் தோழர்கள் தமிழ் ஒளி, குயிலன், தி.க. சிவ சங்கரன் ஆகியோர் நடத்திய "முன்னணி" வார வெளியீட்டில் மலாயா கணபதி தூக்கிலிடப் படுவதை கண்டித்தும் தியாகக் கடலைப் புகழ்ந்தும் கவிதைகள் புனையப்பட்டது என்ற தகவலை தெரிவித்தார். அத்தகவலையே தோழர் ஏ.எம். கோபு அவர்களும் உறுதி செய்தார். தோழர் நல்லகண்ணு அவர்கள் "தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டு கட்சியின் மீது நடத்தப்பட்ட அடக்கு முறைகளை கொடுமைகளைத் திராவிட இயக்கம் தொடர்ந்து கண்டித்து வந்தது என்றும் அப்போது தி.மு.க தலைவர் கலைஞர் அவர்கள் இளமைத் துடிப்புள்ள உணர்ச்சி மிகு பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்து வந்ததையும் நினைவு கூர்ந்தார். கலைஞர் ஒரு தொடர்ச்சியான சமூகச் சிந்தனையாளர் என்றும் கருத்து தெரிவித்தார். அத்தகைய துடிப்பான இளைஞனின் படைப்பு ஒன்றுதான் அங்கீகரிக்கப் பட்ட போது ஆவணமாக தமிழகத்தில் உலா வந்த "கயிற்றில் தொங்கிய கணபதி" சிறு நூலாகும். அந்நூலின் ஏழாம் பக்கத்தின் முக்கிய பகுதி பின் வருமாறு எடுத்துரைக்கின்றது.

www.padippakam.com



"கணபதி தூக்கிலிடப்படுவார்" இச் செய்தி திராவிடத்தை ஏன் உலகத்தையே எட்டிய நேரத்தில் திராவிடம் சோர்ந்து விழுந்தது. அதே வேளையில் ஆறுதல் சிறிது தலை நீட்டியது. சுதந்திர பூமியில் சுதந்திர வீரர்களாய்ச் சுதந்திரத் தலைவர்களைப் பெற்றிருக்கின்ற நமக்கு ஏன் அச்சம். நமக்கு ஏன் வீண் சஞ்சலம்? நமது சர்க்கார் நமது நாட்டுக் கணபதியை அநாதையாக மலேயாவில் மாள விடாது என மனதைத் திடப்படுத்திக் கொண்டோம். அது மட்டுமல்ல. காமன் வெல்த்தோடு ஏற்படும் உறவு கணபதியைக் காப்பாற்றும் என நம்பி கண்ணீரைத் துடைத்துக் கொண்டோம். துடைத்தகையை எடுக்கவில்லை. தூக்கு மேடை கணபதியைத் தின்று ஏப்பமிட்ட சப்தம் நமக்கு கேட்டுவிட்டது".

கலைஞர் கருணாநிதி என்ற இளைஞனின் தமிழ் உணர்வு-கணபதியை காப்பாற்ற காமன் வெல்த் அமைப்பளவுக்கு அகண்டு விரிவதை அறிவும் அன்பும் கொண்ட உள்ளங்கள் பாராட்டித்தான் ஆக வேண்டும். காமன் வெல்த் அமைப்பை பயன்படுத்தியாவது கணபதி காப்பாற்றப்படுவாரா என்பதைப் பதைக்கும் கலைஞன் என்ற திராவிட இளைஞனின் இதய உணர்வினை படித்துணர்ந்து இறும்பூதடைகின்றோம் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்நூலில் அவரே உரைக்கின்றார். கணபதி தூக்கிலிடப்படுவார் என்ற செய்தி எட்டிய நேரத்தில் திராவிடம் சோர்ந்து விழுந்தது. திராவிடம் கிளர்ந்தெழுந்திருந்தால் ஒரு மாவீரனைக் காப்பாற்றியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் இந்திய அரசுக்கு உருவாகியிருக்கும். தமிழன் சோர்ந்து விழும் போது-தமிழகம் கிளர்ந்தெழாதபோது தமிழகத்தின் உயிரில் உணர்ச்சியற்ற நிலை காணப்படும் வரையில் உலகத் தமிழனை

படிப்பகம்

www.padippakam.com



எப்படிக் காக்க இயலும்? தமிழ்த் தாய் நமக்களித்த ஓர் உயரிய கணபதியைக் காப்பாற்ற வழியில்லாத தமிழ்ச் சமுதாயத்தினால் எங்கே ஆயிரம் கணபதிகளை உருவாக்க இயலும் என்று நான் கேட்க முன்வரவில்லை. எப்படி ஆயிரம் உலகக் கணபதிகளை காக்க இயலும்? தமிழனுக்காகத் தமிழனே கண்ணீர் வடிக்க இயலாதென்றால் அவன் தமிழன் என்ற விசுவாசத்தையே தொலைத்து விட்டதாகத்தானே பொருள். எனக்குள் ஒரு தமிழன். அவனை காக்க வேண்டிய நான் - எனக்குள் ஒரு இந்தியன் - அந்த இந்தியனின் இதயம் ஒரு தமிழன். இதயத்தை இழந்து விட்டு இந்தியனாக இருக்கும் தமிழகத்துத் தமிழ்ச் சாதி-உலகத் தமிழனைக் காக்கும் என்று நம்ப நான் தயாராக இல்லை. தமிழ்ச் சாதியே நீ இன்று மாறவில்லையானால் நாளை உலகத் தமிழன் உன்னைத் திருத்தும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை மறந்து விடாதே!

"மேலும் அவ்வாவணத்தின் 11 ஆம் பக்கம் இயம்புகின்றது (கணபதி எந்த வெள்ளை முதலாளியையும் சுட்டுக் கொன்றதாக வழக்கு கிடையாது. கையிலே துப்பாக்கி வைத்திருந்த ஒரே குற்றத்திற்காக இந்தக் கோர மரணம். தீர்ப்புக்கேட்டு திராவிடம் திகைத்தது. ஆளவந்தார்க்கு நினைக்க நேரமில்லை அவர்கள் மேல் குற்றமில்லை, அமைச்சர்கள் கொலுவே இன்னும் பூர்த்தியாக அடுக்கப்படவில்லை. அங்கே தமிழனின் இருதயம் பிளக்கப்படுகின்றது. ஒரு அற்ப மிருகத்தைப்போல சாம்பசிவம் சாவின் முனையிலே நிறுத்தப்பட்டார். தமிழருடைய பிணங்கள் தூக்கு மேடையில் அடுக்கப்படுவதை ஜவகரும் பட்டேலுமா கண்டிக்கப் போகிறார்கள்."

படிப்பகம்

www.padippakam.com



ஜவகரும் பட்டேலுமா கண்டிக்கப் போகிறார்கள் என்று கலைஞர் கேள்வி எழுப்புகின்றார். இங்கே ஒன்று குறிப்பிடப்பட வேண்டியது அவசியம். பண்டிதநேரு அவர்கள் கூட்டிய ஆசிய உறவு மாநாட்டில் மலேயா கணபதியும் மற்றும் இரண்டு பிரதி நிதிகளும் மலேயா நாட்டின் பிரதிநிதிகளாக கலந்து கொண்டார்கள். அம்மாநாட்டில் சட்டமேதை அம்பேத்கார் அவர்களையும் கணபதி சந்தித்து உரையாடினார். கலைஞரின் மனதை நெகிழச் செய்தாலும் அன்றைய தமிழகத்தின் உணர்ச்சியற்ற மரத்துப் போன நிலை நம் இதயத்தையெல்லாம் நெருடச் செய்கிறது. பல தொழிற்சங்கங்கள் கண்டனக் கூட்டங்கள் நடத்தின. இதுவே கணபதி தூக்கிலி டப்படும் காலை துடித்த தமிழகம் என வரலாற்று ஆவணம் காட்டுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

# 22. இடதுசாரி இயக்கங்களின் கண்டனம்

கம்யூனிஸ்டுகள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் ஒரே விதமாகச் சிந்திக்கின்றார்கள் என்பது பொன்மொழி. இடது சாரிகள் தங்கள் நாட்டு விடுதலையென்பது உலக விடுதலையின் திறவுகோல் என்றே நினைப்பார்கள். தியாகி கணபதியை வல்லரசு தூக்கிலிட்டுக் கொன்றதை இடதுசாரி இயக்கங்கள் கடுமையாகக் கண்டித்தன.

மாவீரன் கணபதி ஒரு விடுதலை வீரனா? மலேயாவின் விடுதலைக்காகப் பாடுபட்டு அதன் காரணமாக மரண தண்டனையைப் பரிசாகப் பெற்றவனா? இல்லை கணபதியும் குருதேவனும் வெறும் தொழிற் சங்கவாதிகள்தாமா? எங்களைப் போன்ற நல விரும்பிகள் கணபதியையும் குருதேவனையும் விடுதலை வீரர்களாகத் சித்தரிக்க முயல்கின்றோமா என்பதையும் நான் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். தோழர்கள் கணபதியும் குருதேவனும் ஒரு முழுமையான வரலாறு படைத்தவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# Malayan Monitor
## Colonial Office wages war against Malayan Workers
## Appeal issued by Malayan Monitor

என்ற தலைப்பிலான அறிக்கையில் கி.பி. 1948 ஆகஸ்டு 5-ம் நாளிட்ட மேஜர் - ஜெனரல் திரு பௌச்சர் லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கு அளித்த எழுத்தறிக்கையில் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

"We are facing a National Liberation Movement and the people who have been compelled to take up arms in self-defence are no less than a National Liberation Army".

மேஜர் ஜெனரல் பௌச்சர் அரசுக்கு அளிக்கும் அறிக்கையில் நாம் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தினை சந்தித்து கொண்டிருக்கின்றோம்.

தங்களைத் தற்காத்துக் கொள்ளும் முயற்சியில் ஆயுதம் தாங்கி விட்ட மலேயா மக்கள் ஒரு தேசிய விடுதலைப்படையே ஆவர் என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்றார். கணபதியும் எம்.ஆர்.குருதேவனும் இயக்கிய படை மலேயாவின் தேசிய விடுதலைப்படையே ஆகும். அத்தகைய விடுதலைப்போரில் மரணதண்டனையைத் தழுவிய கணபதிக்காகத் தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரில் கண்டனம் முழங்கியவர்கள் -கண்டன முழக்கம் எழுப்பிய இயக்கங்கள் பின் வருமாறு :

1. முன்னாள் டிராம்-வே தொழிற்சங்கம் - தொழிற்சங்கச் தலைவர்கள் தோழர்கள் திரு ரங்கநாதன், திரு விஜயராசு.

2. ஆசியாவின் மிகப்பழைய சங்கமான சென்னைப் பஞ்சாலை சங்கத்தின் தலைவர் தோழர் கே. கஜபதி.

படிப்பகம்

www.padippakam.com



3. பிரஸ் லேபர் யூனியன் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, தீனதயாளு ஆகியோர்.

4, கார்ப்பரேஷன் தொழிற்சங்கம் - சங்கத்தலைவர் திரு. கருப்பண்ணன்.

5, சுருட்டு - பீடித் தொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள் தோழர்கள் எஸ்.டி. ராதா மற்றும் மதுரை.

6. வெல்டிங் தொழிலாளர் சங்கத் தலைவரும் - தலித் தலைவருமான ஒய்.பி. முருகைய்யா.

7. சனநாயக மாதர் சங்கத் தலைவர் ருக்குமணியம்மாள்

8. ஓட்டல் தொழிற்சங்கத் தலைவர் வி.பி.சீனிவாசன்

9. இரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ.எஸ் பாண்டியன்.

10. துறைமுகத் தொழிற்சங்கம் - அரசு ஊழியர்சங்கம் - காண்ட்ராக்ட் ஊழியர் சங்கம் - அதன் பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர் திரு காதர் மீரான்.

11. செங்கல் தொழிலாளர் சங்கங்கள் - மின்சாரத் தொழிலாளர் சங்கங்கள் தலைவர் எஸ்.ஸி. கிருஷ்ணன்.

இவ்வாறு பொது வாழ்க்கைச் சங்கங்களும் - பொதுமக்களும் நடத்திய ஏகாதிபத்திய கண்டன ஊர்வலத்தின் எதிரொலி ஏகாதிபத்தியத்தின் காதுகளைத் துளைத்தது.

இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் மறை சுற்றோட்ட இதழான "ஜனசக்தி" கண்டனம் முழங்கியது. ஏனைய இடதுசாரி இயக்கங்களும் தங்களின் எதிர்ப்பிமனைக் காட்டத் தயங்கவில்லை. அன்றைய முற்போக்கு அரசியல் இயக்கங்களின் தலைமைப் பீடமான மக்கள் மத்தியில் திகழ்ந்த திராவிட இயக்கமும் கலைஞர் என்ற இளைஞனின் முழக்கமாகக் குரல் கொடுத்தது. பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர்களான நாகை கே.முருகேசன், பி.என் பி.கபூர், ஜீவானந்தம் ஆகியோர் கண்டனக்குரல் எழுப்பினர். இதுவே நினைவு குறிப்புகள் கூறும் அன்றைய தமிழகத் துடிப்புகள்.

படிப்பகம்

www.padippakam.com

# 23. உலகின் கண்டனக்கணைகள்

மலேயா கணபதி தூக்கிலிட்டமைக் குறித்து உலகின் முற்போக்கு சக்திகள் கவலையடைந்தன. தொழிற்சங்க இயக்கங்கள் அதிர்ச்சி யடைந்தன.

சீனச் கம்யூனிஸ்டுக் கட்சி மலாயா அரசைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியனுப்பியது. கணபதியை விடுதலை செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது.

சிங்கப்பூர் தொழிற்சங்கவாதிகள் தங்களின் மேதின அறிக்கையில் கணபதியவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உயரிய - உளமார்ந்த பணிகளை அங்கீகரிக்கும் விதத்தில் அரசு நடந்து கொள்ளும் என எதிர் பார்க்கின்றோம். ஏழை மற்றும் பாட்டாளிகளின் மத்தியில் கணபதிக்காக நிலவும் அனுதாப அலையினை அரசு அங்கீகரிக்க வேண்டும் - என வேண்டுகோள் விடுத்தது.

இந்தியாவின் வணிக நகரமான பாம்பேயின் புகழ்மிகு - முன்னணி சோசலிசவாதியான திரு. அசோக் மேத்தா தனது கண்டனத்தினைப் பின் வருமாறு அழகாக வடித்திருந்தார்.

> லண்டன் மாநகரில் சமீபத்தில் இணைவு பெற்ற
> காமன் வெல்த் கூட்டமைப்பின் கழுத்தணிகலனில்
> கணபதியின் மரணம் தொங்கிக் கொண்டிருக்கின்றது.

கம்யூனிஸ்டுகள் உச்சம் கொண்ட தொழிற்சங்கமான ஏ.ஐ.டி.யு.சி (All India Trade Union Congress) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்காக காமன் வெல்த் அமைப்பில் பண்டித நேரு அறுவடை செய்த கனி கணபதியின் மரணதண்டனை எனக் கடுமையாகக் குறிப்பிட்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை வீரகேசரி நாளிதழும் தனது கண்டனத்தைத் தெரிவித்தது.

இந்தியப் பாதுகாப்புத் துறையமைச்சர் திரு.கிருஷ்ணமேனன், மே 6ம் நாள் இலண்டன் செய்தியாளர்களின் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசுக்கு தனது ஆழ்ந்த கண்டனத்தினைத் தெரிவித்திருந்தார். அதில் திரு.கணபதி யின் மரணதண்டனை இந்திய அரசினையும் இந்தியர்களையும் பெரிதும் பாதித்துள்ளது. முன்னரே காலனி நாடுகளின் அதிகாரியிடம் இந்திய அரசு தனது பிரதிநிதித்துவத்தினையளித்திருந்தும் நிகழ்ச்சி நடந்தது செலாங்கூரில். மரணதண்டனை செலாங்கூர் சுல்தானால் ஏற்பிசைவு செய்யப்பட்டது என்றும் கணபதிக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை ஒருமித்த தன்மையுடையது என்றும் தெரிவித்திருந்தது. ஆனால் செலாங்கூர் ஒரு பாதுகாக்கப்பட்ட மாநிலம் (Protected State) அது காலனியன்று அதன் காரணமாக பிரிட்டிஷ் அரசின் எல்லைக்குள் செலாங்கூர் வரவில்லை. ஆகவே மரணதண்டனை நிறைவேற்றப்படக் கூடாது என அழுத்தம் திருத்தமாக இந்திய அரசு தனது பிரதி நிதித்துவத்தினையளித்திருந்ததை சுட்டிக் காட்டி கடும் கண்டம் தெரிவித்திருந்தார்.

இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர் திரு பட்டாபி சீதாராமைய்யா, கணபதியின் மரணதண்டனை நிறைவேற்றம் காமன் வெல்த் அமைப்பினை அளவுக்கதிகமாக நாம் நம்பிவிடக்கூடாது என்பதைக் காட்டும் காலக் கண்ணாடியாகும் என்று கூறினார். தலைநகர் டெல்லியின் பல செய்தித்தாள்கள் கணபதியின் மரண தண்டனையைக் கண்டித்திருந்தன. இந்தியன் நியூஸ் கிரானிகல் (Indian News Chronicle) அதனை ஒரு நீதி வழிக் கொலை என்றும் மலாயாவை தக்கவைத்துக் கொள்ள மலாயா அரசு நடத்தும் ஓர்

www.padippakam.com



அமைப்பு ரீதியான பயங்கரவாதம் என்றும் விவரித்திருந்தது. உலகத் தொழிற்சங்கங்களின் இணையம் World Federation of Trade Unions தனது கடுமையான கண்டனத்தினை பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் - பிரிட்டீஷ் தூதரக அதிகாரியிடம் பதிவு செய்தது. அதனை அப்படியே மொழி பெயர்த்துத் தருகின்றேன்.

## WORLD FEDERATION OF TRADE UNIONS

நாள் 9 - மே 1949 உலகத் தொழிற்சங்கங்களின் இணையம்
பொதுச் செயலாளர் (செக்ரடரி ஜெனரல்)
எண்.1, ரூ வெர்னட், பாரீஸ்
பிரான்ஸ்

மேன்மை மிகு பிரிட்டிஷ் தூதுவருக்கு
பிரிட்டிஷ் தூதரகம்
39, ரூ-எஃப்-பி-ஜி (ஹான்ரே)
பாரீஸ்

மேன்மை மிக்க தங்களுக்கு

பான் மலேயா பொதுத் தொழிற்சங்கப் பொறுப்பாளர்களான திரு. கணபதி மற்றும் வீரசேனன் ஆகியோரின் மரண தண்டனை நிறைவேற்றத்துக்கெதிரான எங்கள் உலகத் தொழிற்சங்க இணையத்தின் வீரமிக்க கடும் கோபத்தினை தாங்கள் தங்களின் அரசுக்கு இதன்மூலம் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.

மலேயாவின் தொழிலாளர் நலன் காக்கும் பணி தவிர்த்து வேறு எந்தக் குற்றமும் அறிந்திராத இருபத்தி நான்கே வயதான திரு கணபதி கோலாலம்பூர் சிறையினில் 1949 மே திங்கள் 4-ம் நாள் தூக்கிலிடப் பட்டுள்ளார். அதுவும் விந்தையான - ஏற்றுக் கொள்ளவியலாத காரணங்களினடிப்படையில் தூக்கிலிடப் பட்டுள்ளார் என்று குறிப்பிட்டிருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



பிரிட்டிஷ் அரசின் சிங்கப்பூர் ஃப்ரீ பிரஸ் கணபதியின் மரணத்தை நிறுத்த கோரும் இந்திய அரசின் கோரிக்கை முழுதும் தேவையற்ற மலாயாவின் உள் விவகாரத் தலையீடாகும். என்று தெரிவித்திருந்ததை ரைட்டர் செய்தி நிறுவனம் வெளியிட்டிருந்தது.

உண்மையில் கணபதி கொலை செய்யப்பட்டதன் விளைவாக உலகத் தொழிற்சங்கங்களினிடையே வீரியமிக்க கோபமும் பரவலாக ஏற்பட்டது. கிளர்ச்சியும் பிரிட்டிஷ் அதிகாரிகள் தங்களால் எந்தெந்த வகையினில் எல்லாம் முறியடிக்க இயலுமோ அந்தந்த வகையினில் சுதந்திரத் தொழிற்சங்க நடவடிக்கைகளை முறியடிக்கவும் மலேயாத் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை நசுக்கவும் திட்டமிட்டு செயல்பட்டதைக் காட்டும் சான்றாகக் கணபதியின் கொலை திகழ்கின்றது.

இத்தகைய பிரிட்டிஷ் போக்கு தொடர்ச்சியானதொன்று. கி.பி.1945 இருந்தே அரசியல் கிளர்ச்சி மற்றும் அச்சுறுத்தல் என மலேயாவில் எண்ணற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். பல நூறு பேர் நாடு கடத்தப்பட்டனர்.

கி.பி.1946 - ஆகஸ்டுத் திங்களில் மலேயாவின் உண்மையான பிரதிநிதித்துவ தொழிற்சங்கங்களைச் சிதைத்துச் சீரழிக்கும் நோக்கோடு சிக்கலான பதிவு நடைமுறைகளைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். இருப்பினும், பல்வேறு தொழிற் சங்கங்கள் மலேயாவில் உருவாகிப் பதியப் பெற்றன. அவைகளனைத்தும் இணைந்து மூன்று லட்சம் உறுப்பினர்களோடு அகில மலேயாப் பொதுத் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது. உலகத் தொழிற் சங்கங்களின் இணையமாம் எமது அமைப்போடு தொழிற்சங்க நலன் காக்கும் பணியில் இணைத்துக் கொண்டது. ஆயினும் அதிகாரிகள் PMFTU எனும் அகில மலேயா பொதுத் தொழிற்சங்கத்தினை அங்கீகரித்த

படிப்பகம்

www.padippakam.com



மறுத்தனர். PMFTU வில் உறுப்புச் சங்கங்கள் அனைத்தும் பதியப் பெற்ற சங்கங்களா யிருப்பினும் அகில மலாயாப் பொதுத் தொழிற்சங்கத்தினை அரசு பதிய மறுத்ததின் காரணம் உண்மையான தொழிற்சங்கங்களை அழித்துப் போலியான - அரசு ஆதரவு தொழிற் சங்கங்களை உருவாக்கும் அதன் கொள்கையாகும். இருப்பினும் அரசின் முயற்சி வெற்றி பெறவில்லை.

இத்தகைய சூழ்நிலைகளில் PMFTU-ன் தொழிற்சங்க நடவடிக்கை களைச் சகித்துக் கொள்ள இயலாத அரசு - தேசம் - மதம் - இனம் அரசியல் தத்துவங்கள் - கருத்துக்கள் ஆகிய மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டு PMFTU- வின் தொழிற்சங்க உரிமைகளின் சிறு அடிப்படைக்கும் ஒவ்வாத தொழிற்சங்க விரோதச் சட்டத்தினை 1948 ஜூன் திங்கள் முதல் நாள் இயற்றி அதனடிப்படையில் தொழிற்சங்கங்களைத் தடை செய்தது. தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதைத் தடைசெய்தது.

விளைவாக கி.பி.1948-ல் ஜூன் திங்கள் 13-ம் நாள் அகில மலாயாப் பொதுத் தொழிற்சங்க சம்மேளனம் (PMFTU) தடை செய்ய ஆணை யிடப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஆசிய நாடுகளின் போர்க்காலச் சூழ்நிலைகள் நீங்கிய நிலையில் மலேயாவின் தொழிலாளர்கள் போர்க்கால வறுமையின் பிடியிலிருந்து அறுபட்ட நிம்மதியோடு எதிர் காலம் சிறக்கும் என்ற நம்பிக்கையோடு தங்களது தொழிற்சங்க உரிமைகளைப் பற்றியும் தேவையைப் பற்றியும் சிந்திக்கத் தலைப்பட்டனர். அதற்கு மாறாக மலேயாவின் தொழிலாள வர்க்கத்தின் வறுமை மேலும் இறுகியது. ஏராளமான ரப்பர் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அதிக இலாபம் ஈட்டும் சூழ்நிலைகளிலும் முதலாளிகளின் ஊதிய இறுக்கக் கொள்கை கள்ளச் சந்தை என மலேயாவின் தொழிலாளர் வர்க்கம் சொல்லொன்னாத் துயரங்களுடன் தவித்தது.

போர்க்கால இறுக்கம் அகன்ற காலத்தில் தொழிலாளர் மேம்பாடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய மலேயா அரசு காவல் துறையையும் இராணுவத்தையும் திரட்டி எண்ணிறந்த

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளிகளைக் கைது செய்ததுடன் பலநூறு தொழிற்சங்க வாதிகளைக் கொலை செய்துள்ளது. சான்றாக, ஜொகூர் ரப்பர் தொழிற்சங்கத் தலைவர் திரு டேன்-கேன் (TAN - KAN) கி.பி.1948 ஜூலை 5ம் நாள் கொலை செய்யப்பட்டதை முன் வைக்கலாம்.

முழுக்க முழுக்கத் தொழிலாளர் கோரிக்கைகளின் அடிப்படையில் எழுந்த மலேயாத் தொழிலாளர் இயக்கமானது தென்கிழக்கு ஆசியாவின் - பிரிட்டிஷ் பொது ஆணையாளர் அவர்களால் உலக கம்யூனிஸ இயக்குனர்களின் பொறுமையற்ற கிளர்ச்சிகள் என வர்ணிக்கப்பட்டது. உலக தொழிற்சங்கக் கூட்டமைப்பு அரசின் அநியாய நடவடிக்கைகளை அன்னிய முற்றுரிமையாளர்கள் மற்றும் அன்னிய அமைப்புகளின் (Foreign Monopoly and Trust) மலேயாத் தொழிலாள வர்க்கத்தினைச் சுரண்டும் நடவடிக்கை என்றும் மலேயாத் தொழிலாள வர்க்கத்தின் நியாயமான ஆசைகளை அழித்தொழிக்கும் பிரிட்டிஷ் நடவடிக்கை என்றும் வெளிப்படையாக அறிவித்தது. தேசம் இனம் மத, அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டு உலகத் தொழிலாளர்களின் நலன் பேணும் அமைப்பான W.F.T.U இத்தகைய சூழ்நிலையில் தனிநிலையில் நின்று இதனைப் பார்த்துக் கொண்டிருக்க இயலாது.

ஆகவே நாங்கள் ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் சபையின் 128 (11) - ன்படி - பொருளாதார மற்றும் சமூகக் கூட்டவையின் தீர்மானம் 84 (V) - ன்படிப் பன்னாட்டு மனித உரிமைகள் பொது அறிவிப்புப் பிரிவு 23-ன் படியும் மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் பிரிட்டிஷ் பிரதிநிதிகளால் ஏற்பு செய்யப்பட்ட விதிகளின்படியும் மலேயாவில் சுதந்திர தொழிற் சங்கங்களின் நியாயமான உரிமைகள் நிலவும் உறுதிப்பாடான நடவடிக்கைகளை உங்கள் அரசு எடுத்திட வேண்டுகின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



கி.பி.1947-ல் இருந்தே எமது அமைப்பு (W.F.T.U) மலேயாவின் உண்மை நிலவரம் அறியும் குழுவினை அனுப்ப அனுமானித்தது ஆனால் - அதன் திட்டங்கள் மலேயா அதிகாரிகளின் முரண்பாடு களுடனும் எதிர்ப்புடனும் எதிர் கொள்ளப்பட்டது என்பது தெளிவான உண்மையாகும்.

இன்றைய நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உலகத் தொழிலாள வர்க்கத்துக்கு மலேயாவின் உண்மை நிலவரத்தினை உடனடியாகத் தெரிவிக்க வேண்டியது W.F.T.U-வின் கடமையாகின்றது. அதனால் மேற்கண்ட பணிக்காக உலகத் தொழிற்சங்க கூட்டமைப்பின் நியமிக்கப் பட்ட தொழிற்சங்க விசாரணைக் குழு மலேயாவிற்கு வந்து தன் பணிதனை துவக்கத் தங்கள் அரசின் மேன்மைக்கு விண்ணப்பிக் கின்றோம்.

இந்த அதி முக்கிய தொழிலாளர் நலன் விரும்பும் தகவல் - கண்டனம் அனுமதி கோரும் இக்கடிதத்தினை தங்கள் அரசுக்கு உடனடியாக அனுப்பித் தகுந்த பதிலினைக் குறுகிய காலத்தில் பெற்றுத் தர வேண்டுகின்றோம்.

தங்கள் உண்மையுள்ள
செயலாளர்,
உலகத் தொழிற்சங்கங்களின் இணையம், பாரீஸ்
ஒப்பம் B. கெபர்ட்
துணைப் பொதுச் செயலாளர்

மற்றும் கணபதியின் மரணதண்டனைக்கு கிரேட் பிரிட்டனின் தலைநகரமான இலண்டன் தொழிற் கூட்டவை London Trades Council தனது கண்டனத்தை இலண்டனில் உள்ள காலனி அலுவலகத்தில் பதிவு செய்தது. அதனை அப்படியே மொழி பெயர்த்து வாசகர்களுக்குத் தருகின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com

# LONDON TRADES COUNCIL

உருவாக்கம் 1860 தொலைபேசி
இணைப்பு உறுப்பினர்கள் 6,00,000 ணக்கும் மேல் ஹால்பர்ன் 4432

இலண்டன் தொழிற் கூட்டவை

செயலாளர் ஜே.ஜேகப்
மாற்று முகவரி
5, கில்போர்டு பிளேஸ் W.C.I

JJ/K2/194 T.U. 22, ஜுன் 1949

செயலாளர்
கலோனியல் அலுவலகம்
சர்ச் ஹவுஸ்
கிரேட் ஸ்மித் தெரு
இலண்டன் S.W.I

மதிப்புமிகு ஐயா,

எங்கள் அவையின் கடந்த கூட்டத்தில் மலேயாத் தொழிற்சங்க கூட்டமைப்பின் முன்னாள் தலைவரான திரு.கணபதியவர் களின் மரணதண்டனை நிறைவேற்றம் குறித்த கடுமையான கண்டனத்தினைத் தங்களுக்கு வெளிப்படுத்தத் தீர்மானம் இயற்றப்பட்டது.

திரு. கணபதியவர்கள் தொழிற்சங்கத் தலைவர் என்ற அடிப்படையில் அல்லாமல் வேறு பிற காரணங்களால் மரண

படிப்பகம்

www.padippakam.com



தண்டனைக்குட்படுத்தப் பட்டார் என்ற உங்களது வருத்தத்தினை எமது அவை மறுக்கின்றது. தங்களின் இக்கருத்தினை கடுமையாக மறுப்பதன் காரணம் திரு.கணபதியவர்கள் ஜப்பானிய எதிர்ப்பியக்கத்தில் ஆற்றிய மறக்கவியலாப் பணிகளையும் வீரமிக்க மலேயாத் தொழிற்சங்கத்தினை ஆண்மையோடு இயக்கியதையும் இவ்வவை பெரிதும் உணர்ந்ததே ஆகும்.

இந்த அவை கடந்த 18- அக்டோபர் 1948-ல் மலேயாவில் தங்களின் அரசியல் - பொருளாதார - சமூக அடிமைதததளைகளிலி ருந்து தங்களைத் தாங்களே விடுவித்துக் கொண்டு மேன்மையுறும் விதத்தில் பிரிட்டிஷ் சக்திகள் மலேயாவை விட்டு வெளியேற வேண்டுமென விடுத்த கோரிக்கையினை மீண்டும் திரும்ப வலி யுறுத்துகின்றது.

எங்களின் அக்டோபர் 18 - கடிதத்துக்கு தாங்கள் அளித்த பதில் மடலில் மலேயாவின் உண்மையான அரசியல் சிக்கல் - ஒரு சிறு எண்ணிக்கையிலான பயங்கர வாதிகள் - பெரும்பாலும் மலேயாவுக்கு அப்பால் சீனாவில் பிறந்தவர்கள் ஆவர். அவர்கள் அரசினைக் கவிழ்க்க முயல்கின்றார்கள். அத்தகைய முயற்சிகள், வன்முறைக்கு ஒத்துழைக்க மறுக்கும் ஏதுமறியா எல்லா இன- வர்க்க ஏதுமறியா மக்களைக் கொலை செய்கின்றனர். எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். திரு.கணபதி மலேயாவுக்கு வெளியே பிறந்த சீனருமல்லர். (எங்கள் கருத்துப்படி அது ஒரு குற்றம் அல்ல) அவர் ஒரு பயங்கரவாதியுமல்லர். நாங்கள் உணர்ந்த வரையில் அவர் ஒரு சுறுசுறுப்பான தொழிற்சங்க வாதியாவார்.

தங்கள் உண்மையுள்ள

(ஜே.ஜேகப்)

இவைகளே மலேயா கணபதியின் மரணதண்டனைக்கு உலகம் அளித்த எதிர்ப்புக் கணைகளாகும்.

www.padippakam.com

# 24. வரலாற்றின் வஞ்சனைகள்

வரலாறு எந்த அளவுக்குத் தன் பொலிவுமிக்க முகத்தினைப் பெற்றிருக்கின்றதோ அந்த அளவுக்குத் துரோகிகளையும் தனது இருள் பகுதியில் மறைத்து வைத்துள்ளது. 'வரலாற்றுக்குத் துரோகம் புதிதல்ல. வஞ்சனையில்லாத இயற்கை வார்த்த படைப்புகளிலேயே மனிதன் ஒருவனே துரோகத்தைப் படைத்தவன்; வளர்த்தவன்; வாழ்விப்பவன். துரோகிகள் எங்கே தோன்றுகின்றார்கள்? பதவி, பணம், புகழ், பட்டம் இவைகளே துரோகிகள் தோன்றும் அடிப்படைகள் ஆகும். அரசுப் பதவிக்காக - வற்றாத செல்வத்துக்காக, போலிப் புகழுக்காகத் துரோகிகள் இயற்கைத் தாவரங்களைப் போல முளைத்து விடுகின்றார்கள். துரோகிகளைக் களையெடுக்க - வேண்டியது உண்மையின் அவசியம். உண்மை வாழ வேண்டுமானால் உலகளாவ வாழ வேண்டுமானால் துரோகிகள் அவ்வப்போது களையப்படவேண்டும். துரோகிகள் கொல்லப்படுவதை நான் பலமாக ஆதரிக்கின்றேன். ஓர் எட்டப்பன் அழிக்கப்பட்டிருந்தால் ஒரு வீரபாண்டிய கட்டபொம்மன் நமக்கு நிலைத்திருப்பான். அவன் - நினைத்து ஆயிரம் கட்ட பொம்மன்களை உருவாக்கியிருப்பான். துரோகிகள் அழிக்கப்பட்டிருந்தால் ஒரு சந்திரசேகர் ஆசாத் ஆயிரம் ஆசர்த்துக்களை உருவாக்கியிருப்பார். மாவீரர்கள் செண்பகராமன், ராஸ்பிகாரி கோஷ், வீரசிம்மன், மலேயா சாம்பசிவம், மருது சகோதரர்கள் போன்ற எண்ணற்ற மாவீரர்கள் துரோகிகளால் சந்தித்தத் துயர்கள் இடர்கள் ஏராளமாகும். துரோகத்தனத்தை நம்பியே இன்று அரசியல் செய்ய முளைத்துவிட்ட ஜனநாயகக் காவலர்களை என்ன சொல்வது? எந்த இழி சொல்லால் விவரிப்பது என்று எனக்கு தெரியவில்லை. இன்றளவும் தோழர்

www.padippakam.com


எம்.ஆர்.குருதேவன், உலகத் தமிழ்த் தலைவர்கள், தமிழ் மாவீரர்கள், புரட்சிகர சித்தாந்தவாதிகள் சந்தித்து வரும் இன்னல்களும் துயர்களும் கணக்கிடலங்காதவை. உலகத் தமிழின விடுதலையைச் சட்ட வரம்புக்குள் எடுத்துரைக்கும் இன்றைய முன்னணியாளர்களான தமிழ்த் தேசியத் தலைவர் பழ. நெடுமாறன், சாலை இளந்திரையன், தியாகு, சுப. வீரபாண்டியன் ஆகியோர் சந்திக்கும் நெருக்கடிகள் ஏராளமானவையாகும், துரோகிகளைத் துடைத்தொழிப்பதில் தான் விரைவாக இலட்சிய வெற்றி உலகைத் தழுவ இயலும். கடந்த காலத்தில் மாபெரும் தமிழின வரலாற்றோடு வாழ்ந்தவரும் இன்று தமிழக முதல்வராக இருப்பவரும் ஆன கலைஞர் கருணாநிதி தமிழ் அதிகம் உச்சரித்த தலைமகனாதலால் சந்தித்த துரோகிகளின் எண்ணிக்கைக் கணக்கிலடங் காதவை. அன்றும் - இன்றும் என்றும் இனமான உணர்வோடு வாழ் நாள் முழுவதும் வாழ்ந்து வரும் பேராசிரியர் க.அன்பழகன் தனித் தன்மையோடு வாழ்ந்து வருகின்றார். கோவிலுக்குச் சென்றாலும் திருநீற்றினை நெற்றியில் வைத்துக் கொள்ளாத காரணத்தால் நாவலர் நெடுஞ்செழியன் தனிமைப்படுத்தப்பட்டார். ஆன்மீகத்துக்கு அடி பணியாததால் தொடர்ச்சியான பல முனைகளில் தாக்கப்படும் நெஞ்சங்கள் எண்ணிறந்தவை. திராவிட இயக்கத்தினுள்ளே தோன்றிய துரோகிகளின் பட்டாளத்தினால் இன்று திராவிட இயக்கம் தளர்ச்சியடைந்துள்ளது. இந்தியனாக இருந்தாலும் ஒரு தமிழன் பிரதமராக இயலாது. அவன் தமிழனாக மாறினாலும் பிரதமராக இயலாது என்பதைத் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் G.K. மூப்பனார் விவகாரத்தில் இந்தியா சமீபத்தில் மெய்ப்பித்தது. பாட்டாளி மக்கட் கட்சி தலைவர் டாக்டர் ராமதாஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றகழக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபால்சாமி ஆகியோர் பல்வேறு பிரச்சினைகளைப் பல விதங்களில் தினமும் சந்திக்கின்றனர்.

பாராளுமன்றச் சனநாயகத்தில் துரோகிகளின் தாக்குதல் தளர்ச்சியையும் தோல்வியையும் உருவாக்கும். பாராளுமன்றம் சாராத

www.padippakam.com


போராட்ட வரலாற்றினுள் துரோகிகளின் தாக்குதல் இலட்சியவாதிகளுக்குத் தூக்கு மேடையை உருவாக்கும். இதற்கு மலாய் நாடு என்ன விதிவிலக்கா? ஆறறிவு படைத்த மனிதர்களிலேயே அறிவு ஜீவிகள் நடத்தும் துரோகத்தனம் மிகக் கொடுமையானது. Self Centred Intellectuals can be termed as highly Sophisticated Criminals of our society). இன்று அறிவாளிகளின் துரோகத்தனத்தால் துரோகம் பன்முகம் கொண்ட பரிமாணங்களாய் மாறிவிட்டது. இன்று துரோகம் உண்மையைச் சித்திரவதை செய்யும் பொய் எனும் விலங்கின் ஆக்டோபஸ் கரங்களாக மாறியுள்ளது. மலேயாவின் கணபதி என்ற பொருள் முதல்வாதிக் கெதிராக துரோகத் தொழிற்சங்கங்கள் பல உருவாக்கப்பட்டன. சிங்கப்பூர் நகரசபைத் தொழிலாளர்கள் சங்கம் எனும் மஞ்சள் தொழிற்சங்கம் துரோகத்தின் சிகரத்தில் அமைந்த அமைப்பு ஆகும். வரலாற்றில் துரோகிகளின் பெயர்கள் அந்த அளவுக்குக் கூடப் பதிவதை விரும்பாததனால் துரோகிகளின் பெயர்கள் இடம் பெறவில்லையென்பது இந்நூலின் மேன்மையே. சிங்கப்பூர் அரசு துரோகிகளை விலைக்கு வாங்கியது. இன்று உலகின் மலிவு விலைப் பொருள் துரோகம். உலகின் விலை மதிப்பற்ற பண்பு அருகி வரும் இலட்சியம். இன்று இந்தியாவில் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் விந்தையாகச் செயல்படுகின்றன. (கம்யூனிஸ்டு கட்சிகளை தவிர). துரோகிகள் மீண்டும் துரோகம் செய்யாமலிருக்க பதவிகள் - உயர் பதவிகள் - கட்சியில் உயர்பதவிகள் அளிக்கப்பட்டுக் காப்புரிமை அளிக்கப்படுகின்றது. Shuttle Diplomacy, Gun Boat Diplomacy - என்பது போன்று இதுதான் ராசதந்திரமாம். இதனை Insurance Diplomacy எனலாம் போலிருக்கின்றது. அவன் துரோகி எனத் தெரிந்தும் மீண்டும் துரோகம் செய்யாமலிருக்க பதவி உயர்பதவி அளிக்கப்படுகின்றது. வெட்கக்கேடான இந்தியப் பாராளுமன்ற அரசியலில் அரசியல் பாதி - சந்தர்ப்பவாதம் பாதி என வாழ்ந்தே பழகிவிட்ட அரசியல்வாதிகளுக்கு அவர்களின் கால்கள் தலையாகவும் அவர்களின் தலையே கால்களாகவும்

படிப்பகம்

www.padippakam.com



தெரிகின்றன. விலாங்கு மீனாக வாழ்ந்து வரும் வீண் அரசியல் வாதிகள் வெற்றுப் பேச்சுக்களோடு உலவும் வேடிக்கை அரசியல் இந்தியாவை இன்று சீர்குலைத்துள்ளது.

மலேயாவில் சிங்கப்பூர் அரசு இடம் - பொருள் - நிதி என அனைத்து வசதிகளையும் அளித்து தியாகி கணபதி தலைமையிலான சங்கங்களை அழித்திட முயன்றது. தியாகி கணபதி தூக்கிலிடப்பட போகும் நாளுக்கு மூன்று தினங்களுக்கு முன்னாள் (கி.பி.1949 மே முதல் நாள்) மலாயாவில் மே தினம் கொண்டாட உண்மையான சங்கங்கள் இல்லாத அளவுக்குத் தலைமறைவாயினர். ஆனால் 33 போலித் தொழிற் சங்கங்கள் முழுவதும் துரோகிகளினால் சிங்கப்பூரில் லிபர்ட்டி கேபரேட் ஓட்டலில் அரசு ஒத்துழைப்போடு மேதின விழாவினைத் தேநீர் விருந்துடன் நடத்தியது. அரசுக்குக் கொள்ளையர்களை (உண்மையான தொழிற்சங்கவாதிகளை) ஒழிப்பதில் முழு ஒத்துழைப்பு நல்குவதாக உறுதி மொழி எடுத்துக் கொண்டது. மே தின விழாவில் தொழிலாளிகளுக்குப் பதிலாக அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். சிங்கப்பூர் கவர்னர் திரு ப்ராங்க்ளின்கிம்ஸனையே தேநீர் விருந்துக்கு அழைத்து மே தின விழாக் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் வர இயலாததால் அவரின் நல்வாழ்த்துக்களை தொழிலாளர் பொறுப்பு ஆணையாளர் திரு.G.W. பேவிஸ் வாசித்தார். அச்செய்தியில் போலிகளால் கொண்டாடப் பெறுகின்ற அந்த மே நாள் சிங்கப்பூர்த் தொழிற்சங்க வரலாற்றில் முக்கியமான நாள் என வாழ்த்தப்பட்டிருந்தது. அங்கங்கே போலிகளின் பொறுப்பாளர்கள் தேர்தல் நடந்து பொறுப்பாளர்களின் இணைந்த அறிக்கை தமிழ், ஹொக்கீன், மலாய், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டன. அவ்வறிக்கையின் துரோக வாசகங்களைத் தொகுத்து தருகின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



(அ) "உலகமே மே-தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. நாம் இந்த அளவிலாவது மேதினத்தினைக் கொண்டாடி உலகத் தொழிலாளர்களின் உணர்வினைப் பகிர்ந்து கொள்கின்றோம்."

**(வாசகர்கள் கவனிக்க வேண்டுவது - சிங்கப்பூர் ஹோட்டல் லிபர்ட்டீ கேபரேவில் அரசு அதிகாரிகளோடு மே-தினத்தினைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். அன்றே தலைவர்களாகின்றார்கள். அறிக்கை வெளியில் வந்தால் என்ன ஆகுமோ என அஞ்சுகின்றார்கள். பிறகு விளம்பரத்துக்காக அறிக்கையினை அரசே அவர்களுக்காக வெளியிடுகின்றது. அதனைப் பிறகு எழுதுகின்றேன்.)**

(ஆ) "கடந்த ஆண்டுகள் சிங்கப்பூர்த் தொழிலாளர்களுக்கு வருத்தம் தோய்ந்த ஆண்டுகள் ஆகும்.

(இ) அரசின் அவசர காலச் சட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் அதனால் தலைமறைவானவர்கள் போன்ற கூட்டத்தினால் தொழிலாளர் இயக்கம் கடந்த காலத்தில் நடத்தப்பட்டதனால் அப்பாவித் தொழிலாளர்கள் அவசரகாலச் சட்டமே தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரானது என்று அஞ்சிவிட்டார்கள்". தொழிற்சங்கம் என்றாலே ஒதுங்குகின்றார்கள். **(வாசகர்கள் கவனிக்க வேண்டியது : மஞ்சள் சங்கங்கள் அரசின் ஊதுகுழலாக மாறி உண்மையான தொழிற்சங்க வாதிகளைக் கொள்ளைக்காரர்கள் - கொலைகாரர்கள் என்று மறைமுகமாக குற்றம் சாட்டுகின்றது.)**

(ஈ) "இந்தச் சூழ்நிலையில் தொழிற்சங்க இயக்கம் நாதியற்றுப் போனதால் சில முதலாளிகள் தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கின்றார்கள் (**"வாசகர்களே கவனிக்க வேண்டியது : தொழிற் சங்க இயக்கம் அநாதையானதால் போலிகள்** அரங்கேற்றம் அரசின் ஒத்துழைப்போடு நடந்துவிட்டது.")

படிப்பகம்

www.padippakam.com



(உ) "அரசின் எண்ணம் மலாயாவின் தொழிற்சங்க இயக்கத்தினை நசுக்குவதல்ல, மாறாக அரசு சனநாயகத் தொழிற்சங்கங்களை ஆதரிக்க உறுதி மொழி எடுத்துள்ளனர்.

(ஊ) "நமது தொழிற்சங்கங்களுக்கு இடையே பொதுவான ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளப் பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள - அரசிடம் விண்ணப்பிக்க ஒரு மைய அமைப்பு அவசியம்"

வாசகர்களின் புரிந்து கொள்ளுதலுக்கு : அகில மலேயா பொதுத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு சட்டவிரோதமானது. ஆனால் போலிகள் ஒரு மையக் கூட்டமைப்பினைக் கோரினால் அது சட்டத்திற்குட் பட்டது. இதனை நான் முன் வைக்கின்றேன் என்றால் இந்த அறிக்கையினை செய்தி நிறுவன்ங்களுக்கு அளித்ததே அரசு தான். அரசுக்கு PMFTU சட்டத்திற்குட் பட்டதாகக் கருதி அதனைச் செய்தி நிறுவனங்களுக்கு அளிக்கின்றது.

(எ) "மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் எஸ்.ஏ.கணபதி தவறான அரசியல் முடிவுகளுக்குச் சொந்தக்காரர். அவர் உழைக்கும் வர்க்கத்தின் மேம்பாட்டுக்குச் சட்டவிரோத வழிகளைப் பயன்படுத்தியது உண்மையிலேயே அனுதாபத்திற்குரியது. எனினும் அவர் கடந்த காலத்தில் ஏழை மக்களுக்கு ஆற்றிய பணிகளைக் கருத்தில் கொண்டு - அவரது பணிகளால் பயனடைந்தவர்களின் மத்தியிலே உருவாகியிருக்கும் அவர் மீதான அனுதாபத்தினைக் கருத்தில் கொண்டு அவரை அங்கிகரிக்க வேண்டும். இருண்ட நாட்களில் இருக்கும் அவருக்கு எங்களின் அனுதாபங்கள்". ஆங்கில வாசகத்தினை அப்படியே தருகின்றேன் :

"In appreciation of those services it is but to express our sympathies to him in his dark days." ("வாசகர்கள் உணர்ந்து கொள்ளுங்கள். கணபதியை தூக்கில் போடாதே என்று கூட போலிகள் குரல் கொடுக்கவில்லை. அவரது இருண்ட

படிப்பகம்

www.padippakam.com



நாட்களுக்கு அனுதாபப்படுகின்றார்களாம். கணபதியைத் தூக்கிலிடச் சம்மதம் தருகின்றார்கள். அதற்காக கேபரேட் லிபர்டியில் மேதினம் கொண்டாடிவிட்டுத் தேநீர் விருந்தும் அருந்திவிட்டுத் தலைவர்களாகிவிட்டார்கள் வரலாற்றின் வஞ்சனைகள் இவர்கள் ஆவர்.)

இலண்டன்-பொது ஆவண அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள (London - Public Record Office) ஒரு முக்கியமான கடித ஆவணத்தினை அப்படியே ஆங்கிலத்திலும் - தமிழிலும் தருகின்றேன். அதில் எதிரிகளுக்குத் துரோகிகள் எவ்வளவு உதவினார்கள் என்பது தெரியவரும்.

Dear Highness, 4th May 1949

I thought you might like to have an account of a meeting of trade unionist which was held in singapore on May day. The matter is of some interest in view of the fact that the trade union leaders in Singapore appear to be getting active again after a period of quiescence in which they were left as a result of the proclamation of the emergency and the disappearance of their Communist leaders underground.

தமிழில் :- கடந்த மே நாளில் சிங்கப்பூரில் நடைபெற்ற தொழிற் சங்கவாதிகளின் மே தினக் கூட்டம் பற்றித் தாங்கள் அறிய வேண்டுமென்று நினைத்தேன். அவசர சட்டப் பிரகடனமும் அதனைத் தொடர்ந்த கம்யூனிஸ்டு தலைவர்களின் தலைமறைவும் அதன் விளைவாக செயலிழந்து போன சிங்கப்பூர் தொழிற்சங்கவாதிகள் மே-தினம் கொண்டாடியிருப்பது சிறிது ஆர்வம் தரத்தக்க செய்தியாகும்.

The tactful handling of the situation that was brought about was entirely due to Simpson, the Assistant trade union advisor in Singapore, who is as you will observe from his report which I also forward, endeavouring to direct trade unionism in Singapore into the right channels. This government is lucky in having a man of this calibre who has so readily responded to Braziers teachings.

படிப்பகம்

www.padippakam.com



தமிழில் :- நிலைமையை மிகச் சாதுர்யமாகச் சமாளித்தவர் முழுமையாகச் சிங்கப்பூரின் தொழிற்சங்க ஆலோசகர் திரு.சிம்ப்ஸன் ஆவார். இத்துடன் அவரது அறிக்கையினை இணைத்துள்ளேன். அதன்படி அவர் சிங்கப்பூரின் தொழிற்சங்க இயக்கத்தினைச் சரியான திசையில் செலுத்து கின்றார் என்பதை அறிவீர்கள். கைகளைச் சுட்டு கொண்ட இந்நிலையில் இப்படி ஓர் அதிகாரி நம் அரசுக்கு இருப்பது மகிழ்ச்சியான ஒன்றாகும்.

I also attach two press releases which were issued by the Public relation secretary on this subject of this meeting. I fear that there require a certain amount of explanation. The convenors of the meeting did not wish the press to be present in case information regarding the meeting was conveyed. To the public which they thought might have caused a demonstration by undesirable elements. At the same time they desired to have publicity and the public relation secretary therefore under took to prepare a communique on the subject.

தமிழில் :- இக்கூட்டப் பொருள் தொடர்பான பொதுமக்கள் உறவுச் செயலர் வெளியிட்ட பத்திரிகை செய்தியினை இத்துடன் இணைத்துள்ளேன் அவைகளுக்குச் சிறிது விளக்கத்தினையும் தங்களுக்கு அளிக்க வேண்டுமென உணர்ந்துள்ளேன். கூட்டத்தை கூட்டியவர்கள் அக்கூட்டம் பற்றிய செய்தி வெளி வருவதை விரும்ப வில்லை. பொதுமக்கள் மத்தியிலிருந்து விரும்பத்தகாத விளைவுகள் தங்களுக்கு இழைக்கப்படும் என்று முதலில் அஞ்சினர். அதே நேரத்தில் அவர்களுக்கு விளம்பரம் கிடைக்கவேண்டும் என்ற ஆசையும் எழுந்தது. அதனால்தான் அரசின் பொதுமக்கள் உறவுச் செயலர் கூட்டம் தொடர்பான அரசுச் செய்தியினைத் தயாரித்தார்.

When I read it I realised that reference to Ganapathy in a Statement. Over the Signature of the Public Relations Secretary might be embarrassing in view of the attention that had already been directed to the sentence of death passed on ex-trade union leader. I therefore casued

படிப்பகம்

www.padippakam.com



the second press release to be issued in the hope that any embarrasment might be avoided. the press behaved very discreetly and no reference to Ganapathy appeared.

தமிழில் :- கணபதி தூக்கிலிடப்படுவதற்கு உரிய கவனம் செலுத்தப் பட்டு கொண்டிருக்கும் போது அரசின் பொதுமக்கள் உறவுச் செயலரே கையொப்பமிட்ட அறிக்கையில் கணபதியைப் பற்றி குறிப்பிடுதல் வருவது நிலைமையை சிக்கலாக்கும் எனக் கருதி இரண்டாவது செய்தியினை செய்தி தாள்களுக்கு அளிக்க நேர்ந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக செய்தித்தாள்கள் கணபதி பற்றிய செய்தியினை பிரசுரம் செய்யவில்லை.

I felt, however, that in view of the importance which the trade union leaders appeared to attach to the reference to Ganapathy, and their insistence on its inclusion, I should communicate their feelings in the matter to sir Henry Gurney and send a copy of that Communication to you. (My confidential Telegram No. 353 to you and 3.28 to the High Commissioner)

தமிழில் :- அறிக்கையில் திரு.கணபதியைப் பற்றிய குறிப்பு இருக்க வேண்டும் என தொழிற்சங்கத் தலைவர்கள் முக்கியத்துவத்துடன் உணர்வதாக அறிந்ததால், அப்பகுதி இருந்தாக வேண்டுமென அவர்கள் வற்புறுத்தியதால், அவர்களது உணர்வினை திரு.ஹென்றி கர்னிக்கும் ஒரு நகலைத் தங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளேன்.

(எனது ரகசிய டெலிகிராம் எண். 353 தங்களுக்கு 3.28 உயர் ஆணையாளருக்கு)

Incidentally, I questioned the public Relation Secretary and simpson about inclusion of this reference and they both thought that the speakers' frankness on this point emphasised the sincerity of their desire to pledge their whole hearted support to government in its efforts to stamp out banditry and attempted anarchisim.

படிப்பகம்

www.padippakam.com



தமிழில் :- அவசியமற்று மிகச் சாதாரணமாக நான் அரசின் பொது மக்கள் உறவு செயலரிடம் - திரு. சிம்ப்னிகளையும் கணபதியைப் பற்றிய குறிப்பினை ஏன் வெளியிட்டீர்கள் என வினவினேன். அதற்கு இருவரும் அவர்கள் கூட்டத்தினர் மிக வெளிப்படையாக - கொள்ளையர்களையும் அரசுக் கெதிரானவர் களையும் ஒழிப்பதில் அரசின் முயற்சிகளுக்கு ஆதரவு நல்கியதால் கணபதியைப் பற்றிய செய்திக் குறிப்பினை வெளியிட்டதாக கூறினர்.

I am quite pleased with the result of the meeting and think it auguess well for the future.

கூட்டத்தின் முடிவுகளில் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளேன். எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஜே.டி.ஹூகாம் எஸ்கொயர் — மிக உண்மையான
காலனி அலுவலகம் — (காலனி அலுவலக அதிகாரி)
இலண்டன்

இக்கடிதம் வாசகர்களுக்குப் பல துரோகிகளை அடையாளம் காட்டும் என்று நம்புகின்றேன் **வீரன் வாழ்நாளில் ஒரு முறையே சாகின்றான் என்பதை இங்கு நினைவு கூர்தல் வேண்டும்.**

படிப்பகம்

www.padippakam.com

# 25. தியாகிகள் வரிசை தொடர்கின்றது

மலேயாவின் விடுதலைப் போராட்டத்தில் கணபதியவர்களோடு வரலாற்று நாயகர்கள் தியாகி அறந்தாங்கி வீரசேனன், பின்னர் தமிழகத்தில் வெட்டிச் சாய்க்கப்பட்ட சாம்பசிவம், வடச்சேரியில் சுட்டுக் கொல்லப்பட்ட இரணியன் ஆகியோராவர். இந்திய கம்யூனிஸ்டுகளின் வரலாற்றில் குறிப்பாக தமிழகக் கம்யூனிஸ்டுகளின் வரலாற்றுத் தொகுப்பில் மலேயா சாம்பசிம், இரணியன், குருதேவன், ஆர்.எச்.நாதன், பொறைக்கலம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தோழர்கள் கணபதியும், வீரசேனனும் இரட்டையர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் சிறப்பாக அழைக்கப்படுகிற அளவுக்கு இணைந்தே நின்றவர்கள், வீரசேனனும், சாம்பசிவமும் இணைந்து செயல்படக் கூடியவர்கள். கணபதியும், வீரசேனன் ஒத்த கருத்தோட்டம் உடையவர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர்கள் மதிப்பளிப்பார்கள் கணபதி - வீரசேனன் என்றே அவர்களை மக்கள் சேர்த்து அழைப்பர். அந்நிலையில் கணபதியின் படு கொலை வீரசேனனைப் பெரிதும் பாதித்தது, கணபதியின் தூக்குத் தண்டனை மரணத்துக்குப் பழிக்கு பழிவாங்க பாடம் புகட்ட தக்க தருணத்தை எதிர் நோக்கி கொண்டிருந்தார், இந்திய மலேயா விடுதலைப் போராட்ட மாவீரன் கணபதியை தூக்கிலிட்ட செய்தியைச் செய்தி இதழில் முதல் பக்கத்தில் வெளியிட்டு இறுமாந்து கொண்டிருந்தது. மலேயா அரசு. எத்தர்களுக்குப் பாடம் புகட்டக் காத்திருந்த எரியீட்டியென வீரசேனன் தாக்குதல்களை மும்முரப்படுத்தினார். விடுதலைப் படைகள் ஒரே சமயத்தில் பன்முனைத் தாக்குதல்களை நடத்தியது. அரசு அலுவலகங்கள், முகாம்கள், மகிழ்வுந்துகள் (கார்கள்) கடுமையான தாக்குதலுக் குள்ளாயின. எங்கெல்லாம் தாக்குதல்களுக்கு வாய்ப்புண்டோ அங்கெல்லாம் தாக்குதல்கள் நடந்தன. கணபதியோடு இணைந்து நின்ற தோழர்களின் கோபம் ஏவுகணைகளாகத் தாக்கின.

www.padippakam.com



தோழர் வீரசேனன் தலைமையிலான பல தாக்குதல்கள் வெற்றி கரமாகப் பவனி வந்தன. அத்தகைய தாக்குதல் ஒன்றினைத் தோழர் வீரசேனன் நடத்தி விட்டுத் திரும்பும் போது ரவாங் பகுதியில் அரசு படைகள் பெருமளவில் வீரசேனனின் சிறு சேனையைச் சூழ்ந்து கொண்டன. வீரசேனனின் படைகள் கொரில்லா முறைப்படி எதிரிகளின் பெரும் படையைத் தாக்கிக் கொண்டே பின் வாங்கின. அப்போது வீரசேனனின் நாட் குறிப்பு கீழே விழுந்து விட்டது. அந்நாட்குறிப்பில் ரகசியத் தாக்குதல்கள் குறித்த பல திட்டங்கள் குறிக்கப் பெற்றிருந்தன. அதனை எதிரிகள் கைப்பற்றிவிடக் கூடாதெனத் தாக்குதலைச் சிறு கணம் தாமதப்படுத்தியதைப் பயன்படுத்திக் கொண்டு எதிரிகள் வீரசேனனைச் சுட்டு வீழ்த்தினர். நடக்க இயலா வீரசேனன் விழுந்தார். தரையில் அடிப்பட்டு வீழ்ந்தும் அந்நாட் குறிப்பினை எதிரிகள் கைப்பற்றிடா வண்ணம் தவழ்ந்து தவழ்ந்து சென்று அந்நாட் குறிப்பினை எடுத்து - தான் இறந்த பிறகும் அதன் விவரங்களை எதிரிகள் அறியக் கூடாதென பெருகி வந்த தன்னுடல் குருதியினிலேயே அதனை நனைத்து நனைத்து அழித்தார். இதனைப் பயன்படுத்திக் கொண்டு எதிரிகள் மீண்டும் மீண்டும் சுடவே ரவாங்காட்டுப் பகுதி என அழைக்கப்படும் அத்தளத்திலேயே அவரது உயிர் பிரிந்தது. தன் உதிரத்தினை மலேயா மண்ணுக்குப் பரிமாறிவிட்டு அம்மாவீரன் தியாகியானார். வீரசேனன் இறந்தும் மலேயாவின் கூலிப்படைகள் அவரது உடலருகே செல்லவில்லை. ஏனெனில் வீழ்ந்தது போல நடித்து எத்தனையோ எதிரிகளைச் சுட்டு வீழ்த்திய வல்லவனாயிற்றே! பின் தலை கவசம் மார்புக் கவசமணிந்த வீரர்கள் அருகே சென்று அவ்வீரன் இறந்ததை உறுதிப்படுத்தினர்.

படிப்பகம்

www.padippakam.com



**சிம்மக்குரலோன் தியாகி இரணியன் :-** கி.பி.1930ல் சிங்கப்பூரில் ரௌடிகள் ஆதிக்கம் தனி ஆட்சி நடத்தியது. அவர்கள் சிங்கங்கள் - புலிகள் எனப் பெயர்வைத்துக் கொண்டு வன விலங்குகளையே இழிவுப்படுத்தினர். கொள்ளையும் கொலையும் தாம் அவர்தம் தலைகள். திடீரெனத் தோன்றி தாக்குதல் நடத்தி மறைவார்கள். அரசால் அவர்களை அடக்க இயலாது. அரசு அவர்களை தொழிற்சங்க இயக்கத்துக்கு எதிராகப் பயன்படுத்தியது. அதனை முறியடித்தவர் தோழர் இரணியன் ஆவார். இரணியன் போராட்டக் காலங்களில் பல சாகசங்களைச் செய்த சாகச வீரன். இரணியனை மலாயா அரசு கைது செய்தது. இரணியன் அரசிடமிருந்து தந்திரமாகத் தப்பி இந்தியாவிற்கு வந்தார். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் பங்குபெற்றுத் தமிழ்நாட்டுப் போராட்டங்களில் கலந்து கொண்டார். தஞ்சைத்தரணியின் தியாகிகள் ஏராளமாகச் சுட்டு கொல்லப்பட்ட போது இரணியன் துரோகிகளின் செயலால் வடசேரியில் கைதுசெய்து சுடப்பட்டார். அவரின் நினைவுச் சின்னம் பட்டுக்கோட்டை நாட்டுச் சாலையில் உள்ளது.

**தியாகி சாம்பசிவம் :-** கி.பி.1946ல் மலேயா விடுதலைப் போராட்டத்தின் கொரில்லாப் போராட்டத் தளபதி சாம்பசிவம் ஆவார். போராட்டம் கடுமையான வீச்சினில் மலேயாவினை அதிர வைத்துக் கொண்டிருந்ததால் சாம்பசிவத்தினைக் கொன்று விட எதிரிகள் பல முறை முயற்சித்தனர். மலேயா சாம்பசிவம் சிறந்த கொரில்லாப் படை வீரர். ஆகவே அவரைக் கொன்றழித்து விட வேண்டும் என்பதில் எதிரிகள் மிகக் கவனமாயிருந்தனர். பெரும் படையுடன் சென்று போர்முனையில் சாம்பசிவத்தினை பிடித்த இடத்திலேயே கொன்று விட வேண்டும் என திட்டமிட்டிருந்த அரசுப்படை சாம்பசிவத்தின் உடலை 24 இடங்களில் துப்பாக்கி

படிப்பகம்

www.padippakam.com



முனைக் கத்தியால் குத்திக் கிழித்தது. அப்படியும் சாம்பசிவம் எனும் மாவீரனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கவே வேறு வழியில்லாமல் மருத்துவமனையில் சேர்க்கும்படியானது. எனினும் கொலைகார அரசு தண்டனையின் மூலம் அவ்வீரனைக் கொன்று விட முனைந்தது. கணபதியின் மரணதண்டனைக்கு உலகம் முழுவதும் எழுந்த எதிர்ப்புக் கணைகள், தொழிலாளர் கொந்தளிப்பின் எதிரொலியாக வீரன் சாம்பசிவத்தினைத் தூக்கிலிட இயலாது போகவே - இந்தியாவுக்கு நாடு கடத்தியது மலேயா அரசு. அவர் தமிழகத்தில் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராகச் செயல்பட்டார். மலேயாச் சிங்கப்பூரிலிருந்து நாடு கடத்தப்பட்ட தியாகிகளின் சங்கத்தினை அமைத்தார். அச்சங்கத்தின் செயலாளராக சென்னை மாதவரம் மோகன் தோட்டத்தில் வாழ்ந்து வரும் தோழர் பொறைக்கலம் அவர்களும், பொருளாளராகத் தாம்பரம் மலேசிய பழனி அவர்களும் செயலாற்றினர். தற்போது மலேயா - சிங்கப்பூர் நாடு கடத்தப்பட்ட சங்கத்தினை மிக்க சிரமங்களோடு நடத்தி வருபவர் டாக்டர் நாகை ராசமாணிக்கம் ஆவார். தோழர் சாம்பசிவம் விவசாயிகள் சங்கம் மக்கள் சனநாயகக் கழகம் என பல சங்கங்களை நிறுவினார். சிறந்த சொற்பொழிவாளரான அவர் தமிழகம் முழுவதும் சுற்றிச் சொற்பொழிவாற்றியவர். இங்கே நன்றியோடு ஒரு தகவலை குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது. அன்றைய திராவிட இயக்க தளபதியான கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திரு ஆற்காடு வீராசாமியின் (இன்றைய தி.மு.க பொருளாளர்) தலைமையில் தியாகி சாம்பசிவம், மற்றும் அவரது தோழர்களுக்கும் பாராட்டு விழா நடத்திப் பண முடிப்பினையும் அளித்து உற்சாகப்படுத்தினார். தோழர்கள் எம்.ஆர். குருதேவன், தியாகி சாம்பசிம், தோழர் பொறைக்கலம், டாக்டர் ராசமாணிக்கம், தோழர் தேசதாசன் எனும் சுப்பைய்யா ஆகியோர் கலைஞர் அளித்த நிதியினைப் பயன்படுத்தி சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் புகைவண்டி நிலையங்களின்

படிப்பகம்

www.padippakam.com



தாழ்வாரங்களில் அநாதைகளாகத் தவித்துக் கொண்டிருந்த தமிழ்க் - குடும்பங்களை - அவரவர்களின் சொந்த இடங்களுக்கும் இந்தியாவின் பல்வேறு தேயிலைத் தோட்டங்களுக்கும் அனுப்பிவைத்தனர். அன்று தமிழகத்துத் தலைநகரின் புகைவண்டி நிலையங்களில் சுமார் 5000 தமிழ்த் தியாகிகளின் தமிழர்களின் குடும்பங்கள் அநாதைகளாய் தவித்தமை வரலாற்றுக் கொடுமையாகும் கொடுமையிலும் கொடுமை தமிழனின் நிலைமை.

மலேயா மண்ணில் வீர தீர சாகசங்கள் செய்து பிரிட்டீஷ் அரசாலும் கொல்லவியலாத வீரன் சாம்பசிவம் சொந்த நாட்டில் சுரண்டலுக்கெதிரான போராட்டத்தில் தாமரைப்பாக்கத்துப் பணக்கார வர்க்கத்தால் கொலை செய்யப்பட்டார். அவர்தம் சொந்தக் கிராமமான வணக்கம்பாடியில் குருதி பரவ உயிர் துறந்து தியாகியானார்.

மலேயாவின் மடியிலே கணபதி வீழ்ந்தார். வீரசேனன் வெற்றிக்கொடி நாட்டி மாண்டார். தியாகி இரணியன் சுட்டு வீழ்த்தப்பட்டார். சொந்த மண்ணில் சாம்பசிவம் சாய்க்கப்பட்டார். ஆம் அந்த வர்க்கப் போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. உலக வரலாற்றில் தியாகிகளின் வரிசையிலும், மாவீரர்களின் வரலாற்றில் முதல் வரிசைக்கு சென்று விட்ட கணபதி மற்றும் - அவர்தம் தோழர்களின் இச்சிறு வரலாற்று நூல் - பல்வேறு சிரமங்களுக்கிடையில் உலகத் தமிழர்களின் கரங்களில் தவழ்கின்றது. "மலேசியா எங்கே என் பங்கு? என்ற நூலில் இலங்கையிலாவது மலையாக இலக்கியங்கள் வளர்ந்து அங்கு வளர்கின்ற இளைய தலைமுறையினருக்குக் கடந்த கால வாழ்க்கை வரலாறுகளை அறிந்து கொள்ள உதவுவதுடன் அநீதிகளை நேரடியாக எதிர்த்துப் போராட வேண்டிய உரிமையை ஏற்படுத்துகின்றது. ஆனால் மலேயாவிலே நிலைமை வேறு

படிப்பகம்

www.padippakam.com



விதமாக இருக்கின்றது. மலேயாவில் தமிழர்களின் பண்டைய வடிவங்களும் பாரம்பரியங்களும் அழிந்து போயின. தமிழர்களின் பாரம்பரிய நடனங்களான பொய்க்கால் குதிரை - கரகாட்டம் - நடனம் - பட்டிமன்றம் - பஞ்சாயத்து முறைகள் எல்லாம் அழிந்து போயின. பெண்களுக்கான விளையாட்டுகளும் அழிந்து போயின. மலேயாவிலும் இலங்கையைப் போல மலையகத் தொழிலாளர்களின் இலக்கியங்கள் வளர வேண்டும். அப்போதுதான் தமிழர்கள் தங்களது வரலாற்றுப் புகழினை அறிய இயலும்" என வருத்தத்துடன் எழுதியுள்ளார். இந்நூல் மூன்று நாடுகளாய் மலேயா - இந்தியா - சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விடுதலைப் போராட்டத்தில் தன் இன்னுயிரைத் தியாகம் செய்து மக்கள் உணர்வுகளில் பொன்னுயிராகச் சுடர்விட்டு கொண்டிருக்கும் கணபதியின் புகழைப் போராட்ட உலகமும் தமிழ் உலகமும் போற்றிடப் புகழ் வளர்த்திட உங்கள் கரங்களை வருடுகின்றது. என் எழுத்துக்கள் கணபதியை உங்கள் இதயத்தில் உலாவச் செய்ய இயன்றால் இந்நூல் வெற்றியடைந்ததாகும்.

வாழ்க கணபதியின் புகழ்!
வாழ்க வீரசேனன் - இரணியன் - சாம்பசிவம் ஆகியோரின் புகழ்
உலகத் தியாகிகளின் புகழ் வாழ்க!
அவர்கள் வழிதனைப் பின்பற்றுவோம்!
வளர்க உலகத் தமிழர் ஒற்றுமை!
வாழ்க பாட்டாளி வர்க்க வெற்றி!!
சரியான போராட்டங்களின் மூலம் புது உலகம் படைப்போம்

படிப்பகம்

www.padippakam.com

# 26. மலேயாவின் வரலாற்றில் நினைவில் நிற்பவர்கள்

தியாகி கணபதி அவர்களைப் போன்றே பலர் மலேயாவின் வரலாற்றில் புகழ் பெறும் பரிணாமம் பெற்றனர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். தியாகி திருமங்கலக் கோட்டை ஆறுமுகம், இளங்கோ என்கிற ராமசாமி, தம்பிக்கோட்டை சற்குணம், மதுக்கூர் முத்தையா, வாட்டாக்குடி இரணியன், அன்டமி ராசகோபால், மணல் மேல்குடி வீரசேனன், செட்டிநாடு வீரசிம்மன், செட்டிநாடு மயில் ராவணன், அருப்புக் கோட்டை இரணியன், அத்திப்பட்டு வீரசோழன், ஆகியோர் அவர்களில் சிலராவர்.

தியாகிகள் தம்பிக்கோட்டை எம்.ஆர்.சற்குணம், தஞ்சை திருமங்கலக் கோட்டை இளங்கோவன் என்ற இரு பெரும் வீரர்களும் இந்திய வெள்ளை அரசாங்கத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆவர். இந்திய விடுதலைப் போராட்டத்தினை ஊக்குவிப்பதற்காக நீர்மூழ்கி கப்பலில் இந்தியா வந்தமைக்காக பிரிட்டிஷ் இந்திய அரசு அவர்களுக்கு மரணதண்டனை விதித்தது. அம்மாவீரர்கள் தியாகத்தின் உச்சிக்குச் சென்றனர். அவர்களின் மீது இந்திய தேசிய ராணுவத்தின் உளவாளிகள் என்று குற்றம்சாட்டப்பட்டது. தோழர்கள் வெற்றிகரமாகத் தூக்கு மேடையேறினர். தியாகிகள் வீரசேனன், மலேயா பெருமாள், அருப்புக் கோட்டை இரணியன், கே.எஸ்.மணி, கோல சிலாங்கூர் குணசேகரன், மலேயா கருப்பையா, செட்டிநாடு மயில் ராவணன், மாயூரம் தியாகி ராமசாமி, செட்டிநாடு பள்ளத்தூர் புரட்சிப்பித்தன், கேரளா கிருஷ்ணன், சிதம்பரம் ராமசாமி, தியாகி மலேயா குப்புசாமி, அண்டமி ராசகோபால், ரவாங் மணியன் ஆகியோர்கள் மலேயா விடுதலைப் போராட்டத்தில் பிரிட்டீஷ் ராணுவத்தை நேருக்கு நேர் எதிர்த்துப் போராடிப் போர் புரிந்து களத்திலேயே

www.padippakam.com



தியாகிகளாய் உயிர் நீத்தவர்கள் ஆவர். தியாகி இரணியன், தியாகி சாம்பசிவம் ஆகியோர் இந்தியாவில் எதிரிகளால் பழி வாங்கப் பட்டவர்கள். தியாகிகளின் தியாகத்திலிருந்து தான் போராட்ட வரலாறுகள் தோன்றுகின்றன என்பது வரலாற்று உண்மை. அவ்வழியில் மலேயாத் தியாகிகள் சிந்திய உதிரத்திலிருந்து தான்-மலேயா வரலாற்றின் வீர மணம் வீசும் பகுதி கணபதி எனும் தமிழனிலிருந்து துவங்குகின்றது. விடுதலையுணர்வின் வீரசிங்கங்களாக உயிர் நீத்த தியாகிகளின் தியாகத்துக்கு வீரவணக்கம் செலுத்தக் கடமைப்பட்டவாகள் நாம்.

### தியாகி பட்டுக் கோட்டை வாட்டாகுடி இரணியன் :-

இரணியன் போராட்ட காலங்களில் மாபெரும் சாகசங்கள் புரிந்தவர். கி.பி.1938ல் சிங்கப்பூரில் ரௌடிகளின் ஆதிக்கம் தனி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த காலம். அவர்களை கேங்ஸ்டர்கள் என்றழைப்பது வழக்கம். அவர்கள் தங்களை புலிகள் சிங்கங்கள் என்றெல்லாம் அழைத்துக் கொண்டு கொண்டிருந்தனர். திடீரென்று தோன்றுவார்கள் தாக்குவார்கள். திடீரென மறைவார்கள். எதற்காக கொள்ளையடிப்பதற்காக! கொலையும் உண்டு. வழிப்பறியும் செய்வார்கள். போலிசுக்குக் கையூட்டுக் கொடுப்பார்கள். அரசு இவர்களைப் பயன்படுத்தித் தொழிற்சங்க இயக்கங்களையும் கம்யூனிஸ நடைமுறைகளையும் நசுக்க முயற்சி செய்தது. அத்தகைய அரசும் ரௌடிகளும் இணைந்து நடத்தும் பொதுமக்கள் மீதான தாக்குதலை முறியடிக்கத் தோழர்கள் இரணியன், கணபதி, வீரசேனன், குருதேவன், டாக்டர் நாகை ராசமாணிக்கம், கடலூர் சமரசன், சீர்காழி மேகநாதன், மயிலாடுதுறை கிருஷ்ணசாமி, துறையன் கண்டியர் ஆகியோர்கள் செந்தொண்டர் படையினைத் துவக்கினர். அதன் முழுப்பொறுப்பினையும் இரணியனே எடுத்துக் கொண்டார். செந்தொண்டர்படை அரசு ஆதரவு பெற்ற கேங்க்ஸ்டர்களை நிர்மூலப்படுத்தியது. மிகப்பெரிய சாதனையாக இதனை நடத்திக் காட்டிய பெருமை தோழர்கள் இரணியன் - கணபதி - குருதேவன் டாக்டர் நாகை ராசமாணிக்கம் ஆகியோரையே சாரும்.

படிப்பகம்

www.padippakam.com



இரணியன் மலாயா விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றதன் காரணமாக மலாய் பிரிட்டிஷ் அரசு அவரைக் கைது செய்து தண்டனையளிக்க முயற்சி செய்த போது அவர்களை ஏமாற்றி விட்டு இந்தியாவிற்குத் தப்பி வந்து பின்பு - இரணியன் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் பங்கு பெற்றுப் பணியாற்றினார். தமிழ்நாட்டு போராட்டங்களில் சிறப்புறப் பங்கு பெற்றார். தமிழகத்தின் தஞ்சைத் தரணியில் அரசு ஏராளமான தியாகிகளைக் கைது செய்து சுட்டுக் கொன்றபோது - துரோகிகளின் ஒத்துழைப்போடு வடசேரியில் இரணியனைச் சுட்டுக் கொன்றது. அத்தகைய தியாகியின் நினைவுச் சின்னம் பட்டுக் கோட்டையை அடுத்த நாட்டுச் சாலையில் பொலிவோடு காணப்படுகின்றது. அந்த சிம்மக்குரலோனின் பெயர் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் வரலாற்றில் முதல் வரிசையிலமைந்திருப்பது பெருமையே ஆகும்.

**தோழர் அருப்புக் கோட்டை வீரபாகு:-** திறமையான பேச்சாளராகவும், தளபதியாகவும், ஆசானாகவும், விளங்கிய பெருமைக்குரியவர் வீரபாகு ஆவார். அவர் ஐ.என்.ஏவில் கடற்படை பயிற்சியும், ரகசியப் படைப் பயிற்சியும் பெற்றவராவார். பின்னர் மலாய் கம்யூனிஸ்டுக் கட்சியில் உளவுத்துறையின் தளபதியாக விளங்கினார். கம்யூனிஸ்டுக் கட்சியின் உளவு இலாக்கா என்பது கட்சி உறுப்பினர்களுக்கே தெரியாதது ஆகும். பழகுவதற்கு இனிமையானவர். வஞ்சகம் தெரியாப் போராளி. அவர் பின்னர் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து செயல்பட்டார்.

**தோழர் செட்டிநாடு மயில் ராவணன்:-** இவர் சகலகலா வல்லுனர் என்றழைக்கப்பட்டவர். ஆசிரியர் - கலைவாணர் - நாடக நடிகர் - கதை - கவிதை - கட்டுரை புனைவாளர் - சிறந்த குறிப்புப் பேச்சாளர். அயராத சேவையாளர் - மாதர் அமைப்பு - மாணவர் அமைப்பு ஆகிய அனைத்துக்கும் தலைவராகத் திகழ்ந்தவர். இசைக் கருவிகளும் வாசிக்க தெரிந்தவர். தமிழ்மொழி தமிழ் நாகரிகம் ஆகிய அனைத்திலும் சிறப்பானவர் அவர் சிறப்புரையாற்றத்

www.padippakam.com



துவங்கி விட்டால் முடியும் வரையில் கைத்தட்டல்கள் எதிரொலிக்கும். அவர் செம்படையில்சேர்ந்து தளபதியானார். வர்க்க விரோதிகளை எதிர்த்துப் போராடி உயிர் துறந்தார். அவரின் இழப்பும் ஈடு செய்ய இயலாத மகத்தான இழப்பாகும்.

**தோழர் அருப்புக் கோட்டை ஜீவானந்தம்:-** இவர் மலேயா ஜீவானந்தம் என்று பெயர் பெற்றவராவார். "உலகில் உழைப்பவர் தமக்கே உரிமை உண்டென்று முரசாற்றுவோம்" என்று மலேயாவின் தொழிலாளர் கீதத்தினை இயற்றிப்பாடியவர். நல்ல தமிழ் அறிஞர். மிகப்பெரிய நாத்திகவாதி. தந்தை பெரியாரிடத்தில் தீவிரப் பற்றுடையவர். அனல் கக்கும் பேச்சாளர் - பாவேந்தர் பாரதிதாசனின் பாராட்டுக்குரிய தோழர் - தீண்டாமை எதிர்ப்பில் முன்னணியில் திகழ்ந்தவர். பசியையோ தூக்கத்தையோ பொருட்படுத்தாது எந்நேரத்திலும் - எங்கேயும் சேவை செய்திடும் இயல்புடையவர். அவர் மாவீரன் ஐ.என்.எ.கே. ராமசாமியின் சகோதரராவார். ஜீவானந்தம், தோழர் கணபதி அவர்களைப்போல - வீரசேனனைப்போல அரசுக்கு பயங்கர மனிதனாய்த் திகழ்ந்தார். துரோகிகள் அவரைக் காட்டி கொடுக்க மலாய் பிரிட்டிஷ் அரசு அவரைக் கைது செய்து இந்தியாவிற்கு நாடு கடத்தியது. பின்னர் அவர் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் கடலூர் கிளையில் பணியாற்றினார்.

**செட்டிநாட்டுத் தோழர்கள் வீரசிம்மன் - புரட்சிபித்தன்:-** இத்தோழர்கள் மிகச்சிறப்பானவர்கள். கல்வியாளர்கள் -மனஉறுதி படைத்தவர்கள். கட்சியிலும் செந்தொண்டர்படையிலும் தொழிற்சங்க இயக்கத்திலும் சிறப்பான போராளிகளாகத் திகழ்ந்தவர்கள். பல துறைகளில் தீரத்துடன் பணியாற்றி மலாய மக்கள் சனநாயகப் புரட்சியில் கொரில்லாத் தளபதிகளாய்ப் பங்கு பெற்று போர்க்களத்தில் பலரைச் சுட்டு வீழ்த்தித் தாங்களும் தியாகிகளாய் மலாய் மண்ணில் செங்குருதி சிந்தி உயிர் விட்டவர்கள் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com



**தோழர்கள் பழநிவேல் – சுதர்மன்:–** தோழர் பழநிவேல் ஃபாதர் வெள்ளை என்ற பெயரில் வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்து ஃபாதர் வெள்ளையைப் போன்று செயல்பட்ட மாவீரர். அவரின் குழந்தைக்குத் தோழர் குருதேவனின் பெயர்தனைச் சூட்டி மகிழ்ந்தவர். சுதர்மன் பிரபல தொழிற்சங்கத் தலைவரும் - ஐ.என்.ஏ. வீரரும் ஆவார். விடுதலைப் போராட்டத்திலும் பங்கு பெற்றவர். அவர் மலேயா விடுதலை போராட்டம் எனும் சிறப்பான நூலினை எழுதிய நூலாசிரியருமாவார். இன்று இவர் சிங்கப்பூரில் வாழ்ந்து வரும் சிறப்பான மனிதராகத் திகழ்கின்றார்.

இன்று தமிழகத்தில் நாடு கடத்தப்பட்ட மலாயா - சிங்கப்பூர் தியாகிகளின் சங்கத்தின் தலைவராகத் திகழும் நாகை ராசமாணிக்கம் புதிய சனநாயகக் கழகத்தில் தோழர் லீ - குவான் - யூவுடன் அமைப்புச் செயலாளராகப் பணிபுரிந்தவர் ஆவார்.

**மலேயாவில் தமிழ் வளர்ச்சிக் கழகம் - மற்றும் தமிழறிஞர்கள்:** மலேயாவின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் பெரும் புலவர் சின்னப்பதாஸ் - செயலாளர் தோழர் குருதேவன் - உதவித்தலைவர் இராமகிருஷ்ணன் ஆகியோர் ஆவர். அதில் பங்கேற்றவர்கள் தந்தை பெரியார் வழித் தோன்றல்களான சிங்கைத் தமிழறிஞர் காந்திரசம் சுப்பைய்யா, திருத்துறைப்பூண்டி தமிழறிஞர் பாலப்பன், குளுவாங் குருசாமி, பந்தீஸ் பள்ளிகொண்டான் தமிழறிஞர் தோழர் முகமது, வேதாரண்யம் ராமைய்யா, பேச்சாளர் சீர்காழி அமீது, தமிழறிஞர் திருக்குறள் முத்து, திரு.வி.க. பக்தர் வாயுமேடு கலியாண சுந்தரம், கவிஞர் பழனிவேல், சமதர்மம் பத்திரிகையாசிரியர் கனராசு, இலட்சுமணன், நடராசன், பன்மொழிப் புலவர் பிரம்மச்சாரி கைலாசம், தமிழறிஞர் மெய்யப்பன், தமிழ்ச் சேவகர் துறை, தமிழறிஞர் திருவாரூர் சிங்காரம், தமிழறிஞர் அருணாச்சலம், செட்டியார், தமிழ் முரசு ஆசிரியர் திருவாரூர் கோ.சாரங்கபாணி, தமிழ் நேசன் ஆசிரியர் நரசிம்ம ஐயங்கார் பாட்டாளி முரசு ஆசிரியர் இளவழகன் ஆகியோர் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com



மலேயா கண்ட கொரில்லாப் படைத் தளபதிகள் – வீரர்கள் :– கொரில்லாப் படைத் தலைவர்களாகத் திகழ்ந்தவர்கள். தியாகப்பிழம்பு அ.நல்லதம்பி, தளபதி அண்டமிராச கோபால், தியாகி தளபதி அத்திக்கோட்டை வீரசோழன், தியாகி ஆர்ராமசாமி, மேகநாதன், தோழர் சமரசன், பந்தீஸ் தமிழ் வீரன் என்கிற முனியாண்டி, தோழர் டாக்டர் நாகை ராசமாணிக்கம், தியாகி காரைக்குடி புரட்சிப்பித்தன், தியாகி ரவாங் மணியன், கருப்பையா, கோல சிலாங்கூர் தியாகி குணசேகரன், தியாகி மாயூரம் மணியன், தஞ்சை நக்கீரன், கரம்பகுடி தமிழ் தொண்டன், போராளி மாயூரம் பதி, போராளி ஹயத்தான், போராளி லாபு ராமசாமி, லாபு செல்லைய்யா, போராளி மலேயா காதர், தியாகி மாயூரம் மணியன், தஞ்சை நக்கீரன், கரம்பகுடி தமிழ்த் தொண்டன், லாபு செல்லைய்யா, போராளி ரந்தோவ் முத்துசாமி, தியாகி பத்துபகார் அப்பு, ஜொகூர் ராமசாமி, போராளி ஜம்மாபாய், இராமநாதபுரம் முத்துசாமி, திருப்பூர் முத்துசாமி, ஆம்பிலாக் கோட்டை போராளி சுப்பைய்யா, தகவல் பிரிவுப் போராளி திருச்சி இராமு, கோவை பழனிசாமி, பெண்படைப் போராளி ரவாங் பேச்சாயி, கிள்ளாங் தங்கைய்யா, போராளி சிரம்பான் முனியாண்டி, போராளி பூசாரி நடேசன், போராளி தேவராசு, கீழக்காடு சுப்பிரமணியன், போராளிகள் வந்தவாசி தமிழ்ச்செல்வன், இராமலிங்கம், இராமச்சந்திரன், தளபதி பினாங்கு சிதம்பரநாதன், திண்டிவனம் நடேசன், பினாங்கு இப்ராஹிம், திருவாண்ணாமலை மணியம், தளபதி ஈப்போ காளிமுத்து, போராளி பஞ்சாநாடு சுப்பைய்யா, சென்னை ஐ.மாதவன், போராளி சுவாமிநாதன், போராளி தேவகிருபை, போராளி அய்யாவு, திருவோணம் வைத்தியலிங்கம், அழகன் தம்பதிகள், வேட்டைக்காரன் இருப்பு அழகர்சாமி தம்பதிகள், சிரம்பான் மலையாண்டி, வேலூர் வைத்தினாங்குப்பம் மொட்டைய்யன், பந்துவக் கோட்டை ராமைய்யா, திருத்துறைப்பூண்டி சாமிக்கண்ணு, வாயுமேடு காளமேகம், விழுப்புரம் ராமச்சந்திரன், மாயூரம் முனுசாமி, மாயூரம் கலிய பெருமாள் ஆகியோர்.

படிப்பகம்

www.padippakam.com



**இந்திய இளைஞர் கழகம் :-** இந்திய இளைஞர் கழகம் காங்கிரஸ் சார்புடையது. அவ்வமைப்பின் தலைவர் வழக்கறிஞர் கோகோ ஆவார். அவ்வமைப்பில் பங்களித்தவர்கள் எஸ்.ஏ.அப்புசாமி, ஆர்.நாராயணசாமி. எம்.எம்.முத்துதேவர், தம்பிகோட்டை மாரியப்ப தேவர் ஆகியோர் ஆவர்.

**மலாய்க் கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிற்சங்க இயக்கக் காவலர்களும் :-** அகில மலாயாத் தொழிற்சங்கச் சம்மேளனத் தலைவர் மலேயா கே.எச்.நாதன், நாடு கடத்தப்பட்ட தியாகிகள் சங்க முன்னோடியும் தலைவருமாகவும் திகழ்ந்தவரான ஐ.என்.ஏ தோழர் பொறைகலம், கணபதியை இயக்கியகாவலன் மாபெரும் தோழர் குருதேவன், தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாததாஸ் பற்றாளருமான தாம்பரம் மலேசிய சொ.பழனி, தொழிற்சங்க பெருந்தலைவர் திருச்சி மோகன், தோற்றுவிப்பாளர் வீரபாகு, கட்சிக் கிளை செயலாளர் அருப்புக் கோட்டை டி.இராமானுஜம், ஊழியர் பணிக்கர், சுவாமிமலை மலேயா காதர், உறுப்பினர் மலேயா கோவிந்த சாமி, தொண்டர் படை தம்பி கோட்டை கமலப்பன், தோழர் கிருஷ்ணன், உறுப்பினர் சண்முகம், தலைவர் சுந்தர்ராசு, தலைவர் சின்னதம்பி, துவக்க கால கம்யூனிஸ்டுக் கடலூர் மாணிக்கசாமி, தொழிற்சங்கத் தலைவர்கள் எம்.முக்கைய்யா, முத்தைய்யா, துவக்ககால கம்யூனிஸ்டு சிதம்பரம் து.கோவிந்தசாமி, தொழிற்சங்க தலைவர் சிலாங்கூர் எஸ்.எம்ராமசாமி, உறுப்பினர் கோனா பொண்ணு, சேலம் பூமாலை, புதுக்கோட்டை அருணாச்சலம், தலைவர் என்.ஆர்.சாமி, திருப்பூர் மாரிமுத்து, உறுப்பினர் துளசி, உறுப்பினர் நாகை காமேஸ்ரம், எஸ்.இராமைய்யா, மலாய் கம்யூனிஸ்டுகட்சி மத்திய கமிட்டி உறுப்பினர் நாகை ஆர்.முருகைய்யா, சிங்கப்பூர் சீனிவாசன், தொழிற்சங்க முன்னனியாளர் மலாயா எஸ்.கோவிந்தசாமி, கம்யூனிஸ்டுக் கட்சிக் கிளைச் செயலாளர் ஆலங்கோட்டை ஆர்.ரங்கராசு, கிளை செயலாளர் நெப்போலியன் சு.பட்டுராசு,

படிப்பகம்

www.padippakam.com



சிங்கப்பூர்த் தொழிற்சங்கச் செயலாளர் துவரங்குறிச்சி கே.சோமசுந்திரம், கட்சி உறுப்பினர் ஆலங்குடி ஆர்.வீரப்பன், கட்சி ஊழியர்கள் மணப்பாறை பி.சங்கையா, அல்லூர் எம்.சின்னையா, ஜீயப்புரம் எம்.பெருமாள், தியாகி கிருஷ்ணனின் சகோதரர் பினாங்கு அப்பாதுரை, புதுக்கோட்டை கருப்பையா, ஈப்போ கிட்டு, பி.அழகன், கிளை செயலாளர் கரிகாலன், நகரசபைத் தொழிற்சங்கத் தலைவர் கருவாகுறிச்சி சீனிவாசன், தொழிற்சங்கத் தலைவர் பொன்னுசாமி, ஊழியர் ஏரத்தநாடு சுப்பையா, முத்துசாமி, அந்தோணிசாமி என்கிற ராமதாஸ், மத்திய கமிட்டி உறுப்பினர் பாப்பா நாடு ராமதாஸ், நாமக்கல் பி.அம்மையப்பர், ஆலங்கோட்டை தங்கவேலு, ஊழியர் பரவாக்கோட்டை கணேசன், நத்தம் கண்ணுசாமி, மார்க்ஸிய அறிஞர் வெங்கடாச்சலம், கடலூர் சிங்காரவேல், மாணிக்கசாமி, மற்றும் பலராவர்.

**இந்திய தேசிய ராணுவத்தின் பங்காளர்கள் :-** மன்னார்குடி என்.வீரவர்மன், களச்சான்காடு ஆர்.வீரபாண்டியன், தம்பிக்கோட்டை எம்.ஆர் சற்குணம், எஸ்.ஏ.சற்குணம், முத்துப்பேட்டை எம்.எம்.முத்துதேவர், பரவாக்கோட்டை முத்துதேவர், கடற்படைத் தளப் பொறுப்பு புளியங்குடி ஆர்.முத்தையா, பாத்தாம்பட்டி எம்.பி.செயபாரதி, மலேயா கே.எஸ்.நாதன், அருப்புப் கோட்டை சின்ன இரணியன், பள்ளத்தூர் மயில் ராவணன், தம்பிக்கோட்டை ஆறுமுகம்தேவர், மூவார் மாரிமுத்து, கரம்பக்குடி டாக்டர் எம்.முத்து, திருமக்கோட்டை ரத்தின சபாபதி, மரவக்காடு பெரிய கணபதி, மேலக்காடு சற்குணம், ஐ.என்.ஏ. அதிகாரி எம்.ஆர் கோபால் மற்றும் பலராவர்.

**பொது வாழ்வுப் பெண் வீராங்கனைகள் :-** ஆலங்கோட்டை தங்கவேலு அவர்களின் சகோதரி மாதர் சங்கத் தலைவி இராசாமணி அம்மையார், முத்துலட்சுமி அம்மையார், தமிழ் முல்லை அம்மையார், தாமரைக்கண்ணி அம்மையார்.

படிப்பகம்

www.padippakam.com



அமுதவள்ளி அம்மையார், சானகி அம்மையார், திலகவதி அம்மையார், ரவாங் பேச்சாயி, மாயூரம் மாரி அம்மையார் மற்றும் பலராவர்.

**ஆதி–திராவிடர் சங்கம் :–** மலேயாவில் ஆதி-திராவிடர் சங்கம் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் முக்கியமானவர்கள் தோழர்கள் முத்து, வேலு, சுங்காச்சலம், லட்சுமணன், சக்திமோகன், வீரமணி ஆகியோர் ஆவர்.

**சிறந்த மக்கள் மொழி பெயர்ப்பாளர்கள் :–** ஆங்கிலம் - தமிழ் இரண்டிலும் புலமை பெற்ற காரை எஸ்நாராயணன், மாவீரன் நேதாஜி யவர்கள் சிங்கப்பூர் வருகை புரிந்திருந்த போது நேதாஜியின் எழுச்சியுரையை மொழி பெயர்த்த சோழவந்தான் எம்.ஆர்.கோபால், ஆகியோர் ஆவர்.

**மலேயா வரலாற்றில் இடம் பெறும் சீன–மலாய் தோழர்கள் :–** மலேயாவின் வரலாற்றில் நினைவில் செதுக்க வேண்டிய சீனத் தலைவர்களும் மலேயத் தலைவர்களும் பின் வருபவர்கள் ஆவர். மலாயா கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாராகத் திகழ்ந்த தோழர் சிம்பெங், (Sim-Peng), சீனத்தொழிற் சங்க தலைவர்கள் லிம்-சௌங் (Lim-Chowng), மத்திய கமிட்டி உறுப்பினர் யாப்-மென்-ஷூன் (Yap - men - Shun), (யாப் - மென் - ஷூன் பின்னாளில் சீன அரசின் தகவல் - ஒலிபரப்பு - பிரச்சார துறையமைச்சராக திகழ்ந்தார்.) தொழிற் சங்கத் தலைவர் வாங் - சிங் - நாம், மத்திய கமிட்டி உறுப்பினர் சென்-லூ, பெருந்தலைவர் தோழர் லாம்-ஸூ ஆகியோர் ஆவர். மலாய் இனத்தைச் சார்ந்த தலைவர்கள் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் காதர் சிட்டி, பிரபல தோழர் முகம்மது யூசுப், ஐக்கிய முன்னணியின் பெருந்தலைவர் டான்-சென்-லாக், கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கிய தோழர் சம்சுதீன் ஆகியோர் ஆவர்.

மலேயாவின் வரலாறு இவர்களைக் கொண்டு துவங்குகின்றது. மலேயா தேசம் நினைக்க வேண்டிய தேசபக்தர்கள் இவர்களும் ஆவர்.

படிப்பகம்

www.padippakam.com

# 27. நூலாதாரங்கள்

*(1) மலேயா கணபதியை வழிநடத்திய தோழர் எம்.ஆர் குருதேவன் அளித்த நினைவுக் குறிப்புகள் மற்றும் மலேயா கணபதி நூல் வெளியீட்டுக் குழு திரட்டிய விவரங்களாக அவரளித்த பெயர்க் குறிப்புகள் நினைவுச் சின்னங்கள் பற்றிய விவரங்கள்.*

*(2)* (Documentary Evidence) *கலைஞர் கருணாநிதி எழுதிய நூலாவணம்: கயிற்றில் தொங்கிய கணபதி, அறிவுப் பண்ணை வெளியீடு, சிறுநூல் வெளியீடு, ஜூலை 1949.*

*(3) இலண்டன் பொது ஆவணக் காப்பகத்திலிருந்து புகைப்பட நகலெடுக்கப்பட்ட* (Xerox Copies) *அதி முக்கியப் பொது ஆவணங்கள்.*

*(4) ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக் கழக வெளியீடான* **வர்க்கம் – இனம் – காலனியாதிக்கம் நிறைந்த மேற்கு மலேசியா** *எனும் மைக்கேல் ஸ்டென்ஸனின் ஆங்கில நூல்.*

*(5) நேதாஜி குறித்த சில ஆதாரங்கள், என்.ஜி.கேன்புள்ளே அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில நூலான* **ஜெர்மனியில் நேதாஜி** *என்ற நூலிலிருந்து பெறப்பட்டன.*

*நூல்படைப்பு நாள்*
*10.11.1993*

படிப்பகம்

www.padippakam.com

மாவீரன்
மலேயா கணபதியின்
போராற்ற வரலாற்றைச்
சித்தரிக்கும் படங்கள்...
⇨ ⇨ ⇨

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com





பாட்டாளி முரசு பத்திரிகைக் குழுவில் தோழர்கள் இராமையா மற்றும் சோமு. தோழர் இளவழகன் இல்லம்.



அகில மலேயா தொழிற்சங்க சம்மேளன அலுவலகம். கோலாலம்பூரின் அம்பாஸ் பகுதியில் அமைந்துள்ள கட்டடம்.



அகில மலேயா தொழிற்சங்க சம்மேளனத்தின் மூன்று பிரிவுச் செயலர்களில் இந்தியப் பிரிவுச் செயலாளர் தோழர் சோமு. (தோழர் கே.எஸ். நாதனுக்குப் பின் பதவி வகித்தவர்)



பாலர்சேனா - ஜெயபாரதி

படிப்பகம்

www.padippakam.com






M.M. முத்துதேவர் INA



நல்லதம்பி



குப்புசாமி - புதுக்கோட்டை



கூத்தபெருமாள்-களப்பாடியார் - பட்டுராகு



அல்லூரி சின்னையா



அகில மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் குடியாத்தம் ஆர்.பாலன்.

படிப்பகம்

www.padippakam.com





நீர் மூழ்கிக் கப்பலில் இந்தியா வந்து செல்லக்கூடாது எனக் கட்சி அறிவுறுத்தியும், தன் சகோதரியைக் காணச்சென்று, அந்நேரம் அங்கே ஒரு திருமணம் நடந்து கொண்டிருக்க, அனைவரும் எம்.ஆர். சற்குணம் அவர்களைக் கண்டு ஆர்ப்பரிக்க - பிடிபட்டு பிரிட்டிஷ் அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட தியாகி எம்.ஆர். சற்குணம்.



உட்கார்ந்திருப்பவர்கள்:-
(இடமிருந்து வலம்) தோழர்கள். K. பாக்கியம், R. மோகன், K. வேதையா
நிற்பவர்கள்:-
(இடமிருந்து வலம்) தோழர்கள்: M. பரமசிவம், K. குப்புசாமி, N. அப்பாவு
(PMFTU-வின் தோழர் கே.எஸ். நாதனுக்கு முன்பு தலைவராயிருந்தவர் - தோழர் R. மோகன்)

படிப்பகம்

www.padippakam.com






மலேயா மண்ணில் வீர-தீர சாகசங்கள் செய்து பிரிட்டிஷ் அரசாலும் கொல்லவியலாத வீரன் சாம்பசிவம் தமிழ்நாட்டில் தாமரைப்பாக்கத்துப் பணக்கார வர்க்கத்தால் கொலை செய்யப்பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com

இடமிருந்து வலமாக 1. மணியம்.
2.அந்தோணிசாமி (ராமதாஸ்)
3. சுப்பையா

*1. மணியம் :* 'மோதலில்' சுட்டுக் கொல்லப்பட்டார்.

*2. அந்தோணிசாமி :* இந்தியாவிற்குத் தப்பி வந்த பிறகு நாடு கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்.

*3. சுப்பையா :* தாழ்த்தப்பட்டவர். மூதாதையர்கள் திண்டுக்கல் பகுதியிலிருந்து தோட்டக் கூலி களாகச் சென்றவர்கள். 'மோதலொ'ன்றின்போது ஒரு சீனப் பெண் தோழரும் சுப்பையாவும் காடு ஒன்றில் தாக்கப்பட்டனர். பெண் தோழர் மரணமுற்றார். கைது செய்யப்பட்ட சுப்பையா கடும் சித்திரவதைக்குப் பின்னர் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.


திண்டுக்கல்லில் அவரது .உறவினர்கள் யாரும் இல்லாததால் அந்தோணிசாமி அவரை அழைத்துச் சென்று தன்னுடன் வைத்துக்- கொண்டார். சுப்பையாவின் தம்பி *முத்துசாமி*யும் பின்னர் இந்தியாவிற்கு வந்தார். இருவருக்கும் அந்தோணிசாமி தனது உறவுப் பெண்களைத் திருமணம் செய்வித்துத் தனது ஊரிலேயே வைத்துக் கொண்டார்.

சுப்பையா, முத்துசாமி இருவரும் தற்போது மரணமடைந்துவிட்டனர்.

சுப்பையாவின் புதல்வர்கள் (1) ஸ்டெல்லா (2) ரெஜினா (3) பெர்னார்ட்ஷா தற்போது தஞ்சை மாவட்டம் *பாப்பாநாடு* கிராமத்திலுள்ளனர்.

www.padippakam.com





நாற்காலியில் அமர்ந்துள்ளவர் கணபதி.
கைப்பிடியில் சாய்ந்துள்ளவர் ராமதாஸ் என இயக்கத்தில் அறியப்பட்ட ஆர். அந்தோணிசாமி (அ.மார்க்ஸ்-இன் தந்தை) மணியம், கணபதி கொல்லப்பட்ட பின் கட்சி அறிவுரையின்படி ராமதாஸ் ஒரு யுத்தக் கப்பலில் பொய்ப் பெயரில் இந்தியா வந்தார். அதற்குப் பின் மலேசிய அரசு அவரை நாடு கடத்தியதாக அறிவித்தது. இந்தியாவில் ராமதாஸ் கைது செய்யப்பட்டுப் பின் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்விரு படங்களையும் அரிய தகவல்களையும் தந்துதவிய தோழர் அ. மார்க்ஸ் அவர்களுக்கு நன்றி.

படிப்பகம்

www.padippakam.com





மலேயாவின் இரப்பர் மரத் தோட்டத்தில் பால் சேகரிக்கும் பெண் தொழிலாளி

படிப்பகம்

www.padippakam.com





மலேயாவின் தோட்டத் தொழிலாளிகளின் நிலையைக் காட்டும் ஒரு காட்சி.



மலேயா கணபதியவர்களை இயக்கிய மாபெரும் பொதுவுடமைத் தோழர் எம்.ஆர். குருதேவன்

படிப்பகம்

www.padippakam.com





தோழர் பொறைகலம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி - ஐ.என்.ஏ. தியாகி

படிப்பகம்

www.padippakam.com





கே.எஸ். நாதன் INA




மலேயா - சிங்கப்பூர் நாடு கடத்தப்பட்ட தியாகி. திரு. நாகை ராசமாணிக்கம் - தியாகிகள் சங்கம் நடத்துகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com






நிற்பவர் நூலாசிரியர் இரா. உதயபாசுகர்
அமர்ந்திருப்பவர் தோழர் குருதேவன்

படிப்பகம்

www.padippakam.com





சென்னையில் நிகழ்ந்த மலேயா கணபதி நினைவு நாள் கூட்டம்

படிப்பகம்

www.padippakam.com





ஐ.என்.ஏ. செகன்ட் லெப்டினன்ட் திரு கே.எஸ். நாதன். அருகில் அமர்ந்திருப்பவர் தியாகி விவநாததாஸ் மன்றத்தலைவர் மலேசியா எஸ். பழனி (சென்னை)



மலேயா கணபதி நினைவு நாள் விழா சென்னையை அடுத்த தாம்பரத்தில் நடந்தது. அவ்விழாவில் நூல் வெளியிட்டுக் குழுத் தலைவர் தோழர் தி.மோகன் உரையாற்றுகின்ற காட்சி.

படிப்பகம்



தன் பொக்கை வாய்காட்டிச் சிரித்து நிற்கின்றது ஒரு வரலாற்றுச் சிங்கம் - தோழர் குருதேவன் - ஆனால் சந்தித்த துயர வடுக்கள் எண்ணிறந்தவை - எண்ணிட இயலாதவை





கணபதி
இன்று காலை
புடு சிறையில்
தூக்கிலிடப்பட்டார்

[illegible]

மலேயா கணபதி தூக்கிலிடப்பட்டதை ஒட்டி வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்திகள்

www.padippakam.com

# பிழைத்திருத்தம்

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1. | பக்கம் 72. 3வது பாரா: 3வது வரி - இராணி | - கிராணி |
| 2. | பக்கம் 128. 15 எண்: (பத்து) ஆராஸ் | - பத்து ஆராங் |
| 3. | பக்கம் 136. கீழிருந்து மேலே 3வது வரி - மலேயாவின் தளபதி ஹென்றி கர்னி | - மலாயா ஹைகமிஷனர் சர் ஹென்றி கர்னி |
| | தொடர்ந்து - சிங்கப்பூர் ஆளுநருக்கு அனுப்பிய தொலைச்செய்தி நகல் படம் பக்கம் மாறிவிட்டது. | - பக்கம் 160ல் இடம் பெற்றுள்ளது. |
| 4. | பக்கம் 138. மேலிருந்து 19வது வரியில் தகரம் | - ஈயம் |
| 5. | பக்கம் 148. 2வது பாரா: 2வது வரியில் தளபதி ஹென்றி கர்ணே | - ஹைகமிஷனர் சர் ஹென்றி கர்னி |
| 6. | பக்கம் 150. கீழிருந்து மேலாக 4வது வரி: "பந்தீங்". | - பந்திங் |
| 7. | பக்கம் 158 3வது பாரா: மேலிருந்து கீழ்: 7வதுவரியில் உணர்வு மத்துப் போன | - உணர்வு மரத்துப் போன |
| 8. | பக்கம் 166. மேலிருந்து: 5 வது வரியில் 'ரஜீலா' கப்பல் | - ரஜூலா கப்பல் |
| 9. | பக்கம் 183. மேலிருந்து 16வது வரியில் - நினைத்து | - நிலைத்து |

படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| 10. | பக்கம் 203. 3வது பாரா:<br>6வது வரி - **காந்திரசம்**<br>(தொடர்ந்து) 7வது வரி - **பந்தீஸ்** | - **காந்தரசம்**<br><br>- **பந்திங்** |
| 11. | பக்கம் 204. மேலிருந்து<br>5வது வரி -**பந்தீஸ்** | - **பந்திங்** |
| 12. | பக்கம் 204. அதே பாராவில்<br>8வது வரியிலும் 11வது<br>வரியிலும் தியாகி மாயூரம்<br>மணியன் பெயர் இடம்<br>பெற்றுள்ளது. | - **ஒரு இடத்தில்<br>மட்டும் படிக்கவும்** |
| 13. | மேலிருந்து 13வது வரியில்<br>**தியாகி பத்து பகார்** | - **தியாகி பத்து பகாட்** |
| 14. | பக்கம் 205. 2வது பாரா<br>**மலாய்க் கம்யூனிஸ்டுக் கட்சி** | - **மலாயா கம்யூனிஸ்டு கட்சி** |
| 15. | அதே பாரா கீழிருந்து<br>மேலாக 5வது வரி. **மலாய்** | - **மலாயா** |
| 16. | கீழிருந்து மேல்: 3வது வரி<br>**முன்னனி** | - **முன்னணி** |
| 17. | பக்கம் 206. 1வது பாரா:<br>8வது வரி - **ஏரத்த நாடு** | - **ஒரத்த நாடு** |
| 18. | பக்கம் 207. 4வது பாரா:<br>**சிம் பெங் (Sim - Peng)** | - **சின் பெங் (CHIN PENG)** |
| 19. | பக்கம் 209: (வெற்றுத்தாளில்)<br>**போராற்ற** | - **போராட்ட** |
| 20. | பக்கம் 211. 2வது (படம்)<br>**அம்பாஸ்** | - **அங்பாங்** |

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கணபதியின் முழுமையான வரலாறு வெளிவருவது தமிழ்ச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஊட்ட நிச்சயமாக உதவும்.

பண்டைய நாளில் பழந் தமிழகத்தில் வாழ்ந்த வாணன் என்ற பெருவீரனின் பெயரைத் தங்கள் மார்புகளில் அன்றைய தமிழர்கள் எழுதி மகிழ்ந்ததாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

வாணன் பேர் எழுதாத மார்புண்டோ! என்று கூறும் அந்தப் பாடலுக்கு ஏற்பத் தீரர் கணபதியின் நாமம் தமிழர்களின் நெஞ்சங்களில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

தியாகமும் வீரமும் நிறைந்த அவரின் வாழ்க்கை தமிழர்களுக்கு முன் மாதிரியான பின்பற்றப்பட வேண்டிய ஒரு வாழ்க்கையாகும். அவரின் வீர வரலாற்றைத் தமிழர் களுக்கு எடுத்துக் காட்டும் விதத்தில் ஒரு முன்னோடி நூலாக இந்த நூல் வெளிவருவதை நான் பாராட்டுகிறேன்.

— பழ. நெடுமாறன்

படிப்பகம்